# பகுத்தறிவு



விக்ருதி-மாசி. 14-2-1951. அணா 2

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

## நீண்டகால உழைப்புக்கு, நெடுங்காலமாகப் புகழ் பெற்றவை

# ஜலகண்டபுரம் சாயச் சேலைகள்.

**எங்கள் 30, 40, 60**

நெம்பர் சேலைகள் பல ரகங்களில்
பல முக்கிய ஊர்களில் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

## ரா. க. கி. நாகப்ப செட்டி,

கைத்தறி ஜவுளி வியாபாரம்,
ஜலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்.

---

# குத்துவிளக்கு சேலைகள்.

சாயத்தில், நெசவில்,
ரகத்தில்
கைத்தறியின் முன்னேற்றத்தைக்
கல்லின் மேல் விளக்குப்போல்
காட்டும்

## சேலைகள்!

மிக உயர்ந்த தயாரிப்புகள்!
**60, 80, 100** நம்பர்களில்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

★

**ரா. க. பழனிசாமிசெட்டி சன்**
குத்துவிளக்கு சேலை தயாரிப்பாளர்,
ஜலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

---

## அழகான பிளாக்குகள்!

★

## சேலத்தில்

நவீன மின்சார
சாதனங்களைக்கொண்டு
லைன், ஆப்டோன், கலர்
பிளாக்குகளும், சினிமா
சிலைடுகளும் செய்பவர்கள்

## சாரங்கன் & கம்பெனி

அரிசிப்பாளையம் :: சேலம்.

## தென்றல் வெளியீடுகள்.

●

மு. கருணாநிதி எழுதிய

ஒரே முத்தம் 1-4-0

சி. பி. சிற்றரசு எழுதிய

சிந்தனைச் சுடர் 0-5-0

ப. கண்ணன் எழுதிய

கன்னியின் சபதம் 0-8-0

சிந்தனைச் சித்திரம் 0-10-0

மின்னொளி 0-6-0

பாவலர் வேலாயுதசாமி எழுதிய

திருக்குறள் இசைப்பாடல்
அறத்துப்பால் 0-7-0

ப. க, குஞ்சிதம் எழுதிய

வால்முளைத்த
சாமியார் 0-2-0

கேட்டிக்காரன் 0-2-6

★

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 /.

தென்றல் நூற்பதிப்புக்
கழகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்


# பகுத்தறிவு


ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982. திங்கள், 2.

மலர் 1 | விக்ருதி-மாசி | இதழ் 2


## பொருளடக்கம்.


பகுத்தறிவின் இன்பம் ... 2
*பாவலர். வேலாயுதசாமி*

உணவுப் பஞ்சமா? அறிவுப் பஞ்சமா? 3

நடப்பும் கருத்தும் ... 5

நெஞ்சம் கொதிக்குதடா ... 7
*"வேங்கை"*

நிலையும்—நினைப்பும் ... 8

ருசோ பேசுகிறார் ... 10
*தி. ரா. தர்மராசன்*

இருப்பதை அனுபவி ... 17
*"கற்பனைச் சிற்பி"*

அறிவு இயக்கத்தின் எதிர்காலம் ... 18
*இரா. இலட்சுமி*

சார்லஸ் பிராட்லா ... 20

பொன் மொழிகள் ... 22

பூசாரியின் மகள் ... 23
*ப. க. குஞ்சிதம்*

சமுதாய விடுதலை (இங்கர்சால்) ... 27
மொழி பெயர்ப்பு:
*இரா. நெடுஞ்செழியன் M. A.*

கருத்துரை ... 32


★

# பகுத்தறிவின் இன்பம்.

பாவலர். வேலாயுதசாமி.

### கடற்கரை

கரையினிலே நுண்ணியவெண்
மணற்பரப்பி லின்பம்
காற்றினிலே மிதந்துவரும்
வானொலியி லின்பம்

வரையெனவே திரண்டெழும்பும்
முகிலினிலே இன்பம்
மனநினைவுக் கடங்காத
வான்வெளியி லின்பம்

திரையடிக்கும் நீலநெடுங்
கடலினிலே இன்பம்
செழுநிலவை விரித்துவரும்
திங்களிலே இன்பம்

உரைபயிலு மாணவர்தம்
உறவினிலே இன்பம்.
உயர்வாகும் அனைத்தினுக்கும்
பகுத்தறிவின் இன்பம்.

### பூங்கா

பழங்கனிந்து குலுங்குமுயர்
மரங்களிலே இன்பம்
படர்கொடியின் மலர்ச்செடியின்
பசுமையிலே இன்பம்

செழுங்கமல நீரோடைப்
பெருக்கினிலே இன்பம்
தேனருந்தி வண்டிசைக்கும்
இசையினிலே இன்பம்

குழந்தையெனத் தவழ்ந்துவரும்
தென்றலிலே இன்பம்
கொள்ளைமலர் விரிந்துதரும்
மணமதிலே இன்பம்

ஒழுங்குமுறைக் காதலர்தம்
உறவினிலே இன்பம்
உயர்வாகும் அனைத்தினுக்கும்
பகுத்தறிவின் இன்பம்.

# உணவுப் பஞ்சமா? அறிவுப் பஞ்சமா?

"பழங்கால முறைகளை விவசாயக் காரியங்களில் இந்தியர்கள் பின்பற்றுவதால்தான் உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது" என்று அமெரிக்காவின் விவசாய இலாக்கா அறிவிக்கின்றது. சொல்லலாம்: "அவர்கள் மேயோ பரம்பரை" என்று. நம் தவறுக்கு அதுவே கழுவாயாகிவிடாது.

நம் நாட்டின் அரசினர் நடத்தும் விவசாய இலாக்காவின் முயற்சிகள் பயனற்றுப் போவதற்குக் காரணமே, உழவர்களின் பழங்கால முறைகள்தானே? விஞ்ஞான சாதனங்களைக்கொண்டு, புதிய முறைகளால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாமல் "மரம் நடு விழாக்கள்" நடத்துவதால் பயன் விளைந்துவிடாது. வேண்டுமானால் பிரசாரத்தின் மூலம் பாமர மக்களை திகைக்கவைக்கலாம்.

"பொது மக்களின் உபயோகத்திற்காக மரங்களை நடுபவன் மோட்சத்தை யடைகிறான், மரம் நடும் ஒருவன் தனக்கு முன்னும் பின்னும் உள்ள 30000 பிதிர்களுக்கு மோட்சத்தைத் தேடிக்கொடுக்கிறான்"—இது பத்ம புராணம். "10 கிணறுகளை வெட்டுவது, ஒரு குளம் வெட்டுவதற்குச் சமமான புண்ணியம், 10 குளங்களை வெட்டுவது ஒரு ஏரியை அமைப்பதற்குச் சமமான புண்ணியம், 10 ஏரிகளை அமைப்பது ஒரு சற்புத்திரனைப் பெறுவதற்குச் சமமான புண்ணியம், ஆனால் ஒரே ஒரு மரத்தை நடுவதன் மூலம் 10 சற்புத்திரர்களைப் பெறுவதற்குச் சமமான புண்ணியத்தை அடைந்துவிடலாம்"—இது மச்ச புராணம்.

"சீதை அசோக வனத்தில்தான் இருந்தாள்"—இது இராமாயணம். "கிருஷ்ண பரமாத்மா நமக்கு அழியாத ஆன்ம தத்துவத்தைப் போதித்ததும் பிருந்தாவனத்தில் தான்"— இது பாகவதம்.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க மழை வேண்டும், மழையை வரவழைக்க மரம் வேண்டும், அதற்

காக இலட்சக் கணக்கான செலவில் நமது அரசாங்கம் செய்த பிரசாரத்தின் லட்சணம் இது—முன்ஷி புராணம்!

ஒரு அரசாங்கத்தின் உணவு இலாக்காவே இப்படிப் பழமைச் சேற்றில் மூழ்கிப் புராணம் படிக்கிறதென்றால், நாட்டிலே புதுமுறை தோன்றுவதெங்கே? உழவுத்தொழில் வளர்வது எப்படி? உணவு உற்பத்தியைப் பெருக்குவது எவ்வாறு? எப்படிக் கழுவாய் கிடைக்கும்?

உணவுப் பொருள் நெருக்கடியும், விலை யேற்றமும், பயங்கர நிலைக்குப் போய்விட்டன. கிராமாந்திர மக்கள் இராப் பட்டினியும், பகல் பட்டினியுமாக வதைபடுகின்றனர். சோமவார விரத மகிமைகளையும், ஏகாதசி மகான்மியங்களையும்பற்றி அரசாங்கம் பிரசாரம் செய்யவேண்டியதில்லை. நிலையுணரவேண்டும். ஏழை எளியவர்கள் வீட்டில் வாரத்தில் இரண்டொரு நாட்களே அடுப்புப் புகைகின்றது. அவர்கள் தினப்பட்டினி விரதம் இருக்கின்றனர். மக்களுக்கு வேண்டியது உபதேசமன்று; குறைந்த விலையில் உணவுப் பொருள்.

மழையில்லை என்று இயற்கையின் மேல்பாரத்தைப் போடுவதில் பயனில்லை "முயற்சிக்கிறோம், கிடைத்தவரைக்கும் உங்கள் புண்ணியம், கடவுளை நம்பியிருங்கள், கைவிடமாட்டார்!" என்று சொல்வது மதியீனம். பக்தியால் பசியடங்காது.

கள்ளச் சந்தை வியாபாரிகளிடம் கருணையை—நேர்மையை—எதிர்பார்ப்பது, நெருப்பினிடம் குளிர்ச்சியை எதிர்பார்ப்பதுபோல் தான்! பொறுப்புள்ளவர், புதிய வழிகளில் கழுவாய் தேடவேண்டும். பழமைக்குப் பல்லவி பாடுவதை விடுத்து, உழவுத்தொழிலில் புதுமைகாணவேண்டும். மக்கள் மனதிலே புதிய எண்ணம், புதிய நம்பிக்கை உண்டாக்கவேண்டும். எதுவும் அறிவின் அடிப்படையில் நிகழவேண்டும்.

அணிமையில், பேராசிரியர் காட்கில் புது டெல்லியில் பேசியிருக்கிறார்; "இன்றைய உணவு நெருக்கடி மனிதனுடைய சிருஷ்டியே! இந்திய சர்க்காரின் தெளிவற்ற கொள்கை, பிரத்தியட்ச நிலையை உணர அருகதையின்மை, அலட்சிய மனப்பான்மை ஆகியவற்றால் பஞ்சநிலை ஏற்பட்டதே யொழிய, இயற்கை விபரீதங்களால் அல்ல." நாம் சொல்கிறோம்; அறிவுப் பஞ்சம் ஒழிந்தாலொழிய உணவுப் பஞ்சம் தீரப்போவதில்லை. ● ● ● ●

# நடப்பும் கருத்தும்

## மொழி ஆதிக்க வெறி.

இந்தியத் துணைக் கண்டம் குடியாட்சி பெற்ற பிறகு, முதன்முதலாகக் குடி மதிப்புக் கணக்கு எடுக்கப்படுகிறது. இது மக்களின் ஆதரவோடு நேர்மையாக நடைபெற வேண்டி ஒன்று. கொள்கை, கோட்பாடுகள், விருப்பு வெறுப்புகளைக் கடந்த விஷயம். வடநாட்டிலே வளர்ந்துவரும் மொழி ஆதிக்க வெறி இச் செயலிலும் குறுக்கிடுகிறது. வடக்கே "ஜாகாத்ரி" என்ற ஊரில், பிப்ரவரி, 10-ம் நாள் குடி மதிப்பு கணக்கு எடுக்கச் சென்றவர் முன்னிலையில், கணக்கு கொடுப்பவரை, அவரது தாய் மொழி பஞ்சாபி என்று கூறும்படி ஒரு குழுவினரும், இந்தி என்று கூறும்படி ஒரு குழுவினரும் கட்டாயப்படுத்தியுள்ளனர். அதன் விளைவாக எழுந்த குழப்பத்தில், ஒருவர் மடிந்தார், மூவர் காயமுற்றனர் என்று கூறுகிறது பத்திரிகைச் செய்தி.

இதிலிருந்து வடநாட்டு நிலையும், இந்தி ஏகாதிபத்திய வெறியர்களின் போக்கும் நன்கு விளங்கவில்லையா? தாய்மொழிப்பற்று வேண்டும்என்று கூறும் வாயாலேயே இந்தி கட்டாயப்பாடம்! சமஸ்கிருதம் படியுங்கள், அது தெய்வமொழி என்று கூறி, அன்புவழிச் செல்லும் தமிழ் மகனை மொழி ஆதிக்கத்திற்கு அடிமைப்படுத்த முயலும் ஆட்சியாளர்க்கு இச் செய்தியை அர்ப்பணிக்கின்றோம். தமிழ் நாட்டை "ஜாகாத்ரி" யாக்கவேண்டாம்.

## ஆச்சாரியார் பேச்சு.

இவ்வாண்டு திருவையாறு தியாகராஜ ஐயர் உற்சவத்தை, ஜனவரி 26-ல் இந்திய உள்நாட்டு அமைச்சர் திரு. ராஜகோபாலாச்சாரியார் துவக்கிவைத்தார்.

"தியாகப்பிரம்ம கீர்த்தனைகளை நாம் பக்திரசத்தோடு பாடினால், நம் பாபங்கள் பறந்துவிடும். நமது வறுமைக்கும், மற்றப் பிணிகளுக்கும் நமது பக்திசூன்யமே காரணம், பழம்பெரும் கோயில்களை மறந்தோம்; தெய்வ வழிபாட்டை அலட்சியம் செய்தோம். இன்று நம் நாடு பல இன்னல்களுக்குள்ளாகி இருப்பதற்குக் காரணம் பக்தி நம்மை விட்டுப்போய்விட்டதுதான்."

அவர் சிந்திய பக்திரச முத்துக்கள் இவை! தர்ப்பைப் புல்லையும், பஞ்சாங்கத்தையும் காட்டி, பாமர மக்களை மூடர்களாக்கி, ஏய்த்துப் பிழைக்கும் ஒரு புரோகிதரோ, குருக்களோ, பூசாரியோ, ஆசாரியோ இதைச் சொல்லியிருந்தால் நாம் கவலைப்படவேண்டியதில்லை. நாட்டு நிலைமைக்கு உண்மையான—நிலையான—பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பான பதவியிலிருப்பவர், இம்மாதிரி கதாகாலட்சேபம் செய்வது நியாயமன்று.

வீட்டில் பாகவதரைக் கூப்பிட்டு பாரதம் படித்தால் குழந்தை பிறக்கும். இராமாயணம் படித்தால் செல்வம் பெருகும், மழை இல்லையா? வருணஜபம் செய். நோய் வந்ததா? நவக்கிரகபூசை செய்: என்று சொல்லும் சுயநலமிகளின் கருத்தைப் பாதுகாக்கலாம் ஆச்சாரியாரின் பேச்சு. ஆனால் நாட்டு நன்மைக்குச் சற்றும் பயன்படாததுமட்டுமல்ல, அல்லலைப் பெருக்குவதாகும்!

## தர்மமும், கடமையும்.

"நம்மக்களுக்கு உணவும், உடையும், இடமும் அளித்து, நல் வாழ்க்கை நடத்த நாம் உதவவேண்டும். ஏராளமான மக்கள் ஏழ்மையிலே புரளுகின்றனர். இனி இப்பிரச்சினையை ஓர் தர்மமாகக் கருத முடியாது. நியாயம் வழங்கும் கடமையாகக் கொள்ளவேண்டும். ஏழ்மை, நோய், பசி, அறியாமை ஆகியவற்றை உறுதியோடு எதிர்க்க வேண்டும்" என்கிறார் டாக்டர், சர். ராதாகிருஷ்ணன்.

இக்கருத்து, வைதீகத்திற்கோர் வெடிகுண்டு! உண்டுகொழுக்க ஒரு இனம், உழைத்துப்போட ஒரு இனம், என்ற அடிப்படையிலே வாழ்க்கையின் வசதிகள் யாவற்றையும் ஒரு சிலரே பெற்றுள்ளனர். "பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவன் பார்ப்பனன், கீழான உறுப்புகளில் பிறந்தவர் மற்ற மூன்று வருணத்தினர். மற்றவர் சொத்துக்கும் பார்ப்பனனே உரிமையாளன், அவன் கொடுத்த பிச்சையே எல்லாம்" என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகிறது. இதையே தர்மம் என்று கருதுகிறவர்கள் மனிதஇதயம் படைத்தவர்களாக இருக்கமுடியாது. அவர்கள் மற்றவர்கள் படும் துன்பத்தைப்பற்றி விதிப்பயன், பூர்வ ஜன்மபலன், அதன்படி அவன் துன்பமோ இன்பமே அடையவேண்டும். அதுவே தர்மம் என்பார்கள்- இத்தகைய கல் நெஞ்சர்கள், அது தர்மமல்ல, அவர்கட்கு நாம் நியாயம் வழங்குவது கடமை என்று நினைப்பார்களா? தர்மம் ஒழிந்து, கடமை ஓங்கவேண்டும்.

## மோட்சலோக வழி காட்டிகள்.

சேலம், கும்பகோணம் போன்ற சில இடங்களில், வேத தர்ம சாஸ்திர பரிபாலன சம்மேளனங்கள் முளைத்துள்ளன. பழமையான கலாச்சாரத்தையும், மதத்தையும், வகுப்புக்களேயும், வேதசாஸ்திர புராண இதிகாசங்களையும் பாதுகாப்பது இவற்றின் நோக்கமாம்!

கூட்டங்கள், ஊர்வலங்கள், சொற்பொழிகளோடு நின்றுவிடாமல், ஹோமம், ஜபம், பூசை, பாராயணம், சந்தியாவந்தனப் பயிற்சி முதலியனவும் செய்கின்றார்களாம், வெகு நன்று! ஏமாளிகள் கிடைத்தால், பௌண்டரீக யாகம், நரமேத யாகங்கள்கூடச் செய்யட்டும்! கலாச்சாரத்தின் பெயரால் நாட்டில் நடைபெறும் நானாவித முன்னேற்றச் செயல்களுக்கும் முட்டுக்கட்டையிடுபவர்கள் இந்தத் திருப்பிரம்மங்கள் தாம்!

இயக்கங்களை மட்டுமல்ல, இவர்கள் அரசாங்கத்தையும், எதிர்க்கத் துணிகின்றனர். இந்த மோட்சலோக வழிகாட்டிகளால், ஒன்றும் சாதிக்கமுடியாது என்றாலும், இந்தக் கும்பலில், அரசாங்கத்தில் பணியாற்றும் பார்ப்பன நீதிபதிகளும், அதிகாரிகளும் கலந்துகொண்டு, ஆதரவுகாட்டலாமா? நடுநிலை நின்று மக்களுக்கு நீதி வழங்கவேண்டிய அதிகாரிகள், மனித சிந்தனைக்கு விலங்கிடும் துரோகிகள் ஆகலாமா? குலத்திற்கொரு நீதி கற்பித்து மனித இனத்தைப் பிரித்துவைக்கும் மாபாதகச் செயலை ஆதரிக்கலாமா? வேண்டாம் விபரீதம்!

# நெஞ்சம் குமுறுதடா!

1 பஞ்சமும் பட்டினியும் நாட்டிலே
பரவிவிட்டதடா
நெஞ்சம் குமுறுதடா மிகமிக
நிலைமை மோசமடா

2 கைத்தறியாளர் படும் துன்பமதைக்
காணச் சகிக்கவில்லை
செத்தொழிந் தார்களடா பலபேர்
சேல நகரினிலே

3 ஆற்றுப் பெருக்கெனவே கிளர்ச்சியில்
ஆண்களும் பெண்களுமே
நூற்றுக் கணக்கினிலே சிறையில்
நுழைந்து வாடுகிறார்.

4 எஞ்சியிருக்கு மக்கள் தோல்போர்த்த
எலும்புக் கூடுகளாய்
பஞ்சைத்திருக் கோலம் கொண்டுள்ளார்
பசிக்கொடுமை யினால்

5 பாலைச் சுவைத்தருந்த நினைத்துப்
பச்சிளஞ் சேய்களந்தோ!
தோலைச் சுவைத்தழுது பசியால்
துடித்து மாளுதடா

6 வந்த நெருக்கடியை அகற்ற
மார்க்கம் நினைத்திடாமல்
இந்தச் சமயத்திலே மக்களை
ஏய்க்கிறார்கள் சிலபேர்

7 சீமையிலே படித்தோர் விஞ்ஞானச்
செய்திகளை யுணர்ந்தோர்
சாமி ஐயப்பனுக்கு மணியாட்டும்
சந்தைப் பூசாரியானார்

8 ஐயப்பனைச் சுமந்து நாட்டிலே
அங்கங்கு சுற்றிவந்து
தெய்வப் பணியெனவே பொருளைத்
திரட்டுகின்றா ரடா!

—"வேங்கை"

# நிலையும் - நினைப்பும்.

'பகுத்தறிவு' துவக்க இதழைப் படித்த தோழர்கள் பலர், தங்கள் மகிழ்ச்சியை, ஆர்வத்தை, ஆதரவைத் தெரிவித்துள்ளனர். பலர் வாழ்த்து அனுப்பியுள்ளனர். அவர்கட்கு எமது பணிவன்பான வணக்கம். இடம் சுருக்கமாகையால் எதனையும் வெளியிட முடியவில்லை, மன்னிப்பார்களாக.

''பகுத்தறிவு''க்கு நாம் எதிர்பார்த்த அளவுக்குமேல் நல்லாதரவும், வரவேற்பும் கிடைத்துள்ளன. ஆனால் அதனை எண்ணித் துணிந்து, பிரதிகளைப் பெருக்க முடியாமல் காகித விலை யேற்றம் குறுக்கிட்டுவிட்டது. தற்போது ''பகுத்தறிவு'' நட்டத்தில் நடக்கின்றது. இந்நட்டம் நீடிக்குமானல், பக்கங்களைச் சிறிதுகூட்டி விலையை உயர்த்த நேரிடும் என்பதை முன்னறிவிப்பாகச்சொல்லி வைக்கிறேம். மேலும் பல சிறந்த புதிய பகுதிகளைச் சேர்க்கலாமல்லவா? ''பகுத்தறிவு'' தான் மேற்கொண்டுள்ள அறிவுப் பணியை அதன்வழியேசெய்ய, அன்பர்களின் ஆதரவு எப்பொழுதும் வேண்டும். வணக்கம். —ஆசிரியன்.





கொடுங்கோலனைப்
பழிவாங்கிய
தமிழச்சியின்
வீர நாடகம்!

★

வானொலி மூலம்
பல்லாயிரவரின்
உள்ளம் கவர்ந்தது.

விலை 0-8-0

●

வியாபாரிகளுக்கு ஏற்ற
கழிவு உண்டு.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

# ரூசோ பேசுகிறார்!

— தி. ரா. தர்மராசன் —

ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில், பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் – பெரும் போராட்டம்! பழமை பல்லவி பாடியது. புதுமை புரட்சி கீதம் பாடியது. பழமைக்கோட்டை சரிந்து விழுந்தது. புதுமைக் கோட்டை புரட்சிக் கோட்டமாக விளங்கியது. புதுமைக்குப் பிரதிநிதியாகத் தோன்றினான் அறிஞன் ரூசோ. மக்களுக்கும் ஆளும் உரிமை உண்டு என்று முதன்முதலாகத் தன் கருத்தை பகிரங்கமாக கூறினவன். செல்வர்கள் மட்டுமே அரசியலில் பொறுப்பு ஏற்கத் தகுதியுடையவர்கள் என்ற பழங் கருத்தைத் தகர்த்தெறிந்து, உழைத்துப் பிழைக்கும் ஏழைப் பாட்டாளித் தோழர்களுக்கும் அரசியலில் பங்குண்டு என்று கூக்குரலிட்டுக் குவலயம் நடுங்கப் புரட்சியொலி எழுப்பியவன் ரூசோ. இவன் எழுதிய நூல்கள் பிரெஞ்சுப் புரட்சிக்கு வழிகாட்டிகள். இவரின் மேற்கோள்களை எடுத்துக்காட்டுவதே சிறந்த பெருமையாக எண்ணினார்கள் எழுத்தாளர்கள். "ஆட்டமும் பாட்டமும் நமக்கில்லை. அன்னியர் ஆதரவும் நமக்கில்லை. ஆண்டை அடிமையென்பது இங்கில்லை. அவனியிலே நமக்கீடில்லை" என்று புரட்சி கீதம் புனைந்து, பொதுநலப்பணி புரிந்து வெற்றி கண்டான். இன்று உலகில் எண்ணற்ற ஏழை மக்களின் வாழ்க்கையிலே, அவர்கள் விடுகின்ற சுதந்திர மூச்சியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றான் ரூசோ. ஏழைகளுக்காகத் தன் வாழ்க்கையையே காணிக்கையாகக்கொடுத்து, செயல்கள் பல செய்துகாட்டி, ஃபிரெஞ்சுப் புரட்சி என்று சொல்லப்படுகின்ற மகத்தான நெருப்பை மூட்டிவிட்டவன் ரூசோ. சீரழிந்தசமுதாயத்தைச் செப்பனிட்ட அத்தகைய சிறந்த சீர்திருத்தவாதி ரூசோ கழகமொன்றில் பேசுகிறார்! கேளுங்கள். தோழர்களே!

பாரிசு மாநகரத்திலிருக்கும் உங்கள் இலக்கியக் கழகம் எனக்குப் பேசவாய்ப்பளித்ததுபற்றிப்பெருத்த மகிழ்ச்சியடைகிறேன். இதன் செயலாளர் எனக்கு நீண்ட நாளாகத் தெரிந்தவர். "உங்கள் எண்ணங்களை "இலக்கியக் கழக"த்தில் வெளியிடுங்கள், எங்களால் இயன்ற உதவிகளை இல்லையென்று கூறாமல் செய்ய முன்வருகிறோம்" என்று கூறினார். பல நாட்களாக வற்புறுத்திய இந்த வேண்டுகோள், இன்றைக்கு நிறைவேறுகிறது. எனக்கு இந்த "இலக்கியக் கழக"த்தின் சார்பில் ஆதரவளிப்பீரோ, அல்லது அளிக்கமாட்டீரோ என்பது என் பேச்சு முடிந்தபின் எழவேண்டிய பிரச்சினை. எனவே என் பேச்சை உங்களின் ஒத்துழைப்பின் பேரால் ஆரம்பிக்க விரும்புகின்றேன்.

இன்றைய உலகில் பெரும்பாலும் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் — எத்தனை எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள் — எண்ணற்ற ஏற்றத் தாழ்வுகள் உண்டாவதற்கு உண்மைக் காரணமென்ன? இவ்வாறு மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு உண்டாவதை, உலக இயற்கைச் சட்டங்கள் ஏற்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்து பாருங்கள். அறியாமைச்சேற்றிலே உழன்றுகொண்டிருக்கின்ற இந்த ஊழல் நிறைந்த, உளுத்துப்போன சமுதாயத்தை மேலே தூக்கிவிட எவனொருவன் தன் கையைக் கொடுக்கின்றானோ, அந்தக் கையையே, அவனையேகூட அந்த அறியாமை இழுத்துக்கொண்டு விடுகிறது. இழுத்துக்கொண்டுவிடும் என்பது தெரிந்தும், துணிந்து கையைக் கொடுக்கின்றான். ஏன்? சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட இனம் — ஒதுக்கப்பட்ட இனம்—தீண்டப்படாத இனம் — அடிமைப்பட்ட இனம் — சுரண்டப்படுகிற இனம் — என்பவர்களோடு விழுந்து, உழன்று, எப்படியாவது அறியாமைக் குட்டையைக் கலக்கிவிடவேண்டும் என்ற ஆர்வம்; என்ற எண்ணம். அதைப்போலவே நானும் "இலக்கியக் கழக"க் குட்டையைச் சற்று கலக்கிவிடுவோம் என்ற எண்ணத்தாலேயே பேச இசைந்தேன், பேச வசதியளித்தவர்களுக்கு என் வாழ்த்து!

முதன் முதலில் மனிதன் இயற்கை வாழ்வு நடத்திக்கொண்டிருந்தபொழுது, ஒவ்வொருவனும் தனித்தனியாக வாழ்ந்துகொண்டிருந்தான். ஒருவனுடைய ஆதரவு—தயவு—உதவி மற்றொருவனுக்குத் தேவையாயிருக்கவில்லை. என்னெனில், ஒவ்வொருவனும் ஓயாமல் உழைத்து, தனக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்துகொள்வதிலும் — சேகரிப்பதிலும் — ஈடுபட்டுவந்தான். வளமாகவாழ்ந்ததினால் விருப்பப்படி வாழ்ந்தான். மனோபலம்-தேகபலம்—பொருள் பலம்—என்கிற வகைகளில் ஏற்றத்தாழ்வின்றி, ஓரளவிற்கு எல்லோரும் ஒரே மாதிரியான முறையில்தான் வாழ்ந்துவந்தார்கள். ஆனால் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இயற்கை நிலை — வெட்பதட்ப நிலை — உணர்ச்சி நிலை— உழைப்பு நிலை — முதலியவைகளின் மாறுபாடுகளின் காரணமாக, மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கு மற்றொரு மனிதனுடைய உதவியையும், ஆதரவையும் பெறவேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் மனிதர்கள் சேர்ந்துவாழவேண்டிய அவசியம் — சந்தர்ப்பம் — நிலை ஏற்பட்டது. இதனால் போக்குவரத்து சாதனங்கள், மற்றும் உபகரணங்கள் தேவைப்பட்டன — அதிகமாயின. நாளடைவில் மண்ணோடு மண்ணாய் மறைந்திருந்த மறைபொருள்களான உலோகப் பொருள்கள், உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. விவசாய உற்பத்திமுறைகளில், பலப்பல மாறுதல்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் பயன்படுத்தினர். அவனவன் உழுதுபயிரிட்ட நிலத்தை, தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். உழுபவனுக்கே நிலம் என்ற உயரிய கருத்தின் அடிப்படையில். ஆனால் இன்று உண்மைக் கருத்து மாறிவிட்டது. முதன் முதல் மனிதன் என்றைக்கு ஒரு துண்டு நிலத்திற்கு நான்குபுறமும் வேலி

யிட்டு, இஃது என்னுடையது என்று சொல்லத் தொடங்கினானோ; அன்றிலிருந்துதான் இந்த உலகத்தில் சொத்துரிமை ஏற்பட்டது. தனது என்று சொல்லிப் பிறரை ஏய்த்து, எளியவரை நம்பவைத்துவிட்டவனே "சொத்துரிமை" என்ற "சுரண்டும் இல்லத்திற்கு" அஸ்திவாரமிட்டவன். என் சிந்தனையிலே எழுந்ததை உங்களுக்குக் கூறுகின்றேன். இதனை வரலாற்று ஏடுகள் நமக்குக் காட்டுகின்றன. இந்தச் சொத்துரிமைதான் ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம். இதனை நீங்கள் தீவிரமாகச் சிந்தித்து ஓர் முடிவுக்கு வரவேண்டும்.

ஒன்று; உலகில் சமுதாய அமைப்பு மாறவேண்டும். இல்லையேல் சொத்துரிமை என்பது சீரழிந்துவிடவேண்டும். துண்டு நிலத்தைத் தனது என்று கூறியவன், மாற்றானுடைய பயத்திற்காக நான்குபுறங்களிலும் வேலி அமைத்துக்கொண்டான். இதற்கு மாறாக, துண்டு நிலத்தில் போடப்பட்டிருக்கும் வேலிகளைப் பெயர்த்தெறிந்துவிட்டு, பக்கத்திலிருந்த பள்ளங்களை நன்றாக நிரப்பிவிட்டு, கூட இருப்பவர்களைப் பார்த்து, தனது என்று சொல்லும் இந்த மோசக்காரனை நம்பாதீர்கள், பூமியில் விளையும் பொருள்கள் யாவும் எல்லோருக்கும் சொந்தமானவை; எந்த ஒருவனும் இந்த உலகில் தனது என்று சொல்லிக்கொள்ள முடியாது என்று கூறுவோனைகண்டு, துண்டுநில உரிமையாளன் எப்படிச் சீறிவிழுகின்றானோ, அதைப்போலத்தான் இன்றைய உலகம் உண்மை சீர்திருத்தவாதிகளின்மீது சீறிவிழுகின்றது. விளக்கமாகவும், சுருக்கமாகவும் சொல்லவேண்டின், தனிச்சொத்துரிமைதான் மானிட சமுதாயத்தின் சீரழிவிற்கு மூலகாரணம் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும்! உணர்ந்த பிறகுதான், இச்சமுதாயத்தை உயர்த்த முடியும் என்பது என் எண்ணம்!

உண்மையாகவே இயற்கை எல்லா பொருள்களையும் நல்ல முறையிலே கொடுத்திருக்கின்றது. ஆனால் மனிதன் தலையிட்டு ஆக்கத்தை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்கிறான். இயற்கையான, சுவையான வாழ்க்கையிலே தலையிட்டு, தீயனவாக்கிவிடுகின்றான். முடியாத செயல்களை முடியும்என்று சொல்லி வாதிக்கின்றான் முரட்டுப் பிடிவாதமாக.

இவ்வாறு முரட்டுப் பிடிவாதம் பிடிப்பதற்கும், சமுதாயத்தைத் தீயனவாக்கிவிடுவதற்கும் காரணம் கல்வி இல்லாமையே. கல்வி இல்லாவிட்டால் மனிதனைப்பொறுத்த அளவில், இன்னும் — இன்றைய நிலைவிடக் கேவலமாகவே இருந்திருப்பான். எனவே கல்வி அவசியம் என்பதை யறியவேண்டும் ஒவ்வொருவரும். மனிதன் பிறந்த காலத்தில் எந்த நிலையில் இருந்தானோ; அதே நிலையில் நாம் அவனை விட்டுவிட்டால், அவன் கேவலம் மிருகங்களைவிடக் கீழ்த்தரமான குணங்களையுடையவனாகிவிடுவான். அவனின் சூழ்நிலையானது, அவனிடத்திலேயுள்ள ஆக்கத்தன்மையை வீணாக்கிவிடும்! எத்தனையோ எடுத்துக்காட்டலாம். ஆயின் முக்கியமாகக் குறிப்பிடுகின்றேன் உணர்வதற்காக. ஊர்க்கோடியில் ஒரே ஒரு

பாதை. அதிலேதான் ஒவ்வொரு நாளும் பல நூற்றுக் கணக்கான மக்கள் போய்வர வேண்டும் தங்களின் அலுவல்களுக்காக. அப்படிப் போக்குவரத்து மிகுந்த பாதையிலே ஒரு அழகான செடியை வளரவிட்டால் அது வளருமா? நன்றாகச் சிந்திக்கவேண்டும். பலர் நடக்கின்ற ஒரு பாதையிலே ஒரு செடியை வளரவிட்டால், அஃது எப்படிப் பலரால் மிதிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு விடுமோ, அதைப்போல்தான் அவன்- அந்தக் கல்வி யில்லாத மனிதன் — அந்தச் செடியைப்போல் அழிக்கப் பட்டுவிடுவான். இதனை நீங்கள் அனுபவத்தில் காண இயலும்.

உலகிலே எந்த நாடாயிருந்தாலும் சரியே, முதன்முதலில் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கிறவள் பெற்றெடுத்த தாய்தான். ஆகையால் அவள் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நீக்கி, நல்ல பழக்க வழக்கங்களை நடைமுறையில் அனுசரித்து, கற்பனைக் கதைகள் - கட்டுக் கதைகள்—மூடநம்பிக்கைகொண்ட கருத்துக்கள் முதலியவைகளினின்று குழந்தைகளைக் காப்பாற்றி, அவைகளுக்குச் சரியான முறையில் கல்வி போதிக்கவேண்டும். ஒரு செடி நன்றாகவளரவேண்டுமானால், மண்ணைக் கிளறி உரம் போடுகின்றோம்; நீர் விடுகிறோம்; புழுபூச்சிகள் அணுகாதபடி காப்பாற்றுகிறோம். ஏன்? செடி நன்றாக வளர அல்லவா? அதைப் போல் மனிதன், மனிதப் பண்பாடு (HUMANISM) பெற வேண்டுமானால், அவனுக்குக் கல்வி அவசியமானது. பொருள்கள் குவிந்திருந்தும் பயன் படுத்த வழி தெரியாமல் திகைக்கும் நிலை இருக்குமேயானால், அது கல்வி கற்காத குறைதான். எனவே இச்சமுதாயத்தின் அடிப்படையை அசைத்து, அமைப்பு முறையை அறமுறையிலே அமைக்கவேண்டுமென்றால், அது கல்விமூலந்தான் முடியும் என்பது என் கருத்து.

### கல்வி.

மணலில் உள்ள கேணியில், தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

— திருவள்ளுவர்.

நாம் அன்னை வயிற்றிலிருந்து பிறக்கின்றபோதே பலத்துடன் பிறக்கின்றோமா, அல்லது பலமின்றிப் பிறக்கின்றோமா என்றால், வெறும் சதைப்பிண்டமாக செகத்துக்கு வருகிறோம். ஆனால் வந்த பிறகு என்ன தேவை? நாம் பிறக்கும் பொழுது பலத்துடன் பிறக்கவில்லை என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனால் பிறகு நமக்குத்தேவையாயிருக்கிறது பலம். அம்முறையிலேயே மற்றவர்களுடைய அன்பு, ஆதரவு, பகுத்தறிவு, கருத்து, இலட்சியம், எல்லாம் நமக்குத் தேவைப்படுகின்றன. இவைகள் எல்லாவற்றையும்விட, கடமையைச் செய்யத் தவறாத ஊக்கமும், எத்தகைய தோல்விகளையும் வெற்றியாக—பயிற்சியாக — முயற்சியின் முதற்படியாக ஏற்றுக்கொள்ளும் மனோதைரியமும் நமக்குத் தேவைப்படுகின்றன. பிறக்கும் நம்மிடத்தில் என்னென்ன இல்லையோ; மனிதனை பிறகு நமக்கு என்

னென்ன தேவையோ, அவைஎல்லா வற்றையும் கல்வி நமக்கு அளிக்கின்றது. இந்தக் கல்வியைக் கல்லூரியிலிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்துமே பெறவேண்டுமென்பது அவசியமன்று. பொதுவாகக் கல்வியை மூன்று வழிகளில் பெறலாம்.

1, இயற்கையிலிருந்து; 2, சமுதாய சகோதர மனிதர்களிடமிருந்து; 3, சுற்றுப்புறப்பொருள்களிலிருந்து. ஒன்று; நமது புலன்கள், அங்க அவயவங்கள், தசைநார்கள், எல்லாம் சேர்ந்த உடற்கட்டு, மற்றும் நம்மிடத்தில் இயற்கையாயுள்ள சக்திகள் முதலியன வளர்ச்சி பெறுகின்றன. காலத்திற்கு–பருவத்திற்கு–ஏற்றாற்போல மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன. இது வளர்ச்சியல்லவா? இந்த வளர்ச்சியே இயற்கை மூலமாகப் பெறும் மகத்தான கல்வி. இரண்டாவது; இந்த வளர்ச்சியை எப்படி உபயோகிப்பது–எந்த முறையில் உபயோகிப்பது–என்பதுபற்றிக் கேட்டோ, அல்லது படித்தோ தெரிந்துகொள்வதில்லை. அதுசகோதர மனிதர்களால் போதிக்கப்படும் பேரறிவுக் கல்வி. மூன்றுவது; நமது–நம்மைச் சுற்றியுள்ள – சூழ்நிலைகளிலிருந்து நாம் பெறுகிற பலவித இன்பதுன்ப அனுபவங்கள் இருக்கின்றனவே: அவை நமது சுற்றுப்புறங்களிலுள்ள பொருள்களிலிருந்து பெறும் அனுபவக் கல்வி.

எனவே ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் மூன்று பேராசிரியர்கள். இந்த மூன்று பேருடைய போதனைகளில் ஏதேனும் மாறுதல்கள் நிகழ்கின்ற போதுதான், மனித வளர்ச்சியின் மறுமலர்ச்சி குன்றுகிறது; வாழ்க்கையில் அமைதி என்பது அவனுக்குக் கிட்டாத ஒரு மறை பொருளாகின்றது. எனவே அமைதிக்காக மூட நம்பிக்கைகளுக்கு மண்டியிடுகிறான். கல்வியறிவு இருந்தும் அதன் படிநிற்காத கயவர்கூட்டம், அவனை ஓரளவிற்கு மகிழ்விக்கின்றது. அந்த மகிழ்ச்சி அவனின் வாழ்க்கைக்கு வெற்றி! ஆனால் அது இயற்கை வெற்றியன்று. வெற்றியடைவதென்றால், இயற்கை இலட்சியம் வெற்றியடையவேண்டும். அப்பொழுது தான் பூரண வெற்றி. "இயற்கை" என்றால் பலர் சந்தேகப்படுகின்றார்கள் புரிந்துகொள்ளாமல். நமக்கேற்படுகிற பழக்க வழக்கத்தைத் தான் இயற்கை என்று அழைக்கின்றோம். அதைப்போல் கல்வி என்பது என்ன என்று கேட்டாலும் கேட்கலாம். அப்படிக் கேட்பவர்களுக்கு என் பதில்: அதுவோர் உயர்ந்த பழக்கந்தானே – பக்குவமாகப் பெற்ற பயிற்சிதானே – அந்தப் பயிற்சியில் அனுபவம் பெறுவது தானே நல்ல கல்வி? கல்வி கற்றவர் பலர் கற்ற கல்வியை இழந்துவிடுகிறார்கள்; ஒரு சிலர், அதனையே பின்பற்றிப் போற்றுகின்றார்கள் என்றால் காரணமென்ன? அவர்களுடைய பழக்க வழக்கம்தான் என்பது என் எண்ணம்!

இன்றைய உலகின் கல்வி நிலை என்ன? உண்மைக் கல்வியின் நோக்கம் என்ன? வாழ்வில் இளமை முடியும் வரையில் படிப்பது – படித்துப் பட்டம் பெற்றுக்கொள்வது–பிறகு, படித்துப் பெற்ற பட்டத்தைக்காட்டி

ஓர் பதவி கேட்பது அரசாங்கத்தில். இதுதான் உண்மைக் கல்வியின் நோக்கமா? இதுதான் உண்மைக் கல்வியின் நிலையா? இந்த நிலையில் அந்தப் பட்டம் பெறுவதற்கு உழைப்பு—சக்தி—பொருள் எல்லாம் சர்வநாசம்! வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் லாபம் கருதுகிறுன். அதற்காகக் கல்வி பயில முற்படுகிருன். அதனுல் உயிருக்கும் உடலுக்கும் நஷ்டம் உண்டுபண்ணுவதை உணர்ந்தானில்லை. பட்டம் பெற்றும்—பதவி பெற்றும் — பாமரர்களுக்குப் பயனில்லாமல் இருக்கின்ருன் இன்றைய கல்வி நிலையில். படித்த பட்டதாரிகளுக்குத் தொழிலைப்பற்றித் தெரியுமா? உங்கள் ஊரில் எத்தனை தொழில் ஆலைகள் உண்டு? எத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் உண்டு? என்று சர்வசாதாரணமாகக்கேட்டால், உடனே எனக்கும் அதற்கும் தொடர்பே இல்லையே, நான் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும் அதனைப்பற்றி என்பான். இது இன்றைய கல்விநிலை! இது ஒழியவேண்டும். ஒழிந்தால்தான் ஓரளவிற்கு எதிர்காலச் சமுதாயம் வீழ்ச்சியிலிருந்து வெளியேறும். இல்லையேல் அதுவும் நம்மைப்போல் நசிந்துவாழ நேரிடும். உண்மைக் கல்வியின் நோக்கம் என்ன? மனிதன் மனிதனையும், அவனுடைய சூழ்நிலையையும்தெரிந்துகொள்ளும்சக்தி கொடுப்பதுதான் உண்மைக் கல்வியின் அடிப்படை நோக்கம். நம் வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் சமமாக ஏற்கக் கற்றுக் கொடுப்பதுதான் உண்மை சமுதாயச் சிறப்புக் கல்வி. நாம் எப்பொழுது பிறக்கின்ருேமோ அப்பொழுதே நமது உடன்பிறப்பாகப் பிறக்கின்றது கற்பது என்பது. கற்பதென்பது கல்விமட்டுமல்ல, மற்றவையுங்கூட கற்பதென்றே அழைக்கலாம். பொதுவாக நம் நாட்டில் "குழந்தை வளர்ப்பு" இலக்கியங்கள் மிகமிகக் குறைவு. முன்னேற்றமடைந்த நாடு என்று குறிப்பிட்டால், அங்கே குழந்தை நன்ருக வளர்க்கத் தெரிந்துள்ளனர் என்பதுதான் பொருள். இங்கு பிள்ளைகளின் பெற்ருேர்கள், தங்களுடைய குழந்தைகளின் உயிரைமட்டும் காப்பாற்றிக்கொடுத்தால்போதுமென்று நினைக்கின்றனர். இவ்வாறு நினைப்பது தவறு. பிள்ளைகள் பெரியவர்களானபிறகு, தங்களுடைய உயிரைத் தாங்களே காப்பாற்றிக்கொள்வது எப்படி என்பதையும் கற்றுக் கொடுக்கவேண்டும். அத்துடன்கூட இன்பம், சுகம், துன்பம், துயர், செல்வம், வறுமை, வெட்பதட்ப நிலை, மிகுந்த குளிர், முதலிய எல்லாவற்றையும் ஒரே முறையில் — ஒரே மாதிரியாகத் தாங்கிக்கொள்ளக் கூடிய மனப்பான்மையை, பிள்ளைகளுக்கு உண்டுபண்ணவேண்டும் பெற்ருேர்கள். இக்காலத்துப் பெற்ருேர்கள், தங்கள் பிள்ளைகளுக்குப் "பரம்பரைப் பழக்கம்" பரம்பரைப் பட்டியல் "பரம்பரைப் புள்ளி விவரம்" இதனை விளக்கிக் காட்டுவதிலும், தெரிந்துகொள்ளச் செய்வதிலும் காட்டும் கருத்து பிள்ளைகளின் முன்னேற்றத்தில் காட்டுவதில்லை என்பது என் எண்ணம்!

இன்றைய மனிதன் சடங்குகள் — சம்பிரதாயங்கள்-பித்தலாட்டங்கள்—முரட்டுப் பிடிவாதங்கள் — போர்த்தன்மை—கருத்தற்ற பழக்க வழக்

கங்கள்—சதி — சூழ்ச்சி—கொலை — ஏற்றத்தாழ்வு ஆகிய சிறைக்கம்பிகளுக்குள்ளேயே தன் வாழ்நாள் முழுவதையும் கழிக்கிறான் என்றால், அந்த மனிதனின் அரசியலைச் சொல்ல வேண்டுமா? சொல்லுவதற்கு நாக்கு எழவில்லை! என் செய்வோம்? எங்கே பார்த்தாலும் கோழைகள்—நோயாளிகள் — மரணத்தைக்கண்டு மருளுபவர்கள்—இவர்கள் நாட்டிலே உலவினார்களானால், நாட்டு நடப்பு எவ்வாறு இருக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். புரோகிதர்களின் புரட்டு—தத்துவஞானிகளின் தகிடுதத்தம் — பண்டிதர்களின் சிந்தனைக்கெட்டாத கருத்து—இவை தாம் நம் நாட்டுப் பெரும் இலக்கியங்கள்! கொளுத்தவேண்டுமா, அல்லது கொள்ளவேண்டுமா என்பது உங்கள் தீர்ப்பு! தீர்ப்பு எதுவாயிருந்தாலும் சரியே. ஆனால் நேர்மைக்கு ஆதரவாக இருக்கவேண்டும் உங்கள் தீர்ப்பு! அவ்வாறு நீங்கள் அளிக்கும் ஆதரவு மூலம், சிந்தனை ஒழுக்கத்திற்குமதிப்புக்கொடுத்தவராவீர்கள். எனவே ஒவ்வொருவரும் நன்றாக எண்ணிப்பார்க்கவேண்டும் என்பது என் எண்ணம்!

இன்றைய சமுதாயம்—இன்றைய அரசியல்—இன்றைய சூழ்நிலை தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பல முறையில் பாதுகாக்கின்றன. ஆனால் பாதுகாப்புப் பெறும் தனிப்பட்டவர்கள், சமுதாய நலத்தை நாடவில்லை என்பது கண்கூடு. மனிதன் அவன் வாழும் சமுதாயத்திற்குக் கடமையைச் சரிவர செய்தால் என்னென்ன நலன்கள் விளையுமோ, அந்த நலன்களைக் கடமையைச் செய்யாமலேயே அடையப்பார்க்கின்றான். ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தவேண்டும். அவ்வாறே எல்லோரும் சேர்ந்து செய்கின்ற ஒரு செயல், பிரதியொரு மனிதனுடைய நலத்தையும் நாடுவதாயிருக்கவேண்டும். உண்மைத் தொடர்பின்பேரில் நடப்பதுதான், சமுதாய ஒப்பந்தம் (SOCIAL CONTRACT) எனப்படும். இதனால் அனைவருடைய முயற்சி — உழைப்பு — பலம் தனிப்பட்டவர்களுக்குச் சாதகமாகிறது. எந்த ஒரு மனிதனும்மற்றவர்களுடையநன்மைக்கு விரோதமான ஒரு செயலைச் செய்யமாட்டான். ஏனென்றால், அவ்வாறு செய்யும் செயல், தன்னையே வந்து பாதிக்கும் என்பதை உணர்ந்துகொள்கிறான். எல்லாரும் முறையே உணர்ந்து கொள்ளத் தொடங்கின பிறகு, சமுதாயம் சமதர்ம முறையிலே செல்லும். அவ்வாறு செல்லும் பொழுது, நிலையிலும், தன்மையிலும், மகத்தானமாறுதல்கள் ஏற்பட்டு நின்று, நிலவி, நிர்ணயிக்கப்படுகிற எதுவும் சமுதாய நன்மைக்காகவே இருக்கும். சமுதாயத்தின் நலத்தை நாடுகிற விஷயத்

### படைப்பு.

**தகப்பன்:—** வேலை கெட்டுப்போய் உன்னைப் படைத்தானே கடவுள். உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கிறதா?

**மகன்:—** அது அவருகிட்டே இருந்தாத்தானே! சட்டியிலே இருந்தாத்தானே அப்பா அகப்பையிலே வரும்?

—அறிவுக்குஞ்சு.

தில், ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமைஇருக்கவேண்டும். அவ்வாறு உரிமையிருப்பதுதான் உண்மைச் சுதந்திரம். அதாவது ஒவ்வொரு மனிதனும், சமுதாயத்தைச் சேர்ந்துள்ள மற்றவர்களுக்குப் பயனுடையவனுயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட பெரும் இலட்சியத்தைக் கொண்ட ஒரு சமுதாயத்தை என்றைக்குமே எளிதில் அழிக்கமுடியாது. அவர்களுக்காகச் சட்டம்–பாதுகாப்பு – ராணுவம் என்றெல்லாம் தேவையில்லை. இலக்கியம் வளர்க! மக்கள் இலக்கியம் வளர்க! சமுதாய இலக்கியம் வளர்க! கலை பரவுக! என்று கூறி முடித்தார் புதுமையின் சின்னம் ஜீன் ஜாக்கோ ரூசோ (JEAN JACQUES ROUSSEAU).

“என்னுடைய துன்பங்களில் முதல் துன்பம், நான் பிறந்ததுதான்” என்று மனம் புழுங்கி மரணத்தை மக்களின் நன்மைக்காக அணைத்துக்கொண்டவர் இவர்.

“மனிதன் சுதந்திரமாய்ப் பிறந்தான். ஆனுல், எங்கும் அடிமைத் தளையுடனே காணப்படுகிருன்” என்ற ரூசோவின் சொல், நமது சிந்தனையைக் கிளறுமாக! புதிய சமுதாய அமைப்புக்கு வழிகோலுமாக! வாழ்க ரூசோ!

★

பகுத்தறிவு

அறிவியல் திங்கள் வெளியீடு.

உள்நாடு

ஆண்டுக் கட்டணம் 1—8—0
தனிப்படி ,, 0—2—0

வெளிநாடு

ஆண்டுக் கட்டணம் 2—0—0
தனிப்படி ,, 0—2—6

தமிழ் மாதந்தோறும்
முதல் நாளில் வெளிவரும்

1. கட்டணத் தொகையை முன்பணமாகப் பணவிடை செய்ய வேண்டும்
2. கையொப்பதாரர் தெளிவான முகவரி கொடுத்தல்வேண்டும்.

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

புராணங்கள் – சாஸ்திரங்கள் என்ற பெயரால் குருட்டு நம்பிக்கைக் கொள்கை பேரழிவைக் கொடுக்கும். படித்த ஆணும், பெண்ணும் உண்மையைப் பகுத்தறிய முடியாமலிருப்பதைக் கண்டு வருந்துகிறேன். எதையும் எண்ணிப்பார்க்கவேண்டும். நன்மை தீமைகளை சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாடு முன்னேற்றமடைய வேண்டுமானுல், மக்கள் புராணக் குருட்டு நம்பிக்கையை விட்டொழித்து, பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்கப் பழகவேண்டும். அதிலும் படித்த மக்கள், காரண காரியங்களைப்பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னரே, எதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். அத்தகைய மனப்பான்மை வளர்க்கப்படவேண்டும்.

பழமையில் பிடிவாதம்காட்டுவதை மக்கள் விட்டொழித்து, புதுமைக்கு-மாற்றத்திற்கு-இடம் கொடுக்கவேண்டும்.

—புருஷோத்தமதாஸ் தாண்டன்,
பம்பாயில், 12-12-50.

# இருப்பதை அனுபவி.

"கற்பனைச் சித்தி"

1. இன்னதென்று தெரியாது ஏனோ திகைக்குறாய்?
சொன்னேன்: கேட்டால்நீ சொகுசாக வாழலாம்!
வளைத்துவளைத் தேபேசி வழியே துலங்காது
இளித்தவாய் ஞானிபோல் ஏமாந்துபோகாதே

2. வண்ண மலருன்னை வாவென் றழைக்குது,
பண்ணினங் குயிலுன்னைக் கூவியே பாடுது!
தென்றல் காற்றுன்னைத் தேடியே வீசுது,
பின்னல் சடையுன்னைப் பிணைந்திட நாடுது!

3. போனால் வராதுகாண் பொன்னான இவ்வேளை;
ஏனோ நடுங்குறாய் எழுந்திரு தம்பி!
கோலா கலமுங் கூத்தும் இசையும்,
பாலாம் தமிழ்ப் பண்பும் பெறுவோம்.

4. நாளையே என்றுநீ நழுவியே சென்றிடில்
நாளையோ "இன்று"தான் நேற்றாகி விடுமடா!
எத்தனை நாளைக் கிருப்போம் இப்புவியில்?
அத்தனை நாளும் அடைவமோ இன்பம்?

5. இருக்கும் வரையில் இன்பம் பெறுவோம்;
இறப்பின் வாயிலை இனிதே அடைவோம்!
எப்போது கண்டாய் இப்புவி சொர்க்கம்?
இப்போதே காண்பாய் இப்புவி சொர்க்கம்!

6. பாரடா தம்பிநீ பலப்பல எழில்களை!
யாரடா அங்கே யாழினை எடடா,
மீட்டடா இசையினை வெம்மதுரத் தேன்போல!
நாட்டமுறு நங்கையர் நன்றாக ஆடட்டும்!

7. ஆட்டமும் பாட்டமும் அழகாக நடக்கட்டும்!
கூட்டுப் பழச்சாற்றைக் கோப்பையில் நிரப்படா!
வாட்டமாம் எம்மன வலியினைப் போக்கிட
நாட்டங்கொள் நல்லின்ப நாடகம் தொடங்கட்டும்!

8. செம்மைசேர் தமிழ்க்கலைச் செல்வியர் பலரையும்
எம்மிடம் அனுப்படா!... ஏன் தம்பி விழிக்கிறாய்?
இருப்பதை அனுபவி இல்லையேல் வருந்தாதே!
விருப்பத்தை யடக்கிநீ வீணாகப் போகாதே.

(உலகமாக்கவி உமரின் கருத்து இதன் வித்து.)

# அறிவு இயக்கத்தின் வருங்காலம்.

[ இரா. இலட்சுமி ]


நாம் இருக்கும் காலம் அறிவியல் காலம், இனிமேல் வருவது அறிவியல் சித்தர் காலம். அதை நம் குழந்தைகள் காண்பார்கள். ஆனால் குற்றமே காணும் ஒரு சாரார் இக்காலத்தை ஆத்மீக நம்பிக்கை குறைந்து அழிவு அணுகி வருங்காலம் எனக் குறைகூறி வருகிறார்கள்.

இப்போதுள்ள படிப்பின் அடிப்படையில் மதபோதனை, ஆத்மீக நம்பிக்கைகள் இல்லாதிருப்பதே இவற்றிற்குக் காரணம் என அச்சாரார் கருதுகின்றனர். காலப்போக்கில் தேய்ந்து பயனற்ற தங்கள் கொள்கைகளைப் புது மெருகிட்டுத் திணிக்க விடாமுயற்சி செய்துவருகின்றனர். தற்காலப் படிப்பின் அடிப்படை, விஞ்ஞானம் முதலிய அறிவியற் கலையின் மேல் கட்டுப்பட்டு இருப்பதால்தான், மனித இனத்திற்கே உரிய பகுத்தறிவைச் சிறிது சிறிதாகப் பயன்படுத்தும் பழக்கம் கைவரப்பெற்றான் மனிதன், என "வாடிங்டன்" கூறுகிறார். இப்போதைய உலக அமைதி இன்மைக்கு விஞ்ஞானம் தான் காரணம் எனவும், அச்சாரார் சொல்வர். அது பெருந் தவறு. நாள்தோறும் வளர்ந்துவரும் மனித சமூகத்தின் சிக்கலான பிரச்னைகளை, கடந்த முப்பது ஆண்டுகளுக்குமுன் சிக்கறுக்க மதமும் மாந்திரிகமும் துவக்கிய தொல்லை, இக்காலச் சண்டையால் முடிந்தது என்றே சொல்ல வேண்டும். பொதுவாக, மதக் குருட்டுநம்பிக்கை சேற்றைக் கழுவி, அறிவுமணியைத் துலக்குவதற்குத்தான் அறிவியற்கலை பரவிவருகிறது. அவரவர்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டு, ஒழுங்குபட அமைக்கும் பண்பைப்போதிப்பதற்கு அறிவு இயக்கத்தால்தான் முடிகிறது.

ஆசிரியர்கள் வருங்கால அறிவு இயக்கத்தில் முக்கியப் பொறுப்புடையவர்கள். ஏனெனில், வருங்கால மக்களாகிய குழந்தைகளுக்கு அறிவையும், உண்மையை அறிய ஆசையையும் அவர்களே ஊட்டவேண்டும். ஆசிரியர்கள் தாங்கள் நம்பிய கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ சிறு குழந்தைகள் தலையில் சுமத்தக் கூடாது. அறிவியற்கலைகளையும், ஆராயும் திறனையும் குழந்தைகள் உள்ளத்தில்பதி

யவைக்கவேண்டும். இதோடு, மனித சமூகம் நாளுக்குநாள் மாறுபட்டு அமையும் தன்மையுடையதாதலால், அவ்வப்போது தேவையானவைகளை தாராளமாக ஆராய்ந்து, தெளிந்து அறிய வாய்ப்பு எல்லோருக்கும் இருக்க வேண்டும். ஆனால் இப்போது தனிப்பட்டவர் கருத்தை வெளியிட பயப்படும் காலமாக இருக்கிறது. காரணம் கருத்தை வெளியிடுவதால் உண்டாகும் கெடுதியே! சரியான அறிவியக்கம் வேண்டுவது இதல்ல. ஒவ்வொருவர் கருத்தினையும் தாராளமாக, பயமின்றி வெளியிட்டு, ஆராய்ந்து, உண்மைகண்டு வாழ வேண்டும் என்ற நோக்கமே அறிவியக்கத்தின் அடிப்படை.

ஆதலால் அறிவியக்கத்தின் வருங்காலம், மனித சமூகத்தின் வருங்காலத்தைபற்றியதே. அறிவுஇயக்கத்தால் தான் மனித வாழ்க்கையைச் செப்பனிட்டு ஒழுங்குபடுத்த முடியும் என்ற அழுத்தமான எண்ணம் இல்லையெனில், குருட்டு நம்பிக்கையும், மூடப்பழக்கமும் அதைச் சீர்திருத்தட்டும்என விட்டுவிடுவதே சிறந்தது. ஆனால் பழங்காலக்கதைகளைப் படிப்பவர்கள், அக்காலத்திய தவறுகளை அகற்றி, வருங்காலத்தைச் செப்பனிட்டு வாழ வழிகாட்டுவதற்காகத் தான் எனக்கருதுகிறார்கள். உறுதியும் தன்னம்பிக்கையும், அறிவியக்கத்தில் உறைந்திருப்பதால், இவ்வுலகைத் திருத்தியமைத்து, அறிவோடு அன்பும் உடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பது உறுதி.


சிந்திக்கத் தூண்டும் உணர்ச்சியுள்ள பகுத்தறிவுச் சிறு கதைகள்.

விலை 0—10—0

எல்லா
சுதேசமித்திரன்
ஹிக்கின்பாதம்ஸ்
புத்தக ஸ்டால்களிலும்
கிடைக்கும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்
சங்ககிரி :: சேலம் மாவட்டம்.


***

# சார்லஸ் பிராட்லா

★

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றிய அறிவியல் வாதிகளில் தலைசிறந்தவர் சார்லஸ் பிராட்லா (CHARLES BRADLAUGH) இவர் 1833-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 26-ம் நாள் இங்கிலாந்தில் "ஹோக்ஸ்ற்றன்" என்ற ஊரில் பிறந்தார். இவரது தந்தை ஓர் வக்கீல் குமாஸ்தா. பரமஏழை. என்றாலும் தன்மகனை உயர்தரக்கல் லூரிக்கு அனுப்பி நன்கு கல்வி கற்பித்துவந்தார். பிராட்லா இளமையிலேயிருந்த புத்தி நுட்பமும் சுறுசுறுப்பும் உடையவராய் விளங்கினுர். காய்தல் உவத்தலின்றி எல்லா நூல்களையும் வாசித்துவந்தார். தர்க்க வாதம் செய்வதில் அவருக்கு மிகப் பிரியம். ஆனல் ஆராய்ந்து பாராமல் எதையும் நம்பமாட்டார்; பேசமாட்டார்.

இளமை முதல் அவரிடமிருந்த இயற்கை அறிவு, மனித சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டது. "சுதந்தரமே எனது உயிர்" என்பது பிராட்லாவின் மூலமந்திரம். மனித சமூகத்தின் விடுதலைக்கும், சுதந்தரத்திற்கும் பாடுபடுவதே தெய்வத்தொண்டு என்பது அவரது சித்தாந்தம்.

சமூகத்தின் விடுதலைக்கும், சுதந்தரத்திற்கும் முட்டுக்கட்டையாயிருப்பவை கடவுள், மதம், மூடநம்பிக்கைகள், குருட்டுப் பழக்க வழக்கங்கள் என்பது அவரது நம்பிக்கை. தன் கொள்கைகளைத்தெளிவாக, அஞ்சா நெஞ்சத்துடன் வெளியிட்டார். பிராட்லா, பேச்சிலும், எழுத்திலும் மிக வன்மை படைத்தவர். எதிரிகளின் வாயடக்குவதில் வெகுசமர்த்தர். பிராட்லாவின் காலம், வைதிகம் உச்ச நிலையில் இருந்தகாலம். எனவே அவருக்கு உலகமெங்கணுமிருந்து எதிர்ப்புகள் தோன்றிக் கொண்டே இருந்தன. பாதிரிமார்களின் சூழ்ச்சி பலவிடங்களிலும் பகிரங்கமாய் நடந்துவந்தது. ஆனல் இறுதியில் பிராட்லாவின் பக்கமே வெற்றிக்கொடி பறந்தது.

அவர் பதினறு வயதுள்ள இளம் வாலிபனக இருக்கும் பொழுதே, மதத்திற்கு விரோதமாக ஒரு பாதிரியாருடன் தர்க்கம் புரிய நேரிட்டது. அக்காலத்திலே கிறிஸ்து மதத்தைக் கண்டித்து நூலொன்று எழுதி, அப்பாதிரியாருக்கு வெகுமதியளித்தார். என்னே இவரது துணிச்சல்!

1850-ம் ஆண்டில் லண்டனில் வேத சாஸ்திரங்களின் பித்தலாட்டங்களைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர். அது பிராட்லாவிற்கு ஏராளமான விரோதிகளை யுண்டாக்கிவிட்டது. சிறிதுகாலம்

அயர்லாந்தில் ராணுவச் சேவகம் புரிந்துவந்தார். பிறகு தந்தையைப் போலவே ஓர் வக்கில் குமாஸ்தாவாகவும் வேலை பார்த்தார். அப்பொழுது அவர் ஓர் அழகிய மாதை மணந்துகொண்டார். பிராட்லாவின் மனைவி குடிகாரியாகவும், அறிவிலியாகவும் இருந்தமையால், அவரது இல்வாழ்க்கை இன்பகரமாகஇருக்கவில்லை.

1850-ம் ஆண்டில் "நேஷனல் ரிஃபார்மர்" (NATIONAL REFORMER) என்ற ஆங்கிலப் பத்திரிகையிலே தன் கொள்கைபற்றி ஆணித்தரமாக எழுதினர்.

பாதிரிமார்களும், மதவெறியர்களும், பிராட்லாவைப்பற்றி எவ்வளவு பொய்ப் பிரசாரம் செய்த போதிலும், நாளடைவில் பொதுமக்கள் பிராட்லாவின்மீது பேரன்பு கொண்டுவிட்டார்கள். பிராட்லாவின் எழுத்தும், கருத்தும், மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

பிராட்லா எழுதிய நூல்களில் சிறந்தது: "நம்பிக்கை யீனத்தால் மனித சமூகம் பெற்றுள்ள லாபம்" (HUMANITY GAIN FROM UNBELIEF) என்ற நூலாகும். அந்நூலில் மதத்தின் கொடுமைகளை மிக நன்ருக விளக்கியிருக்கிறர்.

பிராட்லாவோடு தொண்டுபுரிந்தவர், நமது அடையாற்று அம்மையார் காலஞ்சென்ற அன்னிபெசண்டாவர். இருவரும் இணைபிரியாத நண்பராய், இங்கிலாந்தில் அறிவியக்க வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டனர். அதனல் அம்மையாருக்கும் பிராட்லாவிற்கும் காதல் சம்பந்தமுண்டென்றுகூட எதிரிகளால் எங்கெங்கும் பிரஸ்தாபிக்கப்பெற்றது. அதைப்பற்றி பிராட்லா ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, தமது தொண்டைத் தொடர்ந்து செய்து வந்தார். 1877-ம் ஆண்டில் பிராட்லாவும் பெசண்டம்மையாருமாக, "நோர்டனின்" கருத்தடையைக் குறித்து ஒரு நூல் வெளியிட்டதற்காக சிறைக்கோட்டம் நண்ணினர். ஆனல் வழக்கு விசாரணை செய்யப்பட்டு இருவரும் கண்யமாக விடுவிக்கப்பட்டார்கள். அன்னிபெசண்டு அம்மையார் நிலையான கொள்கையும், உறுதியுமற்றவராய் இருந்தபடியால், பிராட்லா அவ்வரைப் பிரிந்து தன்வழியே தொண்டாற்றி வந்தார்.

அக்காலத்தில் பார்லிமெண்டு மெம்பராகஇருப்பது மிகக்கௌரவமாகக் கருதப்பட்டது. பிராட்லா இங்கிலாந்து பார்லிமெண்டுசபைக்கு ஓர் அபேட்சகராக நின்ருர். அவரது எதிரிகள் இவரைப்பற்றி எவ்வளவோ பொய்ப் பிரசாரங்கள் புரிந்தும், அதிகப்படியான ஓட்டுகளால் பார்லிமெண்டில் அங்கம் பெற்ருர். 1880 முதல் 1891 வரை 4 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டு அங்கத்தினராக இருந்தார்.

அவர் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சபைக்குச் சென்ருர், அச்சபையின் சம்பிரதாயப்படி பிராட்லா சில உறுதிமொழிகள் சொல்லவேண்டி நேர்ந்தது. அவ்வுறுதிமொழியில் உள்ள "எனக்குக் கடவுள் சகாயம் உண்டாகட்டும்" என்ற வார்த்தைகளைச் சொல்ல பிராட்லா அறவே மறுத்துவிட்டார். அரசாங்கம் எவ்வளவு முயன்றும் பயனற்றுப்போயிற்று. அதற்காக அவர் பெரும்பாடுபட்டு, அக்கடவுள்

பேராலுள்ள அவ்வுறுதி மொழிகளை மாற்றி, வெற்றியடைந்தார். பார்லிமெண்டில் "முதலாவது நாஸ்திக மெம்பர்" என்ற பெயருடன் அங்கம்வகித்து, மக்களுக்கு அரும்பணியாற்றினார்.

இத்தகைய ஒப்பற்ற அரசியல் ஞானி, சிறந்த அறிவியல் நிபுணர், ஏழைகளின் தோழர், சுதந்தர வீரர், 1891-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாள் இயற்கை முடிவெய்தினார்.

அவரது நூற்றாண்டு நிறைவுவிழா 1933-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் லண்டனில் மிகச் சிறப்பாய் கொண்டாடப்பட்டது. நாஸ்திகரென்று ஒரு காலத்தில் தூற்றப்பெற்ற சார்லஸ் பிராட்லா, யாவராலும் போற்றப்பட்டு, அவரது நூற்றாண்டு நிறைவுவிழாவை நாடெங்கும் கொண்டாடும்படி பார்லிமெண்டு அங்கத்தினரும், பெருஞ்செல்வர்களும், லார்டுகளும், H. G. வெல்ஸ், பெர்னார்ட்ஷா போன்ற பெரிய மேதாவிகளும், விஞ்ஞானிகளும் கையொப்பமிட்டு வேண்டிக் கொண்டார்கள். அவ்வாறே அவ்விழா மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்பெற்றது.

பிராட்லாவின் பூதஉடல் நம்மை விட்டு மறைந்துவிட்டது. அவர் நாஸ்திகன், ஆனால் உண்மையே ஓர் உருவாய் வந்தவர். அவர் தோன்றிய நூற்றாண்டிற்குப் பின்னும் அவரை உலகம் நினைக்கின்றது. அவரது நினைவு உலகமக்களிடையே நிலவி வருகின்றது. அவரது சொற்பொழிவு உலகமெங்கும் பரவிவருகிறது. வாழ்க அவரது கொள்கை!

*****

# பொன் மொழிகள்

பசியுடன் வாடுகிறவர்களுக்கு அரசியல் சுதந்திரம் திருப்தியளிக்காது.

—லெனின்.

* *

இலட்சியமில்லாத மனிதன் திசையறி கருவியில்லாத கப்பலையொப்பான்.

—ஆவ்பரி.

* *

நான் பிறருக்குச் செய்யவேண்டிய கடமை யென்னவென்பதே எனது கவனமாகும்; பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதன்று.

—எமர்சன்.

* *

அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக்கொள்ளப்படும்.

—ஜார்ஜ் எலியட்.

* *

ஞானிகள் முயலவேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று, அறியவேயாகும்.

—கதே.

* *

நியாயத்துக்காகவும், தர்மத்துக்காகவும் நான் பொதுஜன அபிப்பிராயத்தையும் எதிர்த்து நிற்கத் தயாராக இருக்கிறேன்.

—சாக்ரட்டீஸ்.

"உங்களைப் போன்ற பணக்காரர்களைப் பிடித்து, கிராமத்தில் கோயில்கட்டி அதனுல் தன் பிழைப்புக்கு வழி தேடுகிருன் அந்த வஞ்சகன்" என்ருன் தங்கத்துரை. பூசாரி திடுக்கிட்டான்! குட்டு வெளிப் பட்டது!

# பூசாரியின் மகன்.

[ ப. க. குஞ்சிதம். ]

பொற்சிலையும், தங்கத்துரையும் வண்டியிலிருந்து இறங்கினுர்கள். அவர்களை ஏக்கத்துடன் பார்த்தனர் சில சிறுவர்களும், சிறுமிகளும். "பொற்சிலை! இவர்களுக்கும் நம்மைப்போல் படிக்கவேண்டுமென்ற ஆசை. என்ன செய்வார்கள், பாவம்" என்ருன் தங்கத்துரை.

"இவர்களை யார் படிக்கவேண்டாமென்கிருர்கள்?" என்ருள். ஏழைகள்! நம்மைப்போல் பக்கத்து ஊருக்கு வண்டியில் போய்ப்படிக்கப் பணத்திற்கென்ன செய்வார்கள்? நம்மவூரில் பள்ளிக்கூடம் இருந்தால் தேவலை" என்ருன்.

"அண்ணு! நம்ம ஊரில் ஒரு பள்ளிக்கூடம் கட்டினுல் என்ன? இவர்கள் எவ்வளவு சந்தோஷத்துடன் படிப்பார்கள்?" என்ருள். "செய்யலாம், பெரியவர்கள் நினைக்கணுமே, அவர்கள் சிவன் கோயில் கட்டும் யோசனையில் அல்லவோ இருக்கிருர்கள். நாம் என்ன செய்வது?" என்ருன். "அண்ணு! காளி கோயில் ஒன்று இருப்பது போதாதா? சிவன் கோயில் வேறு எதற்கு?" என்று கேட்டாள் பொற்சிலை. உன் அப்பாதான் முன்னிருந்து கட்டப்போகிருர். அப்பாவுக்கு நீ சொன்னுல் பள்ளிக்கூடம் கட்டச் செய்யலாம்" என்ருன் தங்கத்துரை. "அண்ணு! நான் அப்பாவிடம் கட்டச் செய்கிறேன்" என்ருள். பிறகு வீட்டிற்குள் சென்ருள். தங்கத்துரையும் தன் வீட்டிற்குச் சென்ருன். சோலையூர் ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்திலேயே பெரும் பணக்காரர் மதுராமுத்து. அவரது மகள் பொற்சிலை. மகள் படிக்க வேண்டுமென்பதில் அக்கரையுள்ளவர். அங்கு பள்ளிக்கூடம் இல்லாததால். வண்டியில் சென்று பக்கத்து ஊரிலுள்ள பள்ளியில் படிக்கவிட்டார். தங்கத்துரை பூசாரியின் மகன். பொற்சிலையுடன் பள்ளிக்கூடம் சென்றுவருவான். இருவரும் உறவு முறையுடன் பழகி வந்தார்கள். பொற்சிலையைவிட அவன் மூத்தவன். பூசாரியின் குணத்திற்கு அவன் நேர்மாருனவன். ஆழ்ந்த யோசனையும், அறிவுத் திறமையும் உடையவன்.

பொற்சிலை அப்பாவிடம் சொல்லி, பள்ளிக்கூடம் கட்டச் செய்யவேண்டுமென்ற ஆவலுடன் தந்தையிருக்மிடம் சென்றாள். தந்தையுடன் பூசாரியும் இன்னொருவரும் இருந்தனர். புதியவரை அவள் இதற்கு முன்பு பார்த்ததில்லை. தந்தை அவரை சாமி என்றழைத்து, குழைவுடன் பேசுவதைக் கண்டு பொற்சிலை வியப்படைந்தாள். யாரிடமும் கம்பீரமாகப் பேசும் அப்பா இவரிடம் வணங்குகிறாரே. இவர் யாராயிருக்கும்? என்று யோசித்தாள். அவர்கள் பேசுவதை கவனித்துக் கொண்டே நின்றாள்.

“உங்களுடைய செல்வாக்கு இன்னும் பெருகப் போகிறது. தெய்வ பக்தியால் உங்களுக்குத் தனிச்சிறப்பும், புகழும் ஏற்படப்போகிறது” என்று ஏதேதோ அவரைப் புகழ்ந்து பேசினார்புதியவர். “ஆமாம் கோயில் வேறு கட்டப்போகிறார் அல்லவா? சிறப்புக்கும், புகழுக்கும் என்ன குறைவு?” என்றான் பூசாரி. மகிழ்ந்தார் மதுரமுத்து. சீக்கிரமே கோயில் கட்ட ஆரம்பிக்கவேண்டியதுதான் என்றார். பிறகு பூசாரியும் அந்தப் புதியவரும் வெளியே சென்றார்கள்.

பொற்சிலை மெதுவாகத் தந்தையருகில்சென்றாள். “அப்பா! அவன் மனிதன்தானே? அவனை ஏன் சாமி, சாமின்னு கூப்பிட்டீங்க?” என்று கேட்டாள். அந்தக்கேள்வி அவரைத் திகைக்கவைத்தது. “அவர் ஐயர், மேல் சாதியார். அவரை அப்படித் தான் மரியாதையோடு கூப்பிட வேண்டும். பொற்சிலை! என் ஜாதகப்படி பின்னால் நடக்கப்போவதைச் சொன்னார். நான் கோயில் கட்டு

## நர்த்தனம்.

**தங்கை:**—(நடராசர் படத்தைக்காட்டி) அக்கா! இந்த நடராசமூர்த்தியைப்போல், நான் நாட்டியம் ஆடணும்னு பாட்டி சொல்றா. நட்டுவனாரிடம் நான் நல்லா கத்துக்கப் போறேன்.

**அக்கா:**— அது சரி, நடராசர் முயலகனைப் போட்டு மிதித்துக் கொண்டு நர்த்தனம் ஆடுகிறார். அது மாதிரி உனக்கொரு ஆள் கிடைக்கணுமே.

**தங்கை:**— அதுக்குத்தான் நட்டுவனார் இருக்காரே அக்கா!

—“வாலி”

வதைப்பற்றி நினைக்கவேயில்லை. இப்போது நினைக்காததும் நடக்கப் போகிறது” என்றார் மதுரமுத்து.

“அப்பா! நம் ஊரில் கோயிலாவது இருக்கிறது. பள்ளிக்கூடம் தான் இல்லை. ஒரு பள்ளிக்கூடம் கட்டுங்களேன். ஏழைப் பிள்ளைகள் படிக்க சௌகரியமாய் இருக்கும்” என்றாள் பொற்சிலை. அவள் சொன்னதும் சரியாகத்தான்பட்டது. ஆனாலும் பக்திவெள்ளம் அதை அடித்துச் சென்றது. “யாரு படிச்சா என்ன? படிக்காட்டா ஒனக்கென்ன? உன் படிப்பைப் பார்” என்றார் மதுரமுத்து. “அப்பா! எனக்கே தினம் பள்ளிக்கூடம் போய் திரும்பி வர்றதுக்குப் பயமாய்இருக்கிறது. சில ஆட்கள் எங்க வண்டியை ஒரு மாதிரியாய் பார்க்கிறார்கள். ஜன நடமாட்டம் இருப்பதால் தப்பிவருகிறோம். ஒரு நாளைக்குத் தனியா சிக்கிட்டா எங்க கதி என்ன ஆவது? அப்பா! நீங்களே யோசித்துப்பாருங்கள். எனக்கும், எல்லா பிள்ளைக

ளுக்குமே நல்லது. நீங்க பள்ளிக்கூடம் கட்ட முயற்சிக்காமே யார் செய்வார்கள்? என்ருள் பொற்சிலே.

மதுரமுத்துக்கு ஒரே மகள் பொற்சிலே. மகள் பள்ளிக்கூடம் செல்லும் வழியில் ஏதாவது நேர்ந்தால் என்ன செய்வதென்று பயந்தார். எனவே யோசித்தார், பிறகு சம்மதித்தார். ஊரிலுள்ள சிலரைக் கலந்து, பள்ளிக்கூடம் கட்டும் முயற்சியில் துணிந்து ஈடுபட்டார் மதுரமுத்து. இதை யறிந்த பூசாரி மிக வருந்தினன். மதுரமுத்துக்குக் காய்ச்சல் வந்தது. அவரது உடல்நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. எல்லோரும் பயந்தார்கள். "வாக்குவைத்துக் கேட்கலாம்" என்ருன் பூசாரி. அப்படியே வாக்குவைத்துக் கேட்டனர். காளியம்மாள் வாக்கைக்கேட்ட எல்லோரும் நடுங்கினர்கள். தெய்வ குற்றம்! என்ன தீங்கு நேருமோவென்று கலங்கினர்கள். பொற்சிலேயின் தாய் தாங்கொணு துரத்தால் துடித்தாள். மதுரமுத்து பொற்சிலேயின்மேல் கோபமடைந்தார். தந்தையின் நிலேயும், பூசாரியின் வாக்கால், வீட்டிலிருக்கும் துயரையும் கண்டு வருந்தினள் சிறுமி.

பொற்சிலே அழுது சிவந்த கண்களுடன் வீட்டுப் பின்புறத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தாள். அங்கு வந்தான் தங்கத்துரை. "பொற்சிலே! ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிருய்? நீ ஆசைப்பட்டதுபோல் தான் பள்ளிக்கூடம் கட்டப் போகிருர்களே" என்ருன். "அண்ணு! நீ ஒன்றும் தெரியாதவன்போல் பேசுகிருயே. கோயில் கட்டுவதற்குப் பதில் பள்ளிக்கூடம் கட்ட ஆரம்பித்ததால் தான், அப்பாவிற்கு நோய் வந்ததாம். கோயில் கட்டுகிறேனென்று சொல்லிவிட்டு, கட்டாமல் கடவுளே அவமதித்துவிட்டாராம். சாமி உக்கப்பா மூலம் சொல்லிற்ரும், அதிலிருந்து வீடு அலங்கோலமாக இருக்கிறது, அப்பா என்மேல் கோபிக்கிருர்" என்ருள் பொற்சிலே. துக்கத்தால் தேம்பி யழுதாள். தங்கத்துரையின் நெஞ்சம் நெகிழ்ந்தது. இதற்குக் காரணமான, அந்த விஷயத்தைச் சொல்லிவிடலாமா என்று அவன் நாக்குத் துடித்தது. ஆனல் எதையோ நினைத்துக்கொண்டு நின்ருன். "பொற்சிலே! காளியாவது அப்பாமேல் வந்து சொல்வதாவது. இதுக்காக இப்படி பயப்படுவதா? நல்ல மருந்து கொடுத்தால் நோய் தீருகிறது" என்ருன். "அண்ணு! காளியின் வாக்கைத்தானே, நம்புகிருர்கள். நானும் அப்பாவிடம் சொன்னேன். கேட்டால்தானே? நீ தான் இதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்" என்ருள் பொற்சிலே. தங்கத்துரை யோசித்துக்கொண்டே நின்ருன். எப்படியாகுலும் சரி, பொற்சிலே சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். பொற்சிலேயின் காதருகில் சென்று மெதுவாக ஏதோ சொன்னன். "அண்ணு! நானும் அப்படித்தான் நினைத்தேன். நீ சொன்னல் நிச்சயமாக அப்பா நம்புவார். சொல்லேன்" என்ருள். "நான் சொல்லிவிடுவேன், ஆனல் எனக்கே ஆபத்தாக முடிந்தால் என்ன செய்வது? என்ருன் தங்கத்துரை.

ஏமாற்றுபவர் யாராயிருந்தாலும் என்ன? விடக்கூடாது. எனக்காக நீ இதை அப்பாவிடம் சொல்லவேண்

டும் என்று கெஞ்சினாள் பொற்சிலை- ஓப்பினான் தங்கத்துரை. மதுரமுத்து வின் உடல் சிறிது குணமடைந்தது. பூசாரியும், அவரும் கோயில் கட்டும் விஷயமாகப் பேசிக்கொண்டிருந் தனர். தங்கத்துரையும், பொற்சிலை யும் அங்கு வந்தார்கள். தங்கத்துரை தயக்கத்துடனும், ஒருவிதத் துணிவு டனும், அவர்கள் அருகில் வந்தான். மதுரமுத்துவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். "தம்பி! இது என்ன கடிதம்?" என்று கேட்டார் மதுர முத்து. கடிதத்தைக் கண்ட உடனே மருண்டான் பூசாரி.

"அன்றைக்கு அப்பா உங்களிடம் அழைத்துக்கொண்டு வந்தாரே ஒரு தஞ்சாவூர் ஐயர்; அவர் அப்பாவுக்கு எழுதிய கடிதம் இது. ஐயர் தூண்டு தலால்தான், கோயில் கட்டும் ஏற் பாட்டையே இவர் ஆரம்பித்தார். அது நின்றதும் சாமியாடி வாக்குச் சொல்லி, கோயில் கட்டச் செய்த தும் அவர் ஏற்பாடுதான். உங்களைப் போன்ற பணக்காரர்களைப் பிடித்து கிராமத்தில் கோயில் கட்டி, அதனால் தன் பிழைப்புக்கு வழிதேடுகிறான் அந்த வஞ்சகன். இவர் அவனுக்கு உடந்தையாக இருக்கிறார். நீங்களே கடிதத்தைப் படித்துப் பாருங்கள், எல்லாம் புரிந்துவிடும்" என்றான் படபடப்புடன் தங்கத்துரை, பூசாரி திடுக்கிட்டான். மகன்மேல் சீறினான். "படுபாவிப் பயலே! என்னடா அபாண்டமாகப் பழி சொல்கிறாய்? நாக்கு நீண்டுவிட்டதாடா நாயே"? என்றவாறு அடிக்க எழுந்தான். "பூசாரி! பொறு. தகுந்த சாட்சி யுடன் உன் குட்டு வெளிப்பட்டுவிட் டது. ஒரு பிட்சாந்தேகியிடம் லஞ் சம் வாங்கிக்கொண்டு, என் மனதை எவ்வளவு புண்படுத்திவிட்டாய்? குழந்தைகளின் படிப்பில், மண் போடப்பார்த்தாயே! நீ காளியின் அருகிலேயே இருந்ததன் பலன் இது தானா?" என்றார் ஆத்திரமாக. காரி யம் மிஞ்சிவிட்டதை யறிந்த பூசாரி குழைந்தான்; தலை குனிந்தான். "நீங்களெல்லாம் இப்படிச்சொன்னா தெய்வ காரியம் எப்படிங்க நடக்கி றது?" என்றான். "போதும். தெய்வ காரியத்தைத் தெய்வமே பார்த்துக் கொள்ளட்டும், மனிதர்களின் காரி யத்தைத் தான் மனிதர்கள் பார்க்க வேண்டும்" என்றார் மதுரமுத்து. "அதுதாம்பா நாஞ் சொல்றதும்" என்றாள் பொற்சிலை.

"தங்கத்துரை! தந்தை யென்றும் பாராமல், குற்றத்தைக் கண்டித்த உன் செயலால், ஊருக்கே நன்மை ஏற்படப் போகிறது. நாளைக்கே பள்ளிக்கூடம் கட்ட ஆரம்பிக்கப் போகிறேன். எனக்கு நோய் வந்தா லும் சரி, செத்தாலும் சரி, எத்தர் களின் பித்தலாட்டத்தை இனி நம் பப்போவதில்லை" என்றார் மதுர முத்து.

******

## கெட்டவரா?

**தாயார்:-** (இழவு வீட்டில் அழுது கொண்டே) தம்பி! பாட்டி சாமி பாதம் சேர்ந்துவிட் டாளே. இனிமேல் யாரைப் போய் பாட்டீன்னு கூப்பிடு வேடா தம்பி?

**மகன்:-** அம்மா! பாட்டி சாமிகிட் டெதானே போயிருக்கா? அதுக்காக ஏன் அழுவே ணும்? சாமி அவ்வளவு கெட்டவரா அம்மா?

-அறிவுக்குஞ்சு

மூலம், ராபர்ட், ஜி. இங்கர்சால்

# சமுதாய விடுதலை

மொழிபெயர்ப்பு
இரா. நெடுஞ்செழியன். எம். ஏ

[முன் இதழ் தொடர்ச்சி.]

நமது முன்னோர்களின் பெருமதிப்பு, வீரச் செயல்கள் வாயிலாகப் புலப்படுத்தப்படவேயில்லை. தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள மறுத்த எந்த ஒரு மனிதனும், அவர்களால் மன்னிக்கப்பட்டதே கிடையாது. தங்கள் தீர்ப்புப்படி குற்றவாளி என்று கருதப்பட்ட மனிதனின் கட்டைவிரலில், **கட்டை விரல் திருகாணியை** மாட்டி, சித்ரவதையின் இறுதி எல்லையை எட்டுமளவுக்கு முறுக்கினார்கள். பிறகு அவனை அந்தகாரமும், அமைதியும், இருளும் சூழ்ந்த தனி அறையில் தள்ளி வைத்து வதைத்தார்கள். அங்கே அவன் பதைபதைத்துத் துடிதுடித்து உயிரை ஊசலாட விட்டுக்கொண்டிருந்தான். இத்தகைய செயல் அன்பின் பேரால் செய்யப்பட்டது!— அருளின்பேரால் செய்யப்பட்டது!— இரக்க மனம் படைத்த இயேசுவின் பேரால் செய்யப்பட்டது!

நான் அவர்களின் **சித்ரவதைக் கழுத்து வளையத்தையும்** பார்த்திருக்கிறேன். ஊசிபோன்ற கூர்மையுடைய சிறிய ஆணிகள் நூற்றுக் கணக்கில் உட்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்புவளையமே அந்தக் கருவியாகும். தண்டனைக்குள்ளாக்கப்படுபவன் கழுத்தில் அது மாட்டப்பட்டு, அவன் தொண்டை நெரியும்படி அழுத்தப்படும். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கழுத்து வீங்க ஆரம்பிக்கும். அவன் தொண்டை அடைபட்டுத் துடிதுடிக்க உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும். இத்துணைக்கும் அவன் செய்ததாகச் சொல்லப்படும் குற்றம் என்பதெல்லாம், "நமக்கெல்லாம் தந்தையாக இருக்கும் கடவுள், மக்களாகிய குழந்தைகளில் ஒன்று எப்பொழுதும் எல்லையற்ற பெருந்துன்பத்தையே நுகர்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று கட்டளையிடுவார் என்பதை, நான் நம்பமாட்டேன்" என்று கூறியதாக இருக்கக்கூடும்.

**"தோட்டியின் மகள்" SCAVENGER'S DAUGHTER)** என்று அழைக்கப்படும் கருவியையும் நான் பார்த்திருக்கிறேன். அது இப்பொழுது இருந்து வரும் பெரிய, கத்திரிக்கோல் போன்றிருக்கும். கத்திரிக்கோலில் மேலே இரண்டு கைப்பிடிகள் இருப்பது போலவே, கீழேயும் கூர்மையான இரண்டு பகுதிகளுக்குப் பதிலாக வளையம்போன்று அமைந்த இரண்டு கைப்பிடிகள் இருக்கும். இரண்டு முனையிலும் வளையங்கள் அமைந்த இரண்டு இரும்புச் சட்டம்

களும் ஒன்றின்மேல் ஒன்று குறுக்காக அமையும்படி நடுவே பொருத்தப்பட்டிருக்கும். இணைப்பாணிக்கு மேல் ஒரு பெரிய இரும்பு வளையம் கோர்க்கப்பட்டிருக்கும். மேலே உள்ள இரண்டு வளையங்களிலும் இரண்டு கைகளும் மாட்டப்படும்; நடுவிலுள்ள வளையத்தில் தலை நுழைக்கப்படும்; கீழே உள்ள இரண்டு வளையங்களிலும் இரண்டு கால்களும் இணைக்கப்படும்; குற்றவாளி என்று மத பக்தர்களால் கருதப்படுபவன் "தோட்டியின் மகள்" என்ற அந்தக் கருவியால் இவ்வாறு பூட்டப்படுவான். இப்படிப்பட்ட நிலையில், அவன் தலைகுப்புறக் கவிழ்ந்து விழும்படி நிலத்தின்மீது தூக்கி எறியப்படுவான். உடம்பின் தசைகள் கண்டபடியெல்லாம் இழுக்கப்பட, அவன் வலி தாங்கமாட்டாமல் வருந்தி, இறுதியில் உயிர்வாதை அடைந்து இறந்துபடுவான்.

இது யாரால் செய்யப்பட்டது என்று கருதுகிறீர்கள்? "யாரேனும் ஒருவர் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால், அவரிடம் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டு" என்று சொல்லிவரும் கண்ணியர்களே இதனைச் செய்தார்கள்!

நான் அவர்கள் கையாண்டு வந்த சித்ரவதைப் பெட்டியையும் பார்த்திருக்கிறேன். பண்டங்கள் ஏற்றிச்செல்லும் வண்டியின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் பெட்டியைப்போல் அது காணப்படும்; அதன் ஒவ்வொரு பக்கத்திலும் கம்பிகளால் இணைக்கப்பட்ட உருளைகள் இருக்கும்; ஒவ்வொரு உருளையின்மீதும் சங்கிலிகள் மாட்டப்பட்டிருக்கும். தண்டனைக்குள்ளாக்கப்பட்டவனின் கணுக்கால்களில் சிலவும், கை மணிக்கட்டுகளில் சிலவுமாக அந்தச்சங்கிலிகள் மாட்டிவிடப்படும். பிறகு புரோகிதர், குருமார்கள், வரம்பெற்றோர், முனிவர்கள் ஆகியஎல்லோரும்சேர்ந்துகொண்டு, அந்த உருளைகளைச் சுற்றுவார்கள். வேட்டையாடப்படும் அந்த மனிதனின் முழங்கால்களும், இடுப்பும், தோள்களும், மார்பெலும்புகளும், மணிக்கட்டுகளும், தனித்தனியே கழன்றுபோகும் வரையில் சுற்றுவார்கள். அந்தப் பரிதாபத்திற்குரியவன், உயிர்வாதையோடு இரத்த வெள்ளத்தில் மிதந்துகிடப்பான். அவனுடைய நாடியைப் பிடித்துப் பார்ப்பதற்காக அருகிலே மருத்துவரையும் வைத்திருப்பார்கள். எதற்காக? அவன் உயிரைக் காப்பாற்றுவதற்காகவா? ஆம்! அதுவும் கருணைகொள்வதாலா? இல்லை! இல்லவே இல்லை! மீண்டும் ஒருமுறை அவனைக் கசக்கிப் பிழியலாமா என்று அறிவதற்காகவே!

இந்தச் செயல் மதக் குருமார்களால் செய்யப்பட்டது, நினைவிலிருத்திக்கொள்ளுங்கள்; நாகரிகத்தின் பேரால் செய்யப்பட்டது; சட்டத்தின்பேரால்,ஒழுங்கின்பேரால் செய்யப்பட்டது; கருணையின்பேரால் செய்யப்பட்டது; மதத்தின்பேரால் செய்யப்பட்டது; கருணைவெள்ளம் என்று போற்றப்படும் கிருத்துவின் பேரால் செய்யப்பட்டது!

இப்படிப்பட்ட அச்சமூட்டும் அடக்குமுறைக் கருவிகளைப்பற்றிப் படிக்கும்போதும், அவற்றைப்பற்றிச் சிந்திக்கும்போதும், சில நேரங்

களில், இந்தக் கொடிய காட்சிகளை யெல்லாம் நானே நுகர்ந்து, துன்புறுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது. சில நேரங்களில், நான் நாடு கடத்தப்பட்டு, அந்நாட்டின் கடற்கரை யோரத்தில் நின்றுகொண்டு, அழுதகண்களோடு சொந்தநாட்டையும் கண்டுகொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது; சில சமயங்களில் என்னுடைய கைகளிலிருந்து நகங்கள் பிய்த்தெடுக்கப்பட, குருதி ஒழுகும் அந்த நகக்கண்கள் வழியாக அவசர அவசரமாக ஊசிகளை அழுத்துவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், என்னுடைய கால்களை இரும்பு மிதியடிகளுக்குள்ளே போட்டுக் கசக்கிப் பிழிவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், மதநம்பிக்கையற்ற குற்றத்திற்காக இருட்டறையில் தள்ளப்பட்டு, சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கிடக்க, வெளியே திறந்துவிடுவதற்கென்று வருவோரின் காலடி ஓசையை, அவிந்துகொண்டே இருக்கும் காதுகளால் கேட்பதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், நான் கொலைக்களமேடையில் நின்றுகொண்டிருக்க, என்மீது விழவரும் கொலை வாளின் பளபளப்பைப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில் நான் சித்ரவதைப் பெட்டிக்குள்ளே கிடக்க, வஞ்சக நெஞ்சம் படைத்த குருமார்கள், குனிந்து நின்றுகொண்டு என்னை எட்டிப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், நான் என்னுடைய வீட்டிலிருந்தும், என்னுடைய மனைவிமக்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டு, சங்கிலியால் பிணிக்கப்பட்டு, ஊர்ப் பொதுமன்றத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில் ஈமவிறகுகள் என்மீது அடுக்கிவைக்கப்பட்டு, அவற்றிலிருந்து மேலெழுப்பப்படும் தீச்சுடர் என் கைகளை யெல்லாம் பற்றிக்கொள்ள, நான் கண் இருண்டு குருடாய்ப் போய்விடுவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், என்னை எதிர்த்தவர்களின் கரங்கள், என்னுடைய சாம்பலை நாற்றிசைக் காற்றேடும்கலக்குமாறு வீசிஎறிவதுபோல் தோன்றுகிறது. நான் அப்படி உணரும்போதெல்லாம், நானே சூளுரைத்துக் கொள்கிறேன்—"என் வாழ்நாளில் ஆடவர்—பெண்டிர் — குழந்தைகள் ஆகியோரின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு என்னால் எவ்வளவு தொண்டுபுரிய முடியுமோ அவ்வளவு தொண்டு புரிவேன்'' என்று!

நாம் வேண்டுவதெல்லாம் நீதி—நாணயம்—அருள்—அறிவு வளர்ச்சி! தான் விரும்புகிற ஒவ்வொரு உரிமையையும், மற்ற ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்க மறுக்கிறவன் இவ்வுலகில் யாரேனும் இருப்பானாகில், அவன் நாம் இப்பொழுது இருக்கிற நிலையைக் காட்டிலும் எவ்வளவோ அப்பாற்பட்டுக் காணப்படும் காட்டுமிராண்டியோடு சேர்த்துக் கணக்கிடப்படவேண்டியவன் என்பதே என் கருத்து. நாம் வேண்டுவது நாணயம்! தான் பெறும் அறிவுச் சுதந்திரத்தைப் பிறனொருவனுக்கு வழங்க மறுப்பவன் நாணயமற்றவன்—சுயநலங்கொண்டவன்— காட்டுமிராண்டி!

நாம் வேண்டுவது அறிவுவளர்ச்சி! நாணயமான முறையில் சிந்தித்து.

அந்தச் சிந்தனைக்கேற்றபடி பொறுப் புள்ளவனாக நடந்துகொள்ளும் ஒருவனைத் தனக்கு அடங்கி தன் விருப் பப்படி நடக்கவேண்டும் என்று கோருபவன், அறிவின் அழகிய தன்மையை அழிப்பவன்—இயற்கை நிகழ்ச்சிக்கு மாறாக நடந்துகொள் ளும் வஞ்சக அறிவு படைத்தவன்! நாம் வேண்டுவது அறிவு வளர்ச் சியே!

சிறிது நேரத்திற்கு முன்பு மனித முயற்சியால் செய்யப்பட்ட பொருள் கள் எல்லாவற்றினுடையவும் மாதிரி களை நான் கண்டேன். நீரின்மேல் மிதக்கும் பலவகைக் கப்பல்களின் மாதிரிகளை யெல்லாம் கண்டேன். காட்டுமிராண்டிக் காலத்தில் உடை யணியாத மனிதன் ஏறிச்சென்ற கப்பலாகிய உள்குடைந்து செய்யப் பட்ட மரப்படகிலிருந்து, நூற்றுக் கணக்கான பீரங்கிகளை ஏற்றிச்செல் லும் சண்டைக் கப்பல் வரையில், எல்லாவற்றினுடையவுமான மாதிரி களையும் நான் கண்டேன். நமது முன்னோர்களில் ஒருவனை உடை யற்ற காட்டிமிராண்டி, இரண்டு அங் குல நீளமுள்ள பற்களையும், சிறி தளவான மூளையையும் வைத்துக் கொண்டு ஓட்டிச் சென்ற மரப் படகையும் கண்டேன்; நியூயார்க் துறைமுகத்தில் கிளம்பி, மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலும் மூச்சு விடாமல் செல்லும் நீராவிக் கப்பலை யும் கண்டேன்.

நான் மனிதனால் செய்யப்பட்ட ஆயுத வகைகளையுங்கூட அதே சம யத்தில்கண்டேன். காட்டுமிராண்டிக் காலத்து மனிதன் குகையிலே வாழ்ந்து, நிலத்திலே தவழ்ந்து, பாம்பைக் கொன்றுதின்ற நாட்க ளில், அவன் கையிலேந்தியிருந்தகற் கருவியிலிருந்து, மனிதன் அவ்வக் காலங்களில் ஏந்தியிருந்த ஆயுதங் கள் எல்லாவற்றையும் கண்டேன். கற்கருவியைக் கண்டேன்; "பூமெ ராங்" கருவியைக் கண்டேன்; வாளை க்கண்டேன்; வில்லைக் கண்டேன்; பெருந்துளையையுடைய கைத் துப் பாக்கியைக் கண்டேன்; பெருந் துப் பாக்கியைக் கண்டேன்; அதில் வகைவகையானவற்றை யெல்லாம் கண்டேன்; 'கிரப்' கண்டுபிடித்த பீர ங்கியைக்கண்டேன்; இரண்டாயிரம் பவுண்டு எடையுள்ள, குண்டினை வீசி எறியும் பதினெட்டு அங்குல அகல வாயையுடைய பெரிய பீரங் கியைக் கண்டேன். கற்கருவியிலி ருந்து கனமான பீரங்கி வரையில் கண்டேன்!

நான், மனிதன் அணிந்துவந்த கவசங்களையெல்லாம்கூடக் கண் டேன். தன்னுடைய நாட்டைக் காப் பதற்காகப் போர்க்களஞ் சென்ற நமது முன்னோனை போர்வீரன், தனதுமார்பில் அணிந்திருந்த ஆமை ஓட்டுக் கவசத்தைக் கண்டேன், இடைக்காலத்து மனிதனால் தலையிலி ருந்து மார்பு வரையில் அணியப் பட்டு, எதிரியின் வாளினாலும் ஈட்டி யினாலும் துளைக்கப்பட்டு, முட்க ளோடு கூடியதாய் இருந்த முள்ளம் பன்றியின் தோலாலாகிய கவ சத்தையும் கண்டேன்; இப்பொழுது அணியப்பட்டுவரும் எஃகினாலான கவசத்தையும் கண்டேன்.

நான், அதேபோது, மனிதனு டைய இசைக் கருவிகளின் வகை கள் பலவற்றையுங்கூடக் கண்

டேன்; பக்குவப்படுத்தாத தோலாலாகியதப்பட்டையிலிருந்து,நம்மைச் சூழ்ந்து வீசும் காற்றில் மெல்லிய இசையை மிதந்து வரச்செய்யும் இற்றைக்கால இசைக் கருவிகள் வரையில் எல்லா வகைகளையுங் கண்டேன்.

நான், மக்கள் முயற்சியால் உருவான ஓவியங்கள் எல்லாவற்றையுங் கூடக் கண்டேன். மஞ்சள் நிற மண்ணைக்கொண்டு தீட்டப்பட்ட கரடுமுரடான ஓவியத்திலிருந்து, உலகக் கண்காட்சிசாலைகளை அழகுபடுத்திக்கொண்டிருக்கும், உயர்தர ஓவியங்கள் வரையில் பலவற்றையுங் கண்டேன்.

நான் நமது முன்னோர்களால் செய்யப்பட்ட பலவகைச் சிற்பங்களையும் கண்டேன்; நான்கு கால்களையும், ஆறு கைகளையும், பல மூக்குகளையும், இரண்டு மூன்று வரிசைக் காதுகளையும், மிகச் சிறிதான மூளையற்ற ஒரு தலையையும் கொண்ட கடவுளிலிருந்து, பளிங்கினால் ஆன கவர்ச்சிமிக்க இற்றைக் காலச் சிற்பம் வரையில் பலப்பல கண்டேன்.

நான் அவர்களின் புத்தகங்கள் பலவற்றைக் கண்டேன்; காட்டு விலங்குகளின் தோலில் எழுதப்பட்ட புத்தங்கள்-ஆடுகளின் தோள்பட்டை எலும்புகளில் எழுதப்பட்ட புத்தகங்கள்—இலைகளில் எழுதப்பட்ட புத்தகங்கள்—மரப்பட்டைகளில் எழுதப்பட்ட புத்தகங்கள்—இன்று நமது நூல் நிலையங்களைக் கவின்பெறச் செய்துகொண்டிருக்கும் அழகிய புத்தகங்கள் ஆகிய எல்லாவற்றையுங் கண்டேன். நான் நூல் நிலையங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது எனக்குப் பிளாட்டோவின் கூற்று நினைவுக்கு வருகிறது; "நூல் நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கும் வீடு, உயிரோடு நிலவும் வீடாகும்."

நான் அவர்களின் பல்வேறு வகை உழவுக் கருவிகளையும் கண்டேன்; எருதின் கொம்பைக் கரடு முரடான கழியோடு, வைக்கோல் பிரியால் கட்டிச் செய்யப்பட்ட கலப்பையிலிருந்து, நிலத்தின் எல்லாத் தன்மைகளையும் அறிந்து கொண்டு உழுவதற்கேற்ற வகையில் அமைந்த இற்றைக்ககால உயர்தர உழவுக் கருவிகள் வரை பலவற்றையும் கண்டேன்.

இப்படிப்பட்ட பொருள்களையெல்லாம் பார்க்கும்போது, மனிதன் தன்னுடைய அறிவையும் உழைப்பையும் ஒன்று சேர்த்ததன் மூலம்தான் முன்னேறினான்—இயற்கை ஆற்றல்களோடு பங்குகொண்டதன் மூலம் தான் முன்னேறினான் — சூழ்நிலைகளைத் தனக்கு நலம்பயக்கும் முறையில் மாற்றிக்கொள்ளக் கற்றுக் கொண்டதன்மூலம்தான் முன்னேறினான்.அச்சத்தலையினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டதன் மூலம்தான் முன்னேறினான்—கடவுளின் நம்பிக்கையை இழந்த காரணத்தால்தான் முன்னேறினான். என்ற முடிவுக்கு நான் வரவேண்டியவனானேன்.

(தொடரும்.)

---

## தன்னடக்கம்.

தன்னைத் தானே அடக்கியாளச் சக்தியற்றவன், ஆயிரத்தெட்டு கெட்ட பழக்கங்களையுடையவன்.

—டால்ஸ்டாய்.

# கருத்துரை

## தமிழிசைப் பாடல்.

இசையரங்குகளில் பாடுவதற்கேற்ப பல்லவி, அனுபல்லவி, சரணங்களோடு ஆக்கப்பட்டுள்ளன. இராக, தாளக்குறிப்புகளும் உள்ளன. பாட்டின் கருத்துக்கள் மிக உயர்ந்தவை. பயனுள்ளவை. தமிழ் இசை வேண்டும், தமிழ் இசையிலும் அறிவு மணக்கவேண்டும் என்பவர்களுக்கு இந்நூல் அரிய துணையாகும். நாடெங்கும் பரவவேண்டும் இப்பாடல்கள். பாடிப் பயன் விளைக்கவேண்டும் இசைப் புலவர்கள்.

விலை 0—6—0

**ஆசிரியர்: புதுவைச் சிவம்.**

வெளியிட்டோர்:

**ஞாயிறு நூற்பதிப்பகம், பாண்டிச்சேரி.**

●

## தமிழர் திருநாள்.

---

பொங்கல் திருநாள் பற்றிய ஓர் ஆராய்ச்சி நூல். பொங்கல் விழாவை, மேல் நாடுகளிலே நடக்கும் (*FESTIVAL OF HARVEST*) அறுவடை விழாவோடு ஒப்பிடுகிறார் ஆசிரியர். ஏற்கத் தகுந்த புதிய கருத்து, உழைப்பை மதிக்காத வஞ்சக வாழ்வினர்க்கு ஓர் அறைகூவல்! புத்தகம் சிறிதெனினும் விஷயம் பெரிது. தமிழர்கள் படித்துணரவேண்டும்.

விலை 0—2—0

**ஆசிரியர்: தி. ரா. தர்மராசன்**

வெளியிட்டோர்:

**அறிவாலயம்,**

3, ஜாலி சிதம்பரமுதலி தெரு,

பெங்களூர்.

## இதய கீதம்.

புலிநிகர் மாந்தர்—மொழிவாரிப் பிரிவினை—புது அரசியல்—பிரிவினை கீதம்—என்னும் நான்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்புநூல். நாட்டுக்குத் தேவையான புதுமைக் கருத்துக்களின் புதையல். படித்தவாய் இனிக்கும் பாங்கான தமிழ் நடை, அழகான பதிப்பு.

**ஆசிரியர்: இராம. அரங்கண்ணல்**

விலை 0—12—0

---

## அவர்கள் சந்திப்பு.

அணிமையில் வடநாட்டினின்றும் வந்த இந்தி நல்லெண்ண தூதுக் குழுவினர், அறிஞர் அண்ணாவைச் சந்தித்துப் பேசிய உரையாடலின் புத்தகப் பதிப்பு. நாட்டுப் பிரிவினை பற்றிய நல்லதோர் விளக்கம், திராவிட நாட்டின் இலட்சியத்தை வடவர் அறியச் செய்த நிகழ்ச்சியின் படப்பிடிப்பு. இதனை நூலாக்கியது மிக நல்ல முயற்சி.

விலை 0—3—0

**தொகுத்தவர்: இராம. அரங்கண்ணல்..**

இரண்டையும் வெளியிட்டோர்:

**திராவிடப் பண்ணை,**

**தெப்பக்குளம், திருச்சி.**

●

## முன்னேற்றம்.

---

தி. மு. கழகச் சார்பில், சிலோனில் அறிவுப் பணிபுரியத் தோன்றியுள்ள திங்கள் இதழின் பொங்கல் மலர் வந்தது. எழுச்சிதரும் கட்டுரைகள், கதைகள் பல உள்ளன. முயற்சி வெல்க!

**விலை சதம் 20**

**ஆசிரியர்: மா. இளஞ்சேரன்**

முன்னேற்றம்,

தபால் பெட்டி 1049, கொழும்பு.





இளமையில் இழந்த சக்தியை மீண்டும் பெற

**மகா தாதுபுஷ்டி ஸ்தம்பன சூரணம்.**

இந்த சூரணத்தை காலை மாலை திரிகடி பிரமாணம் அதாவது மூன்று விரலால் ஒருபிடி பவுடரை எடுத்து, கால் ஆழாக்கு காய்ச்சின பாலில் போதுமான சர்க்கரைச்சேர்த்து, நன்றாய்க்கலக்கி சாப்பிட்டுவர, தண்ணீர்போல் நீற்றுப்போன இந்திரியத்தை பிசின்போல் கெட்டிப்படுத்தி தளர்ந்துபோன நாடிநரம்புகளுக்கும் முறுக்கேற்றி, துவண்டுபோன தண்டுக்கு வலுவை அதிகப்படுத்தி, கோஜத்தைப் பூரிக்கச்செய்து சுக போகங்களை—நீடித்த நேரம்வரை அனுபவிக்கச்செய்யும் அருமையான சூரணம். அநேக அற்புதமான மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. குணமில்லையேல் பணம் வாபீஸ்.

S. V. R. கண்டர் R. I. M. P., இராஜாளி எண்ணை டிப்போ,
அரிசிப்பாளையம் :: சேலம்.




**ஜெயா வாட்சு கம்பெனி**

முதல் அக்ரகாரம் :: சேலம்.

★

கேரண்டியாய்

குறித்த நேரத்தில் ● குறைந்த செலவில்

ரிப்பேர் செய்து தரப்படும்.

★

## நீங்கள் படித்துவிட்டீர்களா?




- சுவையுள்ள நிகழ்ச்சிகள், சூறாவளிப் பேச்சுகள் நிறைந்தது.
- நடிப்புக் கலைஞர்களுக்குத் தேன். படிக்கும் ரசிகர்களுக்குப் பால்!
- பொதுமக்களின் மனதைக் கவர்ந்த சரித்திரக் கற்பனை நாடகம்.

விலை 1—4—0


விலைத் தொகையனுப்பிப் புத்தகம் பெறலாம்.
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.


Edited, Printed & Published by, P. KANNAN, at Senthamizh Printing Works, Jalakantapuram, Salem Dt. (S. India.)

# பகுத்தறிவு






அறிஞர். எமிலி ஜோலா

விக்ருதி பங்குனி. 14-3-1951. அணா

# குத்துவிளக்கு சேலைகள்.




சாயத்தில்! நெசவில்! ரகத்தில்!

கைத்தறியின் முன்னேத்தைக் கல்லின்மேல்
விளக்குப்போல் காட்டும்

## சேலைகள்!

மிக உயர்ந்த தயாரிப்புகள்!

**60, 80, 100 நம்பர்களில்**

— எல்லா கலர்களிலும் கிடைக்கும் —

★

**ரா. க. பழனிசாமி செட்டி சன்,**

குத்துவிளக்கு சேலை தயாரிப்பாளர்,

ஜலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.


---

# சேலத்தில் அழகான பிளாக்குகள்!

நவீன மின்சார சாதனங்களைக்கொண்டு
லைன் ஆஃப்டோன், கலர் பிளாக்குகளும்,
— சினிமா சிலைடுகளும் செய்பவர்கள் —

சாரங்கன் & கம்பெனி :: அரிசிப்பாளையம், சேலம்.

---



தென்றல் வெளியீடுகள்.

●

மு. கருணாநிதி எழுதிய
ஒரே முத்தம் 1-4-0

சி. பி. சிற்றரசு எழுதிய
சிந்தனைச் சுடர் 0-5-0

ப. கண்ணன் எழுதிய
கன்னியின் சபதம் 0-8-0
சிந்தனைச் சித்திரம் 0-10-0
மின்னொளி 0-6-0

பாவலர் வேலாயுதசாமி எழுதிய
திருக்குறள் இசைப்பாடல்
அறத்துப்பால் 0-7-0

ப. க, குஞ்சிதம் எழுதிய
வால்முளைத்த சாமியார் 0-2-0
கேட்டிக்காரன் 0-2-6
பைங்கிளி 0-2-0

★

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 %

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

பகுத்தறிவு

ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982, திங்கள் 3.

மலர் 1 | விக்ருதி-பங்குனி | இதழ் 3

## பொருளடக்கம்.

நாம் ... 2
பாவலர். வேலாயுதசாமி

கருத்தடை மருத்துவச் சாலைகள் நிறுவுக ... 3

நடப்பும் கருத்தும் ... 5

தனியாட்சி ஆக்குவீர் ... 7
வேங்கை

மனித சுயேச்சை ... 9
(பெட்ராண்ட்ரஸ்சல்)
மொழி பெயர்ப்பு:
ஆர். சந்திரன் M. A., L.T.,

கடவுள் செயலா? ... 15
"அறிவுக்குஞ்சு"

பிடிபட்டான் பொன்னம்பலம் ... 17
என். எஸ். வாசன்

பொன் மொழிகள் ... 23

அறிவுப்போர் ... 24
பெ. ஆ. சி. வயிரவன்

சமுதாய விடுதலை (இங்கர்சால்) ... 25
மொழி பெயர்ப்பு:
இரா. நெடுஞ்செழியன் M. A.,

எமிலி ஜோலா (வரலாறு) ... 30

கருத்துரை ... 32

★

# நாம்.

பாவலர். வேலாயுதசாமி.

1 ஆக்கிடுவோம் தன்மானப்
பாசறையை நாட்டில்
அணிவகுப்புப் போர்ப்பயிற்சி
யொற்றுமையைப் பெறுவோம்
தாக்கிடினும் பிளக்காத
மனவுறுதிக் கவசம்
தரித்திடுவோம் பெருமுயற்சிக்
கேடயங்கைக் கொள்வோம்
போக்கினிலே பொறிபறக்கும்
அடல்வலி முன்னேற்றப்
புரவிமிசை யேறிடுவோம்
புரட்சிநெடுங் கொடியைத்
தூக்கிடுவோம் பகுத்தறிவுக்
கூரியவாள் தன்னைச்
சுழற்றிடுவோம் மடமையினப்
பகைகள் பொடிபடவே

2 செருக்களஞ்செல் படைவீர
ராயிருப்போம் வாழ்க்கைச்
செந்நெறியிற் செலுஞ்சீல
ராயுலகிற் றிகழ்வோம்
திருக்குலவு நாட்டரச
வுரிமையதைப் பெறுவோம்
செய்தொழிலிற் சளைக்காத
உழைப் பாளராவோம்
பெருக்கெடுங்குங் கவிப்புலவ
ராய்ச்சிறந்து நிற்போம்
பிசகாமல் தீர்ப்பளிக்கும்
நீதிபதி யாவோம்
அருட்கனிந்து கொடுத்துதவும்
வள்ளல்களா யமைவோம்
ஆராயும் பகுத்தறிவு
வாதிகளாய் மிளிர்வோம்!

# கருத்தடை மருத்துவச் சாலைகள் நிறுவுக.

நம் நாட்டில் அறிவுப் பெருக்கம், தொழிற் பெருக்கம், உணவுப் பெருக்கம், வாழ்க்கை வசதிப் பெருக்கம் போன்றவை இல்லாவிடினும், குழந்தை உற்பத்திப் பெருக்கம் மட்டும் குறையில்லாப் பெருஞ் செல்வமாகிவிட்டது!

பொருளாதார வசதியில்லாமல், வாழ்வின் தரத்தை மட்டும் உயர்த்திக்கொண்டு வறுமைக்குப் பலியாகும் மக்கள், அதிகக் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு, வளர்க்க வகையின்றி நெஞ்சம் குமைகின்றனர். மக்கட் பெருக்கம் ஒரு நாட்டிற்குப் பெரும் பலம்தான்; அது குறையற்ற நாட்டுக்கு. ஏழ்மை, பிணி, அறியாமை மலிந்தது நம் நாடு. மக்கட் பெருக்கம், நமது துன்பத்தைப் பெருக்குவதாகும்.

தற்போதைய நிலையில், கருத்தடையே இதற்குக் கழுவாய். கருத்தடை தர்ம விரோதம், சாஸ்திர விரோதம், ஒழுக்கக்கேடு என்று சொல்லுவோருண்டு. 'குழந்தை பிறப்பது கடவுள் செயல், அதைத் தடுக்க மனிதனுக்கு உரிமையேது என்பார்கள். ஒரு மனைவிக்கு 17 குழந்தைகள் என்பது ஜாதகப் பலன்; நான்கு குழந்தைகளோடு கருத்தடை மேற்கொண்டுவிட்டால், சோதிடம் பொய்க்குமா? விதியை மாற்றமுடியுமா? இயற்கைக்கு விரோதமல்லவா? என்றெல்லாம் வாதிப்பர்.

"வறுமை வாட்டுகிறது. இருக்கும் குழந்தைகளுக்கே ஒரு வேளைக்கு உணவில்லாதபோது, இன்னொன்று வயிற்றில். ஆண்டவனுக்குக் கண்ணில்லையே!" என்கிறாள் ஒருத்தி. "இந்தப் பாழும் வயிறு கரைய, எத்தனை மருந்துகள் தின்றேன். உடம்பு கெட்டதேயொழிய பீடை ஒழியவில்லையே!" என்று ஏங்கித் துடிக்கிறாள் மற்றொரு பெண். இது நாட்டின் இன்றைய சோகக் காட்சி. கழுவாய் தேவை. வெறும் பேச்சும், வாதமும் வந்த பிணியைத் தீர்ப்பனவன்று. நோயறிந்து, நோய்க்கேற்ற மருந்து கொடுப்பதைச் சாத்திரமோ, கடவுளோ, விதியோ தடுக்குமாயின்; அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கடமையைச் செய்தல் வேண்டும்,

அதுவே பகுத்தறிவுள்ள மனிதனின் தன்மையும், கடமையும் ஆகும்.

கருத்தடை பாபம் என்ற கருத்துக்கொண்ட பெரியார் காந்தியாரும், "அதிகமான குழந்தைகள் பெறக்கூடாது. அதற்கு கர்ப்ப ஆட்சி முறைகளைக் கையாளுவது தீமை பயப்பன. பெண்கள் தங்கள் கணவன்மாரைப் பிரிந்தும், அண்டவிடாமலும் வாழவேண்டும்" என்றார் "இந்த 'அண்டவிடாமை' முடியாத செயல். குடும்ப வாழ்வையே குலைப்பது" என்று அந்த நாளிலேயே கூறினார், தோழியர் மார்கரெட் சாங்கர் அம்மையார். காந்தியாரின் கருத்தடை வழி, செயலளவில் சற்றும் பயனளிக்காது. "காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறியவேண்டும்" இதுவே பகுத்தறிவுக்குப் பொருந்திய வழியாகும். நாட்டின் அரசியல், சமுதாய அமைப்புகளை மாற்றி, வாழ்க்கைச் சாதனங்களைப் பெருக்கி, பொருளாதார சமத்துவம் ஏற்படுத்திவிட்டால் இந்தக் கதவும் தேவையில்லைதான்! அதுவரைக்கும் துன்பச் சுழலில் மக்கள் தவிக்கவேண்டுமென்பது நியாயமன்று.

கருத்தடைபற்றி, சென்னை சட்ட சபையில் பேச்சு நிகழ்ந்துள்ளது. குடிமதிப்புப் புள்ளிவிவரம் வெளியான பிறகு இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமாம்.' மக்கள் மனப்போக்கு, கருத்தடைக்குப் பாதகமாக இருக்குமோ என்று ஐயப்படவேண்டியதில்லை. ஆண்களைக் காட்டிலும், பெண்கள் கருத்தடையை அதிகம் விரும்புகின்றனர். காரணம்; குடும்ப வாழ்க்கையில் அதிகமாக பாதிக்கப்படுகிறவர்கள் அவர்கள்தாம் இன்றைய நிலையில் "கருத்தடை வேண்டாம், அது தார்மீக ஒழுக்கத்திற்குப் பங்கம், இயற்கை நெறிக்கு முரண்" என்று சொல்லுபவர்கள், நாட்டின் உண்மை நிலையை உணராதவர்களே ஆவர்.

"கருத்தடை" ஒரு கட்டாய முறையன்று. "இனிக் குழந்தைகளைப் பெற்றால், தேகம் அழியும், குடும்பம் தாங்காது" என்று கலங்குபவர்க்கே உதவி தேவை. மாவட்டத்திற்கொரு கருத்தடை மருத்துவச்சாலை நிறுவவேண்டும். சாதாரண குடும்பத்துப் பெண்கள், எளிய முறையில் கருத்தடை செய்துகொள்ளும் வகையில், மருத்துவ உதவியளிக்க ஏற்பாடு செய்தல்வேண்டும். அரசாங்கம் ஆலோசனையளவில் நின்றுவிடாமல், இதனை ஏற்ற வகையில் விரைந்து செய்யுமாக.

# நடப்பும் கருத்தும்

## சமஸ்கிருதம்—கட்டாயமா?

அண்மையில், புதுடில்லியில் நடைபெற்ற இந்திய மறுமலர்ச்சி மாநாட்டில், சமஸ்கிருதத்தை செகண்டரி பாடசாலைகளில் கட்டாயப் பாடமாக்குமாறு, எல்லா மாகாண அரசாங்கத்தினரையும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தியப் பாராளு மன்றத்தின் துணைத்தலைவர், தோழர் அனந்தசயனம் ஐயங்கார் தலைமையில் இது நடந்துள்ளது.

வடமொழியிடம் நமக்குப் பகைமையில்லை. ஆனால் வடமொழியிலுள்ள காவியங்கள், இலக்கியங்கள், வேத வேதாந்தங்கள் அத்தனையும் தற்கால மனித வாழ்வுக்குத் தேவையற்றவை. "சமஸ்கிருத கலாச்சாரம்" சாதிகள் பிரித்து, இளைத்தவனை வலுத்தவன் சுரண்டுதற்கு வழி வகுப்பதல்லாமல், கால முன்னேற்றத்திற்குச் சற்றும் பொருந்துவதன்று.

இத்தகைய தேவையற்ற கலாசாரத்தை வளர்த்து வளப்படுத்த, பேசத்தகுதியற்ற செத்தமொழியைப் பிள்ளைகள் தலையில் கட்டாயமாகத் திணிக்க முயல்வது பெருந்தவறு. வேத ரிஷிகள் காலத்தைப் புதுப்பிப்பது மறுமலர்ச்சியென்று ஐயங்கார்கள் நினைக்கலாம், பொதுமக்கள் ஒப்பவேண்டுமே!

## புரட்சிக் கவிஞர் மணிவிழா.

"கற்பனையையும், பகுத்தறிவையும் ஒன்றுசேர்த்து; இன்பத்தையும், உண்மையையும் காட்டுவது கவிதை" என்கிறார் அறிஞர் சாமுவேல் ஜான்சன்.

"கவிதை; எது உண்மை என்பதைக் காட்டுவதோடல்லாமல், உண்மையை உண்மையென்று மெய்ப்பிக்கவேண்டும்" என்கிறார் அறிஞர் டி. எஸ். எலியட்.

உயர்ந்த குறிக்கோளுடன் கவிதைகள் செய்து தமிழகத்திற்களித்தவர்—இவ்விருபதாம் நூற்றாண்டில்—பாரதிதாசன் ஒருவர்தான்! பாரதியார் பாராட்டுக்குரியவர் எனினும், இனவெறியின் பாற்பட்ட மடமைக் கருத்துக்கள், அவரது பாடல்கள் பலவற்றை மாசுபடுத்திவிட்டன. பகுத்தறிவையும், உண்மையையும் மதிக்கும் இறுதி மனிதன் உள்ளவரை, பாரதிதாசன் கவிப் பெருமை மங்காது, மறையாது!

கவிஞருக்கு, சென்ற 1946 ஜூலை 28-ல் சென்னையில் பெருநிதியளித்து, பொன்னாடை போர்த்து விழாக் கொண்டாடினர். தமிழ்க் கவிஞர் எவர்க்கும் கிட்டாத அளவுக்குப் பெருந்தொகை, பெருங் கூட்டம், பெருமதிப்பு கிட்டின. எல்லா கட்சியினரும் பாராட்டினர்.

ஏப்ரல் 29-ல், திருச்சியில் கவிஞரின் 60-ம் ஆண்டு நிறைவுவிழா—மணிவிழா—நடைபெறவிருக்கிறது. தனிப்பட்ட குறைகளைப் பொருட்படுத்தவேண்டியதில்லை. கவிஞர் நாட்டுக்களித்த கவிதைச் செல்வம் மிகப் பெரிது, ஈடு இணையற்றது. அதனைப் பாராட்டுவதும், அவரைப் போற்றுவதும் நமது கடமை. கவிஞர் மணிவிழா எல்லா வகையினும் சிறக்கப் பகுத்தறிவுவாதிகள் ஆதரவு காட்டவேண்டுகிறோம்.

## எதிர்க்கிறார்களாம்!

அறியாமையும், அடிமை யுணர்வும் மண்டிக்கிடந்த தமிழகத்தை விழிப்புறச் செய்தவர்கள் சுயமரியாதை—பகுத்தறிவு—திராவிட இயக்கத்தவர் என்பது நாடறிந்தவுண்மை. தர்ப்பையும், பஞ்சாங்கமும், சாத்திரமும், புராணமும் மக்களை ஏய்த்து வந்த காலம் மலையேறிவிட்டது. "நான் மனிதன், வாழப் பிறந்தவன், மனிதனுக்குரிய எல்லா உரிமையும் எனக்கும் வேண்டும்" என்று ஒவ்வொருவனும் கேட்கத் தொடங்கி விட்டான். பழமையைக் காட்டிப் பிழைப்போர் பதறுகின்றனர். மக்களின் மடமையின்மேல் தமது சுக போக வாழ்வை யமைத்துக் கொண்டவர் அஞ்சுகின்றனர்! ஆகவே இவர்களை எதிர்க்கப்போகிறார்களாம் சில சுயநலமிகள்.

தோழர். சின்ன அண்ணாமலையும், சிலம்புவித்தை சிவஞானமும், திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு சென்னையில் நடத்தப் போகிறார்களாம். இவர்களுக்கு நிச்சயம் பூசுரர்களின் புன்னகைப் பரிசு கிடைக்கும். பரசிரமஜீவிகளின் பாராட்டு கிடைக்கும். காங்கிரஸ் மேலிடத்து மேசையினின்றும் சில எலும்புத் துண்டுகளும் விழலாம். ஆனால் தாமிருக்கும் இழிந்த நிலையை எண்ணிக் குமுறிக் கொண்டிருக்கும் ஏழைப் பொது மக்களின் வெறுப்புபற்றிச் சிந்திக்கவில்லை இந்தச் "சின்ன"துகள். எழுச்சியுற்ற தமிழகத்தை இனி ஏமாற்றமுடியாது என்ற பாடத்தை, விரைவில் இந்த விபீஷணர்கள் கற்றுக்கொள்வார்கள். காங்கிரசிடம் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை, இந்த எதிர்ப்புக்களால் விருப்பாக்கி விடமுடியாது.

## சனாதனச் சவுண்டிகள்!

ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழ்வதே சிறந்த இல்லறம் என்பர் தமிழறிஞர்கள். தசரதனைப்போல், ஒரு ஆண் பல பெண்களை மணந்து கொள்வதோ, திரௌபதையைப் போல் ஒரு பெண் பல ஆண்களை மணந்துகொள்வதோ அசம்பாவிதம். ஆனால் அதுதான் தர்மமாம்!

தற்போது இந்தியப் பாராளுமன்றத்தில் இருக்கும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில் பலதார மணம் மறுக்கப்பட்டுள்ளது. சட்டத் தொகுப்பு ஒப்பமுடிந்த பெரிய சீர் திருத்தமன்று; எனினும் ஓரளவுக்கேனும் மாறுதலுக்கு வழிகோலுவதால் நாம் வரவேற்கிறோம்.

சுவாமி சத்யானந்த சரசுவதி என்பவர், பத்திரிகையில் விளம்பரம் செய்து மசோதாவை எதிர்த்து, தர்மத்தைக் காக்கப் படைதிரட்டுகிறார்.

நாட்டு நிலையறியாத பழமைப் பாசிச வெறியர்களின் "மதம் போச்சு" "தர்மம் போச்சு" என்ற ஓலங்களுக்கு அரசாங்கம் செவி கொடுத்தால், முன்னேற்றத்திற்குரிய எந்தச் சிறிய காரியத்தையும் சாதித்தல் முடியாது. அரசாங்கம் கடமையைச் செய்தல்வேண்டும்.

"கால மாறுதலுக்கேற்ப எந்தச் சமூகம் மாறிக்கொள்ளவில்லையோ; அந்தச் சமூகம் நாளடைவில் நசித்து விடும்" என்கிறார் தோழர், ஜவகரிலால் நேரு. சனாதனச் சவுண்டிகள் இதைச் சற்று சிந்திக்கவேண்டும். இவர்களைப் பாதுகாக்க "தடித்தனம்" செய்யும் ஆர். எஸ். எஸ். கும்பலும், இந்துமகாசபையினரும் அவசியம் சிந்திக்கவேண்டும். ★★

# தனியாட்சி ஆக்குவீர்!

1 கன்னித் திராவிட நாட்டினை — ஒப்பிக்
காட்டிக் கொடுத்துப் பிழைப்பதோ
என்னசெய் தேனும் பதவியில் — மானம்
இன்றியிருக்க நினைப்பதோ

2 வற்றாத ஆறுகளில்லையோ — வளம்
வாய்ந்த வயல்கள் குறைச்சலோ
பற்றாக் குறையிங்கு வந்ததேன் — எங்கும்
பட்டினித் தொல்லை மிகுந்ததேன்

3 நூற்றிடும் நூலினை இங்குள்ளோர் — நிலை
நோக்கிடாமல் அயல் நாட்டுக்கே
ஏற்றுமதி செய்தல் நேர்மையோ — தொழில்
இன்றியிங்கே மக்கள் சாவதோ

4 அன்னியர் வந்திங்கு கூட்டமாய் — தம்மால்
ஆனவரைக்கும் சுரண்டுறார்
என்னநமக் கென்றிருப்பதோ — இனி
எத்தனை நாளைக்குப் பார்ப்பதோ

5 எத்தனையோ அதிகாரிகள் — வேலை
இல்லா இலாக்கா அமைச்சர்கள்
அத்தனை பேர்க விருந்துமே — இந்த
ஆட்சியில் ஊழல் மலிந்ததேன்

6 சொந்த நலத்தினில் அக்கறை — பெரும்
சொத்துத் திரட்டும் இலட்சியம்
வந்த வரைக்கும் சுருட்டுதல் — அன்றி
வாழவழி செய்ய வில்லையே

7 மாடுதின்னும் பருத்திக் கொட்டை — இங்கு
மக்களெல்லாம் தின்னவேண்டுமோ
மூடமதிச் சொல்லைக் கூறவோ — ரூபா
முப்பதுநாளைக் கையாயிரம்

8 தப்பாக இந்தியாவை ஒரு — நாடு
தானென ஆள முயல்கிறீர்
அப்பாவியான அமைச்சரே — தனி
யாட்சித் திராவிடம் ஆக்குவீர்.

—வேங்கை.

நாட்டினர் விரும்பும்
நவரசப் பெட்டகம்.

●


கலைமதிப்பு வாய்ந்த
உயரிய நாடகம்.

விலை 1—4—0

★




## தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.




பகுத்தறிவுச் சிறு கதைகள்.
விலை 0—10—0

இதுவும் ஒரு தென்றல் வெளியீடு

பகுத்தறிவு

அறிவியல் திங்கள் வெளியீடு.

உள் நாடு

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | | 1—8—0 |
| தனிப்படி | ,, | 0—2—0 |

வெளி நாடு

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | | 2—0—0 |
| தனிப்படி | ,, | 0—2—6 |

★

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

# ★ மனித சுயேச்சை. ★

[அறிஞர். பெட்ராண்ட் ரஃசல்.]

[பேரறிஞர் பெட்ராண்ட் ரஃசல் 1950-ம் ஆண்டின் நோபல் பரிசு பெற்றவர். தற்காலம் இருக்கும் பகுத்தறிவு வாதிகளிலே தலை சிறந்தவர். இவர் எழுதியுள்ள புத்தகங்களும், கட்டுரைகளும் பலப்பல. "போல்ஷ்விசத்தின் சொல்லும் செயலும்," "சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் கொள்கைகள்," "உடல் பிரிந்த உயிர்பற்றிய பிரச்சினைகள்," யந்திரத் தொழில் அபிவிருத்தியாலான நாகரிகத்தின் எதிர்காலம்," "1814-1914 நூற்றாண்டில் விடுதலையும் ஆக்கவேலையும்," "உலக அமைதிக்கு வழி எது?" "உடல்நீத்த உயிர்பற்றிய மேனாட்டு வரலாறு," "ஆள்வோரும் தனிப்பட்ட மனிதனும்" - இவைகள், இவர் எழுதியவற்றுள் குறிப்பிடத்தக்க சில நூல்கள்.]

[மொழி பெயர்ப்பு: ஆர். சந்திரன் B.A., L.T.,]

★

உலக அமைதி ஒழிந்துவிட்டது. எங்கும் நெருக்கடியான சூழ்நிலை. சில கேள்விகள் எழும்புகின்றன. நாம் கொடுக்கும் விடைகளின்மூலம்தான் நாம் இந் நெருக்கடிகளை சமாளிக்கமுடியும், அல்லது முடியாது என்று முடிவுகட்டலாம். கேள்விகளாவன: மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? எதைச் சாதிக்க மனிதன் வாழ்கின்றான்? எதற்காக மனிதன் உயிர் விடவும் தயாராக வேண்டும்? மற்றொரு மனிதன் உயிரை வாங்கவும் தயாராகஇருக்க வேண்டியதின் இன்றியமையாமை என்ன? பிறரையோ, பிற நாடுகளையோ, அடக்கி ஆளவேண்டுமென்பதுமாத்திரமல்ல தற்கால உலகின் போக்கு. மக்கள் கூட்டத்தை மலைக்கச்செய்யும் இரு பெரும் பாதைகள் பிரிந்துவிட்டன. இவ்விரண்டில் எப்பாதை ஏற்றதென்பதைத் தீர்மானிப்பதே தற்கால அறிவாளிகள் கடமை.

பாதை இரண்டு. இயக்கம் இரண்டு. இவ்விரு பெரும் இயக்கங்கள், உலகமக்களைத்தன் தன் பாதையில் இழுத்துச் செல்ல முயன்று கொண்டிருக்கின்றன. மேனாடுகளில் தனிப்பட்ட மனிதனுக்கு இருந்துவந்த, இருந்துவருகிற சுயேச்சையாலேயே சில பேரறிஞர்கள் தோன்றும் பெருமை ஏற்பட்டது. பெரிய சமுதாயம் என்றால் பொருளென்ற களிப்புடனும், எதேச்சையா

தங்களுக்குச் சரி என்று பட்டதைச் செய்து காரியங்களைச் சாதிக்கும் உரிமையும், ஆர்வமும் நிறைந்த மக்களையுடைய நாடு, அல்லது சமுதாயம் என்பதுதான் அதன் பொருள். "ஈ அடிச்சாங் காப்பி" என்பது போல, எல்லா மக்களும் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கையாள வேண்டுமென்று மேனுடுகள் விரும்பவில்லை. ஒரு இசை அரங்கத்தைப் பாருங்கள். அதில் யார் யார் பங்கெடுத்துக்கொள்கிருர்கள்? பாடகன் இருக்கிருன், குழல் இருக்கிறது, யாழ் இருக்கிறது, மத்தளக்காரன் இருக்கிருன், தாளக்காரன் இருக்கிருன். இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான ஒலிகளை இசைத்தாலும், ஒத்துழைப்பின் மூலம் அவரனைவரும் கேட்போரை மகிழ்விக்கும்படியான ஓர் பெரும் இன்னிசையை எழுப்புகின்றனரன்றோ! ஒரு சமுதாயமும் இதே போன்ற ஒத்துழைப்பின் மூலம் பெரும் பெரும் பொதுக் காரியங்களைச் சாதிக்கலாம்.

### எத்தொழிலும் கேவலமில்லை.

எவன் எத்தொழில் செய்தாலும் அவனுக்கு அதில் தனிப்பெருமை இருக்கவேண்டும். அவனவன் விரும்பியவாறே செய்ய அவனவனுக்கு உரிமை இருத்தல்வேண்டும். அவன் செயலால் பிறருக்குத்தீங்கொன்றும் இல்லையெனில், அவனுக்குப்பிறரால் யாதொரு தீங்கும் நேரக்கூடாது. மக்களின் ஏழ்மையும், துயரமும் குறையவேண்டும்; அறிவுவேண்டும், அறிவு வளர உரிமைவேண்டும், அப்பொழுதன்றோ சமூகம் அழகுபடும். [அரசா]ங்கம் என்பது மக்கள் நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஏற்பாடேயன்றி, அரசாங்கத்தைக்கண்டு மக்கள் நடுநடுங்கவேண்டியதில்லை. அரசாங்கம்பற்றி மேனுட்டாரின் கருத்து இதுதான்.

### பொதுவுடைமை நாடுகள் கூறுவதென்ன?

தனிப்பட்ட மனித வாழ்க்கையின் நோக்கம்பற்றி ரஷ்ய நாட்டு அரசாங்கம் வேறுவிதமாக நினைக்கின்றது. தனிப்பட்ட மனிதனுக்கு ஏதேச்சையான வாழ்க்கையும், தனிப்பட்ட உரிமையும் அவசியமில்லையென்றும், அவனை அரசாங்கம் ஒரு உபகருவியாக உபயோகித்துக்கொள்ளலாமென்றும் கூறுகிறது. அரசாங்கத்தின் நலன் பெரிதேயன்றி, தனிப்பட்ட மனிதன் நலம் பற்றிக் கவலையில்லை. இதுதான் கார்ல் மார்க்ஸ், ஹெஹல் ஆகிய இரு பொதுவுடைமைப் பேரறிஞர்களின் கருத்து. இக்கருத்தை கிருஸ்து மதமும் ஏற்றுக்கொள்வதில்லை, மேனுட்டுப் பகுத்தறிவாளர்களும் ஏற்றுக்கொள்வதில்லை.

பொதுவுடைமை ரஷ்யாவில் தனிப்பட்ட மனிதனுக்கு தனிப்பட்ட உரிமையாவது, தனிப்பட்டபெருமையாவது கிடையாது. எல்லாப் பெருமையும், எல்லா உரிமையும் பொதுவுடைமை அரசாங்கத்திற்கே சொந்தம். மேனுடுகளில் மக்கள் கடவுளுக்குத் தலை வணங்குவது போல், ரஷ்யாவில் பொதுவுடைமை அரசாங்கத்திற்கு மக்கள் தலைவணங்கித் தொண்டு செய்தல்வேண்டும். அங்கு எவனும், தன் ஆருயிர் நண்பன் என்று நினைக்கக்கூடியவனிடத்தில்கூட தன் உள்ளக் கருத்தை

அச்சமின்றி, தாராளமாகச் சொல்வதற்கில்லை. அப்படி ஏதேனும் சொல்லிவிட்டால், அவனை அவனுடைய நண்பனே அரசாங்கத்திற்குக் காட்டிக் கொடுத்துவிடுவான். அப்படி தப்பித்தவறி பேசினவனுக்கு ஆயுட்காலக் கடுங்காவல்தண்டனைதான். பள்ளிச் சிறுவனொருவன் விளையாட்டிற்கு ஏதாவது தடுக்காக மொழிந்தாலும், அதற்காக அவனுடைய பெற்றோர்கள் மரண தண்டனை விதிக்கப்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் செயல்களில், தனக்குச் சரியல்லவென்று தோன்றும் ஏதோசில செய்கைகளைக் கண்டிக்கும் வீரர்கள் கைதியாக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். விசாரணை முடிந்து தீர்ப்பு கூறப்படுமுன்னமே, அந்தக் குற்றவாளி தன் குற்றத்தை குற்றம் தானென்று ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் நெருக்கடிக்கு ஆளாக்கப்படுகிறான்.

இத்தகைய நெருக்கடிகளும், நிர்ப்பந்தங்களும் உள்ள ஒரு நாட்டில் தனிப்பட்ட மனிதனுக்காவது, மக்களுக்காவது இன்பமோ, பெருமையோ இருக்கமுடியுமா? இத்தகைய மக்களுக்கும், மனிதனால் அடிமையாக்கப்பட்டு, அவன் சொற்படி ஆட்டிவைக்கப்படும் மக்களுக்கும் வேறுபாடு என்ன இருக்கமுடியும்? தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்பட்ட இவ்விழிநிலைமையைத்தான் மேனாடுகளும் நானும் கண்டிக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய மனித இழிவை நாம் எதிர்க்கவேண்டாமா? இவ்வெதிர்ப்பின் காரணமாக, மற்றோர் உலகப்போர் நேரினும் நேரலாம். அப்போரில் நாம் வெற்றி பெற்றால் மாத்திரம் போதாது. நாம் எந்த உத்தமக்கொள்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் போர் புரிந்தோமோ; அவை உலக மக்களின் உள்ளங்களைக் கவர்ச்சி செய்தால்தான், நம் போர் முழு வெற்றியடைந்தது என்று சொல்லமுடியும். ஆதலால் மக்கள் முன்னேற்றத்திற்கான உயர்ந்த கொள்கைகள் எவை, மனிதஉரிமைகள் யாவை என்பதை நாம் விளக்கமாக, வெட்டவெளிச்சமாக வரையறுத்துக்கொள்ளவேண்டும்.

## மேனாட்டு நோக்கம்.

தனிப்பட்ட மனிதனுக்கு தனிப்பட்ட ஏதேச்சை வேண்டும்; தனிப்பட்ட உரிமைகள் வேண்டும், என்று சொன்னால் அதன் பொருளென்ன? அத்தகைய தனிப்பட்ட மனிதன், தன் சொந்த நலத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டவன் என்பதல்ல அதன் பொருள். ரஷ்யாவில் தனிப்பட்ட மனிதனுக்கு யாதொரு தனிப்பட்ட உரிமைகளும் இல்லையென்று கண்டோம். ரஷ்யாவின் குற்றத்தைச்சுட்டிக்காட்டும் நாமும், மற்றோர் விதமான குற்றத்தைச் செய்து வருகிறோம். அது என்ன? தனிப்பட்டவனின் உரிமைகளில் தலையிடக் கூடாதென்னும்பேரால், நாம் தனிப்பட்டவனை மிகமிக தனிமையாக்கி விடுகிறோம்! இப்படிச்செய்வதும் ஒரு பெரும் குற்றமாகவேமுடியுமன்றோ? இவ்வாறு தானுண்டு, தன் வேலையுண்டு, தன் உரிமையுண்டு என்று தன்னைத்தானே கருங்கல் சுவர்களால் ஆகிய ஒரு அறையில் மூடிக்கொண்டு, தன் சொந்தநல விருப்பியாக இருந்துகொண்டிருக்கும் ஒரு

வன் எவ்வளவு அறிவாளியாகவும், ஆராய்ச்சிக்காரனாகவும் இருப்பினும், அவனால் அக்கம்பக்கத்தாருக்காவது, சமுதாயத்திற்காவது, அவன் பிறந்த நாட்டுக்காவது, இப்பரந்தஉலகுக்காவது என்ன பயன்? ஒன்றுமேயில்லை. அவனுடைய ஆராய்ச்சி, அறிவு, அவனைப் போன்ற மற்றைய அறிவாளிகளின் ஆராய்ச்சிகளுடனும், அறிவுடனும் கலந்தாலொழிய பெரும் பலன் யாதும் கிட்டாது. தன் வீட்டார், தன் சுற்றத்தார், தன் சமுதாயத்தார், தன் நாட்டார்களுக்கு மாத்திரம் அவனுடைய அறிவும், ஆராய்ச்சியும் பயன்படுதலோடு நின்றுவிடுதல் கூடாது. பரந்த இவ்வுலகம், அவனது அறிவின் பயனை அடைதல் வேண்டும்.

இரண்டாவது உலகப் போரில் 1940-ல் பிரான்சு தேசம் தோல்வியடைந்ததைக் கேட்டு, அமெரிக்காவில் வாழ்ந்து வந்த பணக்கார பிரஞ்சு வணிகர்கள் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் கால்களே முறிந்துபோனதாகக் கண்ணீர்விட்டுப் புலம்பியதை என் கண்ணாரக் கண்டேன். உலகமே தத்தளித்துக்கொண்டிருந்த அச்சமயத்தில், இத்தகைய குறுகிய நாட்டுப் பற்றுக்கு இடமேது? உலகச் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து, உலகமக்கள் எல்லாம் அச்சமின்றியும், அமைதியுடனும் நல்வாழ்வுவாழவேண்டுமானால், குறுகிய நாட்டுப்பற்று மாறி, பொதுவான உலக மனிதப்பற்று உருவாகவேண்டும். சென்றுபோனகாலத்தில் உலக மக்கள்பட்ட துன்பங்களையெல்லாம் நம் மனக்கண்முன் நிறுத்தி, எதிர்காலத்திலாவது இன்னலில்லா

## வினைப்பயன்.

சோமு :— டேய் ராமு! என்னடா உன் வலது கன்னம் இப்படி வீங்கியிருக்கிறது?

ராமு :— எல்லாம் வினைப்பயன்.

சோமு :— என்னடா அது?

ராமு :— வேறென்ன? ஏசுநாதரின் உபதேசப்படி சாமுவேலிடம் வலது கன்னத்தைக் காண்பித்த வினைப்பயன்தான்!

—என். எஸ். வாசன்.

உலகைநிறுவ நாம் முயலவேண்டும்.

மனிதன் முதன்முதலில் உலகில் தோன்றியபோது, அவனுக்கேற்பட்ட சிறுமையையும், தற்காலம் அவன் அடைந்துள்ள பெருமையையும் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நமக்கு வியப்புடைக்கும் சிரிப்பு பொங்கித் ததும்பும்.

### மனித அறிவு வளர்ச்சி.

முதன் முதலில் தோன்றிய மனிதனுக்கும், காட்டிலுள்ள எளியவிலங்குகளுக்கும் அவ்வளவாக வேறுபாடில்லை. உடுக்க உடையின்றி, இருக்க வீடின்றி, சமைத்துத் தின்னவும் தெரியாமல் இருந்தான் மனிதன். மான்கள் போல் மருண்டும், குரங்குகள்போல் ஒளிந்தும், கண்ட காய் கனிகளைத் தின்றும் உயிர் வாழ்ந்திருந்தான் ஒரு காலத்தில். அவனிடத்தில் ஆயுதங்களில்லை, ஆடு மாடுகளில்லை, உழுதுண்டு வாழவும் தெரியாதவனாக இருந்தான். அவனுக்கும், மற்றையவிலங்குகளுக்கும் வேறுபாடு என்னவென்றால், விலங்கினத்திற்கில்லாத பகுத்தறிவு மாத்தி

ரம் அவனிடம் இருந்தது. ஆனால் அந்த அறிவையும் உபயோகிக்கத் தெரியாதிருந்தான் அக்காலத்தில்.

காலச்சக்கரம் சுழலச்சுழல, மனிதன் அறிவும் வளரவளர, தன் நிலைமையைச் சற்று சமாளித்துக் கொள்ளலானான். மெல்ல மெல்ல நெருப்பு, வில், அம்பு—இவற்றின் உபயோகங்களையும், வீட்டு மிருகங்களின் பலன்களையும், பேசும் திறமையையும் பெற்றான். கடைசியில் உழுதுண்ணும் உபாயத்தையும் உணர்ந்தான். அதன்பின் தன்னைப் போன்ற பல மனிதர்களோடு சேர்ந்து வாழக் கற்றான். வீடு கட்டவும், மாட மாளிகைகள் எழுப்பவும், கற்றான். திரை கடலோடியும், முன்பின் தெரியாத நாடுகளையும் கண்டான். நோய், நொடிகளைப் போக்க மருந்துகளையும் தயாரித்தான். தன் இழி நிலைமையும், ஏழ்மைத் தன்மையையும் போக்க முற்பட்டான். நாள் செல்லச் செல்ல, கையால் செய்யும் வேலையைக் கருவிகளால் செய்தான், கருவிகளை விட்டு, இயந்திரங்களைச் செய்துகொள்ளவும் தலைப்பட்டான். இவற்றுள் மிக முக்கியமான இயந்திரங்கள் மட்டும் இன்னும் மேனாடுகளிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. கீழ்நாட்டு மனிதன் அவ்வளவு முன்னேற்றத்தை இன்னும் பெறவில்லை.

இத்தகைய மனித அறிவு வளர்ச்சியும், ஆக்க வளர்ச்சியும், ஒழுக்க வளர்ச்சியும் எல்லா மனிதர்களுக்கும் ஒரே காலத்தில் தோன்றிவிடவில்லை. இவையெல்லாம் ஆரம்பித்தவர்கள், அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் படைத்த ஒரு சிலரே யாவர். அவ்வக் காலங்களில், அத்தகைய அறிஞர்களுக்குப் பலத்த எதிர்ப்புகளும் இருந்தன. மனிதன் மனிதனையடித்து, மனித ஊனைத் தின்று, வளர்ந்த காலமும் உண்டு. இவ்வழக்கம், இன்னும் ஆப்பிரிக்காவில் நீக்ரோக்களிடையே இருந்துவருகிறது. பண்டைக் காலத்தில் எல்லா நாட்டு மக்களும் இப்பொல்லா வழக்கத்தைக் கையாண்டு வந்தனர். ஆப்பிரிக்காவைத் தவிர மற்றைய நாடுகளில் இவ்வழக்கம் நின்றதெப்படி? இதை நிறுத்த ஒரு சிலரே முயன்றிருக்கவேண்டும். அவர்களுக்கு எவ்வளவோ எதிர்ப்புகளும் இருந்திருக்கவேண்டும். அவர்களும் அதுவரையில் மனித ஊனைத் தின்று மனித ஊனை வளர்த்தவர்கள்தானே! அவர்களைப்பற்றி மற்றவர்கள் எவ்வளவு ஏளனம் செய்திருப்பார்கள் என்று சற்று யோசியுங்கள்: "இதுவரையில் நம்மைப்போல் மனித ஊனைத்தின்று கொழுத்த இவன் ஏன் திடீரென்று மனிதஊன் வேண்டாமென்று உபதேசம் செய்கிறான்! இதுவரையில் நாக்கைத் தட்டித் தட்டி மனிதஊனை விழுங்கிவந்தவர், சாவதற்கு பயந்தே இவ்வாறு உபதேசம் செய்தாவது உயிர் வாழலாமென்று உபாயம் செய்கிறார்கள் போலும்!" — என்று கேலி செய்திருப்பார்களல்லவா?

இதே போன்று அவ்வக் காலங்களில் தோன்றிய ஒவ்வோர் சீர்திருத்தக்காரனுக்கும், மனித சமுதாயத்தில் எதிர்ப்புகள் இருந்தே வந்துள்ளன. கடைசியில் சீர்திருத்தக்காரர்கள், தங்கள் நோக்கங்களில் வெற்றி பெற்றுத்தான் வந்திருக்கிறார்கள். இவ்வுண்மையைப் பிற்காலத்திய மனித சமூகம் அறிந்திருக்

தும், இக்காலத்திலிருக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கும் எதிர்ப்பு இல்லாமலிருக்கிறதா?

### சுயேச்சை எண்ணங்கள்.

மனித சுயேச்சைக்கும், புதுப்புது எண்ணங்கள் மக்களிடையே பரவுவதற்கும் இடம் கொடுக்காமல் போனால், "கிணற்றுத் தவளைக்கு அதுவே சொர்க்கம்" என்பதுபோல் எந்தச் சமூகமும், எந்த நாடும் முன்னேற்றமடையமுடியாது. உலகம் உருண்டை வடிவமானது என்று சொன்ன பாவத்திற்காக, கலீலியோ என்னும் அறிஞனுக்கு, உலகம் தட்டை என்று நம்பிவந்த இத்தாலிய மனித சமூகம் மரணதண்டனை விதிக்கவில்லையா? அதனால் இத்தாலிய விஞ்ஞானம் தலைதூக்க இரண்டு நூற்றாண்டுகள் ஆயின. மனித சமூகத்தின் கொடுமை இருந்தவாறென்ன! சமூகக் கொடுங்கோன்மை அவ்வளவாக இல்லாத நாடுகளான ஃபிரான்சும், ஹாலந்தும், இங்கிலாந்தும் கலீலியோ சொல்லிய உண்மையைப் பின்பற்றி ஆராய்ச்சி செய்து, கடல் கடந்து புதுப்புது நாடுகள் கண்டு, தங்கள் தங்கள் கொடிகளை ஏற்றி, ஆட்சி நடத்தியதை சமூக நூல் புகலும்.

"நான் வைத்ததுதான் சட்டம்" என்று கொடுங்கோல் ஆட்சி புரிந்தவர்கள், ரஷ்ய மன்னர்கள் என்று யாரும்சொல்லுவார்கள். அத்தகைய கொடுங்கோலர்கள் காலத்திலும், டால்ஸ்டாய் என்னும் ரஷ்ய அறிஞன் தன் புதுக் கொள்கைகளையும், புது எண்ணங்களையும் மக்களிடையே பரப்பிவரவில்லையா? முடியாட்சி ஒழித்து, குடியாட்சி நடத்துவதாகச் சொல்லும் தற்கால ரஷ்யாவில் புதுப்புது எண்ணங்கள் பரவ இடம் இருக்கிறதா?

மனித சமூக முன்னேற்றத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க இடம் தரக்கூடாதென்று நாமெல்லாம் விரும்புவது உண்மையானால், ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும், தன்தன் இஷ்டம்போல், தான் தான் நம்பியதை நம்பியபடி நடத்திச்செல்ல உரிமை அளிக்கப்படல் வேண்டும், மனித சுயேச்சைக்கும், மனிதஉரிமைக்கும் மனித சமூகம் முட்டுக்கட்டை போடாமல் இருக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் மனித உரிமைபற்றி போதிக்கப்படல் வேண்டும். ஆனால் சில ஆசிரியர்களும், வகுப்பிலுள்ள மற்றைய பிள்ளைகளும் இத்தகைய தனிப்பட்ட சுயேச்சைக்கும், உரிமைக்கும் இடம் கொடுப்பதில்லை. தனிப்பட்ட எண்ணங்களுக்காக எந்த ஒரு மாணவன், தன் ஆசிரியரிடமும், தன் வகுப்புப் பிள்ளைகளிடமும் கஷ்டப்பட்டானோ, அவனே பிற்காலத்தில் தன் வாழ்க்கையிலேயே தன் எண்ணங்களின்படி செய்துகாட்டி, வெற்றி பெற்ற சீர்திருத்தக்காரனாகவும், பேரறிஞனாகவும், புகழ் பெற்றிருக்கிறான் என்பதை நாம் கண்டுமிருக்கிறோம். அப்படியிருந்தும், புது எண்ணங்களையும், சீர்திருத்த எண்ணங்களையும் கொண்டுள்ள மாணவர்களைப் பள்ளி ஆசிரியர்கள் வெறுக்கிறார்கள். இத்தகைய பழைமை விரும்பிப் பள்ளிஆசிரியர்கள், அமெரிக்காவில் மிக மலிந்திருக்கின்றனர். அவர்களிடம் கல்வி பயிலும் மாணவர்கள் முழு மூடர்களாகவும், மூடர்களாகவுமே பள்ளியினின்றும் வெளி வருவர். ★★

# கடவுள் செயலா?

"அறிவுக் குஞ்சு"

எல்லாம் கடவுள் செயல், "அவனன்றி அணுவும் அசையாது" என்பது உண்மையானால், மனித வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் கடவுளே பொறுப்பாளியாவார். துன்பம் வந்த போது ஏன் அதை எதிர்த்து இன்பமடைய விரும்பவேண்டும்? கடவுளே கொடுத்த துன்பத்தைப் போக்க முயற்சித்தால், கடவுளை எதிர்ப்பது போல் தானே ஆகும்!

பணக்காரர்களைப் படைத்த கடவுள்தானே பிச்சைக்காரர்களையும் படைத்தார்? பிச்சைக்காரன் பசியால் துடித்துச் சாகவேண்டுமென்பதுதானே கடவுள் விருப்பம்? அந்த எண்ணம் இல்லாவிடில் ஏன் அவனைப் பிச்சைக்காரனைப் படைக்கிறார்? பிச்சைக்காரனின் பசியைப் போக்கநினைத்தால் அது கடவுளுக்கு விரோதமான செய்கைதானே? கடவுள் செயலாலேயே அத்தனையும் நடப்பதாக நம்பினால், அன்பு, இரக்கம், இவைகளுக்கு இடமில்லாமலே போகிறதே.

ஒரு நோயாளிக்கு, 'எல்லாம் கடவுள் செயல், நம்மால் என்ன முடியும்' என்று சிகிச்சை செய்யாதிருந்தால், நோயாளியின் கதி என்னவாகும்? கடவுள் செயலால் வந்த நோய், அவர் செயலாலேயே தீருமென்று, விட்டுவிடுகிறோமா? ஆராய்ந்து, அரும்பாடுபட்டு கண்டுபிடித்த வைத்திய முறைகளைச் செய்தால் தானே நோய் குணமடைகிறது?

கடவுள், ஒருவனுக்கு உண்டாக்கிய நோயைத் தீர்க்கும் வைத்தியர்கள், கடவுளுக்கு எதிரிகளாகத்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் கடவுள் செயல் அவன் நோயால் அவதிப்பட வேண்டுமென்பது, அவர் செயலைத் தட்டிக் கழிக்கும் வைத்தியர்கள் பரம விரோதிகள்தானே?

அந்த வைத்தியர்களை உண்டாக்கியதும் கடவுள்தானே என்று நினைக்கலாம். கடவுள் செயல் என்று உட்கார்ந்திருந்தால், வைத்திய முறைகள் தானாகவே தெரிந்துவிடுமா?

எத்தனையோ விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியினால் ஏற்பட்டது வைத்தியமுறை என்பதைச் சிந்திக்கவேண்டும். இன்னும் ஆராய்ச்சிகள் நடைபெற்ற வண்ணமே இருக்கிறது. தன் நினைவிழந்து சாகப்போகிறவனையும், 'இஞ்செக்ஷன்' மருந்தினால் இரண்டு மணி நேரம் பேசவைக்க முடிகிறது. கடவுளுக்குப் பூசை போட்டுத் திருநீறைப் பூசினால் பேச முடியுமா?

எல்லோரையும் கடவுளே படைத்தார் என்பது உண்மையானால்,

கொலைகாரனையும் அந்தக் கடவுள் தானே படைத்தார்? கடவுள் செயலால்தானே கொலை செய்யவும் துணிகிறான்?

அப்படியானால் அந்தக் கொலைகாரனை அடக்கவோ, தண்டிக்கவோ யாருக்கும் உரிமையில்லை அல்லவா? எல்லாம் கடவுள் செயல் என்று இருந்துவிட்டால், போலீஸ் ஸ்டேஷன்களுக்கும், நியாயசபைகளுக்கும் வேலையில்லை அல்லவா?

மக்கள் எல்லோரும் கடவுள் செயலால் இயங்கும் இயந்திரங்கள் என்று எண்ணுபவர்கள், கடவுளின் செய்கைகளைக் குறை சொல்வோரைக்கண்டிப்பது பெருங் குற்றமல்லவா? அவர்கள் கடவுள் செயலால்தானே கடவுளின் குறைபாடுகளை எடுத்துரைக்கிறார்கள்? எல்லாவற்றிற்கும் மூலகாரணம் கடவுள் தானே? அப்படி இருக்கும்போது ஏன் அவர்களை மத விரோதிகள், நாஸ்திகர்கள் என்று இழிவாகப் பேசவேண்டும்?

ஆதிகாலத்திலிருந்து எல்லாம் கடவுள் செயல், நம்மால் ஒன்றும் ஆகாது என்று மனிதர்கள் இருந்திருந்தால், இன்றைய நம் நிலைமை எப்படி இருந்திருக்கும்? கற்குகைகளில் வசித்துக்கொண்டு, இலைகளை, கொடிகளை ஆடையாக உடுத்திக்கொண்டு, கிடைத்த காய்கனிகளைத்தின்றுகொண்டு, நாம் இருக்க வேண்டிய நிலையை இப்போது நினைக்கவும் கூசுகிறதே!

நேர்த்தியான மாடி வீடுகள், விதவிதமான உடைகள், உணவு இன்னும் நம் வாழ்க்கைக்குத் தேவையானவைகள் எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. எல்லாம் கடவுள் செயலாலா? மனிதனின் விடா முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டவைகளே என்பதை உணரவேண்டும்.

> ## மாற்றம்.
>
> நமது முன்னோர்களுடைய நற்குணங்களைப் பார்த்து நாமும் ஊக்கங் கொள்ளலாமே தவிர, அவர்களிருந்தபடியே நாம் இருக்கவேண்டுமென்று நினைப்பது கூடாத காரியம். உலகத்தின் நிலைமை அப்போதைக்கப்போது முற்றிலும் மாறும் இயல்புடையது.
>
> —ஜவகர்லால்.

நாளுக்கு நாள் விஞ்ஞான அறிவு வளர்ச்சி யடைகிறது. மனிதனால் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை வேரூன்றி வருகிறது.

கடவுள் செயல் என்று கைகட்டி உட்கார்ந்திருந்தால் ஒரு துரும்பையும் அசைக்கமுடியாது. அது பாட்டிற்கு கடவுள் செயலால் அசையும் என்றிருந்தால் முடியுமா? அசைத்தால்தானே அசையும்?

ஆதலால் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு கருத்தை மாற்றி அமைக்க வேண்டும். ஒவ்வொருவரும், தன் அறிவிலும், ஆற்றலிலும் நம்பிக்கை கொள்ளவேண்டும். கடவுள் செயல் என்ற கண்மூடிப் பழக்கத்தை இனி மண்மூடச் செய்யவேண்டும்!

● ● ●

"ஆட்டை நாம் மாரியம்மனுக்குப் பலியாகக் கொடுக்கிறோம். அதைப் பூசாரியே எடுத்துச் செல்கிறான். இவ்வருடம் இரண்டு ஆடுகள் வேண்டுமாம். அப்பொழுதுதான் ஊரில் நடக்கும் சருப்புச் சந்தை ஒழியுமாமே! மாரியம்மனுக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்?" யோசித்தார் நாட்டாமைக்காரர்.

# பிடிபட்டான் பொன்னம்பலம்!

[என். எஸ். வாசன்]

★

"பணி! நீ என்னதான் சொல்கிறாய்?"

"மாமா! பூசாரி பொன்னம்பலத்திற்குக் கொடுக்கும் பலியை நிறுத்த வேண்டுமென்று சொல்கிறேன்."

"என்ன! பூசாரிக்குக் கொடுக்கும் பலியா?"

"ஆம்! மாரியம்மனுக்கு என்று சொல்லி, தான் எடுத்துக்கொண்டு போகிறானே; அந்தப் பலியை."

"மாரியம்மன் ஆட்டைச் சாப்பிடுமா? அதனால்தான் பூசாரி எடுத்துச் செல்கிறான்."

"மாரியம்மன்தான் சாப்பிடாதே, அதற்கேன் பலி கொடுக்கவேண்டும்? இந்தப் பூசாரி ஊரில் கொள்ளையடிப்பது போதாதா? தெய்வத்தின் பேரால் செய்யும் இந்த பலிக் கொள்ளை வேறா?"

"பூசாரி கொள்ளையடிக்கிறானா? அப்படியெல்லாம் பேசாதேடா, மகா பாவம்!"

"எது பாவம்? பல நூற்றுக்கணக்கான உயிர்களைத் தெய்வத்தின் பேரால் கொலை செய்வது பாவமா? அவ்வுயிர்களைக் கொலையினின்றும் விடுவிக்க, பூசாரியின் அக்கிரமங்களை எடுத்துரைப்பது பாவமா?"

"டேய்! வேதாந்தம் பேசாதே. பரம்பரையாகச் செய்துவரும் வழக்கத்தை மாற்றினால் தெய்வம் சும்மாவிடாது. அதுவும் மாரியம்மன் கோபத்தைக் கிளப்பினால்........"

"அம்மையும் வைசூரியும் உண்டாக்கிவிடுவாளாக்கும்! அப்படி ஏற்பட்டாலும், இந்தப் பொன்னம்பலத்தால் தடுக்கமுடியாது மாமா."

"டேய்! அயோக்கியப் பயலே! சொல்வதற்கெல்லாம் எதிர்த்தா பேசுகிறாய்?" கோபம் அதிகரித்துவிட்டது அவருக்கு. பணியின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டார்.

## 2

பணி, ஐந்து வயதிலேயே தாய் தகப்பனை இழந்தவன். மாமன் செல்லப்ப கவுண்டரின் வீட்டில், பன்னிரண்டு வருட காலமாக வளர்ந்து வருகிறான். செல்லப்ப கவுண்டர் நரசிங்கபுரத்தின் நாட்டாமைக்காரர்.

அவருக்கு நிலபுலன்கள் நிறைய இருந்தன. வேலையாட்கள் பலர் இருந்தனர். அவர் வார்த்தைக்கு மிகுந்த மதிப்பு இருந்தது நரசிங்கபுரத்தில். தானதருமங்கள் ஏராளமாகச் செய்வார். கடவுள் பக்தி அதிகம் உண்டு. பழைய பழக்க வழக்கங்களிலிருந்து சிறிதும் நழுவமாட்டார். அவ்வூர் மாரியம்மன் கோவிலுக்கு ஏராளமான மானியங்கள் விட்டிருந்தார். அவைகளைப் பார்த்துக்கொள்ள பொன்னம்பலப் பூசாரியை ஏற்படுத்தியிருந்தார்.

மணி, கிராமத்தில் வளர்ந்ததால் ஐந்தாவது வகுப்புக்குமேல் படிக்கவில்லை. அவனுக்குப் பள்ளி யறிவு குறைவாயினும், உலக அறிவு நிரம்பியிருந்தது. எல்லோரிடமும் தாராளமாகப் பழகும் சுபாவம். ஊருக் குழைக்கும் உத்தமர்போல் திரியும் போலி வேஷதாரிகளைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. பெரியவர்களாயினும், தவறு செய்தால் கண்டிக்கத் தயங்கமாட்டான். மந்திரம், சோதிடம் போன்றவைகளைச் சிறிதும் நம்புவதில்லை. பொதுவில் அவன் அவ்வூருக்கு ஓர் புத்துலக லட்சியவாதியாய் விளங்கினன்.

ஆண்டுதோறும் நடக்கும் மாரியம்மன் திருவிழா வந்தது. வழக்கம் போலவே திருவிழாவுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செல்லப்பகவுண்டர் செய்திருந்தார். மாரியம்மனுக்கு முதல் பலியாகக் கொடுக்கும் தனது ஆட்டையும் நன்கு கொழுக்கவைத்திருந்தார். பூசாரி பொன்னம்பலமும் தன் வேலைகளை பயபக்தியுடன் செய்தான். உண்மையில் அவன் மாரியம்மனுக்கு பயப்படாவிட்டாலும், திருவிழாவின் கிடைக்கும் வருமானத்தை உத்தேசித்து பயந்தவன்போல் நடித்துவந்தான்.

மணி மட்டும், செல்லப்பரின் முதல் பலியை நிறுத்தத் திட்டம் போட்டான். அந்தப் பலியைமட்டும் நிறுத்திவிட்டால், மற்ற பலிகள் நின்றுவிடும் என்பதை அவன் அறிவான். ஏனெனில், நாட்டாமைக்காரர் பலியே நின்றுவிட்டபொழுது மற்றவர்கள் பலியை மாரியாயி ஏற்பாளா? அதற்காவே அவனுக்கும் அவன் மாமா செல்லப்பகவுண்டருக்கும் மேற்கண்டபடி பேச்சு நடந்தது. கடைசியாக மாமன் கையினல் அறையும் வாங்கினன். ஆனல் அதைப்பற்றி அவன் லட்சியம் செய்யவில்லை.

நரசிங்கபுரத்தில் கொஞ்ச நாட்களாக, கள்ளமார்க்கட் வியாபாரம் அதிகமாக நடந்துவந்தது. ஊரின் எல்லையில் ஓடும் ஆற்றின் அக்கரையிலுள்ள அடுத்த மாவட்டத்திற்கு, கள்ளத்தனமாக அரிசி மூட்டைகள் படகின்மூலம் கடத்தப்பட்டுவந்தன. யார்? எப்பொழுது? கடத்திச் செல்கிறர்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஏன்? அரசாங்க அதிகாரிகள் கூட பலதடவை முயன்றும், கண்டுபிடிக்க முடியவில்லை. நாட்டாமைக்காரரும் பலவாறு முயன்ருர். மாரியம்மனிடம் பூவாக்குக் கேட்டுப் பார்த்தார். பூசாரி பொன்னம்பலம் சொன்ருன்: "இது மாரியம்மனின் சோதனை, அம்மை, வைசூரி போல் இதுவும் ஒரு கருப்புக்கொள்ளை நோய்; இது நம் ஊரையே கலங்க வைக்கிறது; மாரியம்மனின் கோபத்

தைத் தணிக்க, வருகிற திருவிழாவில், இன்னும் இரண்டு ஆடுகள் சேர்த்து பலி கொடுத்தால் ஒழிந்துவிடும்'' என்று.

## 3

அன்று மாரியம்மன் திருவிழா. எங்கும் கொட்டுமுழக்கங்கள் முழங்கின. நூற்றுக் கணக்கில் தீச்சட்டிகள் நாட்டாமைக்காரர் வீதி வழியே சென்றன. மாரியம்மன் பிரார்த்தனைக்காக ஈர வேஷ்டியுடனும், ஈரப் புடவையுடனும் . வீதியில் புரண்டு செல்வோர் எத்தனை பேர்! அலகு குத்திக்கொண்டு செல்வோர் எத்தனை பேர்! மாரியம்மன்பேரினால் வேஷம் போட்டுச் சம்பாதிப்போர் எத்தனை பேர்! ராட்டினத்தில் சீட்டியடித்துக்கொண்டு சுழலும் சிறுவர், சிறுமியர் எத்தனை பேர்! இன்னும் இவைபோன்று ஏராளமான ஆர்ப்பாட்டங்கள் நடந்தன அவ்விழாவில்.

நாட்டாமைக்காரர் செல்லப்ப கவுண்டர் மட்டும் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. நான்கு நாட்களுக்குமுன் மணியை அடித்தது முதல், பித்துப் பிடித்தவர் போலாகிவிட்டார். திருவிழாவன்று மன நிம்மதியில்லாமல், மணிக்கும் தனக்கும் நடந்த பேச்சுபற்றி சிந்திக்கலானார். "மணி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஆட்டை நாம் மாரியம்மனுக்கு பலியாகக் கொடுக்கிறோம். அதை பூசாரியே எடுத்துச் செல்கிறான். இவ்வருடம் இரண்டு ஆடுகள் வேண்டுமாம். அப்பொழுதுதான் ஊரில் நடக்கும் கருப்புச் சந்தை ஒழியுமாமே, மாரியம்மனுக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்? முட்டாள்தனமாக மணியை அடித்துவிட்டோமே! அவன் மனம் என்ன பாடுபட்டதோ!'' என்று சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்." "எஜமான்! ஒங்களை யாரோ கூப்பிட்ருக்க'' என்று வேலைக்காரனின் குரல் கேட்டு, சிந்தனையிலிருந்து விடுபட்டு வெளியே விரைந்தார். பக்கத்து நகரிலிருந்து அரசாங்க அதிகாரியின் வேலையாள் ஒருவன் வந்து வெளியே நின்றிருந்தான். கவுண்டரைக் கண்டதும் வணங்கி, தான் கொண்டுவந்த உத்தரவை நீட்டினன். பெற்றுக்கொண்ட நாட்டாமைக்காரர், உள்ளே சென்று அந்த உத்தரவை வாசித்தார். அதில் "நரசிங்கபுரத்தில் நடந்துவரும் மாரியம்மன் பண்டிகையில் நூற்றுக் கணக்காக உயிர்க்கொலை புரிவதை, சென்னை சர்க்கார் உத்தரவுப்படி நிறுத்தவேண்டும். தவறினால், உரிய தண்டனை விதிக்கப்படும்'' என்று கண்டிருந்தது. குழப்பமடைந்திருந்த செல்லப்பரின் மனம் உத்தரவைக் கண்டதும் ஏனோ மகிழ்ச்சியடைந்தது. மணியிடம் இதைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று விரும்பினார், மணியைக்காணவில்லை. தெருக்கோடியில் ஏதோ கூச்சல்கேட்டது. சாளரத்தின்வழியேபார்த்தார். மணியும், அவன் வயதுள்ள சில பையன்களும் "பொன்னம்பலம் ஒழிக," "பலியை ஒழிப்போம்", "கருப்புச் சந்தை ஒழிக," "நாட்டாமைக்காரர் குருட்டு நம்பிக்கை ஒழிக'' என்று கத்திக்கொண்டு, தம் வீட்டைநோக்கி வந்துகொண்டிருந்தனர். வந்தவர்கள், கவுண்டரின் வீட்டிற்குமுன் வந்ததும் நின்றனர். கூட்டத்தில் மணியைக் கண்டதும், செல்லப்பருக்குக் கோபம் பொத்துக்கொண்டு

வந்தது. வெளியேவந்தார். மணியை அடிப்பதற்காக அவனை நெருங்கினார். அங்கிருந்தவர்கள தடுத்துவிட்டனர்.

மணி பேச ஆரம்பித்தான். "மாமா! அன்று பொன்னம்பலத்தை மகாயோக்கியன் என்றீர்களே! அந்த வஞ்சகனுடன் சேர்ந்த கொள்ளைக்காரர் இருவரைக் கூண்டில் அடைத்துவிட்டோம். பூசாரியையும் பிடிக்க அதிகாரிகள் வருகிறார்கள். அந்தக் காட்சியைத் தாங்கள் நேரில்காண வேண்டும். அழைத்துச் செல்லவே நாங்கள் வந்தோம். புறப்படுங்கள" என்றான்.

"மணி! என்ன துணிச்சலடா உனக்கு? பைத்தியம் பிடித்துவிட்டதா?

"அதெல்லாம் ஒன்றுமில்லை நாட்டாமைக்காரரே! உண்மையான செய்தி. புறப்படுங்கள் பூசாரி வீட்டுக்கு. அங்கு சென்றால் எல்லாம் தெரிந்துவிடுகிறது என்றான்" கூட்டத்தில் ஒருவன்.

என்ன விபரீதமோ என்று சொல்லிப் புறப்பட்டார் நாட்டாமைக்காரர்.

பூசாரி வீடு பூட்டப்பட்டிருந்தது. சாளரத்தின் வழியே எட்டிப்பார்த்தார். அவர் கண்ட காட்சி திடுக்கிட வைத்தது. தம் வேலைக்கார முனியனும், இன்னொருவனும் இரண்டு கைகளும் கட்டப்பட்டு உட்கார வைக்கப்பட்டிருந்தனர். கவுண்டரைக் கண்டதும், பரிதாபமாகப் பார்த்தனர். பாவம், கெஞ்சுவது போலிருந்தது.

'மணி! ஏன் இவர்களைக் கட்டித் தள்ளிப் பூட்டியிருக்கிறீர்கள்? இவர்களை வெளியே விட்டுவிடுங்கள்" என்றார் செல்லப்பர்.

"வெளியே விடத்தான் இவர்களை உள்ளே அடைத்தோமா?" என்றான் ஒருவன்.

"மாமா! இவர்கள், பூசாரி பொன்னம்பலத்தின் கூட்டாளிகள்; இவர்கள் மூவரும் சேர்ந்து, ஐம்பது மூட்டை அரிசியைப் பதுக்கிவைத்திருக்கிறார்கள்; கள்ளனுக்குள் குள்ளன்போல், பூசாரி இல்லாத சமயம் பார்த்து, மூட்டைகளைக் கடத்திச் சென்று, பூசாரிக்கே நாமம் போடப் பார்த்தனர் இவ்விரு வஞ்சகர்களும். நாங்கள் பிடித்தோம். பக்கத்துஊரில் தங்கியிருக்கும் உணவு சப்ளை அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பிவிட்டோம். சற்று நேரத்தில் வந்துவிடுவார்கள். தாங்கள் இந்த விஷயத்தில் குறுக்கிட்டால், தாங்களும் தண்டனைக்குள்ளாக நேரிடும்" என்று பொரித்துத் தள்ளினான் மணிப் பயல்!

"பூசாரி எங்கே?" என்றார் அவர் கலக்கத்தோடு. "அவன் இன்னேரம் கோவிலில்தான் இருப்பான்" என்றான் மணி.

"அடடா! நானும் மறந்துவிட்டேன். பலியை நிறுத்தும்படியாக உத்தரவு வந்தது. அதைச் சொல்லவே உன்னைத்தேடினேன். அதற்குள் இவ்வளவு அமர்க்களம் நடந்துவிட்டது. புறப்படுங்கள் எல்லோரும் கோவிலுக்கு" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டார் நாட்டாமைக்காரர்.

4

பூசாரிக்கு எல்லோரையும் கண்டதும் 'கருக்' கென்றது. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், தங்களைக் காணுமெ தான் இன்னும் பலிகொடுக்கலே, நல்லான்கூட ஆட்டை நிறுத்திகிட்டு காத்துக்கிடக்கிறன் என்றான் பூசாரி.

"அப்படியா! டேய் நல்லான்! ஆட்டைக் கொண்டுபோய் நம் வீட்டுக் கொல்லையில் கட்டிவிட்டு சீக்கிரம் வா" என்று நல்லானுக்கு உத்தரவிட்டார் நாட்டாமைக்காரர்.

"கொல்லையிலே கட்றதா? நம்ம பலி யாட்டையா?" என்றான் பூசாரி.

"ஆமாம்! ...... பொன்னம்பலம்! கடைசியா ஒங்கையிலேலே, மாரியம்மனுக்கு பலியில்லாமெ பூசைசெய்" என்றார் அவர்.

"பலிக்க?"

"பலியை நிறுத்திவிடச் சொல்லி அரசாங்க உத்தரவு வந்திருக்குது. அதனாலே நம் ஊரிலே, இந்த வருஷத்திலிருந்து பலியை நிறுத்தவேண்டியதுதான். உம்! சீக்கிரம் நடக்கட்டும் பூசை!" அவ்வளவுதான்; பூசாரிக்கு மாரியம்மன் மருள் வந்துவிட்டது. "டேய்! என் பலியை நிறுத்த நீ யாரடா? ஆயிரங்கண்ணுடையாள்; நான் கொடுமைக்காரிடா! என் கோவத்தைக் கிளப்பினே, ஒன்னே சும்மா விடமாட்டேண்டா. கொண்டடா பலியை" என்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டாள் மாரியாத்தாள்!

அதே சமயம் தாலூகா சப்ளை அதிகாரியும், ஃபிர்க்கா சப்ளை அதிகாரியும், அவர்களைச்சேர்ந்த பியூன்கள் நால்வரும் கோயிலுக்கு வந்தனர். அவர்கள் வருகையைக் கண்டதும், மாரியம்மன் மலையேறினள். பூசாரியின் ஆர்ப்பாட்டம் பெட்டிப் பாம்பு போல் அடங்கியது.

"பூசாரி! ஐம்பது மூட்டை அரிசியை எப்படிச் சேர்த்தாய்? உண்மையைச் சொல்" என்றார் அதிகாரி. "எல்லாம் இந்த மாரியாத்தாளுக்காகத்தான்; கொஞ்சம் கொஞ்சமா சேர்த்துவச்சேனுங்க. மற்றபடி வேறெ எங்கெயும் கடத்தலேங்க" என்று சாதித்தான் பொன்னம்பலம்.

"பொன்னம்பலம்! என் அனுமதி இல்லாமல் மாரியம்மனுக்கு எதையும் நீ வாங்கியது கிடையாதே! அப்படியிருக்க, அரிசியை மட்டும் அதுவும் மூட்டைக் கணக்கில் எனக்குத் தெரியாமல் எப்படிச் சேர்த்தாய்? சாமி பேரைச் சொல்லி கொள்ளையடித்திருக்கிறயே பாவி! நீ கெட்டதுமல்லாமல், என் வேலைக்காரனையும் கெடுத்துவிட்டாயே! உனக்கு மாரியம்மன் தக்க கூலி கொடுப்பாள்" என்றார் நாட்டாமைக்காரர். கோபத்தால் அவர் கண்கள் சிவந்தன. "கூலி கொடுக்கத்தான், நாங்கள் வந்திருக்கிறேமே!" என்றார் அதிகாரி.

"பூசாரி! பக்தன்போல் நடிக்கிறாய் மனதிலே வஞ்சகம்! மருள் வந்து ஆடுகிறாய், நடத்துவது கள்ளச்சந்தை! கடவுள் பேரை வைத்துக்கொண்டு எதைச் செய்தாலும் கேட்காத காலமொன்று இருந்தது. அது மலையேறிவிட்டது அப்பனே! உன் மாரியாத்தாள் போலவே மலையேறிவிட்டது!"

என்றான் மணி. "கொல்" லென்று சிரித்தனர் எல்லோரும். பிறகு, நரசிங்கபுரத்திலுள்ள பல முக்கியஸ்தர்கள் விசாரிக்கப்பட்டனர்.

"பூசாரி இரவு பூசையை முடித்துவிட்டுப் படகில் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். கேட்டால் "காளி பூசைக்கு" என்பான், இப்பொழுதல்லவா தெரிகிறது விஷயம்" என்றார் ஒருவர்.

இந்தக் கள்ளச் சந்தையை விட்டு விடும்படி நான் சொல்லிப்பார்த்தேன் கேட்கவில்லை, எல்லை மீறிப் போகவேதான், எப்படியும் பிடித்துக் கொடுக்கவேண்டுமென்று தங்களை அழைத்து வந்தோம்" என்றான் ஒரு இளைஞன்.

தன்னைக் காட்டிக்கொடுத்தவன் யாரென்பதை அறிந்ததும், பொன்னம்பலம் அவனைத் தீ பறக்கும் கண்களால் நோக்கினான். அதிகாரி அருகிலிருக்கும்போது அவனால் வேறு என்ன செய்யமுடியும்? அவன் பூசித்த மாரியம்மன் நல்ல சமயத்தில் அவனைக் கைவிட்டாள்!

அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. பொன்னம்பலமும், அவனைச்சேர்ந்த மற்ற இருவரும் கைது செய்யப்பட்டனர். மாரியம்மன் திருவிழாவில் உயிரை இழக்கவிருந்த ஆடுகளும், கோழிகளும், தங்களுக்கு உயிர்ப்பிச்சை யளித்த இளைஞர்களைத் தலைதாழ்த்தி வணங்கின. ஒரு சேவல் கொக்கரித்துக் கூவியது. அந்தக் குரல் "பிடிபட்டான் பொன்னம்பலம்" என்பது போலிருந்தது சிறுவன் மணியின் செவிகளுக்கு!


வந்துவிட்டது! :: ::

:: :: வந்துவிட்டது!

# பைங்கிளி

**ப. க. குஞ்சிதம்**
எழுதியது.

★

சிறுவர் சிறுமியர்க்குப் புத்துணர்வு தரும் ஓர் அன்புச் சிறுமியின் அறிவுக் கதை.

அழகான புத்தகம்.

**விலை 0—2—0 தான்!**

●

**வியாபாரிகளுக்குக் கழிவு 25 %.**

தமிழ்நாடு முழுமையும், சிலோன், சிங்கப்பூர், பம்பாய், முதலிய இடங்களிலுள்ள முக்கியமான பத்திரிகை, புத்தக விற்பனையாளரிடமும் கிடைக்கும்.

★

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்**
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

# பொன் மொழிகள்

இது உங்கள் மனதில் இருக்கட்டும்; மனிதன் பயனின்றி அழியக்கூடாது.

—மாக்ஸிம் கார்க்கி.

குற்றங்கள் பிறக்கும் இடங்களிலே முக்கியமானவை குடியும், அறியாமையுமே.

—ஆவ்பரி.

புகழ்ச்சியைவிடக் கண்டனம் ஆபத்து இல்லாதது.

—எமர்சன்.

பகைவனை முறியடிப்பது எளிது. எல்லோரிடமும் நல்லவன் என்று பெயரெடுப்பது கடினம். —மகாகவி பாரவி.

எவன் தன்னுடன் பிறந்த மக்களுக்குத் தொண்டு செய்கிறானோ அவனே பக்தன். அவன் இதயமே கடவுள் தேடிச்சென்று அமரும் சிம்மாசனம். —காந்தியார்.

ஒழுக்கம் என்பது போர்க்களம் போன்றது. அதில் வாழவேண்டுமெனில், ஓயாமல் மனதோடு நாம் போராட வேண்டியிருக்கிறது.

—ரூசோ.

உள்ளொன்றும் புறமொன்றுமாயுள்ள நண்பர்களைக் காட்டிலும், வெளிப்படையாயுள்ள பகைவனே மேலானவன். —நெப்போலியன்.

உன் மானத்திற்கு பங்கம் வராமல் நடந்துகொள். இல்லையேல் உன் வாழ்வை ஒழித்துவிடு. —ஷேக்ஸ்பியர்.

இரப்பது நிச்சயம்; ஆனால் இரப்பதற்கும், ஒரு பெரும் குறிக்கோளைக் கொள்க.

—விவேகானந்தர்.

கோபம் வரும் வேளையில் தன்னை அடக்கிக்கொள்பவனே பலசாலி.

—முகம்மது நபி.

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், பலரையும் சில காலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது.

—ஆபிரஹாம் லிங்கன்.

இன்பவாழ்வு சுதந்திரத்தின் பயன்; சுதந்திரம் பயமில்லா நெஞ்சத்தின் பயன்.

—பெரிக்ளீஸ்.

சோம்பேறித் தனத்தில் எப்பொழுதும் ஏக்கம் குடிகொண்டிருக்கிறது.

—கார்லைல்.

பழக்க வழக்கங்களை தெய்விகமென்று மதிக்காதவனை, தீயவன் என்று மற்றவர்கள் கருதுகின்றனர். அவர்களின் இயல்பான கோழைத்தனமே இதற்குக் காரணம்.

—பெர்னார்ட் ஷா.

நூலறிவு வந்துவிடுகிறது. மெய்ஞ்ஞானம் வரத் தயங்குகின்றது. —டென்னிசன்.

# அறிவுப் போர்

[பெ. ஆ. சி. வயிரவன்]

1 வன்மைமிகு தமிழ்நாட்டை எண்ணிவிட்டால்
வாட்டமுறும் நிலையன்றோ தோன்றுதிங்கே!
தொன்மைபெறும் இந்நாடு முந்தை நாளில்
துலங்கியெழில் வளமாக வாழ்ந்த செய்தி,
தன்பாலே கொண்டுள்ள சின்னம் எல்லாம்
தனியாட்சி நடந்ததெனக் காட்டுதன்றோ?
இன்பமகாய் வாழ்ந்திருந்த நாமோ இன்று
இருக்கின்றோம் ஏழ்மையினால் தாழ்மை யுற்று!

2 புகுத்திவிட்டார் நம்மிடையே மடமை தன்னை,
பூசல்களை வளர்த்தவர்கள் வாழ்கின்றார்கள்!
வகுத்துள்ள வழிகளிலே நம்மவர்க்கு
வசமான தில்லையெனக் கண்டு கொண்டு,
தொகுத்தபுதுக் கொள்கையினைக் கடைப்பிடித்தே
தூய்மைபெற வேண்டுமென ஒன்றாய்க் கூடிப்
“பகுத்தறிவு”க் கேடயத்தைக் கையிற் கொண்டு
பாங்குடனே அறிவுப்போர் நடத்தல் வேண்டும்!

3 இந்தவழிப் பின்பற்றி நடந்தோ மானால்
இனிதாக வாழ்ந்திடலாம்; நமது நாடு
சொந்தமதாய் உரிமைகளை எய்தி என்றும்
தொழில்வளமும் பொருள்வளமும் சிறப்புற்றோங்கும்
வந்தபல விருந்தினரை ஏற்றுப் போற்றி
வாய்ப்பளித்து மகிழ்ந்திடலாம் வைய மீதில்
எந்தவித எதிர்ப்புக்கள் வந்த போதும்
எளிதாக வென்றிடலாம் அறிவுப் போரால்!

மூலம், ராபர்ட். ஜி. இங்கர்சால்

# சமுதாய விடுதலை

மொழிபெயர்ப்பு
இரா. நெடுஞ்செழியன். எம். ஏ

[முன் இதழ் தொடர்ச்சி]

நான் அதே சமயத்தில் பலவகைப் பட்ட மனித மண்டை ஓடுகள் வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்; நீண்டர்தால் (NEANDERTHAL) என்ற இடத்தில் வெட்டி எடுக்கப்பட்ட, மண்டை ஓட்டையும், மத்திய ஆப்ரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட மண்டை ஓடுகளையும், ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த வேட்டைக்காரர்களின் மண்டை ஓடுகளையும், பஸிபிக் மா பெருங் கடலில் வெகு தொலைவிற்கு அப்பால் இருக்கும் தீவுகளிலிருந்து எடுத்துவந்த மண்டை ஓடுகளையும், கடைசித் தலைமுறை மக்களின் மண்டை ஓடுகளையும் அடுக்கடுக்காகக் கண்டேன். அந்த மண்டை ஓடுகளின் உள்ளே இருந்த சத்துப் பொருள்களிடையே எவ்வளவு வேறுபாடுகள் காணப்பட்டனவோ, அவ்வளவு வேறுபாடுகள் மண்டை ஓட்டுக்களிடையேயும் இருக்கப் பார்த்தேன். அப்பொழுது எனக்குத் தானே நான் சொல்லிக்கொண்டேன்: "அறிவு வளர்ச்சியின் விளைவேயல்லாமல், வேறொன்றில்லை" என்று. மரப்படகுக்கும்—நீராவிக் கப்பலுக்கும், கற்கருவிக்கும்—கனமான பீரங்கிக்கும்—மஞ்சள் மண் ஓவியத்திற்கும்—பல நிற வண்ண ஓவியத்திற்கும்—தப்பட்டைக்கும்—இற்றைக்கால யாழ்க் கருவிக்கும் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ, அவ்வளவு வேறுபாடுகளே அந்தத் தாழ்ந்த தர—உயர்ந்த தர மண்டை ஓட்டுகளுக்கிடையே இருந்தன.

இந்த மண்டை ஓட்டு வரிசையிலே முதலாவதும், மிகத் தாழ்ந்த தரத்தைச் சேர்ந்ததுமான மண்டையோடு, தத்தித்தத்தி நடந்த மனிதனின் அற்பசொற்ப மனிதவுணர்ச்சிகள் ஊசலாடிய ஒரு குகைபோல காணப்பட்டது; இறுதியானதும், மிக உயர்ந்த தரத்தைச் சேர்ந்ததுமான மண்டை ஓடு அன்பு-மகிழ்ச்சி-விடுதலை ஆகியவை தவழும் மாமன்றமாகவும் காணப்பட்டன.

இதெல்லாம் மூளையின் வலிவு—அறிவு வளர்ச்சியின் விளைவு!

விடுதலை வேட்கை யுணர்ச்சியிடம் நமது முன்னோர்களைவிட நாம் மிக மிக நெருக்கத்தில் நிற்கிறோமென்றால், சராசரி மனிதனைக்காட்டிலும் நிரம்பிய அறிவும், மூளை வலுவும் கொண்டிருக்கிறோம் என்பது பொருளாகும்.

இப்பொழுது நீங்கள் என்னோடு சேர்ந்து, நாணயமான முறையில் சிந்திக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நான் எதை நம்புகிறேனோ—நான் எதை நிலைநாட்ட விரும்புகிறேனோ, அதில் உங்களுக்கு வேறுபாடு உணர்ச்சி இருக்காது என்று கருதுகிறேன். நான் உங்களை நேர்மை யுணர்ச்சி கொண்டு சிந்திக்கச் சொல்கிறேன் — மத உணர்ச்சியை, மத சம்பந்தமான கருத்துக்களைச் சிறிதுநேரம் மறந்திடுங்கள். வெறும் ஆடவர்—பெண்டிர் என்ற உணர்ச்சியோடு சிறிது நேரமளவாவது நீங்கள் இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மனிதன் மரப்படகில் ஏறிக் கொண்டு, தப்பட்டையின் இசையை நுகர்ந்துகொண்டிருந்த காலத்தில், மன்னன் ஒருவனும்—மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக்கொள்ளுங்கள். மரப்படகைப் பற்றி அவர்கள் என்ன சொல்லியிருந்திருப்பார்கள்?—"மரத்தை உட்குடைந்து செய்யப்பட்ட அந்த மரப் படகைப்போல் வேறு படகு ஒன்றை மனிதனால் செய்யமுடியாது; மனிதனின் மிக உயர்ந்த தயாரிப்பு அதுதான்; ஊழிக் காற்றும், ஊழி வெள்ளமும் தோன்றிய காலத்தில் தோற்றமளித்த கடவுள் சொல்லித்தந்த அமைப்பே அதுதான்; எந்த ஒரு மனிதனாவது, அந்த மரப்படகைப் புதுப்பிக்க எண்ணி, அதில் பாய்மரம் ஒன்றைக் கட்டி, அதைக் கடலில் மிதக்கவிட்டு, அதில் ஏறிச் செல்லலாம் என்ற யோசனையைக்கூறினால், அவன் நம்பிக்கைத் துரோகி என்ற குற்றத்திற்கு உள்ளாவதோடு, உயிரோடு கம்பத்தில் கட்டிவைத்து எரிக்கப்படவேண்டியவனுமாவான்" என்று தானே சொல்லியிருந்திருப்பார்கள்! அப்படியானால், அதற்கு உங்களது தீர்ப்பு என்ன? நேர்மையான தீர்ப்புக்கு இடங்கொடுங்கள்! அவர்களின் கூற்றை நிலையானதெனக் கொண்டிருந்தால், உலகநாடுகளுக்கிடையே கடல் போக்குவரத்து ஏற்பட்டிருக்குமா?

மன்னன் ஒருவனும் — மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக் கொள்ளுங்கள்! மதக் குரு ஒருவன் அவசியம் இருந்திருப்பான் என்றே ஊகிக்கிறேன்; ஏனென்றால் அது அவ்வளவு அறியாமை நிரம்பிய காலம்! அந்த மன்னனும், மதக்குருவும், "மனிதனால் சிந்தித்துச் செய்யக்கூடிய இசைக் கருவிகளிலே, தப்பட்டைதான் மிக மிக உயர்ந்த இசைக் கருவியாகும்; ஆண்டவன் வாழும் மேல்உலகத்தில் இருப்போர், இதனுடைய இசையைத் தான் நுகர்ந்துகொண்டு இருக்கிறார்கள்; மேல் உலகத் தேவதை யொன்று, செஞ்ஞாயிற்றின் கதிர்களில் பட்டு மின்னிக்கொண்டிருக்கும் பஞ்சு போன்ற மேகத்தின் முனையில் உட்கார்ந்துகொண்டு, தப்பட்டையை அடித்துக்கொண்டிருக்க, அதன் இசையிலே, அந்தத் தேவதையே மெய்ம் மறந்துபோக, அதனால் தப்பட்டைத் தவறிக் கீழேவிழ, அப்படி விழுந்த தப்பட்டையே நமது கைக்கு வந்து சேர்ந்தது; அந்த இசைக் கருவியை மேலும் புதுப்பிக்கமுடியும் என்று சொல்வி யாராவது, அதன் முன்புறமாகப் பலகை ஒன்றை வைத்து, நான்கு நரம்புகளை மாட்டி, மரச்சக்கைத் துண்டு ஒன்றை அவற்றிற்கு முட்டுக்கொடுத்து, மயிரிழை

யால் இழுத்துக் கட்டப்பட்ட வில்லொன்றின்மூலம் அந்தக் கருவியை மீட்டி இனிய இசையைப் பிறப்பிக்கச் செய்யமுடியும் என்று கூறினால், அவன் மதவிரோதி என்ற குற்றத்திற்குள்ளாகிக் கொலைத் தண்டனையைப் பெறுவான்'' என்று சொல்லுவதாக வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது நான் உங்களைக் கேட்கிறேன் கூறுங்கள். இசையுலகில் அது எந்தவித நிலையை உண்டாக்கியிருக்கும்? அந்த ஆணைவழியே காலம் வளர்ந்து வந்திருக்குமானால், புகழ்பெற்ற இசை வல்லுநர் பலரின் அரிய இன்னிசையை மனித சமுதாயம் இதுகாலில் கேட்டிருக்கமுடியுமா? நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்!

மன்னன் ஒருவனும் — மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக் கொள்ளுங்கள்! அவர்கள், “கரடுமுரடான கழியினாலான கலப்பைபோன்றதொன்று, இனி யாராலும் கண்டுபிடிக்கமுடியாது; இந்தக் கலப்பையின் முதல் வடிவு, பக்திமானான உழவன் ஒருவனுக்கு, அவன் கனவில் ஆண்டவனால் கொண்டு வந்து கொடுக்கப்பட்டதாகும்; வைக்கோல் பிரியும் ஆண்டவன் கற்றுக் கொடுத்தவொரு அற்புதமாகும்; யாராவது ஒருவன் இந்தக் கலப்பையைப் புதுப்பிக்கமுடியும் என்று சொல்லி முன் வந்தால், அவன் ஒரு நாஸ்திகனாவான்'' என்று ஆணை பிறப்பிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆணை உழவுத் தொழில் விஞ்ஞானத்தில் என்னவித பலனைக் கொடுத்திருக்கமுடியும் என்பதை நீங்களே ஆராய்ந்து தீர்ப்புக் கூறுங்கள்!

## சாமி எங்கே?

**மகன்** :— (கோவிலில் சாமியைக் காட்டி) அம்மா! இங்கே கல் சிலைதானே இருக்கிறது. நாம் கேட்டதைக் கொடுக்கும் சாமி எங்கே?

**தாயார்** :— அந்த சிலைக்குள்ளே தாண்டா சாமி இருக்கிறார்.

**மகன்** :— ஐயயோ! சாமி மூச்சு முட்டி செத்துடுவாரே!

— அறிவுக்குஞ்சு.

“எங்களுடைய உற்றார் உறவினரான கிருத்தவர்களைக் கொல்லுவதற்கு, எங்களுக்கு நல்ல ஆயுதங்கள் தேவைப்படுகின்றன; நாங்கள் மிக நேர்த்தியான கலப்பைகள்—இனிய இசை—அழகிய ஓவியங்கள் ஆகியவற்றை விரும்புகிறோம்; யாரொருவன் எங்களுக்கு நல்ல ஆயுதங்களையும், நல்ல இசையையும், நல்ல துணிமணிகளையும், நல்ல வீடுகளையும் தருகிறானோ, அவனுக்கு நாங்கள் செல்வத்தை வாரி வழங்குவோம்— அவனுக்குப் பெருமையோடு முடிசூட்டுவோம்'' என்று நாளடைவில் மக்கள் கூறத் தொடங்கினார்கள்; மன்னனும், கூறத் தொடங்கினான்; மதக்குருவுங்கூடக் கூறத்தொடங்கினான்! பொருள்களைப் புதுப்பிக்க வேண்டும் என்ற விழைவு ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்பட்டது. கற்கருவி கனமான பீரங்கியாக மாறுவதற்கும், மரப்படகு நீராவிக் கப்பலாக வளர்வதற்கும், மண்

கோடுகள் வண்ண ஓவியமாகத் திருந்துவதற்கும், அதுதான் காரணம். கரடுமுரடாக உடைந்துகிடந்த கற்கள், புகழத்தக்க சிலைகளாக மாறியதற்கும் அதுதான் காரணம்.

மரப்படகில் ஏறியவனுக்கும், தப்பட்டையின் இசையைக் கேட்டு மகிழ்ந்தவனுக்கும், கரடுமுரடான கழியினாலான கலப்பையைக் கொண்டு உழுது பயிரிட்டவனுக்கும் சொந்தத்தில் தனித்தனி மதக் கருத்துக்கள் இருந்தன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. மரப்படகில் ஏறிக் காலங்கழித்தவன், பழைமைக் கருத்திலேயே மூழ்கிக்கிடந்தான். ஆகையால் அவன் ஐயப்பாடுகளால் அவதியுறவில்லை. அவன் அமைதியான வாழ்க்கை அமைப்போடு, அமைதியாகவே வாழ்ந்து மடிந்தான். அவன் நரகத்தை நம்பினான். உண்மைக் கருத்துக்களை ஒட்டி தம்முடைய உள்ளத்தில் எழுந்த ஐயப்பாடுகளைத் தெரிவித்த குற்றத்திற்காகச் சிலர் நெருப்பில் வாட்டி வதைக்கப்படுவதையும், சுட்டெரிக்கப்படுவதையும் கண்டு அஞ்சிய அவன், ஐயப்பாடு ஏதும் கொள்ளாமல், மேல்உலகத்தில் வாழ்வதையே சிறப்பாகக் கருதினான் போலும்!

இப்படிப்பட்ட மனிதனின் பரம்பரையில் தோன்றியவர்கள் ஏராளமானவர்கள் என்னும்போது, வருத்தமும், வாட்டமும்தான் ஏற்படுகின்றன. அறிவுடையவர்களைக் காட்டிலும், அறிவில்லாதவர்களின் எண்ணிக்கை இயற்கையிலேயே பெருகிக்கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்காததொரு நிகழ்ச்சியாகும். மரப்படகில் ஏறி உலாவிய மனிதன், தானே ஒரு பேயைக் கற்பித்துக் கொண்டு அதனை நம்பி வந்தான். அவனுடைய பேய், மாட்டைப்போல் இரட்டைக் குளம்புடையதாய், ஒரு வாலுடையதாய், கொடிய கூர்மையான ஈட்டியை ஏந்தியதாய், கந்தக ஆவியை மூச்சாக விடுவதாய் நம்பப்பட்டது. பேய் கிட்டத்தட்ட கடவுளுக்குச் சமமான நிலையையுடையதாகவே கருதப்பட்டது; கடவுளைப் போல் அமைப்பில் அவ்வளவு பெரிதாகக் கருதப்படாவிட்டாலும், அறிவில் சற்றுப் பெரிதாகவே கருதப்பட்டது. சென்ற ஆயிரம் ஆண்டு காலமாக இந்தப் பேயின் வளர்ச்சியில் குறிப்பிட்ட மாறுதல் ஏதேனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மரப்படகில் காலந்தள்ளிய மனிதன், கடவுளை ஒரு கொடுங்கோலன் என்றே நம்பினான். அவனவன் அவனவனுடைய உயர்ந்தகொள்கைகளுக்கேற்ப வாழ்ந்தால், கடவுள் அத்தகையோரைத் தண்டிப்பான் என்று நம்பினான். மேலும் அவன் உலகம் தட்டையானதென்றே நம்பினான். நரகத்தில் நெருப்பில் போட்டு எரிப்பதும், கந்தகக்குழம்பில் போட்டுக் கொதிக்கவைப்பதும் உண்மை என்றே அவன் நம்பினான். அவன் அவனுக்கேற்றபடி அரசியல் கொள்கையையும் கொண்டிருந்தான். “வல்லான் வகுத்ததே வாய்க்கால்” என்றபடி “வல்லமை வகுப்பதே நியாயம்” என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தான். அந்தக் கோட்பாட்டை மாற்றி “நியாயம் வகுப்பதே வல்லமை” என்று ஏற்படுத்த ஆயிரம் ஆண்டுகளுக்குமேலாயிற்று என்னலாம்.

நான் கேட்க விரும்புவதெல்லாம் மனிதனின் இசைக் கருவியை மாற்றம் செய்வதற்கு எவ்வளவு வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட்டனவோ, அவ்வளவு வாய்ப்பும் வசதியும் அவனுடைய கொள்கையை வளர்ச்சியுறச் செய்வதற்கு ஏன் அளிக்கப் படக்கூடாது என்பதுதான்; மனிதனுடைய மரப்படகை வளர்ச்சியுறச் செய்ய எவ்வளவு வாய்ப்பு அளிக்கப்பட்டதோ, அவ்வளவு ஏன் அவனுடைய அரசியல் கொள்கையை வளர்ச்சியுறச் செய்வதற்கு அளிக்கப்படக்கூடாது என்பதேயாகும். அவ்வளவுதான் நாம் வேண்டுவது! ஒவ்வொரு துறையிலும் மனித உணர்வு வளர அதே உரிமை அளிக்கப்படவேண்டும் என்பதே என் கோரிக்கை. அந்த ஒரு குற்றத்தைத் தான் நான் செய்கிறேன்! நாம் சிந்திப்போம்—என்றுதான் நான் கூற விரும்புகிறேன்! நம்மில் ஒவ்வொருவரும் அவரவரது கருத்தை வெளியிடுவோம். நாம் கண்டுபிடிப்பவர்களாக மாறுவோம்—பின்பற்றுபவர்களாகவோ, தொத்திக்கொண்டு நிற்பவர்களாகவோ, தாவிக்கொண்டிருப்பவர்களாகவோ நாம் ஒருபொழுதும் இருக்கவேண்டியதில்லை! மேல்உலகத்தில், எல்லையறு பரம்பொருளாக ஒருவன் இருப்பானேயானால், அவன் கோழைகளினுடையவும், ஏமாற்றுக்காரர்களினுடையவுமான வழிபாட்டை ஏற்றுக்கொண்டு, ஒரு நாளும் மனக்களிப்பு அடையமாட்டான்! நாணயமான நம்பிக்கையின்மை—நாணயமான மத மாறுபாடு—நாணயமான நாஸ்திகம் ஆகிய இவைகள், பக்தியின்பேரால் செய்யப்படும் வெளிவேட ஏமாற்றுத்தனத்தால் வீசப்படும் தீ நாற்றத்தை எங்கும் எப்பொழுதும் போக்கும் நன் மணமாகத்தான் கமழும்—'மேல் உலகில்'கூட அப்படியேதான் கமழ்ந்திருக்கும்!

என்னுடைய கோட்பாடு இது தான் — "நீங்கள் கோருகிற ஒவ்வொரு உரிமையையும் மற்றவர்க்கும் கொடுங்கள். இயற்கையின் ஆற்றல்கள் நன்கு ஆட்சி செய்யும்படி உங்கள் உள்ளத்தைத் திறந்து வையுங்கள். அன்புள்ளத்தோடு புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள். நாம் அனைவரும் முன்னேறுவோம்."

மதவாதி தன்னுடைய உணர்வு என்னும் கப்பலை, வெய்யலில் காய்ந்து கருகும்படி, வைதிகம் என்ற துறைமுகத்திலே நிறுத்தி வைத்திருக்கிறான். அவன் தன்னுடைய கப்பலிலுள்ள பழைய எண்ணங்கள் என்ற பாய்கள், பழைய கோட்பாடுகள் என்ற கம்பங்களிலே உராய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்கிறான். கப்பலிலுள்ள கீல்களும், பக்கப்படுதாக்களும் எப்பொழுதும் திறந்துகிடந்து வெய்யலில் உலருவதையே அவன் பெரிதும் விரும்புகிறான். "என்னுடைய எண்ணங்களைக் கலைக்காதீர்கள். என்னுடைய உள்ளத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவராதீர்கள். என்னுடைய உள்ளத்தை நான் வரையறுத்து வைத்துக்கொண்டுவிட்டேன். நம்பிக்கையற்ற தன்மையை ஏற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. என்னை முற்போக்கில் தள்ளாதீர்கள். என்னைப் பிற்போக்கிலேயே போகவிடுங்கள்" என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொள்வதை அவன் பேரின்பமாகக் கருதுகிறான்!

(தொடரும்)

# ★ எமிலி ஜோலா ★

சென்ற நூற்றாண்டில் ஃபிரான்சு நாட்டிலே தோன்றிய புதுமை இலக்கிய கர்த்தாக்களில் குறிப்பிடத்தக்கவர் அறிஞர் எமிலிஜோலா. இவர் 1840-ம் ஆண்டில், ஃபிரான்சிலே ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார்.

ஜோலா ஃபிரான்சு இலக்கியமன்றத்தாரால் ஏளனம் செய்யப்பட்டார். பிரபுக்களால் வெறுக்கப்பட்டார். புத்தகம் வெளியிடுவோரால் புறக்கணிக்கப்பட்டார். காரணம், மற்ற எழுத்தாளர்கள் மேட்டுக் குடியினர்க்குச் சேவை செய்தனர். அரண்மனைக்கு ஆலாத்தி எடுத்தனர். மதவாதிகள் முன்பு மண்டியிட்டனர். அறிஞர் ஜோலாவோ மக்களுக்காக—கொடுமை படுத்தப்பட்ட மக்களுக்காக—எழுதினார்.

சாதாரண குடும்பத்தினரின் வாழ்க்கை நிலையைக் கலையழகோடு இவர் சித்திரித்தார். 1871-ம் ஆண்டு தொடங்கி, சுமார் 30 ஆண்டுகளில் 20 புதினங்கள் வெளியிட்டார். அத்தனையும் வாழ்க்கையில் நடைபெறும் பித்தலாட்டம், கொடுமை, ஒழுக்கவீனம், மோசடி ஆகியவற்றை எழுச்சிதரும் வகையில் எடுத்துக்காட்டின. கசப்பான உண்மைகளே இவர் நூல்களுக்கு அடித்தளமாயின.

இவர் எழுதிய புதினங்களில் "லா பெட்டேஃகுமன்னே" என்பது புகைவண்டிகளைப் பற்றியது, "ஜேர்மினல்" சுரங்கங்களின் இருண்ட வாழ்வைப் படம் பிடித்துப் பெரும் முதலாளிகளின் சுரண்டல்களை வெட்டவெளிச்சமாக்குவது. "வார் ஜெந்த்" தொழிலாள அரசாங்கம், பிரபுக்களாலும், முதலாளிகளாலும் எதிர்க்கப்பட்ட 1870-ம் ஆண்டைப் பற்றியது. "வீழ்ச்சி" உயர்ந்த இலக்கியப் புதினங்களில் ஒன்று, "லுவார்ட்ஸ்" மதத்தின் மூட நம்பிக்கைகளை முறியடிப்பது.

1880-ல் வெளிவந்த, "நானா" உலகப் புகழ்பெற்ற புதினம். அக்கதைக்குரிய அடிப்படைச்சம்பவம் மிகப் பரிதாபகரமானது.

ஒரு நாள், ஜோலாவும், அவர் நண்பன், ஓவியன் பால்செசானேயும், ஒரு எளிய சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். தெருவில் திடீரென்று பெண்களின் கூக்குரல் கேட்டது. விபசார விடுதிகளில்புகுந்து போலீசார் பெண்களை விரட்டிப் பிடித்தனர். தப்பிச் சிதறியோடினர் அபலைகள். ஓடிவந்த ஒரு இளமங்கை, சிற்றுண்டிச்சாலையில் புகுந்து மறைந்துநின்றாள். அவளைப் பார்த்ததும் ஜோலாவின் மனம் இளகிற்று. துரத்திவந்த போலீஸ்காரனிடம், "இவள் என் நண்பர் குழுவில் ஒருத்தி" என்று சொல்லி அவளை மீட்டார்.

அவள் நல்ல அழகி. வறுமையால் வதைபட்டாலும், அழகின் சாயல் மங்கவில்லை. தொழில் அவளை முற்றும் சிதைக்கவில்லை. ஜோலா அவளுக்குச் சிற்றுண்டி யளித்தார் ஓவியன் பால்செசானே அவள் உருவத்தை வரைய விரும்பினான். ஜோலா அவளது வரலாற்றைக்

கேட்க விரும்பினார். கிராமத்தில் பிறந்து, வயிறுவளர்க்க நகரத்திற்கு வந்து சீரழிந்த வரலாற்றைச் செப்பினாள் அவ்வனிதை. அவள் வீட்டிற்குச் சென்றனர். அவள் நிலையைக் கண்டு வருந்தினர், அவள் பெயர் நானா. அவள் வரலாறே "நானா" என்ற புதினமாகப் பொங்கிவந்தது! அந்தப் புத்தகம் பாரிஸ் நகரையே கலக்கிவிட்டது எனலாம்.

1895-ல் டிரைபஸ் என்ற ராணுவ வீரன், இராணுவ மன்றத்தாரால் 'இரகசியத்தை வெளியிட்ட துரோகி' என்று தண்டிக்கப்பட்டான். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அந்தமான் போன்ற டெவில்ஸ் தீவுக்கு அனுப்பப்பட்டான். உண்மையில் துரோகி அவனல்ல. துரோகம் செய்த எஸ்டர்ஃகேசியும், வழக்கறிஞன் டார்டுவும் அந்த அப்பாவியின்மேல் பக்குவமாகக் குற்றம் சுமத்திவிட்டனர். தீவில் வாடி வதங்கிக் கதறினான் டிரைபஸ்; பதறினார்கள் அவனது நண்பர்கள். ஏனென்று கேட்பார் யாருமில்லை ஃபிரான்சு நாடு மௌனம் சாதித்தது. அந்நிலையிலே "டிரைபஸ் குற்றமற்றவன். அவனைத் தண்டித்தது தவறு!" என்றார் ஏழை பங்காளர் எமிலி ஜோலா.

"அநீதிக்கு இடமளிக்கமுடியாது. மறு விசாரணை வேண்டும்" என்று தக்க ஆதாரங்களோடு "ஓரோரி" பத்திரிகையில் வேகமாக எழுதத் தொடங்கினார். பத்திரிகை வாசலிலே கூட்டத்தைச் சேர்த்து முழக்கமிட்டார் அவரது ஆணித்தரமான வாதம், அதிகார வர்க்கத்தைக் கலக்கிற்று. சீறிப் பாய்ந்தனர். கூலியாட்களை யமர்த்தி "ஜோலா வீழ்க" என்று கூவச் செய்தனர். காலித்தனமாகத் தாக்கப்பட்டார். கைது செய்யப்பட்டார்! ஜோலாவின்மேல் வழக்கு நடந்தது. லபோரி என்ற வழக்கறிஞர் அவர் பக்கம் வாதித்தார். ஜோலா ஓராண்டு சிறைத் தண்டனையும், மூவாயிரம் பிராங்கு அபராதமும் விதிக்கப்பட்டார்.

"என் புகழ் மங்கிப்போகலாம். ஆனால் டிரைபஸ் குற்றமற்றவன்" ஜோலாவின் முழக்கம் இது. அவர் புகழ் மங்கவில்லை. புத்தொளி பரப்பிக் கிளம்பிற்று பாரெங்கும். டிரைபசும் பின்னர் விடுதலை பெற்றான். மேற்பதவியும் பெற்றான்.

அறிஞர் ஜோலா, மனைவி மக்களைப் பிரிந்து சிறையில்வாட நேர்ந்தது, ஊர்விட்டு ஓட நேர்ந்தது. எனினும் தன் இலட்சியத்தை விடவில்லை. சமூகப் புரட்சிக்கான கருத்துக்களை கட்டுரைகளாகவும், கதைகளாகவும் அஞ்சாமல் தீட்டினார். அவை புயல் வேகத்தில் பரவின நாடெங்கும்.

இலக்கியத்தில், ஜோலா அவருடைய நூல்களின் அளவினால் மதிப்பெய்தவில்லை. உழைப்பின்—கருத்தின்—தகுதியினாலேயே அறிஞர் நிலைக்கு உயர்ந்தார். இவருடைய வாழ்வு ஏமாற்றம் நிறைந்ததாக இருந்தது. ஃபிரஞ்சு இலக்கியமன்றம் இவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க மறுத்தது. ஆனால் உலக இலக்கிய ஆசிரியரில் ஒருவராக இடம் பெற்றார் அறிஞர் எமிலி ஜோலா. 1902 செப்டம்பரில் இவர் இறந்தார். இவரது கல்லறையருகே நின்று புலம்பினார் ஃபிரஞ்சுப் பெருங் கவிஞர் அனதேல் பிரான்சு. அறிஞர் எமிலி ஜோலாவின் புகழ் வாழ்க!

★★

# கருத்துரை

## கள்ளமார்க்கெட் மோகினி.

(ஆசிரியர்: "பீவியார்" வெளியிட்டோர்: கலைச் செல்வ நிலையம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2)

திருக்குறளின் கருத்துக்களைப் பரப்பும் வகையில் எழுதப்பட்ட புதுமை நாடகம். பேச்சு நடையில் தீஞ்சுவையும், அனுபவ அறிவும் மின்னுகின்றன. அறிஞர். அண்ணாத்துரையின் அணிந்துரை ஆசிரியரின் தகுதியை உணர்த்துகிறது படித்துச் சுவைக்கவேண்டிய புத்தகம்.

பக்கம் 52. விலை 0—8—0

* * *

## அழகுப் பேய்.

(ஆசிரியர்: தே டேவிட் இங்கர்சால். வெளியிட்டோர்: மதிவளர் மன்றம். சோழவரம், ரெட்ஃகில்ஸ், சென்னை)

அழகான பெண்ணிடம் அகம்பாவம் குடியேறி விளைத்த தீமைகளை விளக்கும் கதை. இளம் எழுத்தாளரின் கன்னி முயற்சி.

பக்கம் 32. விலை 0—4—0

* * *

## வெற்றிச் சின்னம்.

(ஆசிரியர்: தி. ரா. தருமராசன். வெளியிட்டோர்; அறிவாலயம். பெங்களூர் 2.)

இந்திய துணைக்கண்டம் குடியரசு பெற்றதன் நினைவாக எழுந்த, ஒரு அரசியல் கருத்தோட்டம்.

பக்கம் 16. விலை 0—2—0

* * *

## குற்றவாளி யார்?

(ஆசிரியர்: கலைப்பித்தன். வெளியிட்டோர்; புதுமை மன்றம், சத்திய மங்கலம், கோவை.)

ஒரு ஏழைப் பாட்டாளியின் பரிதாபக் கதை.

பக்கம் 12. விலை 0—2—0

## ஆசிரியர் வேலாயுதம் பேசுகிறர்.

(ஆசிரியர்: "புதுவை வாணன்" வெளியிட்டோர்; குமரன் கழகம், பண்ணுருட்டி, தெ. ஆ. மாவட்டம்.)

அண்மையில் உடையார்பாளையத்தில் கொலையுண்ட சீர்திருத்தச் செம்மல், ஆசிரியர் வேலாயுதம், சொற்பொழிவுகளிலே தமது கருத்தை எங்ஙனம் விளக்கினர் என்பதை விளக்குகிறது இச்சிறு நூல்.

பக்கம் 12. விலை 0—2—6

* * *

## போடாதே கதர்ச் சட்டையை.

(ஆசிரியரும், வெளியிட்டோரும்: ஷையாரே)

கதர்ச்சட்டை போட்டுக்கொண்டு சுயநல வாழ்வு தேடும் கும்பலுக்கோர் சாட்டை. எழுத்துப்பிழை அதிகம்.

பக்கம் 16. விலை 0—4—0

* * *

## திராவிடத் தென்றல்.

(ஆசிரியர் அ. ச. பாலு. ஆராய்ச்சிப் பதிப்பகம், பொள்ளாச்சி)

திராவிட நாட்டுப் பிரிவினைக்கும், முன்னேற்றத்திற்கும் பணியாற்றத் துவங்கியுள்ள திங்கள் இதழ்.

பக்கம் 32. விலை 0—2—0


* * *

## "தீ" பொங்கல் மலர்.

(ஆசிரியர்: பத்மன் — செல்லப்பன், 132, பிராட்வே, சென்னை—1)

திராவிட இலட்சியத்தின்பகையை எரிக்கும் வாரப்பதிப்பின் பொங்கல் மலர். காலம் தாழ்த்தி வந்துள்ளதெனினும், கட்டுரை, கதை, கவிதை யாவும் கருத்துக்கு அரிய விருந்து.

விலை 0—6—0



# ஜெயா வாட்சு கம்பெனி

முதல் அக்ரகாரம் :: சேலம்.

கேரண்டியாய்

## குறித்த நோக்கில் குறைந்த செலவில்

ரிப்பேர் செய்து தரப்படும்.

---

## இளமையில் இழந்த சக்தியை மீண்டும் பெற

# மகா தாதுபுஷ்டி ஸ்தம்பன சூரணம்.

இந்த சூரணத்தை காலை மாலை திரிகடி பிரமாணம் அதாவது மூன்று விரலால் ஒரு பிடி பவுடரை எடுத்து, கால் ஆழாக்கு காய்ச்சின பாலில் போதுமான சர்க்கரை சேர்த்து, நன்றாய்க் கலக்கி சாப்பிட்டுவர, தண்ணீர்போல் நீர்த்துப்போன இந்திரியத்தை பிசின் போல் கெட்டிப்படுத்தி தளர்ந்துபோன நாடிநரம்புகளுக்கும் முறுக்கேற்றி, துவண்டுபோன தண்டுக்கு வலுவை அதிகப்படுத்தி, கோரத்தைப் பூரிக்கச்செய்து சுகபோகங்களை—நீடித்த நேரம் வரை அனுபவிக்கச் செய்யும் அருமையான சூரணம். அநேக அற்புதமான மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. குணமில்லையேல் பணம் வாபீஸ்.

**48 நாள் உபயோகிக்கக்கூடிய 5 பலம் டின் 1-க்கு விலை ரூ 5—0—0**

**S. V. R. கண்டர் R. I. M. P, இராஜஸ்ரீ எண்ணை டிப்போ,**

அரிசிப்பாளையம் :: சேலம்.

---

பேப்பர்கள், அட்டைகள், கலர் போர்டுகள்,
அழைப்பிதழ்கள், அச்சுக்கூட மை ரகங்கள்,
புதுமையான ஸ்டேஷனரி சாமான்கள்


எங்களிடம் கிடைக்கும்.

★

# சோமாஸ்கந்தர் பேப்பர் மார்ட்,

முதல் அக்ரகாரம் :: சேலம்.

# நீங்கள் படித்துவிட்டீர்களா?




கொடுங்கோலனைப் பழி வாங்கிய தமிழச்சியின்

**வீர நாடகம்!**

வாலிபன் தூய்மை பெண்மையிழந்தவளின் உள்ளமை

கலந்தது

**விலை 0-8-0**


—விலைத் தொகையனுப்பிப் புத்தகம் பெறலாம்.
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்,**

கொண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

Edited, Printed & Published by, P. KANNAN, at Senthamizh Printing Works, [illegible] Salem Dt. (S. India.)

# பகுத்தறிவு





அறிஞர் ரூஸ்சோ.

கர-சித்திரை. 14-4-1951. அணு 2

# இடுமருந்தின் துன்பம்.

சகோதர சகோதரிகளே !

உங்களில் அநேகர் ஆண்கள் பெண்களுக்கும், பெண்கள் ஆண்களுக்கும் மருந்திட்டு வசியம் செய்வதால் வயிற்றுக் கோளாறு, கை கால் அசரிக்கை, தலை கிருகிருப்பு, நாவரட்சி, மந்தம், புளிச்ச ஏப்பம், வீக்கம், ஞாபகமறதி, புத்தி மாராட்டம், வயிற்றுவலி, வயிற்று எரிச்சல், திரேகம் பெருத்தல், திரேக இளைப்பு, வயிறு பெருத்தல், வாந்திபேதி, ரத்தத்துடன் வாந்தி, ரத்தத்துடன் பேதி, கண்ணெரிச்சல், அதிக மூத்திரம் போதல், மலச்சிக்கல், முதலிய நோய்கள் உண்டாகின்றன. சுகம் பெற விரும்புவோர் எமது வைத்தியசாலையை நாடுங்கள். அரைமணி நேரத்தில், இன்னபொருளுடன் மருந்து வைக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக எடுத்துக்காட்டப்படும். மற்றும் மேகம், பவுத்திரம், கண்டமாலை, கன்னப்புத்து, யோனிப்புத்து, நாபுத்து, அரையாப்பு, துடைவாழை முதலிய ரண வியாதிகளையும் ஆபரேஷன் இல்லாமலேயே குறித்த காலத்தில் குணமாக்கப்படும்.

டாக்டர் A. V. ராஜன்,

Regd. Medical Practitioner, Stomach Specialist.

சத்தியாஞ்சன வைத்தியசாலை,

குண்டு போடுமிடம் :: கோட்டை, சேலம்.

---

இளமையில் இழந்த சக்தியை
மீண்டும் பெற

மகா தாதுபுஷ்டி

## ஸ்தம்பன சூரணம்.

நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, துவண்டுபோன தண்டுக்கு வலு ஊட்டி, நீடித்த நேரம் சுகபோகத்தை அனுபவிக்கச் செய்யும் அற்புத சூரணம். குணமில்லையேல் பணம் வாபஸ்.

உபயோகிக்கும் முறை மருந்துடன்.

8 நாளைக்குரிய 5 பலம் டின் 1க்கு

விலை ரூ. 5—0—0

★

S.V.R. கண்டர், R.I.M.P.,

இராஜாளி எண்ணை டிப்போ,

அரிசிப்பாளையம், :: சேலம்.

---

"பகுத்தறிவு" விற்பனையாளர்.

சிங்கப்பூரில் :

எஸ். முத்துசாமி,
509, ஹாவ்லக் ரோட், சிங்கப்பூர் 3.

கொழும்பில் :

நவலட்சுமி புக்ஸ்டால்,
தபாற்பெட்டி எண் 442, கொழும்பு.

யாழ்ப்பாணத்தில் :

ஜி. இராமசாமி,
தமிழ்ப் பண்ணை, யாழ்ப்பாணம்.

பம்பாயில் :

ஏ. என். வேலன்,
8, S M. சால், தாராவி, பம்பாய் 17.

---

கோடைகாலத்திற்கேற்ற குளிர்ந்த பழரச பானங்களும், ஐஸ்கிரீம், புரூட்சாலட், பழரசத்தால் தயாரிக்கப்பட்ட ஓரேட்டோ ஸ்பெஷல்.

கிடைக்குமிடம் : K. M. T. அரசு,

தேர்நிலையம் & அம்பிகா டாக்கீஸ், சேலம்.

வந்துவிட்டது! :: ::
:: :: வந்துவிட்டது!

# பைங்கிளி

ப. க. குஞ்சிதம்
எழுதியது

★

சிறுவர் சிறுமியர்க்குப் புத்துணர்வு தரும் ஓர் அன்புச் சிறுமியின் அறிவுக் கதை.
அழகான புத்தகம்.

விலை 0—2—0 தான்!

●

வியாபாரிகளுக்குக்
கழிவு 25 %

தமிழ்நாடு முழுமையும், சிலோன், சிங்கப்பூர், பம்பாய், முதலிய இடங்களி லுள்ள முக்கியமான பத்திரிகை, புத்தக விற்பனையாளரிடமும் கிடைக்கும்.

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

பகுத்தறிவு

ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982. திங்கள் 4

| மலர் 1 | கர-சித்திரை | இதழ் 4 |
|---|---|---|

## பொருளடக்கம்.

புரட்சிக் கவி ... 2
பாவலர். வேலாயுதசாமி
கலாச்சாரமும் பண்பாடும் ... 3
நடப்பும் கருத்தும் ... 5
மக்கள் கவிஞருக்கு மணிவிழா ... 7
நன்னியூர்-நாவரசன்
அன்பர்கள் சிந்தனைக்கு ... 8
மதமும் விஞ்ஞானமும் ... 9
சி. எல். டி. அவாயின்
இந்தியாவில் பகுத்தறிவு இயக்கம்... 14
ஆர். மகமத்
பொன்மொழிகள் ... 16
அவன் செயல் (சிறு கதை) ... 17
ப. க. குஞ்சிதம்.
வாழமுடியுமா? ... 22
உறுதி மேற்கொள்வதென்றோ? ... 23
பெரியகுளம் சுப்பராயலு
சமுதாய விடுதலை (இங்கர்சால்)
மொழி பெயர்ப்பு:
இரா. நெடுஞ்செழியன் M.A.,
அறிஞர். ஞஃசோ (வரலாறு) ... 29
கருத்துரை ... 32

★

# புரட்சிக் கவி!

[பாவலர். வேலாயுதசாமி]

(1) புவியெல்லாம் நகையாடத் தமிழர்மனம் புண்ணாகப்
பொய்யான கற்பனையாய்க் கம்பன்கவி புனைந்துவிட்டான்
செவிகொள்ளும் செல்வமதோ? மக்கள்தமைப் பக்தியெனும்
சேற்றினிலே ஆழ்த்திவிட்டான் சேக்கிழார் எனும்புலவன்
குவியல்போல் நல்லவழி கூறிவைத்தா னென்றாலும்
கொடுஞ்சாதி வெறிதன்னைப் பாரதிகைக் கொண்டிருந்தான்
கவியெல்லாம் கவியாமோ புத்துணர்ச்சி தரும்புரட்சிக்
கவியல்லால் மற்றதெல்லாம் கிளைதாவும் கவிதானே!

(2) பெருத்ததொகை எனக்கவிஆ யிரக்கணக்கில் பாடிடுவார்
பேசிடிலோ பயன்சிறிதும் மருந்துக்கும் காணாது.
பொருத்தமொடு வருணனைகள் மோனைஎதுகைத் தளைகள்
பூட்டிடுவார், பொருள்முருக்கம் பூமணமாய்த் தானிருக்கும்
திருத்தமொடு தமிழ்மாந்தர் நல்வாழ்வுப் புத்துலகம்
சென்றடைய முன்னேற்றப் பாதைதனைச் செப்பனிட்டுக்
கருத்தினிலே தெளிவுபடக் காட்டிடுமாக்கவி இந்தக்
காலமதற் கேற்றசுவைக் கவிபுரட்சிக் கவிதானே!

(3) மக்களுக்கு வாழவழி காட்டாமல் வாயினிலே
வந்ததையும் போனதையும் கவிபாடிச் சென்றவர்க்கு
மிக்கவிழா வாற்றுகிறார் நினைவு நெடுஞ்சின்னமதும்
வெட்கமின்றி நிறுவுகிறார் புதுமையென்ன கண்டனரோ?
சிக்கலின்றித்தன் கருத்தைச் சீர்திருத்தத் துணிவுடனே
தித்திக்கும் செந்தமிழிற்சொல் புரட்சிக் கவியினுக்குத்
தக்கதுவே இந்தமணி விழாவென்வே தமிழ்நாட்டின்
சார்பாகச் சாற்றுகிறேன் தன்மான வுரிமையினால்.

# கலாச்சாரமும்-பண்பாடும்.

"இந்திய கலாச்சாரத்திற்குப் புத்துயிரூட்டுங்கள். பழங் காலப் பண்பாட்டைக் காப்பாற்றுங்கள்" என்று அண்மையில் சில தலைவர்கள், பல இடங்களிலே குரல் எழுப்பியுள்ளனர். கலை, ஆச்சாரம், என்ற சொற்களின் மறைவில், அவர்கள் வெளியிடும் கருத்துக்கள், நம்மை திகைக்கவைக்கின்றன. அறிவும், விஞ்ஞானமும், உரிமை வேட்கையும் தலை தூக்கியுள்ள இவ்விருபதாம் நூற்றாண்டிலே, மக்களை வேத ரிஷிகள் காலத்திற்கு இழுக்கமுயல்கின்றனர்.

உலகப் போக்கும், மற்ற நாடுகளின் முன்னேற்றமும், நமது அறிவுக் கண்களைத் திறக்கவேண்டும். நாட்டிலே துளிர்க்கும் முற்போக்கு சக்தியைக்கண்டு மிரண்டு, கலாச்சாரத்தைக் காட்டி அதனை அழிக்க முயல்வதும், பழங்காலக் காட்டுமிராண்டித்தனங்களைப் 'பண்பாடு' என்று சொல்லிக் காப்பாற்ற முயல்வதும், காலத்திற்கு ஒவ்வாத வீண்வேலை.

அண்மையில் சென்னைக்கு வந்திருந்த "ஜனாதிபதி" இராசேந்திரப் பிரசாத், மயிலாப்பூர் சமஸ்கிருதக் கல்லூரியில், குப்புசாமி சாஸ்திரியார் ஆராய்ச்சிக் கழகத்தில், வேங்கட்ராம சாஸ்திரியாரால் கொடுக்கப்பட்ட, சீனிவாச சாஸ்திரியார் படத்தைத் திறந்துவைத்தார். அப்போது கூறியுள்ளார்; "இந்தியாவின் கலாச்சாரத்திற்குப் புத்துயிரூட்டுவதே நாம் செய்யவேண்டிய வேலை. இதைவிடப் பெரிய காரியம் கிடையாது" என்று. இத்தோடுவிடவில்லை. "மேலை நாடுகளின் பகட்டுகளில் நாம் மயங்கிவிடக்கூடாது. நம் பண்டைய கலாச்சாரத்திற்கு மதிப்பு வைக்கவேண்டும். நம் கலாச்சாரத்தில் நாம் வேரூன்றவேண்டும். சமஸ்கிருதம் படிப்பது கலாச்சாரத்தைக் கற்பதாகும்" என்று திருவாய் மலர்த்தியுள்ளார்.

இதனைப் பார்க்கும்பொழுது "கலாச்சாரம்" என்பதே ஒரு பித்தலாட்டம். மனிதனை மனிதன் அடித்துத்தின்னுதற்குப் பின்னப்பட்ட ஒரு மாயவலை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

சமஸ்கிருதம் கற்பது, கலாசாரத்தைக் கற்பதாகுமாம். எனவே சமஸ்கிருத நூல்களே இந்திய கலாச்சாரத்தின் பிறப்பிடமாகும். ஆகவே வேதங்களும், மநு, யாக்ஞவல்கியம், பாராசரம் ஆகிய ஸ்மிருதிகளும், இவற்றினின்றும் தோன்றிய புராணம், இதிகாசம், வருணாச்சிரமம், சாதி, கோயில், குளம், தானம், தருமம், மோட்சம், நரகம், புரோ

கிதம், பூசாரித்தனம் யாவும் இந்திய கலாச்சாரத்தின் பிரிவுகளாகும். இவற்றைக் காப்பதும், புத்துயிரூட்டுவதும் தவிர, வேறு பெரிய காரியமில்லையாம்! இந்தியாவின் "ஜனாதிபதி" கூறுகிறார்! சாஸ்திரிகள் மகிழலாம். நாம் மிகவருந்துகிறோம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது தமிழன் பண்பாடு என்றால், "முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர்" என்கிறது சமஸ்கிருதப்பண்பாடு. "கற்புக்கு ஒரு கண்ணகி" என்றால், "பதிவிரதை துரோபதையைப் பார்" என்கிறது சமஸ்கிருதப் பண்பாடு. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்றால், "பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களைப் பிரம்மனே படைத்தான்" என்கிறது சமஸ்கிருதப் பண்பாடு.எங்கே ஒருமித்த இந்திய கலாச்சாரம்?

இவை போன்ற முரண்பாடுகளைப்பற்றிச் சிந்திக்காமலும், மக்களின் இன்றைய மனப்போக்கையும், விழிப்பையும் பொருட்படுத்தாமலும், இந்தியக் கலாச்சாரம், பண்பாடு, சமஸ்கிருதம் என்று பிதற்றுவது, நாட்டிலே மொழிப் போருக்கும், இனப் போருக்கும் வித்திடுவதுபோலாகும்.

கலாச்சாரமோ, பண்பாடோ நாட்டிலுள்ள மக்கள் அனைவர்க்கும் பயன்படுவதாகவும், பொதுவாகவும், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை கண்ணியப்படுத்துவதாகவும், அறிவுக்குப் பொருத்தமாகவும் இருந்தாலொழிய, இனி மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. பழமையைப்பாதுகாத்தல்,இனி எவராலும்முடியாத ஒன்று. எனவேதான், பண்டிதஜவகர்லால் கேட்கிறார், "நமது பண்பாடு, பண்பாடு என்று பெருமையடித்துக் கொள்கிறோம். ஆனால் நமது தினசரி வாழ்க்கையில் பண்பாடு இருக்குமிடம் தெரியவில்லை. நமது உள்ளத்தில் தோன்றும் கருத்துக்கள் எத்தகையனவென்பதறியாமல், பண்பாட்டைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. இன்றைய பிரச்னைகளில் கவனம் செலுத்துகிறோமா, அல்லது செத்துச்செல்லரித்துப்போன பண்டைக்காலம்பற்றிக் கனவு காண்கிறோமா?" என்று.

கலாச்சாரம், பண்பாடு என்று கதைக்கும் கும்பலுக்கு இது நல்ல தெளிவுரையாகும். சிந்திப்பார்களா?

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு.
1951 மே. 5, 6 நாட்களில் சேலத்தில் நடைபெறுகிறது.

# நடப்பும் கருத்தும்

## பிச்சை எதிர்ப்பு வாரம்.

அண்மையில் பம்பாயில் "பிச்சை எதிர்ப்பு வாரம்" என்ற பெயரால் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பம்பாய் மேயர் தோழர். எஸ். கே. பாடீலின் தலைமையில், அம்மாகாண கவர்னர் தோழர். ராஜா மகாராஜ் சிங் பேசுகையில் "நிட்காத்திரமுள்ள பிச்சைக்காரர்களுக்கு மக்கள் பிச்சை யளிக்கக்கூடாது. அதற்கு பதிலாக பிச்சைக்காரர் புனர் வாழ்வு நிதிக்கு நன்கொடை யளியுங்கள்" என்று வேண்டியுள்ளார்.

பிச்சைக்காரர்கள் மலிந்திருப்பது, நாட்டிற்குக் கேவலம் என்பதுமட்டுமல்லாமல், ஆட்சியாளர் அவமானப்படவேண்டிய செய்தியுமாகும். "பிச்சைக்காரர் புனர்வாழ்வு நிதி" திரட்டி, அவர்களைச் சோம்பேறித்தனத்தினின்றும் விடுவித்து, தொழிலில் ஈடுபடுத்த பம்பாய்க்காரர் முன் வந்துவிட்டனர். பாராட்டுக்குரிய செயல், சென்னை அரசாங்கம் இது பற்றிச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. ஆட்சியினர் கவனித்தல் வேண்டும். "குபேரர்"கள் இடும் பிச்சையை ஏற்று, அவர்களுக்கு "தர்மப் பிரபு". பட்டமும், "மோட்ச லோகப் பிராப்தி"யும் பெற்றுத்தர இங்கு நடமாடும் எல்லாவித பிச்சைக்காரர்களையும் பிடித்து, அவர்களை நாணயமான தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். சென்னை அரசாங்கம் விரைந்து முயலுமாக.

## இது நியாயமா?

காஞ்சிபுரம் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார்யார் என்ற இனிய பெயர்கொண்ட வடமொழிப் புலவருக்கு, அண்மையில் சென்னையிலே அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. ஆச்சாரிய சுவாமிகள் பழுத்த மதவாதி. அதற்கு மதச்சார்பற்ற ஆட்சியின் கல்வியமைச்சர் தோழர் கே. மாதவ மேனனுர் தலைமை தாங்கினர். அது மட்டுமல்ல, அங்கு பேசியிருக்கிறார் "மதத்தை அலட்சியம் செய்யக் கூடாது" என்று. மேலும்,

"நாகரிகம், பகுத்தறிவு, விஞ்ஞான முன்னேற்றம் ஆகிய பெயரால் மதத்தைப் பழிக்கும் தன்மை இளைஞரிடையே வளர்ந்து வருகிறது சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற விஞ்ஞானியே சராசரம் முழுதும் நிரம்பியிருக்கும் மூலசக்தியை ஒப்புக்கொண்டார். அதனை அறிந்து, உணர்ந்து ஆனந்தமடைவதே மக்களின் லட்சியம், அதற்கு உதவுவதே மதம்" என்று பேசியுள்ளார்.

மூல சக்தியிடத்தில் யாருக்கும் கருத்து வேற்றுமையில்லை. அதனையறிந்து, உணர்ந்து ஆனந்தமும் அடையட்டும். ஆனல் சக்தி சிவமாகி, சிவம் மும்மூர்த்தியாகி, மும்மூர்த்திகளும், முப்பத்துமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையும் படைத்து நாட்டிலே நடமாடவிட்டு, பார்ப்பான் பறையன், மோட்சம் நரகம், சுரண்டுபவன், சுரண்டப்படுபவன், ஆண்டான்—அடிமை என்பன போன்ற எண்ணற்ற பேதங்களை—பித்தலாட்டங்களை-விதைத்து வளரவிட்டு, அதனல் வரும் பயனை அனுபவித்துக் கொள்ள ஐயருக்குப் பிறப்புரிமை கொடுத்திருப்பது நியாயமா? இது பகுத்தறிவு வாதியின் கேள்வி. நாக

ரிகம் வேண்டாம், பகுத்தறிவு வேண்டாம், விஞ்ஞானம் வேண்டாம் என்று, மதத்தின் பெயரால் வயிறு வளர்க்கும் அண்ணங்கராச்சாரியார் சொல்லட்டும். அது அவர் தொழிலுக்கு வேண்டிய புத்தி! அறிவுக்குப் பிரதானமளிக்கும் கல்வி இலாக்காவை நடத்தும் ஒரு அமைச்சருக்கு, இந்த அடிமைப் புத்தியும், சூத்திரத்தன்மையும், மதக்கிறுக்கும் இருக்கலாமா? இது நியாயமா? நாட்டுக்கு நல்லதா?

## மதவெறி.

"மதம் ஆண்டவனை யறிந்து, அடைந்து, ஆனந்தப்பட வழி காட்டுகிறது" என்று பசியால் வாடும் பாமரனுக்கு உபதேசித்தார் ஒரு அமைச்சர். இதே நேரத்தில் "மதம் மனிதரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லவும் தூண்டும்" என்பதை உலகத்திற்கு அறிவித்து உயிர் நீத்தார் ஒரு அமைச்சர்!

படுதா முறை ஒழிப்பு, விஞ்ஞான அறிவு, நாகரிக வளர்ச்சி ஆகியவற்றை மிகத் தீவிரமாகப் பரப்பி வந்த ஈரான் நாட்டு முதலமைச்சர், தோழர் அலி ரஃச்மாராவை, அந்நாட்டு மசூதி ஒன்றில், மேற்கண்ட கருத்துகளுக்கு மாறுபட்ட அரசியல், மதவெறியர்கள் சிலர், துப்பாக்கியால் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.

முற்போக்கு எண்ணங்களின் பிரதிநிதியாகப் பணிபுரிந்த ஓர் சிறந்த அறிஞரை, மதவெறி பலிகொண்டுவிட்டது. "மத வெறியன் இதமறியான்" என்பதை, பெரியார் காந்தியாரின் கொலை மூலம் நாடு நன்கறிந்தது. எத்தனையோ தொல்லைகளில் அதனை மறந்திருக்கலாம். அலிரஃச்மாராவின் கொலைச்செய்தி மூலமாவது அமைச்சர்களுடையவும், மதவாதிகளுடையவும் மனதில் தெளிவு பிறக்கட்டும். நாட்டுக்குக் கேடு சூழும் மதவெறியைப் பரப்பும் "பயங்கரங்"களைப் பாராட்டுவது தற்கொலைக்கு ஒப்பாகும்.

---

## வருந்துகிறோம்.

பதினைந்து ஆண்டுகளுக்குமுன்பு, சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப தீவிரப் பணியாற்றியவரும், "**பிரசண்டமாருதம்**" திங்கள் இதழ் நடத்தியவரும், கொள்கை வழிநிற்கும் கர்மவீரருமான தோழர். அ. இரத்தினசபாபதி அவர்களின் தமையனார், ஆழ்வார்திருநகர் தோழர் அ. முத்துராமலிங்கம், சென்ற 3—4—51 இரவு, கோலார் தங்கவயலில், அருமைத் தம்பியின்மனையிலே இயற்கைமுடிவு எய்தினார் என்பதறிந்து மிக வருந்துகிறோம். இயற்கையின் தன்மையுணர்ந்த நண்பருக்கு ஆறுதலும், குடும்பத்தினர்க்கு அனுதாபமும் தெரிவித்துக்கொள்கிறோம்.


அடுத்த இதழில்:

**பொக்காசியோ**

எழுதிய, மாந்திரிகத்தை நம்பி மானமிழந்த ஒரு இளம் விதவையின் விநோதக் கதை!

**விதவைச் சீமாட்டி**

மொழி பெயர்ப்பு:
ர. வரதராசன்.

# மக்கள் கவிஞருக்கு மணிவிழா

[நன்னியூர். நாவரசன்.]

புரட்சிக் கவிஞருக்குப் பொன்னுடை மணிவிழா
பண்டைத் தமிழ்ப்பண்பில் பாய்ந்துவரும் இச்சேதி
இன்றைத் தமிழ்மகனின் ஏற்றம் விளக்குவது.

தமிழ்வளர்த்த தார்வேந்தர் தமிழ்நிலத்தில் இன்றில்லை: ஆயினுமென்
தண்டமிழ்ப் பாண்டியராய்த் தமிழர்கள் இன்றெழுந்தார்
அறியாமை, அச்சம் பொய், அறமின்மை, அடிமை
அத்தனையும் இற்றுவிழப் பாட்டிசைக்கும் அரசருக்கு
மணிவிழாக் கொண்டாட மகிழ்வுடனே எழுந்தவர்கள்
அனைவருமே பாண்டியர்தாம்! அறிவியக்க வீரர்!.

கலைக்காகக் கலையென்று கதையளப்பார் இங்குண்டு
அவர்க்கெல்லாம் ஒருவார்த்தை அருங்கவிஞர் கூறுகின்றார்
"ஏலா இருட்டில் எடுக்கின்ற கைவிளக்கு
இருள்நீக்க அல்லாது எழிலுக்கோ ஏந்துகின்றார்?"

சோம்பிச் சவநிலையிற் சோர்ந்துவிட்ட நம்வாழ்வில்
சுடர்கொளுத்தும் கவிதையிலே கனல்மூச்சே இயல்பன்றோ?
ஏடெடுத்துக் கவிதை எழுதுகின்ற நேரத்தில்
எதிர்வந்து கோலங்கள் எத்தனையோ உலவிடினும்
இன்னலிலே தமிழ்நாட்டு மக்கள் துயின்றிருக்கும்
நிலையொன்றே அவருயிரிற் சென்று கலப்பதுவாம்
அந்த உயிர்க்கலப்பில் ஆர்த்தெழுந்த கவிதை
தூங்கும்தமிழ்மகனைத் துயில்எழுப்பவல்லாது தாலாட்ட விரும்பிடுமோ?

சிப்பி வெடித்துச் சிதறுகின்ற முத்துப்போல்
விடுக்கின்ற வார்த்தையில் வெடிக்கின்ற கருத்துக்கள்
காலத்துக் கேற்ற கவிதைகள் ஏடுகள்
தந்த தமிழ்க்கவிஞர் தமிழர் கவியரசர்.

யாருக்கும் எஞ்ஞான்றும் ஏதுக்கும் அஞ்சாத
இணையற்ற பாரதியின் இணைபிரியாத் தோழன்
அவர்தந்த சீருக்காய் எதிர்ச்சீர் எடுக்கின்றோம்
கடனிறுக்க எண்ணியல்ல, காணிக்கை யென்றேதான்
வாழ்கென்று வாழ்த்துகின்றோம் வாழ்வெமக்கு வாய்ப்பதற்கே.

# அன்பர்கள் சிந்தனைக்கு.

பகுத்தறிவு மக்களின் ஆதரவு பெற்று மாதத்திற்கு மாதம் வளர்ந்து வருகிறது. அறிவுத் துறையில் நாடு முன்னேறவேண்டும் என்ற ஆசையுள்ள அன்பர்கள், இளைஞர்கள், பள்ளி மாணவர்கள் பல்படப் புகழ்ந்து பாராட்டுகின்றனர், மகிழ்கின்றோம்.

காகித விலை உயர்வு காரணமாக ஏற்படும் நட்டத்தைச் சரிக்கட்ட, பக்கங்களை அதிகப்படுத்தி 0—4—0 விலை வைக்க எண்ணினோம். எமது மதிப்புக்குரிய நண்பர்கள், "விலையை உயர்த்தவேண்டாம், "பகுத்தறிவு" பல்லாயிரக் கணக்கில் பரவவேண்டும், பாமர எளிய மக்களும் இதன் பயனை யடையவேண்டும்" என்கின்றனர். மறுக்கமுடியவில்லை. ஒப்புகின்றோம். ஆனல் ஒன்று; பத்திரிகை விற்பனையாளர்கள் இலாபத்திற்காக மட்டும "பகுத்தறி"வை விற்பதாகக் கருதாமல், அறிவுப் புரட்சிக்குச் சிறிது பணியாற்றுவதாகக் கருதி, விற்பனைத் தொகையை மாதந்தோறும் தவறுமல் அனுப்பியுதவுதல் வேண்டும். அறிவு இயக்க அன்பர்கள் நமக்குக் கடிதம் எழுதி ஊக்குவதோடு நின்றுவிடாமல், "பகுத்தறிவு" எங்கெங்கு கிடைப்பதில்லையோ, அந்த ஊர்களில் எல்லாம் விற்பனையாளர் நியமிக்கவும், கையொப்பதாரர் சேர்த்து உதவவும் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் நட்டத்தைப் பொருட்படுத்தாமல் "பகுத்தறி"வைக் குறைந்த விலையிலும், சிறந்த முறையிலும் நடத்திவரமுடியும்.

அன்பர்களும், விற்பனையாளர்களும் இதுப்பற்றிச் சிந்திக்கவேண்டுகிறோம். "பகுத்தறிவு" எந்த அளவுக்கு வளர்ச்சியடைகின்றதோ, அந்த அளவுக்கு இதன் தரமும், பயனும் உயர்வு பெறும் என்று அன்பர்கட்கு உறுதி கூறுகின்றோம். வணக்கம்.

— ஆசிரியர்.




கொடுங்கோலனைப்
பழிவாங்கிய
தமிழச்சியின்

**வீர நாடகம்!**

வானொலிமூலம் பல்லாயிர
வரின் உள்ளம்
கவர்ந்தது.

**விலை 0—8—0**

விலைத்தொகை யனுப்பிப் புத்தகம் பெறலாம். வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல்**
**நூற்பதிப்புக் கழகம்,**
**சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.**

# மதமும் விஞ்ஞானமும்

[சி. எல். டி. அவரயின்]

★

மொழி பெயர்ப்பு: "ஏயார்"

## பூகர்ப்ப சாஸ்திர முடிபு.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனால் இந்நிலவுகம் படைக்கப்பட்டதென்று எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்கின்றன. ஆனால் பூகர்ப்ப சாஸ்திரம் இவ்வுலக உற்பத்தியைப்பற்றி கூறும் முடிபு என்ன என்பதைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

எல்லாச் சமயங்களுக்கும் மேற்கூறிய நம்பிக்கை பொதுவாகஇருக்கிறது. இறைவன் தமது இச்சாசக்தியால் எழில் நிறைந்த இப் பிரபஞ்சத்தைப் படைத்திருக்கின்றான் என்று யூதர்களும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும், பார்சிகளும், இந்துக்களும் மற்றும் பல மத வாதிகளும் தத்தம் மத நூற்களிலிருந்து ஆதாரம் காட்டி, மக்களிடம் அந்த நம்பிக்கையைப் பரப்பி வருகின்றார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நம்பிக்கை எதிர்ப்பாரின்றி, யாண்டும் பரப்பப்பட்டு வந்தது. ஆனால் புராதன கிரேக்கர்களில் சிலர் இந்த நம்பிக்கையைப்பற்றி சந்தேகப்பட்டது மெய்யே. நம்பிக்கையை நிலைநாட்ட, தத்துவசாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான சில முடிபுகளைத் தவிர, வேறு எத்தகைய ஆதாரங்களையும் அவர்களால் காட்டமுடியாது போய்விட்டது. சுமார் நூறு ஆண்டுகளுக்குமுன் தோன்றிய பூகர்ப்ப சாஸ்திரம், மேற்கூறிய மத நம்பிக்கைகளை எல்லாம் நிர்த்தூளி பண்ணி, உலகிற்கு உண்மையை எடுத்துக்காட்டிற்று. அறிஞர்கள் எல்லோரும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து பூகர்ப்ப சாஸ்திரம்கண்ட முடிபை ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

## பித்தலாட்டம்.

பூகர்ப்ப சாஸ்திரங்களின் முடிபையும், உலகஉற்பத்தியைப்பற்றிசமய நூற்கள் கூறும் கதைகளையும்பற்றி மதகர்த்தாக்களிடம் கூறினால், சிலர் எனது சமயம் பூகர்ப்ப சாஸ்திரம் கூறும் உண்மைகளை ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே ஒப்புக்கொண்டிருக்கின்றது என்று கூறுவர். ஆனால் பல மதப் பெரியார்கள், நிரீச்சுரவாதிகள் கண்ட பூகர்ப்ப சாஸ்திர உண்மைகளெல்லாம் வெறும் பொய், எங்கள் சமயம் கூறும் கதைகளே மெய்யென்று கூறுவர். பலர் பூமியின் உற்பத்தி சம்பந்தமாய் தங்கள் சமயம் கூறும் கட்டுக்கதைகளுக்கு பூகர்ப்ப சாஸ்திரம் ஆதரவு காட்டு

வதாகவும் பெருமை பேசி, பாமர மக்களுக்கு மத நம்பிக்கையைப் பலப்படுத்தி வருகின்றார்கள். பூமியின் உற்பத்தி சம்பந்தமாய் தம் மத நூற்கள் கூறும் கூற்றுக்கள், பூகர்ப்ப சாஸ்திர முடிபிற்கு மாறானதன்று என்று எந்த மதக் குருக்களும் மெய்ப்பிக்க முன்வர முடியுமா? விஷ்ணு அவதாரத்தைப்பற்றி இந்து மதம் கூறும் வரலாறு பூகர்ப்ப சாஸ்திர முடிபிற்குப் பொருத்தமானதென்றும், பரிணமவாதம் இந்து மதக் கோட்பாடுகளுக்கு எள்ளளவும் முரணானதல்லவென்றும் இந்துக்களில் சிலர் கூறுவதையும் நான் அறிவேன். இந்த அபிப்பிராயங்களெல்லாம் வெறும் பித்தலாட்டங்களேயாகும். உலக உற்பத்தியைப்பற்றி ஒரு சிறிதும் உணராத—ஆராய்ச்சி அணுவளவும் செய்யாத—காட்டுமிராண்டிகளான முன்னோர்கள் கூறிய காரணங்களையும், யூகங்களையும் பூகர்ப்ப சாஸ்திரம் நிர்மூலமாக்கிவிட்டது. சென்ற ஐம்பது ஆண்டுகளாய் நான் பல மத நூற்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். மதக் கோட்பாடுகளையும், விஞ்ஞான சாஸ்திர உண்மைகளையும் ஒற்றுமைப்படுத்தி எந்த மத நூலும் காட்டவில்லை. தம் சமயக் கோட்பாடுகள் விஞ்ஞான சாஸ்திர உண்மைகளுக்குப் பொருத்தமானவையென்று யாராவது மெய்ப்பிக்கமுன்வருவார்களானால், அவர்களைப்பின்பற்ற நான் தயாராயிருக்கிறேன்.

## படிப்பாளிகளின் மடமை.

உலக உற்பத்தியைப்பற்றி பூகர்ப்ப சாஸ்திரம் கூறுவது உண்மையானால், பி. ஏ., எம். ஏ., பட்டம் பெற்ற பல கத்தோலிக்கர்களும், புராட்டெஸ்ட்டாண்டுகளும், முஸ்லீம்களும், யூதர்களும், பார்சிகளும், இந்துக்களும் தத்தம் மதநூற்களில் கூறும் பிரபஞ்ச உற்பத்தி சம்பந்தமான கதைகளை நம்பக் காரணம் என்னவென்று, விஞ்ஞான சாஸ்திர உண்மைகளைச் செவ்வையாக ஆராய்ச்சி செய்தறியாத படிப்பாளிகள் வினவுகின்றார்கள். இதற்குக் காரணம்: படிப்பாளிகள் என்று சொல்லப்படுபவர்களிடம் உண்மையான படிப்பு இல்லாமலிருப்பதேயாகும். சிலர் சில குறிப்பிட்ட விஷயங்களில் நிபுணர்களாய் இருப்பது மெய்யே, சில விஷயங்களில் அவர்கள் விசேஷ பாண்டித்தியம் பெற்றவர்களாகவும்இருக்கக்கூடும். ஆனால் அவர்களுக்கு இதர விஷயங்களில் சொற்ப அறிவாவது இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. பூகர்ப்ப நூல், வான நூல், உயிர் நூல், ரசாயன நூல் முதலியவைகளை எல்லோரும் சாதாரணமாய்க் கற்பதில்லை. இந்த சாஸ்திரங்களைத் தமது மாணவர்களுக்குத் தெளிவாய்க் கற்பிக்க எந்த மதபக்தியுள்ள ஆசிரியர்களும் விரும்புவதில்லை. இந்த சாஸ்திரங்கள், மதங்களையெல்லாம் நிர்த்தூளி பண்ணிவிடும் என்று அவர்கள் நன்குணர்வார்கள். ஆகவே அவைகளைத் தம் மாணவர்களுக்குக் கற்பிக்க அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலே தான் கல்லூரிகளில் பூகர்ப்ப சாஸ்திரம் கற்பிக்கப்படுவதில்லை. எனவே இந்த சாஸ்திரங்களில் பாண்டித்தியம் பெறுதவர்கள், இந்த சாஸ்திர உண்மைகளின் சிறப்பைப்பற்றி எவ்வாறு அறிவார்

கள்? ஆகையால் இந்த சாஸ்திரங்கள் போதிக்கும் உண்மைகள் அவர்களுக்கு உடன்பாடாக இருக்க மாட்டா. அன்றியும் சமயசம்பந்தமாய் சிலருக்கு உண்மையான பற்றில்லை. ஆகையால் சமயத்தைப் பற்றி அவர்கள் ஆராய்ச்சிசெய்வதில்லை. தத்தம் மதந்தான் உண்மையானதென்றும், அது கடவுளால் ஏற்படுத்தப்பட்டதென்றும், அதில் ஒரு வார்த்தையும் தவருக இருக்க முடியாதென்றும் சிலருடைய மனதில், அவ்வச்சமயப் புரோகிதர்களால் பசுமரத்தாணிபோல் பதியச் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நம்பிக்கைக்கு மாற்றமான எந்த சாஸ்திரங்களையும், அவர்கள் படிக்க—ஏன்—தொடவும் விரும்புவதில்லை. யாராவது அத்தகைய சாஸ்திரங்கள் படிப்பதையோ, வைத்திருப்பதையோ புரோகிதர்கள் கண்டால், இதைத் தொடுவதே பாவகரமானது என்று படிக்கவிடாது தடுத்துவிடுவார்கள். எனவே, புரோகித ஏமாற்றத்தால், மக்களில் பலர் கண்மூடித்தனமாய் மதக்கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்கும்படி புரோதர்களால் நீண்ட காலமாய் செய்யப்பட்டுவருகின்றது. எனவே தான், பிறந்த மதத்தை இறக்கும்வரை பின்பற்றிவருகின்றார்கள். பிறந்த மதத்தைப் பின்பற்றுவதே உத்தமமானதென்றும், அதுவே கடவுளுக்குப்பிரியமானதென்றும், நம்பும்படி செய்யப்பட்டுவருகிருர்கள். புரோகிதர்கள், பாவம், கடவுள் கட்டளை என்னும் பூச்சாண்டிகளைக்காட்டி, மக்கள் சுயமாகச் சிந்தனை செய்யும் மூளையின் வன்மை யழித்து, தங்களிஷ்டப்படியே ஆட்டி வருகின்ருர்கள். தங்கள் சமயம் பலமான அஸ்திவாரத்தின்மீது நிர்மாணிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதை அசைக்க எந்த விஞ்ஞான சாஸ்திரத்தாலும் முடியாதென்றும், புரோகிதர்கள் சொன்னுல், இந்த அரைப் படிப்பாளிகள் அதை அப்படியே நம்பி விடுகிருர்கள்.

## மூட உபதேசம்.

உண்மையை உணரும் ஆசையும், மனச்சாட்சியும் உடையவர்கள், இந்தப் புரோகிதப் புல்லுருவிகளுக்கு ஒரு சிறிதும் இடம் அளித்தல் கூடாது. அவர்கள் வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பது பெருந்தவறு. அரைப்படிப்பு ஆபத்துஎன்று அவர்கள் உபதேசம் செய்வதை நீங்கள் நம்பவேண்டாம். அதைப்போல் மூடத்தனமான உபதேசம்வேறில்லை. அநேக அறிவிலிகள், புரோகிதர்கள் எதைக் கூறினுலும் அதைக் கிளிப்பிள்ளைகளைப்போல் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். அரைப்படிப்பு ஒருநாளும் ஆபத்து விளைவிக்காது. அரைப் படிப்பு படித்தவர்களுக்கு முழுப் படிப்பும் படிப்பதற்கு ஆசை உண்டாகாதா? சொற்ப அளவு படித்தவுடனே அதிகம் படிக்கவேண்டுமென்று ஆசை யுண்டாகலாம். போலி ஆசிரியர்கள் செய்யும் தப்பான போதனைகளைக் கண்டுபிடிக்க அந்த அரைப்படிப்பு உங்களுக்கு உதவி செய்யக்கூடும். ஆபத்து விளைக்கக்கூடிய படிப்பு படிப்பேயல்ல. நீங்கள் படியாத மூடர்களாயிருந்தால், தந்திரசாலிகள் உங்களை எளிதில் ஏமாற்றிவிடுவார்கள். அறிவில்லாதவர்களும். அறிவு தேவை

யில்லை யென்று கூறுபவர்களும் விலங்கினங்களுக்கு ஒப்பானவர்களே!

## பூமியின் தோற்றம்.

ஒரு காலத்தில் நாம் வாழும் இப்பூமி, ஒரு பெரும் அக்கினிப் பந்து போன்று இருந்தது. பின்னர், நாளடைவில் அதிலுள்ள சூடு தணிந்து, கட்டியாகி தற்போதைய நிலையையடைய கோடிக்கணக்கான ஆண்டுகள் சென்றிருக்கலாம் என்று பூகர்ப்ப சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். சூரிய மண்டலத்திலுள்ள குரு, சனி முதலிய கிரகங்கள் இப்பொழுதும் அக்கினிப் பிழம்புகளாகவே ஆகாயத்தில் சுழன்றுகொண்டிருக்கின்றன. அவைகளின் வெப்பம் இன்னும் தணியவில்லை. பழய பாறைகளை ஆராய்ச்சி செய்யும்போது இவ்வுண்மைகள் விளங்குகின்றன. இந்தப் பாறைகளில் பல பல அடுக்குகள் இருக்கின்றன. முதல் அடுக்கு லாரத்தியன் என்றும் மற்ற அடுக்குகளுக்கு முறையே, காம்பிரியன், சிலூரியன், டெலோனியன், கார்போனி பிரஸ், பொமியன், டிரியாசிக், ஜுாரியாசிக், ஆக்டேசியல், இயோகீன், மயோசின், பிணியோசின், ரீசல்டு என்றும் பெயர். இந்த ஒவ்வொரு அடுக்கும் பல்லாயிர அடிக்கனமுடையதா யிருக்கின்றது. அவைகளை விஞ்ஞான சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்கிறார்கள். சிலூரியன் அடுக்கு தோன்றிய பொழுதே, உயிரினங்கள் உற்பத்தியாயின என்று விஞ்ஞான சாஸ்திரிகள் முடிவுகட்டியிருக்கிறார்கள். சிலூரியன் அடுக்கு தோன்றியது லட்சக்கணக்கான வருடங்களுக்கு முன் என்று வாசகர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். சிலூரியன் அடுக்கில் பலவித மச்சங்கள் உற்பத்தியானதாகத்தெரிகிறது. டெலோனியன் அடுக்கில் பூண்டுகளும், சிப்பிகளும், நத்தைகளும், மச்சங்களும் தோன்றியதாகக் காணப்படுகின்றது. கார்போனிஸ் அடுக்குத்தோன்றிய காலத்தில் விண்மீன்களும், தாவர வர்க்கங்களும் உண்டாயினவாம். டிரியாசிக் அடுக்கில் பல ஊர்வனவும், பறப்பனவும், பெரிய மச்சங்களும், முள்ளுள்ள மீன்களும் ஒற்றைத்தடி மரங்களும் உண்டாயின.

டொட்டியரி அடுக்குக் காலத்தில் நாகால் மிருகங்களும், சர்ப்பங்கள், முதலைகள், காட்டுமனிதன் அல்லது வாலில்லாக் குரங்கு, பெரிய மரங்கள் கொடி செடிகள் முதலியன உண்டாயின.

## ஏகாதசி.

**அறிவுக்கண்** :— டேய்! ராத்திரி உங்க வீட்டில் விழித்துக்கொண்டே இருந்தீர்களா? சத்தம் கேட்டதே!

**அன்பு** :— ஆமாண்டா! நேற்று ஏகாதசி. நான்கூடத் தூங்கவில்லை. ஏகாதசி அன்னிக்கு விழித்துக்கொண்டே இருந்தால், சொர்க்கத்துக்குப் போவாங்களாம்.

**அறிவுக்கண்** :— அப்படியா? நீ இன்னும் இங்கேயே இருக்கிறயே?

— ப. க. குஞ்சிதம்.

பிளியோசின் அடுக்குக் காலத்தில், மயிர் நிறைந்த மிருகங்களும், மனிதரும் தோன்றினர். ரீசண்டு அடுக்குக் காலத்தில், காணப்படும் பிராணிகள் எல்லாம் தோன்றின.

சௌகரியத்துக்காக இந்த அடுக்குத்தோன்றிய காலங்களைப் பல பகுதிகளாக வகுத்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பெயரும் வழங்கியிருக்கிறார்கள். இந்தச் சிறிய கட்டுரையில் அவைகளைப்பற்றி விரிவாகக் கூறுவது சாத்தியமல்ல.

## பூகர்ப்ப சாஸ்திர போதனைகள்.

விஞ்ஞான சாஸ்திரிகள் பல வழியாக ஆராய்ச்சிசெய்து பார்த்ததில், பூமி தோன்றி இருபது லட்சம் வருடங்கள் ஆயினவென்று முடிவு கட்டியுள்ளார்கள். சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ரேடியோவின் உதவியினாலும், பூமி தோன்றிய கால அளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஞான சாஸ்திரிகளுக்குள்ளேயே அபிப்பிராய பேதம் இருப்பதாகச் சிலர் சொல்லக்கூடும். ஆம்; அபிப்பிராய பேதம் இருப்பது உண்மையே. லார்டு செல்வின், ஒயிட் முதலியவர்கள் கணக்கின்படி, பூமி தோன்றி ஒன்று முதல் இரண்டு கோடி வருடங்கள் ஆயினவென்று தெரிகிறது. ஆனால், ஆயிரம் வருடங்களுக்கு முன்னே உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்றுகூறுவதற்கும், மேலே கூறிய காலவரையறைக்கும் எத்தகைய சம்பந்தமாவது உண்டா? ரேடியோ கண்டுபிடிக்கப்பட்டது முதல், இந்தக் குருட்டு நம்பிக்கைகளெல்லாம் அடியற்று வீழ்ந்துவிட்டன. லக்ஷக்கணக்கான வருடங்களுக்குமுன் இப்பொழுது காணப்படாத அநேக மிருகங்கள் வாழ்ந்திருந்தனவென்றும், அக்காலத்தில் மனிதன் தோன்றவில்லை என்றும் பூகர்ப்பசாஸ்திரம் தெரிவிக்கிறது. பூமியின் அடியில்காணப்படும் அநேக பிராணிகளின் அங்கங்களைக் கவனித்தால், மனிதனைச் சிருஷ்டிக்கக் கடவுள், பலமுன் ஆராய்ச்சிகள்நடத்திக்கொண்டிருந்தார் என்று தோன்றும், 5 லட்ச வருடங்களுக்கு முன்புதான் மனிதன் தோன்றினான். பனிக்கட்டிக் காலத்துக்கு முன் மனிதன் தோன்றியதற்கு உலகம் முழுவதும் பல அத்தாட்சிகள் காணப்படுகின்றன.

எனவே, ஆதி மனிதன் பாபம் செய்ததெங்கே? கடவுள் அவனைச் சபித்ததெங்கே? மனிதன் தோற்றத்திற்கும், மற்ற மிருகங்கள் தோற்றத்திற்கும் இடையில், லட்சக் கணக்கான வருடங்கள் இருப்பதற்குக் காரணமென்ன? மதத்தின் பெருமையைக் குறைப்பதற்காக, இந்த உண்மைகளையெல்லாம் யாராவது விஷமத்தனமாக நிர்மாணித்துவிட்டார்களா? நீங்கள் உண்மையை அறிய ஆவலுடையவர்களாயிருந்தால், பூகர்ப்பசாஸ்திர பாடபுத்தகங்களை வாங்கிப் படித்துப் பாருங்கள், அப்பொழுது மதங்களின் மோசடி உங்களுக்கு நன்கு விளங்கும்.

## வித்தும்-விளைவும்.

ஒவ்வொரு மரமும் தன் இயற்கைக்குரிய பழத்தையே தருகிறது. நாம் எந்த வித்தை விதைக்கிறோமோ, அதன் பலனையே அறுவடை செய்கிறோம். இவற்றைப் போலவே மனிதன் தன் செய்கைக்குரிய பலனை அநுபவிக்கிறான்.

— நெப்போலியன்.

# இந்தியாவில் பகுத்தறிவு இயக்கம்.

[ ஆர். மகமத் ]

[அண்மையிலே லண்டன்மாநகரில் நடைபெற்ற உலகப் பகுத்தறிவாளர் மகாநாட்டில், இந்தியாவைப்பற்றி வெளியிட்ட அறிக்கை.]

இந்தியாவிலே பகுத்தறிவாளர்கள் இங்குமங்குமாக எல்லாப் பக்கங்களிலும் இருக்கின்றனர். அதிலும் சிலர் லண்டன் பகுத்தறிவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தும் 1930 வரையில் இந்தியப் பகுத்தறிவாளர் சங்கம் ஏற்படவில்லை.

உலகில் மற்ற பாகங்களில் பகுத்தறிவு இயக்கத்தைத் துவக்கினவர்கள் அனுபவித்த—எப்பொழுதும் ஏற்படும்-கஷ்டங்களைத் தவிர்த்து இந்தியாவில் இரண்டு பெரிய கஷ்டங்கள் உள்ளன. (1) மொழி (2) படிப்பின்மை. மொத்த மக்கட் தொகை 38 கோடியில், 8% விகிதம் படித்தவர்களாகவும், ஆங்கிலம் கற்றவர்கள் 1% விகிதம் கூட இல்லாமலும் இருக்கின்னர்.

இந்துக்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகப்படியான சத விகிதத்தில் படித்தவர்களாக இருப்பதாலும், இந்து மதத்தில் விசித்திரமான பல அமைப்புகள் இருப்பதாலும், மற்றவர்களைக் காட்டிலும் அவர்களுள் அதிகமானவர்கள் பகுத்தறிவை நாடுகின்றனர்.

முஸ்லீம்கள் எல்லோரையும்விட மத வைராக்யமுடையவர்களாக இருப்பதோடு, பலவழிகளில் கத்தோலிக்கர்களை ஒத்திருக்கிறார்கள். அதிகப்படியான முஸ்லீம்களுக்கு அரபு மொழியே தெரியாத போதிலும், குரானை இன்னும் அரபு மொழியிலேயே குருட்டுப் பாடமாகப் படிக்கிறார்கள். குழந்தைகளுக்கு குருட்டுருவாக மனப்பாடம் செய்ய அவர்கள் இன்றும் கற்றுக் கொடுக்கிறார்கள். இத்தனைக்கும் முஸ்லீம்களுள் பகுத்தறிவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் துக்ககரமான விளைவுகளுக்குட்பட்டு, தைரியமாக எதிர்த்துப் போராடுகிறார்கள். கிறிஸ்தவர்கள் அறிவுக் குறைவிலும், மத வைராக்கியத்திலும் முஸ்லீம்களை மிக ஒத்திருக்கி

ரூர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினது சமூக நிலையில் தங்களை ஒருவாறு உயர்த்திக்கொள்வதற்கேயல்லாமல், கிறிஸ்தவ மதத்தில் உண்மை உண்டு என்ற உறுதியாலன்று.

பார்சிகள், அதாவது ஜொராஸ்டரைப் பின்பற்றுவோர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவானவர்கள். அவர்களில் படிப்பு சதவிகிதம் மிக அதிகமாயினும், இவ்வினத்தில் பெரும்பாலோர் மத வைராக்கியமுள்ளவர்களாக இருக்கிறூர்கள். போதிய கல்வி பெற்றிருந்தும், மதவைராக்கிய நோய் அவர்களை விட்டகலவில்லை.

கடைசியாக, மூடப்பற்றுள்ள மன நிலையாலுண்டான சமூக வற்புறுத்தலும், சுயநலமும், பயனில்லாத சட்டங்களும் சுயேச்சை மனப்பான்மையைத் தடுத்து, சுயேச்சை மனம் படைத்தவர்களை தாராளமாக இவ்வியக்கத்தில் ஈடுபடவிடாமல் செய்கின்றன.

பம்பாயில் 1930-ல் உண்டான பகுத்தறிவுச் சங்கமும், சென்னையில், 18-12-49ல் தோன்றிய சங்கமும் என்னவாயினவென்று தெரியவில்லை.

இந்தியாவில் பகுத்தறிவுச் சங்கங்கள் தோன்றி மறைகின்றன. எனினும் இளைஞர்கள் அவ்வியக்கத்தில் ஈடுபட்டு, அதை வளர்க்கத் தீர்மானத்துடன் இருக்கிறூர்கள். உலகில் மற்ற பாகங்களில் நடைபெறும் வேலையும், பிரசாரமும் எங்களுக்கு வழி காட்டி நடத்திச் செல்கின்றன. சாங்கியம், நியாயகம், முதலிய நூல்களும், பொதுவாக புத்த மதமும் பகுத்தறிவை உயர்த்தி, கடவுளைப் புறக்கணிக்கிறது. இவை ஓரளவு பகுத்தறிவு இயக்கமே. சங்கராச்சாரியார், ராமானுஜாச்சாரியார், மத்வாச்சாரியார் இவர்களின் ஆதிக்கத்திற்குரிய இந்து தர்ம ராச்யங்களும், மத அடிப்படையில் முஸ்லீம் ராச்யங்களும், கிறிஸ்தவ இராச்யங்களும், இந்தியாவில் தோன்றியதால், இந்தியர்களிடத்தில் பகுத்தறிவை உணர்த்தும் நூல்களின் அறிவும், பகுத்தறிவுத் தன்மையும் மங்கின. (CharlesDarvin) சார்லஸ் டார்வின் காலத்திலிருந்துதான் படிப்பாளிகளிடம் இந்தியாவில் பகுத்தறிவு மறுமலர்ச்சியடைந்தது.

---

## பொதுநலம்.

எனக்கு நானே நன்மை செய்து கொண்டு ஒரு மோட்சத்தை யடைவதைக் காட்டிலும், பிறர்க்கு நன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கும் செல்ல நான் தயாராயிருக்கிறேன்.

— விவேகானந்தர்.

# பொன் மொழிகள்

அவனவன் பகுத்தறிவே அவனவனுக்கு ஆசிரியன். அது இயற்கையில் விளக்கமுள்ளதாயின், அதுவே அவனுக்கு நல்வழி காட்டும்.

— அக்பர்.

சரியான விழிப்புக்கொண்டுள்ள மக்களை யாரும், எந்த சக்தியும் அடக்கிவைக்கமுடியாது.

— லாலா லஜபதிராய்.

அழகிற் சிறந்தவை ஆண்மையும், அறிவுமே. அவைதாம் உண்மை அழகுடையன.

— மில்டன்.

பால்ய விவாகம் செய்வதை, கேவலம் கல்லுக்குக் கல்யாணம் செய்வதற்கே ஒப்பிடவேண்டும்.

— காந்தியார்.

அன்பினால் ஊக்கப் பெறுவது, அறிவினால் நடத்தப் பெறுவது எதுவோ, அதுதான் வாழ்க்கை.

— பெர்ட்ராண்ட் ரஃசல்.

தரித்திரன் சுதந்திரனாயிருப்பது, எப்பொழுதுமே மக்கள் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதன்று.

— ரூஃசோ.

சில பிச்சைக்காரர்களுக்குக் கொஞ்சம் பணமோ, பொருளோ கொடுப்பதன் மூலம், நாட்டின் வறுமைத் துயரைக் களைந்துவிடமுடியாது.

— ஜவகர்லால்.

தவறுகளைக் காத்துக் கொள்ளும் தைரியமும், அவற்றை விரைந்து திருத்திக் கொள்வதற்கான தைரியமுந் தான் மிக முக்கியமான தைரியம்.

— ஸ்டாலின்.

கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவையல்ல; ஆகையால் நெஞ்சில் நடுவுநிலை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகாகும்.

— திருவள்ளுவர்.

ஜீவகளை ததும்பும் இலக்கியத்திற்கும், கலைக்கும், அள்ள அள்ளக் குறையாத செய்திக் குவியலைக் கொண்டுள்ள பெட்டகமாக விளங்குவது மக்களின் வாழ்க்கையே.

— மாசே-துங்.

ஆசை செயலுக்கு அடிப்படை, ஆர்வம் அதனை வளர்க்கும், செயல் நன்கு பயன்தர அறிவு வழி காட்டும்.

— பிளாட்டோ.

ஒரு மனிதன் அளிக்கும் பதில்களைவிட, அவன் கேட்கும் கேள்விகளில் இருந்து அவனைத் தெரிந்துகொள்.

— வால்டேர்.

"நாங்களே கன்னியப்பனைக் கொலை செய்தோம்!" என்று ஒப்புக்கொண்டு இரண்டு ஆட்கள் போலீசாரிடம் சரணடைந்தனர். அவர்களே ஆச்சரியப் பட்டுவிட்டனர்! எல்லாம் ....

# அவன் செயல்!

[ப. க. குஞ்சிதம்]

★

கன்னியப்பன், மனைவி சொல்வதைக் காதில் வாங்காமல் எங்கேயோ அவசரமாகச் சென்றான். பூவாயி சொல்லொணாத்துயரடைந்தாள். கடன் தொல்லை பொறுக்க முடியவில்லை நான்கு குழந்தைகள் பசிக்குத் துடிக்கின்றன. இதைக் கவனிக்காமல் பூசைக்கென்று கோயிலுக்குச் செல்கிறாரே என்று எண்ணிப் பொருமினாள். பூவாயும் பக்தியுள்ளவள்தான். இருந்தாலும் கன்னியப்பன் குடும்பத்தைக் கவனியாமல், சதா கடவுள் பக்தியிலேயே காலங்கழிப்பது, அவளுக்குப் பிடிக்கவில்லை. கணவனின் பக்தி, பைத்திய நிலையிலிருப்பதைக்கண்டு தவித்தாள். தன்னால் முடிந்தவரை ஏதோ கூலிவேலைக்குச் செல்வாள். கிடைக்கும்வருவாயில், மக்களின் பசியைச் சிறிது தணிப்பாள். அந்தப் பணமும் சில சமயங்களில் கன்னியப்பனின் கையில் அகப்பட்டுவிடும். அது வயிற்றுக்குப் போகாது; கோயிலுக்கு, அர்ச்சனைக்குத்தான் உதவும். கன்னியப்பன் ஒழுக்கமுள்ளவன் தான். ஆனால் அவனது பக்தியால் ஒரு குடிகாரனின் மனைவி அனுபவிக்கவேண்டிய கஷ்டங்களை அனுபவித்தாள் பூவாயி.

அவ்வூர் செல்வந்தர் நாகசாமியிடம் கன்னியப்பன் கடன் வாங்கியிருந்தான். வெகு நாட்களுக்குமுன் வாங்கின சிறு தொகை, வட்டிக்கு மேல் வட்டியாகப் பெருகி, பெருந்தொகையாகி நின்றது. நாகசாமி கண்டிப்பானவர். பண விஷயத்தில் அக்ரமமான வழியையும் பின்பற்றக்கூடியவர்.

அன்று நாகசாமியின் ஆள் வந்திருந்தான். "இரண்டு நாளைக்குள் கடனைக் கட்டியாகவேண்டும். இல்லையென்றால் அவர் இஷ்டப்படி வசூலித்துவிடுவார்" என்று மிரட்டிவிட்டுப் போயிருந்தான். அதைத்தான் பூவாயி கணவனிடம் சொன்னாள். கன்னியப்பனின் மௌனம் அவளைச் சித்ரவதை செய்தது. கலக்கமடைந்தாள் பூவாயி.

இரவு 8 மணியிருக்கும். கன்னியப்பன் கோயிலிலிருந்து திரும்பியவன், படுக்கையை எடுத்துக்கொண்டு திண்ணைக்குச் சென்றான். கணவனின் பட்டினியைப் பொறுக்காத பூவாயி, இருக்கும் உணவைக் கணவனைக் கூப்பிட்டுப் போட்டாள். குடும்ப நிலையைச் சொல்லி அழுதாள். "மரம் வைத்தவன் நீர் வார்ப்

பான்" என்று சொல்லிவிட்டுக் கண் களை மூடிக்கொண்டான் கன்னியப் பன். அவள் உள்ளே சென்று பசிக் களைப்புடன் தூங்கிவிட்டாள்.

2

மறுநாள் அதிகாலையிலேயே எழு ந்து சாணம்தெளிக்க தெருவுக்குவந் தாள் பூவாயி, கணவனின் படுக் கையைக் கண்டு திடுக்கிட்டாள். ஏன்? படுக்கையில் அவன் இல்லை. அதுமட்டுமல்ல, இரத்தக்கரை இருந் தது. "ஐயோ! என் புருஷனை யாரோ கொலை செய்துவிட்டார் களே!" என்று குய்யோ, முறையோ என்றுக் கதறினாள், அலறலைக் கேட்டு, அக்கம் பக்கத்தில் உள்ள வர்கள் ஓடிவந்தனர். பூவாயியை என்னவென்று கேட்டனர். "ராத் திரி நன்றாகவந்து படுத்தார். விடிந்து பார்க்கிறேன்; அவரில்லை. படுக்கை யில் ரத்தக்கறை இருக்கிறதே. அவர் பிணத்தைக்கூட நான் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே! கடவுள் கடவுள்னு அலைவாரே, அவரைக் கொல்லும்போது அந்தக் கடவுளுக் குக்கூடத் தெரியவில்லையா? பாழும் சாமி வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்ததா?" என்று புலம்பினாள்.

அவள் கதறல் எல்லோர் மனதை யும் கரையவைத்தது. படுக்கையில் இருந்த கறையும், கன்னியப்பன் கொலை செய்யப்பட்டிருப்பான் என் பதை உறுதிப்படுத்தியது. எனவே ஒருவர் சென்று போலீசில் தகவல் கொடுத்தார். போலீசாரும் அக்கறை யுடன் புலன் விசாரிக்க ஆரம்பித்த னர்.

3

அந்த ஊர்ப்பக்கம் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. மூன்று நாள் கழித்து அந்த ஆற்றின் கரையில் பிணம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. நண்டுகளும், மீன்களும், கடித்து உருக்குலைந்திருந்தது அவ்வுருவம். அது கன்னியப்பனின் பிணம் என்று நம்பினார்கள். சாயலும் இருந் தது. கொலை செய்து யாரோ ஆற் றில் போட்டுவிட்டார்களே என்று வருந்தினர். அது போலீசில் ஒப் படைக்கப்பெற்று, சோதனைகள் நடைபெற்றது. பிறகு கன்னியப்ப னின் உறவினர்கள் ஐயரைக் கொண்டு முறைப்படி இறுதிக்கடன் களைச் செய்துமுடித்தனர்.

"வெட்டுக் காயங்களால் ஏற்பட்ட மரணம்" என்பது டாக்டர்கள் முடிவு. கொலை செய்தவர் யார்? இதை யறியும் முயற்சியில் தீவிர மாக ஈடுபட்டனர் போலீசார்.

இந்த நிலைமையில், "நாங்களே கன்னியப்பனைக் கொலை செய் தோம்!" என்று ஒப்புக்கொண்டு இரண்டு ஆட்கள் போலீசாரிடம் சர ணடைந்தனர். அவர்களே ஆச்சரி யப்பட்டுவிட்டனர்!

"செங்கதிர்தான் கன்னியப்பனைக் கொலை செய்து ஆற்றில் எறிந்து விடுங்கள் என்றான். எங்களுக்குப் பணம் கொடுத்தான். நாங்களும் இல்லாக்கொடுமைக்குச் சரியென்று கொலை செய்துவிட்டோம். உண் மையைச் சொல்லிவிட்டோம். எங் களைக் காப்பாற்றவேண்டும்" என்று அவர்கள் கெஞ்சினார்கள்.

செங்கதிர் ஒரு இளைஞன். தன் மான இயக்கத்தைச் சேர்ந்தவன்.

பொது மக்களின் ஆதரவைப் பெற்றவன். போலீசாருக்கு வியப்பு.

ஆனால் புலன் கிடைத்துவிட்டது என்ற ஆர்வத்தில், உடனே செங்கதிரைக் கைது செய்தனர். குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவரோடு செங்கதிரும் காவலில் வைக்கப்பட்டான். ஊராரே ஆச்சரியமடைந்தனர். ஏழைகளுக்கு உதவும் செங்கதிர், ஏழையைக் கொலை செய்யத் தூண்டுவதென்றால்?...வழக்கு விசாரணையில் இருந்தது.

செங்கதிர் சிறைப்பட்டதற்காகச் செல்வர் நாகசாமி, ஆண்டவனுக்குப் பூசை செய்தார். அகமகிழ்ந்தார். காரணம் அவன் அவருக்கு வேண்டாதவன். ஏழைகளின் தோழன். எனவே காந்தியார் இறந்தமைக்கு மிட்டாய் வழங்கிய கும்பலை அவரும் பின்பற்றினர்.

## 4

நாட்கள் சில சென்றன. இருள் பிரிவதற்கு முந்தியே வீதி பெருக்க வந்தாள் பூவாயி. தெருவில் தன் கணவனைப் போன்ற உருவம் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள். கணவனின் பிசாசு வந்துவிட்டதே என்று பயந்தாள். துடைப்பத்திற்குப் பிசாசு பயப்படுமல்லவா? ஓடு, ஓடு என்று கையிலிருந்த துடைப்பத்தாலேயே அடிக்க ஆரம்பித்துவிட்டாள். 'நான் பிசாசு இல்லையடி. உன் புருஷன் தாண்டி, பழனியாண்டவர் மலைக்குப் போய் வந்திருக்கிறேண்டி, அடிக்காதடி" என்று கெஞ்சிற்று அவ்வுருவம். "ஏது! கணவன் பிசாசானாலும் பக்தி குலையாமல் இருக்கிறானே!" என்று வியந்தாள் பூவாயி. பயத்தால் கத்திக்கொண்டே அடித்து

> **பிரார்த்தனை.**
>
> தாய் :— (கோயால் வருந்தி) எத்தனை நாளா எவ்வளவு பாடு படறேனே! எத்தனை பிரார்த்தனை வச்சேன்? பாழும் சாமிக்குக் கண் தெரியலையே!
>
> மகள் :— அவருக்குக் கண்வலி கிண்வலி வந்திருக்கும்மா! கண் டாக்டருக்கிட்டே சிகிச்சை செய்யரேன்னு ஒரு பிரார்த்தனை வச்சுப்பாரேன்!
>
> — அறிவுக்குஞ்சு.

விரட்டினன். பக்கத்திலுள்ளோரெல்லாம் சத்தம் கேட்டு வெளியே வந்தனர். இதற்குள் கிழக்கு வெளுத்தது. இருள் நீங்கியது. எல்லோரும் பிசாசு கன்னியப்பனை உற்றுப்பார்த்தனர். "பேயாகஇருந்தால், கால் கீழேபடாமல் அந்தரத்திலேயே நிற்குமாமே! இது கன்னியப்பன்தான். கன்னியப்பன்சாகவில்லை. மொட்டைகூட அடித்திருக்கிறனே" என்றனர் சிலர். எங்கே போனாய், என்னவென்று சிலர் விசாரித்தனர். ஊரில் நடந்த சம்பவங்களைச் சொன்னார்கள் சிலர்!

அவனுக்கு அவமானமாயிருந்தது. பெருமூச்சுவிட்டான். கன்னியப்பன் சொன்னான்: "நான் ராத்திரி தூங்கும்போது பழனியாண்டவர் கனவிலே வந்தார். கன்னியப்பா! கருங்கோழி ஒன்றை அறுத்துக்கொண்டு என் சந்நிதிக்குவா. உனக்கு கோழிக் காவடி கட்டிய பலன் கிடைக்கும்" என்றார். இதை எம் மனைவிகிட்டே சொன்னால், போகக்கூடாதென்று

தடுப்பாள். ஆண்டவன் உத்தரவை நிறைவேற்றிவிட்டு வந்த பிறகு சொல்லிவிடலாமென்று நினைத்தேன். உடனே பட்டியிலே இருந்தக்கோழியைத் திண்ணையிலேயே வைத்துக் கழுத்தை அறுத்து எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டேன். எல்லாம் அவன் செயல்!"

கன்னியப்பன் பக்திஉள்ளத்தைக் கண்டு, பரிகசித்துச் சிரித்தனர், இறந்தவன் பிழைத்தான்! இச் செய்தி போலீசாருக்கும் தெரிவிக்கப்பட்டது. கைதியாக வைத்திருந்த செங்கதிரை நிபந்தனையின்றி விடுதலை செய்தனர். தாங்களாகவே வந்து சிக்கிக்கொண்ட இரு குற்றவாளிகளையும் உதைத்து விரட்டினார்கள்.

கன்னியப்பன் திரும்பி வந்ததையும் செங்கதிர் விடுதலையானதையும் அறிந்த நாகசாமி குமுறினார். தேர்தலில் தோல்வி யடைந்தவர் போல் கொதிப்படைந்தார். அதற்குக் காரணம் உண்டு.

## 5

செங்கதிர் ஒரு பெண்ணின் வாழ்வை வளம்படுத்தினான். அதுவே அவன் செய்த குற்றம்! வயதான நாகசாமி அறிவும், அழகும் நிறைந்த இளம் பெண் செந்தாமரையை மணக்கப் பேராவல்கொண்டார். அவள் மறுத்தாள். அவள் தந்தையும் முதலில் தயங்கினார். ஆனால் வறுமையில் உழன்ற அவர் பணக்கார வாழ்வைக்கண்டு மயங்கிச் சம்மதித்தார். நாகசாமி எண்ணியதை முடித்துவிட்டோம் என்ற எக்களிப்பொடு இருந்தார்.

தந்தையிடம் நாகசாமியை மணக்கமுடியாதென்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பயனின்றி மனமுடைந்தாள் செந்தாமரை. கிழவனை மணந்து வாழ்வதைவிட உயிர் துறப்பதே உத்தமமென்று எண்ணினாள். தற்கொலை தகாத செயல் என்பதை உணர்ந்தவள்தான். எனினும் நாகசாமியின் பணத் திமிரும், தந்தையின் வறுமையும் அவளைத் தற்கொலைக்குத் தூண்டிவிட்டன!

சூரியன் மறைந்து எங்கும் இருள் பரவ ஆரம்பித்தது. செந்தாமரை தன் இருண்ட வாழ்விற்கு முடிவு தேடப் புறப்பட்டாள். குடமெடுத்து தண்ணீர் கொண்டுவரும் சாக்காக சென்றவள் ஆற்றில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றாள். தற்செயலாக அங்கு வந்தான் செங்கதிர். செந்தாமரையைத் தடுத்தான். இந்த இளம் வயதில் தற்கொலைக்குக் காரணமென்னவென்று கேட்டான். செந்தாமரை சற்றுத் தயங்கினாள். பிறகு மனம் விட்டு எல்லா விஷயங்களையும் கூறினாள். எனக்கு வேறு வழியில்லை. என்னைத் தடுக்காதீர் என்று விம்மினாள். செந்தாமரையின் நிலை செங்கதிரைக் கலங்கவைத்தது. அவள் ஒப்பற்ற அறிவும், அழகும் அவனைக் கவர்ந்தன. "நானே உன்னை மணந்து கொள்கிறேன், சம்மதமா? என்றான். செந்தாமரையின் முகம் ஆதவனைக் கண்ட தாமரைபோல் மலர்ந்தது. வீடு திரும்பினான். நண்பர்களின் துணை அவர்களுக்குக் கிடைத்தது. சீக்கிரமே இருவருக்கும் வெளியூரில் பதிவுத் திருமணம் நடந்தது.

நாகசாமி தான் நிச்சயித்திருந்த பெண்ணைச் செங்கதிர் மணந்தது

மன்னிக்கமுடியாத குற்றம் என்று சீறினார். உங்களை வாழவிடுவேனா? செங்கதிரை ஒழித்தே விடுகிறேன் என்று சபதமிட்டார். செங்கதிரை ஒழிக்கும் முயற்சியில் பல தடவை தோல்வியடைந்தார். இருந்தும் அவர் கோபம் தணியவில்லை. கன்னியப்பன் கொலை செய்யப்பட்டானா? இருக்கலாம், இதுதான் தக்க சமயமென்று எண்ணினார் அவர். கன்னியப்பனின் மறைவு அவருக்கு உதவியது. செங்கதிரைக் குற்றவாளியாக்கவேண்டும், அவன் தான் கொலை செய்யச் சொன்னான், நாங்கள் கொன்றோம் என்று போலீசில் ஒப்புக்கொள்ள இரு ஆட்களுக்குப் பணம் கொடுத்து ஏற்பாடு செய்தார். இப்பொழுது பாவம் இதிலும் படு தோல்வி யடைந்தார்.

"மடப்பயல்! கன்னியப்பன் போனதுதான் போனானே, இன்னும் கொஞ்ச நாள் பொறுத்தாவது வரக் கூடாது? விசாரணை முடிந்திருந்தால் நம்காரியம் முடிந்திருக்கும். கலைத்து விட்டானே கயவன். கடன்காரக் கழுதையைச் சும்மாவிடக்கூடாது!" செங்கதிர்மேல் அவர்கொண்ட வயிரம் இப்படியாகக் கன்னியப்பன் மேல் பாய்ந்தது.

### 6

ஊர் சிறிது, நாகசாமியின் செல்வம் பெரிது.

"கொடுக்கவேண்டிய பாக்கியைக் கொடுக்கிறாயா? இல்லையா? கூண்டோடு கைலாசம் அனுப்பிவிடுவேன்" என்று பொங்கிவிழுந்தார். கன்னியப்பன் செய்வதறியாமல் கலங்கி நின்றான். அவன் வீட்டைத் தன் ஆட்களைவிட்டுச் சோதனைசெய்யச் சொன்னார் நாகசாமி. பஞ்சைக் கன்னியப்பன் பேசாமல் நின்றான். ஏழையின் வீட்டில் தங்கப் பேழையா கிடைக்கும்? உடைந்த சட்டி பானைகள்தான் இருந்தன. நீ கொடுக்கவேண்டிய கடனுக்கும், வீட்டிற்கும் சரியாகி விட்டது. வெளியே நட" என்று அவனையும், அவன் மனைவி மக்களையும் விரட்டினார். ஆதிக்கம் வென்றது. ஏழைக் கன்னியப்பன் பரிதாபமாக வெளியேறினான். பாவம், பூவாயி அழுத கண்ணோடு அவனைத் தொடர்ந்தாள்!

பக்தனின் மனைவி மக்கள் பதைத்த பதைப்பும், செங்கதிர்மேல் ஏற்பட்ட பழியும், பக்தன் பராரியாகப் போவதும் பழனியாண்டவருக்குத் தெரியாதா? அவர் இப்போது எங்கே? பரிகாரம் என்ன? புலம்பினாள் பூவாயி. ஏழைக் கன்னியப்பனைத் தெருவோடு அலையவிட்டு, செல்வர் நாகசாமியின் அபிஷேகத்தில் ஆனந்தமாக முழுகித்திளைத்தார் பழனிமலையப்பன்! எல்லாம் அவன் செயல்!

---

## எது நல்லது ?

**நீலா** :— திலகம்! இந்த வருஷம் நீ பாசாகலையே! ஏண்டி?

**திலகம்** :— கடவுளை நம்பினோர் கைவிடப்படார்னு வாத்தியாரம்மா சொன்னாங்க. அதை நம்பி படிக்காமல் இருந்துட்டேண்டி.

**நீலா** :— எத்தனையோ கடவுள், எந்தக் கடவுளை நீ நம்பினே?

**திலகம்** :— அதுதாண்டி. எது நல்லதுன்னு கேக்க மறந்துட்டேன்!

— என். எஸ். வாசன்.

## தென்றல் வெளியீடுகள்.

●

மு. கருணாநிதி எழுதிய

ஒரே முத்தம் 1-4-0

சி. பி. சிற்றரசு எழுதிய

சிந்தனைச் சுடர் 0-5-0

ப. கண்ணன் எழுதிய

கன்னியின் சபதம் 0-8-0

சிந்தனைச் சித்திரம் 0-10-0

மின்னொளி 0-6-0

பாவலர். வேலாயுதசாமி எழுதிய

திருக்குறள்இசைப்பாடல்
அறத்துப்பால் 0-7-0

ப. க, குஞ்சிதம் எழுதிய

வால்முளைத்த
சாமியார் 0-2-0

கேட்டிக்காரன் 0-2-6

பைங்கிளி 0-2-0

★

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 %

தென்றல் நூற்பதிப்புக்
கழகம்,

சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.


# வாழ முடியுமா ?

மைத்ராக்ஷ ஜ்யோதிக: ப்ரேதோ
வைஸ்யோ பவதிபூய புக்
கைலாச கஸ்ச பவதி
சூத்ரோ தர்மாத்ஸவ காச்யுத:

—மநுதர்மம்.

பொருள்:- குலத்தொழிலை மீறி நடக்கிற வைசியன், இறந்த பிறகு மலத்துவாரத்தில் கண்களையுடையதும், மலத்தையே புசிப்பதுமான "மைத்திராட்ச ஜோதிகன்" என்ற பிசாசாகவும், அதுபோலவே சூத்திரன் வெள்ளைப் பேனைத்தின்கின்ற "கைலாசகன்" என்ற பிசாசாகவும் பிறக்கின்றனர்.

இது இப்படியிருக்க, இந்நாளிலும் தங்களை வைசியர், சூத்திரர் என்று சொல்லிப் பெருமை கொள்பவர்கள், குலத் தொழிலானவாணிபத்தையும், உழவையும் விடுத்து, கல்வி கற்கலாமா? பட்டம் பதவிகள் பெறலாமா? ஆசிரியர், வழக்கறிஞர், நீதிபதி, மருத்துவர், என்ஜினியர்களாகத் தொழில் செய்யலாமா? மந்திரிமார்களாகலாமா? மநுதர்ம சாஸ்திர விரோதமல்லவா? தர்மத்தைப் புறக்கணிக்கலாமா? குலத்தொழிலை மறந்துவிட்டு உத்தியோகம் பார்க்கும் தமிழர்களே! சற்று சிந்தியுங்கள். நீங்கள் எல்லோரும் மறுபிறப்பில் பேன் தின்னும்-மலந்தின்னும்-பேய்கள் என்று சொல்லும் தர்ம சாஸ்திரங்கள் இன்னும் இருக்கலாமா? இதைப் பின்பற்றிவாழமுடியுமா? இதைக் காப்பது நமது கடமையா?

# உறுதிமேற் கொள்வதென்றோ?

[பெரியகுளம். சுப்பராயலு]

களம்புகும் வீரர் போன்று
கடுமையா யுழைக்கும் மக்கள்
அளவிலாப் பொருள்கள் தம்மை
ஆக்கியே அளித்திட் டாலும்
உளமதில் இரக்கம் அற்ற
உலுத்தரின் செய்கை யாலே
வளமிகு நாட்டில் என்றும்
வயிறார உண்டார் இல்லை!

கலைமணம் கமழும் நாட்டில்
கலங்கியே உழன்று நின்ற
நிலையினை நினைத்துக் கண்ணில்
நீரினைப் பெருக்கிப் பின்னர்
அலைகடல் கடந்து சென்றங்
கடிமையாய் அயலார் நாட்டில்
வலையினிற் பட்ட மீன்போல்
வாடுதல் கேட்பார் இல்லை!

அத்தரை யடைந்த மக்கள்
அல்லலின் எல்லை கண்டு
பித்தரை யொக்கும் தன்மை
பெற்றுளார் அதனை மாற்ற
இத்தினம் நமது வாக்கால்
இருந்திடும் அமைச்சர் ஏற்ற
உத்தமப் பணிகள் செய்ய
உறுதிமேற் கொள்வ தென்றோ?




[முன் இதழ் தொடர்ச்சி]

என்னைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய கப்பலை அலைகடலின் நடுவே கொண்டு செலுத்தவே விரும்புகிறேன். காற்றும், அலையும், உடுக்களும் என்னை எங்கெல்லாம் அழைத்துச் செல்லுகின்றனவோ, அங்கெல்லாம் செல்லவே விரும்புகிறேன். பெருமிதமான சூறவளியில் சிக்கிக்கொள்வதை நான் விரும்பினாலும் விரும்புவேனேயொழிய, எப்படிப்பட்ட வைதிகத் துறைமுகமாக இருந்தபோதிலும், அதில் கிடந்து வெய்யலில்வாட மட்டும் ஒருநாளும் விரும்பமாட்டேன்.

காலத்திற்குக் காலம் நாம் வளர்ச்சி பெற்றுவருகிறோம் என்பதுமட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும். இன்றுள்ள வைதிகர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருந்தால், மதக் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்ற குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு எரிக்கப்பட்டிருப்பார்கள். இன்று, நான் என்னுடைய கருத்தை வெளியிடக்கூடாதுஎன்று மறுத்துரைக்கும் மந்திரிமார்கள் அப்பொழுது இருந்திருந்தால், மத விரோதிகளைத் தள்ளும் சிறைச்சாலையிலே தள்ளப்பட்டிருப்பார்கள். சமுதாய முன்னேற்ற வீரர்கள் சென்ற வழியில்தான் மடங்களும், மாதாகோயில்களும் அறிந்தோ அறியாமலோ சென்றன. ஒரு நூற்றாண்டுக்குமுன், எந்தக் கருத்துக்களைக் கடைப்பிடித்த குற்றத்திற்காக மத விரோதிகள், நம்பிக்கையற்றவர்கள் என்று சீர்திருத்தவாதிகள் கருதப்பட்டனரோ; அதே கருத்துக்களைத்தான் இன்றுள்ள மதவாதிகள் கடைப்பிடித்துவருகிறார்கள். கோயில்—அது எப்படிப்பட்டதாக இருந்துவந்திருந்த போதிலும், இப்பொழுது எவ்வளவோ முன்னேற்றமடைந்துவிட்டது என்னலாம். கிருத்தவ மதக் கருத்துக்களை எதிர்ப்பவர்களும், மறுப்பவர்களும் மதத்திற்குள்ளேயே எதிர்ப்பாளர்களாகஇருக்கும்படியான நிலைமை ஏற்பட்டுள்ளது. கிருத்தவக்கோயில் முன்னேற்றம் அடைந்திருக்காவிட்டால், இங்கு நான் என்னுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கக்கூட முடியாது.

மனிதன் தன்னுடைய அறிவை எந்த அளவுக்குத் தன்னுடைய தொழிலோடு தொடர்பு படுத்திப் பார்க்கிறானோ, அந்தஅளவுக்கு முன்னேற்றத் துறையில் முன்னேறி வரு

பவனாக இருக்கிறான். கப்பல் மாலுமி காற்றையும், கடலையும் அடக்கும் ஆற்றலைப் பெறாமலும், கடல் நீரோட்டங்களின் தன்மைகளையும், கடலின் கொந்தளிப்பையும் அறியாமலும், கடவுளை நம்பியே காலந்தள்ளிவிடலாம் என்ற மூட நம்பிக்கையில் இருந்துவிடுகிறான். அதுபோலவே உழவன் பருவ காலத்தைத் தன்னால் அடக்கி ஆளமுடியாத நிலையில் இருந்துகொண்டு, தன்னுடைய வாழ்வைவளமாக்கிக்கொள்ள எதிர்காலத்தை நம்பிக்கொண்டிருக்கிறான். ஆனால் இயந்திரத் தொழிலாளியோ, ஒரு சுழலும் உருளை நின்று போய்விட்டால், உடனே முழங்கால் படியிட்டுக்கொண்டு ஆண்டவனின் உதவியைக் கேட்டு நிற்பதில்லை. பகுத்தறிவு என்று ஒன்று இருப்பதை அவன் அறிகிறான். அதை அவன் பயன்படுத்துகிறான். அந்த இயந்திரத்தில் ஏதோ ஒன்று பெரிதாகவோ, சிறிதாகவோ இருப்பதை அறிகிறான்; அந்த இயந்திரத்தில் ஏதோவொன்று கெட்டிருப்பதாக உணருகிறான்; உருளை சுழல ஆரம்பிக்கும் வரையில், இயந்திரத்தில் அங்கும் இங்கும் சில பகுதியைச் சிறிதாகவோ பெரிதாகவோ செய்து, சரியாக ஆக்க முயலுகிறான். மனிதன் எந்த அளவுக்குச் சூழ்நிலைகளுக்கு அடிமைப்படாமல் விலகுகிறானோ—எந்த அளவுக்கு வெட்பம், பனிப்படலம், பனிக்கட்டி, இடி முதலியவைகளினின்றும் தப்பித்துக் கொள்ள முயலுகிறானோ—எந்த அளவுக்குத் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் காப்பாற்றிக்கொள்ளத் தெரிந்திருக்கிறானோ — எந்த அளவுக்கு இயற்கையின் தடைகளைத் தாண்டிச் செல்ல கற்றுக்கொண்டிருக்கிறானோ, அந்த அளவுக்கு அறிவிலும், உடலுறுதியிலும் முன்னேற்றம் அடைந்தவனாகிறான். மனிதன் வளர்ச்சியுற, வளர்ச்சியுற, அவனுடைய சொந்த உரிமைகளுக்கு அதிக மதிப்பு அளித்தவனாகிறான். விடுதலை அழகுள்ளதும், அற்புதம் வாய்ந்தது மான பொருளாகிறது! அவன் தன் சொந்த உரிமைகளை மதிப்பிடத் தொடங்கிவிட்டால், பிறருடைய உரிமைகளையும் மதிப்பிடத் தொடங்கிவிடுபவனாகிறான். எல்லாமக்களும், பிறர்க்கு, அவர்கள் கோருகிற எல்லா உரிமைகளையும் கொடுக்கத் தொடங்கும்போது, உலகம் நாகரிகம் வாய்ந்த உலகமாக ஆகிவிடுகிறது!

சில காலத்திற்கு முன்பெல்லாம், மக்கள் மன்னனைக் கேள்வி கேட்க அஞ்சினார்கள்; மதக்குருவிடம் ஐயம் கேட்க அஞ்சினார்கள்; ஒரு மதக் கோட்பாட்டை ஆராய்ந்து பார்க்க அஞ்சினார்கள்; ஒரு புத்தகத்தை மறுத்துரைக்க அஞ்சினார்கள்; நிலைபெற்றுவந்த ஒரு கொள்கையை ஒதுக்கித்தள்ள அஞ்சினார்கள்; பகுத்தறிந்துபார்க்க அஞ்சினார்கள்; சிந்தித்துப்பார்க்க அஞ்சினார்கள்! செல்வச் செருக்கின் முன்னால் இந்த உலகையே பணியவைத்தார்கள்; பட்டம் பதவிகளுக்கு முன்னால் அவர்கள் ஒரு பொருளாகவே காட்சியளித்தார்கள். இவையெல்லாம் மெதுவாக, ஆனால் உறுதியாக மாறிவரத்தான் செய்கின்றன. பணக்காரர்கள் என்ற காரணத்துக்காகவே ஒரு சிலர் முன் நாம் மண்டியிட்டு இனி ஒருபொழுதும் வணங்கப் போவதில்லை. நமது தந்தைமார்கள்

பொன்னாலான கன்றுக்குட்டியை வணங்கிவந்தார்கள். ஆனால் இன்றுள்ள அமெரிக்கர்கள் அதைவிட மிகத் தாழ்வானமுறையில், கன்றுக் குட்டியாலாகும் பொன்னை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். கன்றுக் குட்டிகூட இந்த வேற்றுமையை அறியத் தொடங்கிவிட்டது!

மன்னனாக இருப்பதோ, அல்லது மன்னர் மன்னனாக ஆவதோ ஒரு பெரிய மனிதனின் பேராசையை நிறைவேற்றித் தருவதாக இருப்பதில்லை. கடைசி நெப்போலியன், பிரெஞ்சுப் பேரரசின் மன்னர் மன்னனாக இருப்பதிலேமட்டும் மகிழ்ச்சிகொள்ளவில்லை. தலையிலே பொன்னாலான முடியைத் தாங்கிக்கொண்டிருப்பதிலேமட்டும் அவன் மகிழ்ச்சிகொள்ளவில்லை. தான் பிறரால் மதிப்பிடத்தக்க அளவுக்கு அறிவாற்றல் உடையவன் என்பதற்கான எடுத்துக்காட்டு ஏதேனும் இருக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். ஆகையினாலேயே அவன் ஜூலியஸ் ஸீஸரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினான்—அதன் மூலமாகவாவது பிரெஞ்சு இலக்கியப் பெருமன்றத்தில் உறுப்பினனாக முடியுமா என்று எதிர்பார்த்தான். பேரரசர்கள், குறுநில மன்னர்கள், மடாதிபதிகள் ஆகியவர்களால், கற்றறிந்த பேரறிஞர்கள் பெற்ற அளவு மிக்கப் புகழைப் பெற்று எந்தக் காலத்திலும் நிற்கமுடியவில்லை. வில்லியம் என்ற அரசனையும், ஹெக்கேல் என்ற தத்துவ அறிஞனையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஆண்டவன் அருளாலே அதிகாரத்தை வாங்கித் தருவதாகக் கூறிக்கொண்டிருந்தவர்களின் பிடியிலே அந்த மன்னன் சிக்கிக்கிடந்தான். அறிவுத் துறையில் உயர்ந்துவிளங்கிய ஹெக்கேல், முடிசூடிய மன்னனைக் காட்டிலும் எத்துணையோ மடங்கு உயர்ந்தல்லவா விளங்கினான்!

இந்த உலகம் இப்பொழுதான் அறிவையும், பேராற்றலையும், இதய அன்பையும் பாராட்டத் தொடங்கியிருக்கிறது!

நாம் எப்படியோ முன்னேறிவந்துள்ளோம்! ஒவ்வொரு அற்புதமான, ஆண்மையான செயலைச் செய்யவும், எவ்வளவோ உயர்ந்த, வீரஞ் செறிந்த தியாகம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தியாகச் செயலால் ஏற்பட்ட பலனைத்தான் இப்பொழுது நாம் அறுவடை செய்து வருகிறோம். நாம் இப்பொழுது ஏந்தியிருக்கும் அறிவுச் சுடர்ப் பந்தத்தைச் சற்று அருமையாகவும், அழகாகவும் எரியச் செய்து, வருங் காலத் தலைமுறைக்குக் கொடுக்க நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

இந்த உலகம் எவ்வளவு துன்பப் பட்டிருக்கிறது என்பதை நினைக்கும் போதும்; நம்முடைய தந்தைமார்கள் எவ்வளவு அடிமைகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும், அரியணையின் காலடியிலேயும், ஆண்டவன் பீடத்தின் புழுதியிலேயும் எவ்வளவு வளைந்தும், தவழ்ந்தும் கிடந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் தங்களைத் தாங்களே எவ்வளவு தாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்என்பதையும், இருப்புப் பட்டயம் அணிந்திருந்த மூட நம்பிக்கையின் முன்னாலும், முடிசூட்டிக்கொண்டிருந்த மூட

நம்பிக்கையின் முன்னும் எவ்வளவு தன்மதிப்பு அற்றவர்களாக இருந்துவந்திருக்கிறார்கள் என்பதையும் நினைக்கும்போதும் நானே ஆச்சரியப்பட்டுப் போகிறேன்.

ஒரு மனிதன் ஐம்பது ஆண்டுகள் கூட வாழமுடியாதபடி அவ்வளவு தகுதியற்ற நிலையில் இந்த உலகம் வைக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1808-ம் ஆண்டு வரையிலும்கூட கிரேட் பிரிட்டன், அடிமை வாணிகத்தை அழிக்கவில்லை. அதுவரையில் அந்நாட்டின் நீதிபதிகள், நீதியின் பேரால், நீதி மன்றத்தில் வீற்றிருந்துகொண்டும், மதக் குருமார்கள் அகண்ட அன்பின்பேரால் அறவுரை மன்றத்தில் அமர்ந்துகொண்டும், அடிமைகளை அடிமைக் கப்பலிலே குவித்துக்கொண்டிருந்தார்கள்—கப்பற் கொள்ளை மூலமும், கொலை மூலமும் கிடைக்கும் வருவாய்களை வைத்துக்கொண்டு மகிழ்ச்சி கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். அந்த ஆண்டு வரையில், அமெரிக்காகூட தன் அடிமை வாணிகத்தை அகற்றிவிடவில்லை. அது தன்னுடைய நாட்டிற்கும், பிறநாட்டிற்கும் அடிமை வாணிக முறையைக் கையாளவில்லை என்றாலும், தன்னுடைய பகுதிகளுக்கிடையே அடிமை வாணிகத்தை நடத்திவந்தது. 1833ம் ஆண்டு, ஆகஸ்டு 28-ம் நாள் வரையில், கிரேட் பிரிட்டன் தன் குடியேற்ற நாடுகளில் அடிமை வாணிகத்தை ஒழிக்கவில்லை. 1863-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாள் வரையில், அமெரிக்காவில் அடிமை வாணிகம் அழிக்கப்படவில்லை. பெருந்தன்மையும், வீரமும்படைத்த வடபகுதியின் துணைக்கொண்டு, குடியரசுத் தலைவனான ஆப்ரகாம்லிங்கன், வானளாவப் பறந்துகொண்டிருக்கும் நமது கொடியை மாசுமறுவற்ற வானம்போல் தூய்மையுடையதாகச் செய்தான்.

ஆப்ரகாம் லிங்கன், என் கருத்துப்படி, அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களிலே, பல வகையிலும் மிக்கப் புகழ்பெற்ற பெருந்தலைவனாவான். அவன் கல்லறைமீதுபொறிக்கப்படவேண்டிய சொற்கள். "**இந்த உலக வரலாற்றிலேயே, தன்னிடத்தில் முழு அரசியல் அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருந்தும், அவற்றைக் கருணையின் பக்கம் அல்லாமல், வேறு முறையற்ற வழியில் ஒரு போதும் செலவழிக்காத ஒருவன் இங்கே தூங்குகிறான்**" என்பவையே யாகும்.

அடிமை வாணிக முறையிலே நாம் எவ்வளவு காலம் தொத்திக்கொண்டிருந்திருக்கிறோம் என்பதையும், அடிமைகளிடம் வேலை வாங்குவதற்காக, அவர்களின் முதுகில் எவ்வளவு அடிகள் கொடுத்திருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டின் மதபீடம், சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக இயேசுவின் சிலுவையை சாட்டைக் கம்பாக மாற்றிவைத்து வந்திருக்கிறது!

கொடுங்கோன்மையின் ஒவ்வொரு செய்கையையும், அடிமைத்தனத்தின் ஒவ்வொரு முறையையும், என்னுடைய உடலில் ஓடும் ஒவ்வொரு துளி குருதியினாலும் அருவருக்கிறேன்; வெறுக்கிறேன்! வலுக்கட்டாயத்தை நான் வெறுக்கிறேன்; உண்மை விடுதலையை நான் விரும்புகிறேன்!

விடுதலை என்று நான் எதை குறிப்பிடுகிறேன்? விடுதலை—உடலைப்பற்றியதாகக் கொள்ளும்போது, மற்றவரின் இன்ப வாழ்வுக்குத் துன்பம் விளைவிக்காத எந்த ஒரு செயலையும் செய்ய உரிமை வேண்டும் என்னும் பொருள்படுவதாகும். விடுதலை—உள்ளம்பற்றியதாகக்கொள்ளும்போது, தவருகவோ, சரியாகவோ சிந்திக்க முழு உரிமையும் வேண்டும் என்னும் பொருள்படுவதாகும். சிந்தனையின் மூலமாகத்தான் நாம் உண்மையை அறிய முயலுகிறோம். நாம் உண்மையை முன்கூட்டியே அறிந்திருப்போமேயானல், சிந்திக்கவேண்டிய தேவையேயிருக்காது. இங்கு வேண்டப்படுவதெல்லாம் நாணயமான செய்கையாகும்! ஏதாவது ஒன்றைப் பற்றி என்னுடைய கருத்தை நீங்கள் கேட்கிறீர்கள்; நான் அதுபற்றி நாணயமான முறையில் ஆராய்ச்சி செய்கிறேன். என்னுடைய உள்ளம் ஒருவித முடிவுக்கு வந்தானதும், நான் உங்களுக்கு எதைச் சொல்ல வேண்டும்? என்னுடைய உண்மையான கருத்தையா அல்லது பொய்யான பிறிதொன்றையா? நான் எதைச் சொல்லவேண்டும்? என்னுடைய கைகளில் ஒருநூல் கொடுக்கப்படுகிறது; அது குர்ரான் என்றும், அது ஆண்டவன் அருளாலே எழுதப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது. நான் அதைப் படிக்கிறேன்; நான் அதைப் படித்துக் கொண்டிருக்கும்போதே அதில் கூறப்பட்டிருப்பவை உண்மைக்குப் புறம்பானவை என்று என் இதய உணர்ச்சியும், அறிவுத் திறனும் எனக்கு உணர்த்துகின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது நீங்கள் கேட்கிறீர்கள்; அது பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று, நான் இப்பொழுது துருக்கி நாட்டில் வாழ்வதாகவும், குர்ரானை ஏற்றுக்கொண்டாலொழிய எனக்கு அலுவல் ஏதேனும் கிடைப்பதற்கு வழியே கிடையாது என்பதாகவும் நிலைமை இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நான் என்ன பதில் சொல்வேன்? என்னுடைய நெஞ்சைத்திறந்துகாட்டி, என் அறிவுக்கு எட்டிய வரையில் அதை நான் நம்புவதற்கில்லை என்று கூறிவிடமுடியுமா? அப்படிக் கூறுவதாக வைத்துக்கொண்டால், அப்படிக் கூறும் என்னைப் பார்த்து, "அந்த மனிதன் அபாயக்காரன்; அவன் ஒரு உண்மையற்றவன்" என்று அந் நாட்டு மக்கள் கூறுவார்களேயானல், அவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? (தொடரும்)

பகுத்தறிவு

அறிவியல் திங்கள் வெளியீடு.

உள் நாடு

ஆண்டுக் கட்டணம் 1-8-0
தனிப்படி ,, 0-2-0

வெளி நாடு

ஆண்டுக் கட்டணம் 2-0-0
தனிப்படி ,, 0-2-6

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

# அறிஞர் ரூஃசோ.

சுவிட்ஜர்லாந்தில் உள்ள ஜினிவா என்ற அழகிய நகரத்திலே, கி. பி. 1712-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் நாள் ஜீன் ஜெக்கோ ரூஃசோ பிறந்தான். இவன் தந்தை ஐசக் ரூஃசோ, கடிகாரத் தொழில் புரிந்து எளிய வாழ்வு நடத்தியவர். தாய் சூசன்னே பெர்னர்ட் ஒரு பாதிரியாரின் மகள். இவர்களின் இரண்டாவது மகனே ரூஃசோ.

பிரஞ்சுப் புரட்சிக்கு வித்தூன்றிய ரூஃசோ, பிறந்த 10-ம் நாளிலேயே தன் அருமைத் தாயை இழந்தான். தந்தையுடையவும், தந்தையோடு பிறந்த தன் அத்தையுடையவும் ஆதரவில் வளர்ந்தான். பத்தாவது வயதில், ஏதோ சச்சரவு காரணமாக தந்தையார், பெர்னர்ட் என்ற தன் உறவினன் ஒருவனிடம் ரூஃசோவை ஒப்படைத்துவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே பத்தாவது வயதிலே தன் அருமைத் தந்தையையும் இழந்தான்.

பெர்னர்ட் ரூஃசோவையும், தன் மகனையும் சேர்த்து, போஃசே என்ற ஊரில் வசித்த லாம் பெர்சியர் என்ற பாதிரியிடம் கல்வி பெற அனுப்பி வைத்தார், இரண்டு ஆண்டுகள் சிறுவர்கள். பாதிரியார் குடும்பத்தோடு உண்டு உறங்கி கல்வி பயின்றனர். கற்றது என்ன? அதுபற்றி ரூஃசோ பிற்காலத்தில் கூறினார். "இலத்தின் மொழியும், சில பிதற்றல்களும் சேர்த்து, கல்வி என்ற பெயரால் எங்களுக்கு போதிக்கப்பட்டது" என்று.

ஒரு நாள் பாதிரியார் மனைவியின் சீப்பு உடைந்துவிட்டது. அந்த அம்மாள் ரூஃசோவின்மேல் குற்றம்சாட்டினாள். சினம்கொண்ட பாதிரியார் ரூஃசோவைப் பலமாக அடித்துவிட்டார்! சிறுவன் ரூஃசோவின் மனம் வேதனையால் வெம்பியது. இச்சிறு நிகழ்ச்சி ரூஃசோவைப் பெரிதும் சிந்திக்கவைத்தது. சிறுவர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறி பெர்னர்ட் வீட்டை வந்தடைந்தனர். பெர்னர்ட், கோர்ட்பத்திரம் எழுதும் ஒருவரிடம் ரூஃசோவைக் கையாளாகச் சேர்த்தார். சில நாளில் திரும்பிவிட்டான். சித்திரத் தொழில் நிபுணர் ஆபுல்டு கோமன் என்பவரிடம் ஐந்து ஆண்டு ஒப்பந்தத்தின்மேல் வேலை பழகவிடப்பட்டான். ரூஃசோவின் சுயேச்சை உணர்ச்சிக்கும், கலைஞரின் கடுமையான தன்மைக்கும் ஒத்துவராமல், இரண்டாவது வருடத்திலேயே அங்கிருந்து வெளியேறிவிட்டான். பெர்னர்டின் வீடு சென்றாலும் உதை கிடைக்கும்; எனவே 1728 மார்ச்சு, 15-ம் நாள் பஞ்சைக் கோலத்தோடு, பராரியாகப் புறப்பட்டு மனம்போன போக்கில் நடந்து சென்றான் ரூஃசோ. பல ஊர் சுற்றினான். பட்டினி கிடந்தான், இறுதியில் இத்தாலியைச் சேர்ந்த சேவா என்ற ஊரடைந்தான்.

அப்போது அங்கு, கிறிஸ்து மதத்தில் புராட்டெஸ்டெண்ட் பிரிவிலிருப்போரை, கத்தோலிக்கப் பிரிவில் சேர்க்கும் வேலை மும்முரமாக நடந்தது. ஒரு பாதிரியின் தயவில் ரூஸ்சோ அங்கு தங்கினான். பாதிரியார் இளைஞன் ரூஸ்சோவையும் மதம் மாற்ற விரும்பினார், அருகில் **அன்னேஸி** என்ற ஊரில் வசித்த **வாரென்ஸ்** என்ற சீமாட்டிக்கு ஒரு முடங்கல் கொடுத்தனுப்பினார்.

வாரென்ஸ் சீமாட்டி இளம் வயதினள், அழகி. எத்தனையோ பேரின் மனதைமாற்றி, மதம் மாற்றியவள். அவளது இன்மொழியிலே, புன்சிரிப்பிலே, உபசரிப்பிலே ஈடுபட்டான் ரூஸ்சோ. எனவே 1728, ஏப்ரல் 23-ம் நாள் கத்தோலிக்கனாக மாறினான். "ஆண்டவனின் திருவருளை எதிர்பார்த்து, நல்ல கிறிஸ்துவனாக நடந்துகொள்" என்ற உபதேசத்தோடு, தேவாலயத்தினின்றும் வெளியேற்றப்பட்டான். வாழ்க்கையின் சூனியம் அவனை வரவேற்றது. இவனது பரிதாப நிலை கண்டு மனமிரங்கிய சீமாட்டி யொருத்தி, சில நாள் உணவளித்துக் காப்பாற்றினாள். இவளதுசிபார்சில், வேறு ஒரு சீமாட்டியிடம் எடுபிடியாளாக அமர்ந்தான். மூன்று மாதங்களில் அச்சீமாட்டி, இறந்துவிடவே மீண்டும் ஊர் சுற்றத்தொடங்கினான். ஓராண்டு வரை எங்கெங்கோ சுற்றியலைந்தும் பயன்கிட்டாமல், மீண்டும் மதம்மாற்றிய வாரென்ஸ் சீமாட்டியிடமே வந்தடைந்தான் ரூஸ்சோ. சுமார் 10 ஆண்டுகள் அவள் ஆதரவில் காலங்கடத்தினான். ஒரு தனி பங்களாவில் தங்கியிருந்து; பலவிதமான நூல்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. தக்க நூலறிவு பெற்றான், அனுபவ அறிவும் சேர்ந்தது. எழுதவேண்டும் என்ற ஆசை பிறந்தது. வாரென்ஸ் சீமாட்டியின் தொடர்பு கசந்துவிடவே, தனது 30-ம் வயதில் பாரிஸ் நகரை நோக்கிப் பிரயாணமானான் ரூஸ்சோ.

பாரிசில் பல தொல்லைகளும், தோல்விகளும் ஏற்படினும், அறிஞர்கள் பலரின் அறிமுகம் வாய்த்தது. அந்நாளில் ரூஸ்சோவிடம் அன்பு காட்டியவர்களில் அறிஞர் **டிடெரோ** முக்கியமானவர். பாரிசில் **செயிண்ட் குவெண்டின்** என்ற ஓட்டலில் தங்கியிருந்தபொழுது, **தெரேசே லெவாஷீர்** என்றஒரு பரிசாரிகைக்கும், ரூஸ்சோவுக்கும் காதல் தோன்றியது. இவர்கள் சட்டப்படி மணக்கவில்லையென்றாலும், சுமார் 30 ஆண்டுகள் மனம் ஒன்றிய கணவனும் மனைவியுமாக வாழ்ந்தனர். இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஐந்து. இவைகளை ரூஸ்சோ அனாதை விடுதியில் விட்டு வளர்க்கச் செய்தார். தெரேசே கல்வியறிவற்றவள் என்றாலும், கணவரின் இதமறிந்து நடந்து, இறுதிக் காலம் வரை அவருக்குப் பெருந்துணையாக இருந்தாள்.

**டிஜோன் இலக்கியக் கழகத்தில்** 1749ம் ஆண்டில் கட்டுரைப் பரிசுப்போட்டி ஒன்று நடத்தினர்; "கலைகளும் விஞ்ஞானமும் வளர்வதால் மனித ஒழுக்கம் உயர்வடைகிறதா? என்பது விஷயம். ரூஸ்சோ எழுதினார். பரிசு பெற்றார். Discourse on the Arts and Sciences. "**கலை, விஞ்ஞானம் இவை பற்றிய விரிவுரை**" என்றபெயரில் கட்டுரை புத்தகமாயிற்று. இலக்கியத் துறையில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்றார் ரூஸ்சோ. பலரது

கவனத்தையும் கவர்ந்தார். சம்பிர தாயங்களைச் சாடிய இவரது துணிவும், எழுத்துவன்மையும் ஐரோப்பிய சமுதாயத்தையே கலக்கின. பின்னர் இசை நாடகமொன்று எழுதி நடிக்கச் செய்தார். புகழ் கிட்டிற்று. பகைவரும், பொறாமையாளர்களும் தோன்றினர்.

டிஜோன் கழகத்தார், மீண்டும் ஒரு கட்டுரைப் போட்டி நடத்தினர். மீண்டும் ரூஃசோ எழுதினார். ஆனால் பரிசு கிடைக்கவில்லை. அதற்கென்று எழுதியதை Discourse on the Origin of Inequality "மனிதரிடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்ட காரணமென்ன?" என்ற நூலாக 1753-ல் வெளியிட்டார். இதன் மூலம் இலக்கியத்துறையில் புரட்சிக்குரிய இடம் பெற்றார். 1757 வரை டிஎப்பினே என்ற சிமாட்டியின் ஆதரவில் இருந்தார். பிறகு வறுமைக்குள்ளாகி லக்ஸம்பர்க் பிரபு தம்பதிகளின் ஆதரவுபெற்று, அவர்கள் மாளிகையில் வசிக்கலானார். அங்கிருந்தே சில அருமையான நூல்கள் எழுதி வெளியிட்டார், 1761ல் காதல்சுவையுள்ள Julie or New Heloise "ஜூலி அல்லது புதிய எலாய்சே" வெளியாயிற்று. 1762-ல் கல்வி பற்றிய கருத்துக் கருவூலம் Emile or Education "எமிலி அல்லது கல்வி" என்ற நூலும், சமுதாய அமைப்புப் பற்றிய சமதர்மத் தெளிவுரையான The Social Contract "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலும் வெளியாயின.

ரூஃசோவின் சமுதாய அரசியல் கொள்கையும், மனித உரிமை பற்றிய கோட்பாடும், லட்சியத்தைப் பிரதானப்படுத்தும் அவரது எழுத்து வன்மையும் கண்டு பாதிரிகள், மண்டலாதிபதிகள் மனம் கலங்கினர்! அரசாங்கம் சீறி எழுந்தது. கைது செய்ய உத்தரவு பிறந்தது. நாடு கடத்தினர். அவர் எழுதிய நூல்கள், பிரான்சிலும், ஜினிவா, பெர்ன், நியூஷாட்டெல் முதலிய நகரங்களிலும் தீயிலிட்டு கொளுத்தப்பட்டன, ரூஃசோவைப் பித்தன் என்றனர். மத விரோதி, நாத்திகன் என்றனர். சமூகத்ரோகி என்றனர். அதுபற்றி ரூஃசோ வருந்தினாரென்றாலும், தம் லட்சியத்தினின்றும் பின்னடையவில்லை. ரூஃசோவின் மனிதஉரிமைச் சங்கநாதம், ஐரோப்பாகண்டம் முழுதும் ஒலித்தது. அதனால் பழமைப் பாசறையில் பதுங்கிக்கிடந்த மனித சமுதாயம் புத்துணர்வு பெற்றது. 1776-ல் இங்கிலாந்திடமிருந்து அமெரிக்கா பெற்ற விடுதலைக்கும், 1789ல் நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சிக்கும் வித்திட்டவர் ரூஃசோவேயாவார்.

இவர் எழுதிய நூல்கள் பலவுண்டு. சுயசரிதையும் எழுதினார். அவைகள் இன்று உலகத்தாரால் போற்றப்படுகின்றன. வாழ்வு முழுதும் துன்பச்சுழலில் சிக்கித்தவித்து, எதிர்ப்புகளுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகிய ரூஃசோ, தமது 66வது வயதில் 1778, மே மாதம் எர்மெனூல் வில்லேயில் உயிர் நீத்தார். அறிவும், ஆராய்ச்சித் திறமும், சுதந்திர தாகமும் மனித சமுதாயத்திற்களித்த ரூஃசோவின் புகழ், உலகம் உள்ளளவும் மறையாது வாழ்க ரூஃசோவின் புகழ்! வெல்க ரூஃசோவின் குறிக்கோள்!

# கருத்துரை

## கருப்பு முல்லை.

(ஆசிரியர்: ஜெகசிற்பியன். விற்பனையாளர்: கோவை பாரி நிலையம், ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர்.)

நாகரிகத்தின் பெயரால், மனம் போன போக்கில் சென்று அல்லற்படும் ஆண், பெண் பாத்திரங்களைக் கொண்ட அழகிய சிறு புதினம். கதை யமைப்பும், தமிழ் நடையும் ருசிகரமாயுள்ளன. அழகான அட்டைப்படம், படிக்கவேண்டிய புத்தகம்.

**பக்கம் 54. விலை 0—8—0**

## ஏற்ற விளக்கு.

(ஆசிரியர்: ஹுமாயூன். பெறும் இடம்: ஷேக் ரஹிமான், 17, லைன் தெரு, ஆத்தூர், சேலம் மாவட்டம்.)

"மண்கோட்டை", "யார் துரோகி?" "ஏற்ற விளக்கு" என்ற மூன்று சிறுநாடகங்களின் தொகுப்பு இந்நூல். அமைப்பில் சிறு குறைகள் இருப்பினும், நடையின் அழகும் வேகமும் மனதைக் கவர்கின்றன. ஹுமாயூன், நல்ல எதிர்காலமுள்ள இளம் எழுத்தாளர். வரவேற்கத்தக்க நல்ல புத்தகம்.

**பக்கம் 50. விலை 0—8—0**

## காதல் உள்ளம்.

(ஆசிரியர்: சாமி. பழனியப்பன். வெளியிட்டோர், பைந்தமிழ்ப் பதிப்பகம், காரைக்குடி.)

சங்க நூல்களில் பொதிந்து கிடக்கும் காதற் சுவையுள்ள சில பாடல்களுக்கு, புது மெருகேற்றிய உரை நூல். எளிய தமிழ்நடை, கருத்துச் சிறப்பும், விரிக்கும் முறையும் மிக நன்று. சாதாரண படிப்பாளிகளும், சங்கத் தமிழைச் சுவைக்கச் செய்யும் ஆசிரியரின் வன்மை பாராட்டுக்குரியது.

**பக்கம் 28. விலை 0—6—0**

## விடுதலை நல்கிய வீரர்.

(ஆசிரியர்: தே. வீரராகவன் B.O.L., வெளியிட்டோர், எஸ். வாசன் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.)

அமெரிக்க அடிமை இனத்திற்கு விடுதலை தேடித்தந்த ஆப்ரஹாம் லிங்கன். இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் கரிபால்டி, இந்தியப் பெரியார் காந்தியடிகள், அயர்லாந்திற்கு விடுதலை நல்கிய வீரன் டிவேலரா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புநூல். பிறநாட்டு வீரர்கள், அறிஞர்கள் வரலாறுகள் நம் மக்களுக்குப் புத்துணர்ச்சி தருவனவாகும். ஆசிரியரின் தமிழ்ப் புலமை நடையில் ஒளிவிடுகின்றது.

**பக்கம் 112. விலை 0—14—0**

## சூழ்ச்சிச் சுழல்.

(ஆசிரியர்: பாசுமணி வெளியிட்டோர், கற்பக வெளியீடு. முசிறி, திருச்சி மாவட்டம்.)

ஏழைத் தொழிலாளரின் அவல நிலை யொழிந்து, நல்வாழ்வு பெற வேண்டுமென்ற எண்ணத்தில் எழுந்த நாடக நூல். இளம் எழுத்தாளரின் அரிய முயற்சி.

**பக்கம் 80. விலை 0—8—0**

# வரப் பெற்றோம்.

## துப்பறியும் வீரன்.

எழுதியது: மு. தமிழரசு. விலை 0-2-0 சொர்ணமுத்து நிலையம், தெம்மாப்பட்டு, திருப்பத்தூர்.

## அண்ணனும் தம்பியும்.


எழுதியது: பி. ஆர். விசுவநாதம். விலை 0-0-6.

## சுகு ணு.

எழுதியது: சூரியகாந்தி. விலை 0-0-6 இவை இரண்டும் கிடைக்குமிடம்: ஜெயம் பப்ளிகேஷன், சௌராஷ்டிர கே கே தெரு, சேலம்.

## பெரியார் பாடல்.

இயற்றியவர்: மணிமுகம். விலை 0-2-0 தமிழ்ச் செல்வி செயலகம், 63, கல்லத்தி முடுக்குத் தெரு, திருநெல்வேலி.




தமிழகத்திலே, சுயமரியாதை இயக்கம் அறிவுச்சுடர் பரப்பிய அந்த நாளிலே எழுதப்பட்ட ஆரம்ப

**சீர்திருத்தக் கதைகள்.**

இந்த நாளிலும் சுவை குன்ருத புத்துணர்ச்சி தருவது.

★

**80 பக்கங்கள் விலை 0-10-0**

●

●●● இதுவும் ஒரு தென்றல் வெளியீடு. ●●●




எங்கும்
எப்போதும்
எல்லோரும்
விரும்பும் பீடி
**சுபான் பீடி!**

உங்கள் பேனுக்களையும், எழுத்துக்களையும் சிறப்பிப்பது

# குயில் இங்க்

அரசாங்கத்திற்கும், லோகல் போர்டுகளுக்கும் சப்ளை செய்பவர்கள்.

**சேலம் கெமிக்கல் இண்டஸ்டிரியஸ், சேலம்**

## நீங்கள் படித்துவிட்டீர்களா ?




நாட்டினர் விரும்பும் நவரசப் பெட்டகம்.
கலைமதிப்பு வாய்ந்த உயரிய நாடகம்.

**விலை 1-4-0**

விலைத் தொகையனுப்பிப் புத்தகம் பெறலாம்.
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.


**தென்றல் நூற்பதிப்புக் கழகம்,**
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்


Edited, Printed & Published by, P. KANNAN, at Senthamizh Printing Works, Jalakantapuram Salem Dt. (S. India)

# பகுத்தறிவு



அறிஞர் வால்டேயர்.



கர-வைகாசி. 15-5-1951. அணு 2

## 11-5-51 வெள்ளி முதல் 3-வது வாரம்!

● வெற்றிகரமான ●



சேலம் பேலஸிலும்,
நாமக்கல் ஜோதி டாகீஸிலும்

A·V·M புரொடக்ஷனின்

# ஓர் இரவு

கதை வசனம்: *C. N.* அண்ணாத்துரை *M. A.*

சேலம், திருநெல்வேலி ஜில்லாக்களின் உரிமையாளர்:

சேலம் சுதர்மா பிக்சர்ஸ் c/o

**சேலம் சங்கர் ரிலீஸ் லிமிடெட், :: குகை, சேலம்.**

---

**17-5-51** வியாழன் முதல் சேலம் அம்பிகா டாக்கீஸில்

● ஜீவித நௌகா (அல்லது) பிச்சைக்காரி ●

★

சேலம் ஜில்லா விநியோக உரிமை:

விபரங்களுக்கு: **சேலம் சங்கர் பிலிம்ஸ் லிமிடெட், குகை, சேலம்.**

---

# எல்லா வகை பேப்பர்களும்,

கிரீம்லேடு, பாண்ட், நியூஸ் பிரிண்ட்.
மணிஃபோல்டு முதலான எல்லா வகை
பேப்பர்களும், ஆர்ட் கார்டுபோர்டுகளும்,
அச்சுக்கூட இங்க் வகையறக்களும்,
நோட்டு. கணக்குப் புத்தகங்களும்
மொத்தமாகவும், சில்லரையாகவும்
எம்மிடம் கிடைக்கும்.

★

## எஸ். ரங்கநாதம்,

**பேப்பர் வியாபாரம்,**

**முதல் அக்ரகாரம், :: சேலம் டவுன்.**

வெளி வந்துவிட்டது!

அரிய கருத்துக்களை,
உரிய நேரத்தில், அள்ளித்
தரும் சீரிய நூல்!

சிந்தனையைக் கிளறும்
எண்ணங்களின் அணிவகுப்பு.
மக்களின் மனமருளை விரட்டும்
கருத்துக்களின் படைவரிசை

அறிஞர். அண்ணா
தீட்டிய

"நாம்"

விலை ரூபா ஒன்று

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம் :: திருச்சி.

# அரிது.

குதிரைக்குட்டியை சவாரிக்கும், காளையை வண்டிக்கும் பழக்குவதற்கு ஆட்கள் எளிதிற் கிடைப்பர். ஆனால் மனித உரிமை, தேசத்தை ஆள்வோரின் கடமை முதலியவற்றை நிர்ணயிப்பதற்கான திறமையையும், அறிவையும் இளைஞர்கட்குப் புகட்டி, அவர்களை நல்வழியில் செலுத்தவல்ல மேதாவிகளைக் காண்பது அரிது.

—சாக்ரட்டீஸ்.

ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982. திங்கள் 6

மலர் 1 | கர-வைகாசி | இதழ் 5

## பொருளடக்கம்.

என் செய்வது? ... 2
வேங்கை

சோமநாதர் பிழைத்தார் ... 3

நடப்பும் கருத்தும் ... 5

வளமான ஒளிப்பிழம்பு ... 7
சக்திதாசன்

விதவைச் சீமாட்டி ... 9
மொழி பெயர்ப்பு:
ர. வரதராசன்

மதத்தின் பெயரால் ... 15
எம். சீதாராமன்

வால்டையர் (வரலாறு) ... 17

பொன்மொழிகள் ... 20

சமுதாய விடுதலை (இங்கர்சால்) 21
மொழி பெயர்ப்பு:
இரா. நெடுஞ்செழியன் M.A.,

பிச்சையெடுப்போர் ஒழிக ... 24
சிந்தனையாளன்

கருத்துரை ... 28

# என் செய்வது?

1. என்னகால மப்பா இதுதோழா!
   எப்படிப் பிழைப்போமிந் நாட்டில்
அன்னியர் அரசாட்சி புரிந்த
   அந்த நாளிலும் இல்லையிந் தொல்லை.

2. வாழவைத்திடும் சோற்றுக்குப் பஞ்சம்
   மானங் காத்திடும் ஆடைக்குப் பஞ்சம்
வீழுமாமழை வெய்யில் படாமல்
   மேவவே சிறு வீட்டுக்குப் பஞ்சம்.

3. பார்த்திடில் விலை யொன்றுக்குப் பத்துப்
   பங்குயர்ந்ததே எப்பொருளுக்கும்
சேர்த்துழைத் திடவோ தொழிலில்லை
   செய்வதென்னினிச் சாவ தல்லாமல்.

4. கள்ளச்சந்தை பெருத்துமே போச்சு
   கட்டுப்பாடது சொல்லள வாச்சு
கொள்ளை லாபத்திமிங்கிலக் கூட்டம்
   கொக்கரிக்குது தின்று கொழுத்து.

5. பேசும்வாயை அடைக்குது சட்டம்
   பேனாதன்னை முறிக்குது சட்டம்
வீசுதே நூத்தி நாற்பத்து நாலை
   விந்தையாகவே வந்த சுயாட்சி.

6. நாடகத்தினை ஆடுதற் கில்லை
   நல்லநூல் வெளியாவதற் கில்லை
கூடித்தங்கள் குறையை யெடுத்துக்
   கூறுதற் கில்லையே யிந்தநாட்டில்.

7. எத்தனைவரி யென்று கொடுப்போம்
   இன்னுமென்ன வரிகளுண் டாமோ
இத்தனைகொடுந் துன்ப முண்டானால்
   ஏதுக்கிவ்வர சாட்சி நமக்கு.

8. பட்டினித் தொழிலாளருக் காகப்
   பாடுபட்டிட முன்வருவோரை
நெட்டித்தள்ளிச் சிறையி லடைக்கும்
   நீதிவாய்ந்தது நம்மர சாட்சி.

—வேங்கை.

# சோமநாதர் பிழைத்தார்!

"தக்ஷப் பிரஜாபதியின் புதல்விகளைச் சந்திரன் மணந்துகொண்டான். ஒருத்தியிடம் மட்டும் அன்புகாட்டி, பட்சபாதமாக நடந்துகொண்டதைக்கண்ட மாமனார் சினங்கொண்டார்; சாபம் கொடுத்தார். அதனால் சந்திரன் வளரும் சக்தியை இழந்தான். பிறகு இவ்விடம் வந்து ஜோதிர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்து, சாபம் நீங்கப் பெற்றான். இதனால் இந்தக் கடவுளுக்கு சோமநாதர் (சோமன்—சந்திரன்) என்று பெயர் வந்தது"—என்பது புராணம்.

"இந்தச் சோமநாதர் ஆலயம், பத்துத் தடவை பாழாக்கப்பட்டுள்ளது கி. பி. 1025-ம் ஆண்டில் கஜினி முகம்மது அழித்தான். பிறகு பல முஸ்லிம்களாலும், போர்ச்சுகீசியர்களாலும் சேதப்படுத்தப்பட்டது. இதற்குமுன் ஆறு கடவை புதுப்பிக்கப்பட்டு, திருப்பணி செய்யப்பட்டுள்ளது. முன்னால் செய்தவர்களில் வல்லபைபுர மைத்ரேய மன்னர்கள், குஜராத்-கன்னோஜ்-மன்னர்கள். (கி. பி. 1025 க்குப்பின்) மாளவமன்னன் போஜராஜன், பின்னால் சில குஜராத் மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்." என்பது வரலாற்றுக் குறிப்பு. "இந்தப் பட்டியலில் காலஞ்சென்ற பட்டேலும், தற்போதைய ஜனதிபதி ராஜேந்திரப் பிரசாதும் இடம்பெறவேண்டியவர்கள்"-இது நிகழ்கால வரலாறு.

"சோமநாதர் ஆலயப்பகுதிக்கு தேவப்பட்டணம் என்று பெயர். ஏனெனில் ஏராளமான ஆலயங்கள் இருக்கின்றன. சற்று தூரத்தில் கிருஷ்ணபகவான் உயிர் துறந்த "தேகோத்சர்க்க" என்ற திவ்ய க்ஷேத்திரம் இருக்கிறது" என்கிறது ஸ்தல மகிமை.

"உலகெங்கும் இருக்கும் புண்ணிய நதிகள், ஏழு கடல்கள் ஆகியவற்றிலிருந்து தீர்த்தங்களும், எல்லா கண்டங்களிலிருக்கும் புண்ணிய மரங்களிலிருந்து சமித்துக்களும், புண்ணிய பூமியின் மண்ணும் கொண்டுவரப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டது. இந்தியாவின் எல்லா பகுதியினின்றும் சாஸ்திரிகள், புரோகிதர்கள், வைதிகப் பிரமுகர்கள், சனாதனிகள், பக்தர்கள் யாவரும் குழுமியிருந்தனர்." இது திருப்பணியின் விசேடம்.

"கும்பாபிஷேகத்திற்கு வந்துள்ளவர்களின் சாப்பாட்டுக்கு, பிரம்மாண்டமான சமையலறையில் லட்டுகள்

மட்டும் 400 மணங்கும், சேவுகள் 400 மணங்கும் குவிந்திருந்தன. மாங்காய் ஊறுகாய் மட்டும் 50 மணங்கு! 20 அடி நீளமும் 4 அடி அகலமும், ஆழமும் உள்ள 4 தொட்டிகளில் காய்கறி பதார்த்தங்கள்," இப்படி உணவு ஏற்பாடு.

"வேத கோஷங்கள் முழங்கின. பீரங்கிகள் 101 வேட்டுக்களை முழக்கின. ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார் அவர் வேட்டியும், அங்கவஸ்திரமும்மட்டும் அணிந்திருந்தார். லிங்கத்தின் அடியிலிருந்த ஒரு தங்கக் கம்பியை, அவர் வெளியே எடுத்ததும், பிரதிஷ்டைச் சடங்கு முடிந்தது கர்ப்பக கிருகத்தில் காங்கிரஸ் ராஷ்டிரபதி தாண்டன், அமைச்சர் காட்கில், முன்ஷி, முதலியோர் இருந்தனர். சௌராஷ்டிர ராஜப்பிரமுகர், நவநகர் மன்னர், கால்சராய், கோட்டு முதலியன அணிந்து ஆச்சாரம் தவறியிருந்தமையால், கர்ப்பக்கிருகத்தில் நுழைவதைப் புரோகிதர்கள் தடுத்து நிறுத்திவிட்டனர்." இது முக்கிய நிகழ்ச்சிகளின் விமரிசனம்.

இந்த விதமாக புராணப் பெருமைகள், வைதிக ஆச்சார சீலங்கள், கோடிக் கணக்கான செலவுகள், விளம்பரங்களோடு, சோமநாதர் கோயிலைப்புதுப்பித்து, கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள் இந்துமத பக்தர்கள். மக்களின் வாழ்வில் அக்கரையற்ற, தன்னலமிக்க செல்வர்கள், கள்ளச் சந்தையில் கொள்ளைலாபமடித்த வணிகர்கள், மதவெறிகொண்ட மன்னர்கள், இதுபோன்ற செயல்களால் மக்களின் அன்பைப் பெற்றுவிடமுடியாது என்பது திண்ணம்.

பண்டைக்கால அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளையும், மத மாச்சர்யங்களையும் புதுப்பித்து, மதம், கடவுள் தன்மைகளில் நம்பிக்கையும், பக்தியும் உண்டாக்கி, மக்களின் பகுத்தறிவையும், எழுச்சியையும், தன்னம்பிக்கையையும் குலைப்பது தவிர, இதற்கு யோக்கியமான நோக்கம் வேறு என்ன இருக்கமுடியும்? எல்லா மதத்தினர்க்கும் பொதுவில் நின்று, நல்லாட்சி புரியவேண்டிய ஜனாதிபதி, ராஷ்டிரபதி, அமைச்சர்கள் போன்றவர்கள், இதுபோன்ற மத வளர்ப்புத் திருப்பணிகளில் ஈடுபடுவது சற்றேனும்நாட்டுக்குகந்த செயலன்று.

கோடிக் கணக்கான செலவில், செத்துக்கிடந்த சோமநாதர் பிழைத்தார்! பஞ்சம், பசி, பட்டினியால் மடியும் மக்கள் நிலை என்ன? யார் கவனிப்பது? ● ● ● ●

# நடப்பும் கருத்தும்

## அறிஞர். அம்பேத்கார்.

மதக் கொடுமையும், சாதிக்கொடுமையும், பழக்க வழக்கங்களின் பெயரால் நிகழும் அநீதிகளும் அழிக்கப்படவேண்டும் என்பதில், மாறாத கருத்துடன் பணியாற்றும் தலைவர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார். அவர் பேச்சும், எழுத்தும் துணிகரமானவை. மிகப் பயனுள்ளவை. எனவேதான் தாழ்த்தப்பட்டோரின் மதிப்புக்குரிய ஏகத் தலைவராக இன்றளவும் இருந்துவருகிறார். **நான் ஒரு இந்துவாகப் பிறந்தாலும், இந்துவாக இறக்கமாட்டேன்** என்று சொல்லி, இந்து மதம் தீண்டாதார்க்கு இழைக்கும் கொடுமைகளை நாடறிய வைத்தவர். தமது இடைவிடாத உழைப்பால், தாழ்த்தப்பட்ட இனத்திற்குப் பல அரசியல் உரிமைகளைத் தேடித் தந்தவர். இந்திய உபகண்டத்திலிருக்கும் எந்தத் தலைவரும், அறிஞரும் அவரின் கருத்துக்களை எளிதாகப் புறக்கணித்துவிடமுடியாது. **சாதியை ஒழிக்க வழி—சூத்திரர்கள் யார்?—இந்து மதப் புதிர்—ரூபாய் பிரச்சினை—தீண்டப்படாதார்,** முதலான நூல்கள் பல எழுதியுள்ளார். எல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. அவை யாவும், அறிவின் அடிப்படையில் அமைக்கப்பெறும் எதிர்கால சமுதாயத்திற்கு வழிகாட்டுவனவாகும். இத்தகைய அறிவியல்மேதை, டாக்டர் அம்பேத்காரின் 58-ம் ஆண்டு நிறைவு நாள், ஏப்ரல் 14-ல், பல இடங்களில் கொண்டாடப்பட்டது. வரும் ஆண்டுகளில் அறிவியல் வாதிகள், அவரது நினைவு நாளை மேலும் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும். அவரது கருத்துக்களைப்பரப்புதல் வேண்டும். வாழ்க அறிஞர் அம்பேத்கார்!

## சமாதான யாகம்!

ஏப்ரல் 26 முதல், 5 நாட்கள் யமுனைக் கரையில் சாதுக்கள் பலர் கூடி, உலக சமாதான யாகம் நடத்தினார்களாம். பல நாடுகளினின்றும் சன்யாசிகள் வந்தார்களாம். யாகத்தின் விளைவு என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை. யாகம் நடக்கும், இந்திரனோ, சிவனோ, விஷ்ணுவோ தோன்றுவார்கள், ஆவிர்ப்பாகம் பெற்றுக்கொண்டு, தபசிகளின் விருப்பத்தை நிறைவேற்றிச் செல்வார்கள், இவை புராணங்களில் காண்பவை. இந்த யாகத்தில் உலகத் தலைவர்களான ட்ரூமென், ஸ்டாலின், அட்லி, போன்றவர்கள் பிரசன்னமாகி, ஆவிர்ப்பாகம் பெற்றுக் கொண்டார்களா இல்லையா வென்பது தெரியவில்லை. அவர்கள்தானே சமாதானத் தலைவர்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்; உண்மையான உலக சமாதானம் வேண்டி, அதற்குரியன செய்ய மாநாடு நடத்த முயல்பவரைத் தடை செய்யும் நமது மதச்சார்பற்ற அரசாங்கம், இந்த மடத்தனமான கேலிக்கூத்தை ஆதரித்து, தக்க உதவி செய்திருக்கும். ஏனெனில் யாகம், பூசை, பஜனை, காலட்சேபம், சடங்கு, சாஸ்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் இந்திரன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தானே அரசியலில் அங்கம் வகிக்கின்றார்கள்! இவர்களிடம் வேறு எதை எதிர்பார்க்கமுடியும்?

## அங்குமட்டுமென்ன............

தென்னாஃப்பிரிக்காவிலிருக்கும் இந்தியர்கள், இனவெறி காரணமாக, மிகக் கேவல முறையில் நடத்தப்படுகின்றனர். அரசாங்கம் **கருப்பர் ஒதுக்கல் சட்டம்** இயற்றி, உரிமைகளைப் பறித்துக்கொண்டு, இந்தியர்களைத் தாழ்த்தி ஒதுக்கிவைத்திருக்கின்றது. இனம், நிறம், பிறப்பு காரணமாக மனித குலத்தில் பிரிவுகளை உண்டாக்குபவர் சுயநலமிகள், பித்தலாட்டக்காரர்கள். அவர்கள் திருந்து வண்ணம் புத்தி புகட்டல்வேண்டும். இதில் வேடிக்கை என்னவென்றால்; தென்னாஃப்பிரிக்க அரசியல்தலைவனாகிய **மலானைத்** தீவிரமாகக் கண்டிக்கும் நம் நாட்டுத் தலைவரில், பெரும்பாலோர் மலானின் பரம்பரையாக இருப்பதுதான்! அவனுக்குள்ள இனவெறியில், இவர்கள் அணுவளவும் குறைந்தவர்களல்ல. பிரம்மாவின் உடம்பில் நான்கு சாதியினர் பிறந்ததாகச் சொல்லி, ஏமாந்தவனைச் "**சூத்திரன்**" ஆக்கியும், அவனினும் இளிச்சவாயனைத் "**தீண்டாதான்**" ஆக்கியும் கழனியிலும், சேரியிலும் ஒதுக்கிவைக்கப்பட்டு, மனித உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு, நாயினும் கீழாக மதிக்கப்படுகின்றனர் இங்கே! படிக்கும் உரிமையில்லை, பொது இடத்தில் பழகும் உரிமையில்லை, மிஞ்சிப் படித்தவனுக்கும் வேலையில்லை. இப்படிக் கொடுங்கோலாட்சி புரிகிறது இந்நாட்டுப் **பார்ப்பனீயம்**. இந்த இனவெறியர்கள், தம்மைத் தாம் எண்ணிப் பார்க்காமல் மலான்மேல் பாய்கின்றனர்! சாதிவெறியிலே, நம் நாட்டில் உலாவும் ஒரு **சங்கராச்சாரிக்கு** கூடாவா மலான் என்று சிந்தித்துப் பாருங்கள். இனவெறி அங்குமட்டுமென்ன, இங்கு அதற்குமேல் இருக்கிறதே!

## மே தினவிழா.

"நாள் முழுதும் மாடுபோல் உழைக்கவேண்டும். பயனை எதிர்பார்த்தல் கூடாது" என்ற நிலையில் துன்புற்ற தொழிலாளர், வீறுகொண்டெழுந்து வெற்றிபெற்றனர் மேலை நாட்டிலே. நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளருக்கு, வேலை நேரம் 8 மணி என்று ஏற்பட்டது. அந்த வெற்றியின் நினைவே மே தின விழா. இந்த விழாவைத் துவக்கியது ஃபிரான்சு. பின்னர் தொழிலாளர் நலன் கருதி, நாடெங்கும்கொண்டாடப்பட்டுவருகிறது. நம் நாட்டில் இந்த **மே தினத்தை முதன் முதலில் கொண்டாடினவர்கள் சுயமரியாதைக்காரர்களே**. மே தினம்பற்றி விளக்கம் தந்தது "**குடியரசு**" வார இதழ்தான். இன்று மேதினம் பற்றித் தொழிலாளர்கள் ஓரளவுக்கு அறிவரென்றாலும் இது போதாது. நாட்டிலுள்ள எல்லா வகைத் தொழிலாளர்களும் ஒன்றுபடல்வேண்டும். 'உழைப்புக்கேற்றஊதியம், தேவைக்கேற்ற வசதி' பெறுதற்கு, மே தின விழாவன்று உறுதிகொள்ளவேண்டும். அதிக உழைப்பால் கிடைக்கும் சிறிய ஊதியத்தையும், தேர், திருவிழா, கோயில், குளம், பிரார்த்தனை, சூடம், சாம்பிராணி என்று செலவழித்துவிட்டு, விதியின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, ஏங்கி நிற்கும் ஏழைத் தொழிலாளியின் நிலையில்—அறிவில், மே தினக் கொண்டாட்டம் ஒரு புத்துணர்வைப் பாய்ச்சுமாக.

# வளமான ஒளிப்பிழம்பு.

[சக்திதாசன்]

1. சொத்தையுற்ற சமூகத்தைச் சுரண்டுகின்ற கூட்டம்,
சுகங்கண்டு வதைக்கின்ற முதலாளி வர்க்கம்,
எத்தனையோ இனிமைதரும் செயலெல்லாம் விட்டு
எல்லையிலாத் தொல்லையிலும் துயில்கின்ற ஆள்வோர்,
தொத்துகிற நோய்பரப்பிப் புதுமைக்குக் குழியும்
தோண்டிடுவோர், பேதையரை ஏய்க்கின்ற மாக்கள்,
இத்தனைக்கும் எதிராக வெடிக்கின்ற சக்தி,
இடரொழிக்கும் எரிமலையே பகுத்தறிவின் இயக்கம்.

2. பழைமையெனும் மிகக்கொடிய காரிருளை நீக்கிப்
பாழான பேதைமையில் விழிப்புகொளச் செய்து,
எழில்மிக்க ஒளிக்கற்றை எங்கெங்கும் பரப்பி,
யாவர்க்கும் புத்துணர்வும், எழுச்சியதும் நல்கி,
பொழில்காணும் புதுக்களிப்பும் வளருமின்ப வாழ்வும்,
புவியுவக்கும் புத்துலக முறைமை கட்டும் நல்ல
வழிகாட்டி, மறைக்குமுகிற் கூட்டமதை யோட்டும்
வளமான ஒளிப்பிழம்பே பகுத்தறிவின் இயக்கம்.

வந்துவிட்டது! :: :: வந்துவிட்டது!




ப. க. குஞ்சிதம்,

எழுதியது.

●

சிறுவர் சிறுமியர்க்குப் புத்துணர்வு தரும் ஓர் அன்புச் சிறுமியின் அறிவுக் கதை. அழகான புத்தகம்.

விலை 0—2—0 தான்!

★

நீங்கள் படித்துவிட்டீர்களா ?

நாட்டினர் விரும்பும் நவரசப் பெட்டகம்.

கலைமதிப்பு வாய்ந்த உயரிய நாடகம்.

விலை 1-4-0

●

விலைத் தொகை யனுப்பிப் புத்தகம் பெறலாம்.

வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.




தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.




- எலீனா அழகி. பணக்காரி. இளம் விதவை. கள்ளக் காதலில் இன்பம் நுகர்பவள்.

- ரினேரி படித்தவன். பண்டிதன். காதலில் சிக்கி கௌரவத்தை இழக்கிறான். இருவர்க்கும் நடக்கும் விநோதப் போராட்டம்.........

கொஞ்ச நாளைக்கு முன்னே, பிளாரன்சிலே எலினா என்ற இளஞ் சீமாட்டி வசித்துவந்தாள். நல்ல அழகி. பெருங் குடும்பத்திலே பிறந்தவள். விதவை. மறு மணம் செய்துகொள்ள ஏனோ மறுத்துவிட்டாள். எனினும் வனப்புள்ள வாலிபனொருவன்மேல் ஆசைகொண்டாள். நம்பிக்கையான வேலைக்காரியைத் தூதனுப்பினாள். வசப்பட்டுப் போனான். அநேக அந்தரங்க இன்ப சந்திப்புக்களுக்கு ஏற்பாடு செய்தாள். இரகசியமாகக் கூடிக் களித்தனர்.

அதே சமயத்திலே, பிளாரன்சிலே ரினேரி என்ற இளைஞன் இருந்தான். பாரிஸிலே பல வருஷம் படித்தான். அறிஞன் என்று அழைக்கப்படுவதற்காக அல்ல, விஷயங்களின் காரண காரியத்தைத் தெரிந்துகொள்ளக் கற்றான். பிளாரன்சுக்குத் திரும்பி வந்தான். அங்கே அவனுக்கு மதிப்பு மிகுந்தது. அவனுடைய கல்விக்கும், அந்தஸ்துக்கும் தகுந்தவனாக, கண்ணியமான வாழ்வு நடத்திவந்தான். ஆனால் வழக்கமாக அறிவாளிகளும், நிபுணர்களும் காதல் கன்னிகளில் சுலபமாக சிக்கிக் கொள்வது போலவே, ரினேரியும் சிக்கினான்.

ஒரு நாள் ஒரு விருந்திலே விதவைக் கோலத்திலிருந்த எலினாச் சீமாட்டியைச் சந்தித்தான். பேரழகியாகத் தோன்றினாள் ரினேரிப் பெருமகனுக்கு. கட்டழகி இவளைப்போல் தான் கண்டதில்லையென்று நினைத்தான். இவளைக் கட்டியணைக்கும் பாக்கியம் யார் கைகளுக்குக் கொடுத்துவைத்திருக்கிறதோ என்று

ஏங்கினுன். பார்வையை அவள் பக்கம் பல தடவைகள் வீசினுன். அருமை பெருமையான காரியங்கள், சிரமப்படாமல் முடியாதென்று எண்ணமேலிட்டால், அவளை எப்படி பட்டாவது திருப்திபடுத்துவதென்று தீர்மானித்தான்.

தரையைப் பார்த்தவண்ணமே இருப்பவளல்ல அத்தையல். தன்னைப்பற்றி மிக மேலாக நினைத்துக் கொள்பவள். கவனிக்கிருர்களா தன்னையென்று கண்ணை ஓட்டினுள் நாலுபுறமும். ரினேரியின் ஆசை கனிந்த பார்வை அவள் கண்ணிலே பட்டது. புன்முறுவல் கொண்டாள். அவ்வப்பொழுது ரினேரிக்கு, அவள் கண்ணின் கோட்டிலிருந்து மின்னல் தூதுகள் பறக்கும் அவன்மேல் ஆசையிருப்பதாக அவன் நம்பும் படிச் செய்ய!

* * *

நமது அறிஞன் ரினேரி தன்னுடைய தத்துவத்தையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவைத்தான். எண்ணத்தையெல்லாம் அவள் பக்கமே திருப்பினுன். அவள் வசிக்குமிடத்தைக் கண்டுபிடித்தான். அந்த வழியிலே அநேக தடவை நடக்க வாரம்பித்தான் ஏதாவதொரு சாக்குவைத்துக்கொண்டு அச்செய்கை அவள் தற்பெருமைக்குத் தம்பட்ட மடித்ததுபோலிருந்தது. அவளும் அவனது ஆசையைஅறிந்து, தயங்கு பவள்போல் நடித்தாள். ஆகவே அவள் தாதியை நெருங்கினுன். விஷயத்தை எடுத்துச் சொல்லி, விருப்பத்தை உணர்த்துமாறு சேடியை வேண்டினுன். தோழி சென்று எலிஞவிடம் கூறினுள். எலிஞ எள்ளி நகையாடினுள். பரிகாசம் செய்தாள். "பார் தோழி, பாரிஸிருந்து கொண்டுவந்த கொஞ்சம் பகுத்தறிவையும் இங்குஇழக்கப் போகிருன் பார். அவன் கேட்பது கிடைக்கும். ஆகவே செல். அவனைப் பார்த்த பொழுதெல்லாம் சொல், நீ அவளை விரும்புவதைவிட அவளுன்னை அதிகமாக நேசிக்கிருள், ஆனல் அவள் மானத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியவளாயிருக்கிருள். நீங்கள் அவள் நினைக்கிற அளவு புத்திசாலியாயிருந்தால், அவள்மேல் இன்னும் அதிகமான ஆர்வங்கொள்ள வேண்டுமென்று சொல்" என்றுள் எலிஞ.

சொன்னபடி செய்தாள் தோழி. மகிழ்ச்சி மேலிட்டது பண்டிதனுக்கு. சேடியிடம் மேலும் வற்புறுத்த ஆரம்பித்தான். கடிதங்கள் எழுதினுன். பரிசுகள் அனுப்பிவைத்தான். அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனல் பொதுவான, சாதாரண பதில்கள்தான் கிடைக்கும். இப்படிச் சந்தேகமான நிலைமையிலே நீண்ட காலம் அவனை வைத்தாள் எலிஞ.

* * *

பூரா விஷயத்தையும் ஒரு நாள் தன் சொந்தக் காதலனிடம் தெரிவித்தாள். அவன் பொருமை கொண்டான். அவன் சந்தேகம் சரியல்லவென்று அவனுக்கு நிரூபிக்க விரும்பினுள். ரினேரியின் கோரிக்கையும் வளர்ந்துவந்தது.

"அவருக்கு என்மேல் ஏற்பட்ட காதல் தெரிந்ததிலிருந்து, அவரைத் திருப்தி செய்ய இன்னும் ஒரு சந்தர்ப்பம்கூட எனக்குக் கிடைக்கவில்லை. வருகின்ற கிறிஸ்மஸ் விழா

விலே, அவருடனிருக்கும்படியான பாக்கியம் கிடைக்குமென்று நினைக்கிறேன். கிறிஸ்மஸ் நாள் சாயந்திரம், அவரை நான் என் வீட்டுக்கு வரும்படிச் சொன்னேன் என்று சொல்"என்று தன் வேலைக்காரியை அனுப்பினாள் எலினு.

* * *

கரையில்லாக் களிப்பெய்தினான் ரினேரி. குறிப்பிட்ட நாளிலே குறித்த நேரத்திலே, ரினேரி, மங்கையின் மாளிகைக்குச் சென்றான். சேடி அவனை முற்றத்தில், மதில் சுவருக்குள்ளே, திறந்தவெளியில் நிறுத்திப் பூட்டிவைத்தாள். எலினு வருவாளென்று இவனும் காத்திருந்தான்.

அன்றிரவைத் தன்னுடன் கழிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தாள் தன் வாலிபக் காதலனுக்கு அழகி எலினு. காதலனும் வந்தான். இரவு சாப்பாட்டுக்குப்பின்னல், தான் செய்யப்போவதைப்பற்றி அவனுக்குத் தெரியப்படுத்திவிட்டு, மேலும் சொன்னாள்: "நான் அந்தப் பண்டிதன் மேல் வைத்திருக்கிற அன்பு, எவ்வளவு பெரியது என்று நீ இப்பொழுது பார்க்கலாம். அநாவசியமாகப் பொறுமைப்பட்டாய்!" என்றாள். அவனும் அதை ஆவலோடு கேட்டான், அவள் காரியத்தைக்காண ஆசைப்படுபவன் போல.

அன்றைய தினத்துக்கு முன்னல் ஏராளமான பனி பெய்திருந்தது. எல்லா இடங்களிலும் பனிமூடிப் போயிருந்தது. வழக்கத்தைவிட கடுமையான குளிரினல் கஷ்டப்பட்டான் ரினேரி. பொறுமையோடு தாங்கிக்கொண்டான், பின்னல் பெறப் போகும் இன்பங்களையெண்ணி!

சிறிது நேரத்திற்கெல்லாம் எலினு தன் காதலனிடம் "வா! படுக்கையறைக்குச் செல்வோம், பலகணி வழியாய்ப் பார்ப்போம். நீ பொறுமையுள்ளத்தால் அஞ்சிய அம்மனிதன் என்ன செய்கிறுனென்று கவனிப்போம். வேலைக்காரியை விட்டிருக்கிறேன்" என்று சொல்லி, அவனை இழுத்துச் சென்றாள் மேல் மாடிக்கு. அவனுக்குத் தெரியாமல் அவனைப் பார்த்தார்கள். அப்பொழுது தோழி சொல்லிக்கொண்டிருந்தாள்:

"ஐயா! உங்களிடம் வந்து இருக்க முடியாதிருப்பதற்காக, என் எசமானி பித்துப்பிடித்தவர் போலிருக்கிறார்கள். சாயுங்காலம் அவர் சகோதரர் ஒருவர் அவரைப் பார்க்கவந்துவிட்டார்கள். அவரோடு சாப்பிடப் போகிறார்கள். இன்னும் போனபாடில்லையே. ஆனல் நான் நினைக்கிறேன், அவர் அதிகநேரம் தங்கமாட்டாரென்று. இந்தக் காரணத்தால் தான் என் எசமானியம்மா வர முடியவில்லை. வரமுடிந்த உடனே வந்துவிடுவார்கள். உங்களைக் காக்க வைத்ததை, நீங்கள் வேறுவிதமாக நினைத்துக்கொள்ளக் கூடாதென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்." ரினேரி அதை உண்மையென்று நம்பிச் சொல்லுகிறான்: "ஓ! என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லையென்று உன் எசமானியிடம் சொல். சவுகரியமாக வரமுடிந்தபொழுது வரட்டும். ஆனல் அவள் அதிக காலதாமதம் செய்யாமலிருக்கநான் வேண்டுகிறேன்" வேலைக்காரி பிறகு தன் படுக்கைக்குச் சென்றுவிட்டாள்.

* * *

"நல்லது. நீ இப்பொழுது என்ன நினைக்கிறாய்? நீ எண்ணியதுபோல நான் அவன்மேல் ஆசைகொண்டிருந்தால், அவனை அந்த அறையிலேயே குளிரினால் விரைத்துப்போக விடுவேனென்று உன்னால் கற்பனை செய்யமுடிகிறதா?" என்று தன் காதலனைப் பார்த்துக் கேட்டாள் எலினா. அவனுடன் படுக்கைக்குச் சென்றாள். காதலன் சந்தேகம் மறைந்தது. படுக்கையில் படுத்து, பாவம், அந்த அப்பாவி மனிதனைப் பற்றிப் பலபல பேசிச் சிரித்தார்கள். அவனோ முற்றத்து வெளியில், முன்னும் பின்னும் நடந்தவண்ணமிருந்தான். குளிரில் உறைந்துபோகாமலிருக்க, உட்காருவதற்குக்கூட ஒன்றுமில்லை. சில்லென்று வீசும் காற்றினின்றும் விலகவும் வழியில்லை. சகோதரன் சாவகாசமாகத் தங்கிக்கொண்டானே என்று அவனை மனதில் சபித்தான். காதில் விழும் சப்தமெல்லாம், கதவு திறக்கும் சப்தம்தானோவென்று எதிர்பார்த்து ஏமாந்தான். இன்பக் கேளிக்கைகளுக்குப் பிறகு, பாதி ராத்திரியில் எலினா தன் காதலனிடம் சொன்னாள்:

"நல்லது. என் காதல! இப்பொழுது, நீ பண்டிதரைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகிறாய்? இந்த சமயத்திலே உன்னிடமுள்ள என் காதல் பெரிதா? அவன் அறிவு பெரிதா? எது வல்லது என்று எண்ணுகிறாய்? உன்னுள்ளத்திலெழுந்த பொறுமையின் வெறுப்புணர்ச்சியை அவன் அனுபவிக்கும் கடுங்குளிர் சமப்படுத்திவிட்டதா?"

"ஓ! என் பொற்கொடியே! நீதான் என் இன்பக் களஞ்சியம். ஆறுதலின் உறைவிடம். உன்னடிமை நான்" என்றான் காதலன்.

"அப்படியானால் எனக்கு ஆயிரம் முத்தங்கள் கொடு," அவன் ஆயிரம் முத்தங்கள் கொடுக்கவில்லை. பத்தாயிரம் முத்தங்கள் கொடுத்தான்! இம்மாதிரியான இன்பச் சேட்டைகளுக்குப் பிறகு, "தயவு செய்து கொஞ்ச நேரம் எழுந்திரு. என் புதுக்காதலன் எனக்கெழுதிவிடுத்த அஞ்சல்களில் . சொல்லியிருக்கும் ஆசைக்கனல், இன்னும் கொழுந்துவிட்டெரிகின்றதா என்று பார்த்து வருவோம்" என்று சொல்லி, எழுந்தாள் எலினா. மறுபடியும்சன்னலிடம் சென்று, ரினேரியைப் பார்த்தார்கள். ரினேரி தன் பற்களெல்லாம் தந்தியடிக்க, தன் முழு பலத்துடனும் குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகப் பனியிலே நாட்டியமாடிக் கொண்டிருந்தான்.

"பார்த்தாயா? மத்தளமில்லாமல், வீணையில்லாமல் வித்வானை நடனமாடச் செய்துவிட்டேன். வா! கதவருகில் செல்லலாம். நான் அவனிடம் பேசுகின்றேன். அது இன்னுங் கொஞ்சம் நன்றாயிருக்கும்," என்றாள் இளஞ் சீமாட்டி.

மெதுவாக நடந்து சென்றாள். சாவித்துவாரத்தின் வழியாக அவனைக் கூப்பிட்டாள். ரினேரிக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவில்லை. கதவினிடம் சென்றான். "இதோ இருக்கிறேன் பெண்ணே! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும், கதவைத் திற. நான் இங்கு குளிரினால் சாகும் நிலைமையிலிருக்கிறேன்" என்றான்.

"நிச்சயமாக நீங்கள் இந்தச் சாதாரண குளிரினால் சங்கடப்பட முடியுமென்று நான் நம்பவில்லை. பாரிஸிலே இன்னும் அதிகக் குளிராயிற்றே! ஆனால் நான் உங்களை இப்பொழுது உள்ளே விடமுடியாத நிலைமையிலேயிருக்கிறேன். ஏனெனில், இந்த துரதிர்ஷ்டம்பிடித்த என் சகோதரன், போன இரவு என் வீட்டிற்குச் சாப்பிட வந்தவன் இன்னும் போனபாடில்லை, ஆனால் அவன் சீக்கிரம் போய்விடுவான், பிறகு நான் உடனே வந்து கதவைத் திறக்கிறேன். இப்பொழுதுகூட மிக்க சிரமப்பட்டுத்தான் அவனை விட்டுவிட்டு உங்களிடம் வரமுடிந்தது. இவ்வளவு நேரம் காத்திருப்பதற்காக சஞ்சலப் படவேண்டாம் என்று சொல்லிப் போக வந்தேன்" என்று பதிலளித்தாள்.

"அப்படியானால் உன்னைக் கெஞ்சுகிறேன். கதவையாவது திறந்துவிடு. பனி ஏராளமாகப் பெய்கிறது. உள்ளேயாவது வந்து சற்று மறைப்பாக இருக்கிறேன். அதற்குப் பிறகு எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் காத்திருக்கிறேன்" என்றான்.

"ஐயோ! என் ஆசை நாயகரே! இந்தக் கதவைத் திறந்தால் சப்தம் போடுமே. அது என் சகோதரன் காதில் விழுந்துவிடுமே. அவனைப் போய் நான் முதலில் வழியனுப்பிவிட்டு, பிறகு வந்து கதவைத் திறக்கிறேன்" என்றாள்.

"உடனே செய். நான் வரும்பொழுது நன்றாக நெருப்புஎரிந்துகொண்டிருக்கட்டும். ஏனெனில் என் உடம்பே மரத்துப் போய்விட்டது. உணர்ச்சியும் அற்றுவிட்டது" என்றான் ரினேரி.

"என்றால் அதை நம்பமுடியாது. உங்கள் கடிதங்களில், உன்மேல் கொண்ட மோகதாபத்தால் எரிகின்றேன் என்றெழுதினீர்களே, இப்பொழுதான் தெரிகிறது இவ்வளவு நாள் எழுதியதெல்லாம் வெறும் புரட்டு என்று. எப்படியிருந்தாலும் நான் போகிறேன். தைரியமாயிருங்கள்" என்றாள் எலினா.

இந்த சம்பாஷணையைக் கேட்டு சந்தோஷமடைந்த காதலனும், அவளுடன் படுக்கை யறைக்குத் திரும்பினான்.

பாவம், அறிஞன் ரினேரி சிறிது நேரம் ஒரு காலிலும், பிறகு மற்றொரு காலிலும் நாரையைப்போல் நின்று, நின்று பார்த்தான். அவன் பற்கள் கிட்டிப்போயின! காலஞ் செல்லச்செல்ல, தன்னை அவமானப்படுத்தச் செய்யப்பட்ட சூழ்ச்சியின் வஞ்சக நோக்கத்தை உணர்ந்தான். கதவைத் திறக்கப் பல முயற்சிகள் செய்தான். வெளியேற வேறு மார்க்கங்கள் உண்டாவென ஆராய்ந்தான். காணவில்லை. தான் சுலபமாக ஏமாந்ததை எண்ணி நொந்தான். காலநிலையைக் கடிந்துகொண்டான். அவள் குரூர எண்ணங்கண்டு கலங்கினான். நீண்ட இரவை எண்ணி நெஞ்சங் குமுறினான். அவள்மேல் வைத்த அன்பு அருவருப்பாக மாறியது. பாசம் பழிவாங்கும் உறுதியாகப் பரிணமித்தது. வஞ்சம் தீர்த்துக்கொள்ள வழி வகுக்க ஆரம்பித்தான்.

இப்படியாக அவன் இரவு பூராவும், திறந்த முற்றத்திலே நிறுத்தி

வைக்கப்பட்டான். பொழுது விடிந்தது! சொல்லிவைத்தது போல வேலைக்காரி வந்தாள். "ஐயா! நாங்கள் கொடுத்துவைக்கவில்லை. இரவு வந்த மனிதனால் எவ்வளவோ இடைஞ்சலாய்விட்டது. அதனால் நீங்கள் பாவம், அதிகமான அவதிக்காளாகிவிட்டீர்கள். உங்களுக்குத் தெரியாததில்லை. பொறுமையோடிருங்கள். வேறொரு சந்தர்ப்பத்தில் வேலையை முடித்துக்கொள்ளலாம். என் எசமானியம்மாளுக்கு இது மிகவும் கவலையைக் கொடுத்துவிட்டது" என்றாள்.

வந்த எரிச்சலை அடக்கிக்கொண்டான் ரினேரி. கற்றபாடத்தை அதற்குள் மறந்துவிடுவானா? அவர்களைப் பயமுறுத்தினால், அந்தப் பயமுறுத்தல்களை அவர்கள் தன்மீது பாணங்களாக உபயோகிப்பார்கள் என்று, எந்த உணர்ச்சியையும் அவன் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மிகுந்த பணிவோடு சொன்னான்; "உண்மையிலேயே இதைவிடமோசமான இரவை, என் வாழ்நாளிலேயே அனுபவித்ததில்லை. ஆனால் உன் எசமானியை ஒன்றுங் குற்றஞ் சொல்வதற்கில்லை. எவ்வளவோ அக்கரையுடனும், அன்புடனும் என்னைத் தேற்றி, ஆறுதல் சொல்லிப் போனாள். நீ சொல்வதுபோல் வேறொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம். நல்லது நான் போய் வருகிறேன். உன் எசமானியிடம் என் நன்றியைத் தெரிவி."

தள்ளாடித் தத்தளித்து, குளிரினாலும், தூக்கம் விழித்ததாலும் களைத்துப்போய், வீடு சேர்ந்து தன் படுக்கையில் விழுந்தான் ரினேரி. விழித்த பொழுது, கையும் காலும் மரத்துப்போய், சுவாதீனம் இழந்ததைக் கண்டான். மருத்துவர்களை வரவழைத்து மருந்து பூசினான். இளைஞனாயிருந்ததால் எளிதில் பூரண ஆரோக்கியத்தைப் பெற்றான். இல்லையேல் ஆபத்தாய் முடிந்திருக்கும். பூரண குணமடைந்ததும், வஞ்சத்தை நெஞ்சிலேயே வைத்துக்கொண்டு, வழக்கம்போல் அவளிடம் ஆசை கொண்டுள்ளவனாகவே காட்டி வந்தான். கடைசியிலே பழி தீர்த்துக்கொள்ள அருமையான ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

அவனுடைய காதலன் ஒரு தேன் வண்டு, எனவே வேறொருத்தியின் மேல் கவனஞ் செலுத்த ஆரம்பித்தான். எலினா கண்ணீரால் கரைய ஆரம்பித்தாள். தன்னைக் கைவிட்டு விட்டானேயென்று கலங்கினாள். அவள் காதலனை இழந்த துக்கத்தை ஆற்றும் வகை தெரியாது, வேலைக்காரி வேதனைப்பட்டாள்.

ரினேரி அவ்வழியே சில சமயம் செல்வதைக் கண்ணுற்றாள் அவள். அவள் மூளையில் ஒரு மூடஎண்ணம் உதித்தது. மாந்திரீகத்தால் எலினாவின் மாஜி காதலனின் மனந் திருந்தும்படிச் செய்யலாமென்று எண்ணினாள். மாந்திரீக வேலையிலே ரினேரி மகா நிபுணன்என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். எனவே இதைப்பற்றி எலினாவிடம் எடுத்துச் சொன்னாள்.

மாந்திரீக வேலை தெரிந்தவனாயிருந்தால், தன் மனதையே மயக்கியிருக்கமாட்டானாவென்பதை நினைத்தாளில்லை அந்த மதியில்லாச் சீமாட்டி. [அடுத்த இதழில் முடிவுறும்]

# மதத்தின் பெயரால்.

[எம். சீதாராமன்.]

ஆதாம், மோசசு முதலிய தீர்க்கதரிசிகளும், யூதர்களின் மதநூலாகிய பழைய ஏற்பாடும், கிறிஸ்துவ மதத்திற்கு அஸ்திவாரம். எனினும் கிறிஸ்துவர்கள் தங்கள் நாடுகளில், குறிப்பாக நடு ஐரோப்பிய நாடுகளில் யூதர்களைத் துன்புறுத்துகிறார்கள். யூதர்களின் தீர்க்கதரிசிகளும், மத நூலும் கிறிஸ்துவும், அவர் மத நூலாகிய புது ஏற்பாடும், இஸ்லாம் மதத்திற்கு அடிப்படை. அஹ்ல்—அல்—கிதாப், அல்லது மத நூல் மக்கள் யூதர்கள் என்பதாலும், கிறிஸ்துவர்கள் கூறுவதுபோல், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற முப்பான்மையற்று, கடவுள் ஒன்றே என்ற கோட்பாட்டில், யூதர்களும் முஸ்லிம்களும் ஒரே மனப்பான்மை யுள்ளவர்கள் என்பதாலும், முஸ்லிம்கள் தங்களுடைய எல்லா நாடுகளிலும் யூதர்களைச் சமமாகக் கருதுகிறார்கள்.

முதல் உலகப் போருக்கு முன்பு, துருக்கி ஆட்சியில் இருந்த அரபு நாட்டின் ஒரு பகுதி பாலஸ்தீனம். அதில் வசிக்கும் ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட அரபு முஸ்லிம்கள், அங்குள்ள சொற்பத் தொகையுள்ள யூதர்களையும், அரபுகிறிஸ்துவர்களையும் நட்புடன் பாராட்டிவந்தார்கள். 1914—18 ல் நடந்த போரில், ஆங்கிலர்களின் தூண்டுதலால், அரபியர்கள் துருக்கியரை, பாலஸ்தீனம் உள்ளிட்ட தங்கள் அரபுநாட்டிலிருந்து விரட்டினார்கள். அதன் பின்பு அரபு மொழியாகிய ஒரே மொழி வழங்கிவரும் அரபு நாட்டை, ஆங்கிலர்கள் சின்னாபின்னமாக உடைத்து, ஏழெட்டு நாடுகளாகப் பிரித்து, அரபுகளுக்குள் ஒற்றுமையின்றி மேலோங்கி வளரவிடாமற்செய்து, வெளிநாட்டு யூதர்களைக் குடியேற்றி, பாலஸ்தீன யூதர்களைப்பலப்படுத்தி, யூதர்களுக்கு ஆயுதங்களையும் பொருளையும் உதவி, அரபு நாட்டுக்கு மத்தியில் ஒரு யூத அல்ஸ்டரை (Ulster) ஏற்பாடு செய்யத் துவக்கினர்.

"அல்ஸ்டர்" என்பது அயர்லாந்திற்கு விரோதமான வடபாகமாகிய அல்ஸ்டர் மாகாணம். ஆங்கிலர்க

ளால் தூண்டப்பட்டு, அயர்லாந்திற்கு இன்றும் விரோதமாக உள்ள ஒரு மாகாணம், அல்லது ஒரு சிறு நாடு. இம்மாதிரி கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கப்படும் நாட்டுக்கு "அல்ஸ்டர்" என்பது இப்பொழுது வழங்கும் ஒரு பொதுப் பெயர்.

இரண்டாவது உலகப்போரில் உண்டான சில நிகழ்ச்சிகளின் பயனாக, யூத மதத்தினர் ஆயுதங்களை வேண்டிய வரை தயாரித்துக்கொண்டு, பாலஸ்தீனத்தில் தங்களுக்கென ஒரு யூத சர்க்காரை 1948 மே மாதத்தில் ஏற்படுத்திக்கொண்டார்கள். பின்பு ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய ஏழு லட்சம் அரபு முஸ்லிம்களை, பாலஸ்தீனத்திலிருந்து மதத்தின் பெயரால் நாடு கடத்தினர். இந்த ஏழு லட்சம் பாலஸ்தீன முஸ்லிம்களும், இதர நாடுகளில் பல துயரத்திற்கு ஆளாகி மடிகின்றார்கள். முஸ்லிம்கள் யூதர்களைப் பட்சமாக நடத்தினதற்கு, யூதர்கள் அதே முஸ்லிம்களைத் துன்புறுத்துவது, மதத்தின் பெயரால் செய்யப்படும் நன்றி மறந்த செயலாகும்.

**அறிவு.**

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும். —திருவள்ளுவர்.

தென்றல் வெளியீடுகள்.

★

மு. கருணாநிதி எழுதிய
ஒரே முத்தம் 1-4-0

சி. பி. சிற்றரசு எழுதிய
சிந்தனைச் சுடர் 0-5-0

ப. கண்ணன் எழுதிய
கன்னியின் சபதம் 0-8-0
சிந்தனைச் சித்திரம் 0-10-0
மின்னொளி 0-6-0

பாவலர். வேலாயுதசாமி எழுதிய
திருக்குறள் இசைப்பாடல்
அறத்துப்பால் 0-7-0

ப. க, குஞ்சிதம் எழுதிய
வால்முளைத்த சாமியார் 0-2-0
கேட்டிக்காரன் 0-2-6
பைங்கிளி 0-2-0

●

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 %

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

# ★ வால்டையர் ★

பதினேழாம் நூற்றாண்டில் போப் பரசராலும், பாதிரிகளாலும், மூட நம்பிக்கையாலும் ஆளப்பட்டு வந்தது ஐரோப்பா. அப்பொழுது பகுத்தறிவு என்பது பைத்தியக்காரத்தனம் என்று அழைக்கப்பட்டது! மத நம்பிக்கை, மக்களை மனிதத் தன்மையிலிருந்து விலக்குத் தன்மைக்கு இழுத்துச் சென்றுவிட்டிருந்தது! அந்நிலையிலே,

கி. பி. 1694-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி பிரான்சிலே பிறந்தார் வால்டையர். பிறந்தவுடன் இறந்துவிடும் நிலையிலிருந்ததால், இறந்தாலும் நரகத்துக்குப் போகாதிருக்க "ஞான" நீரைத் தெளித்து பிரான்காய் மேரி அருவே *FRANCOIS MARIE AROUET* என்று பெயரிட்டார் ஒரு பாதிரியார்!

வால்டையர் பிறந்தது, உழைத்து வாழும் ஒரு சாதாரணக் குடும்பத்தில். அவருடைய அன்னை அவருடைய ஏழாம் வயதிலேயே இறந்துவிட்டார். அவருக்கு ஒரு அண்ணன் உண்டு. பெயர் ஆர்மாண்டு. தம்பியின் நாத்திகத்தை மன்னிக்குமாறு கடவுளுக்குக் காணிக்கை செலுத்தும் மதப் பித்தன் அவன்! சகோதரனின் முட்டாள்தனமான செய்கையைக் கண்டு வருத்தப்படுவான் வால்டையர்.

வால்டையரின் தந்தை அவனை ஒரு வழக்கறிஞனாக்க விரும்பினார். ஆனால் வால்டையருக்கு சட்டம் பயிலச் சிறிதேனும்விருப்பமில்லை. வால்டையர் தன் பத்தாம் வயதில் லூயிலா கிராண்டு என்ற பாதிரிமார்களது பள்ளியில் சேர்ந்தான். ஆனால் அதில் ஏழே ஆண்டுகள் தான் படித்தான். அதன்பின் அதிலிருந்து நீங்கி விட்டான். அதோடு பள்ளிப் படிப்பையே கைவிட்டுவிட்டு, தன் வாழ்வை இலக்கியத் துறையில் செலுத்த நினைத்தான். அப்பொழுது அவனுக்கு வயது பதினேழு!

சட்டம் பயிலமாட்டேன் என்று கூறிய வால்டையரை, 'காதல் நிகழ்ச்சி, சட்டம் பயில வைத்துவிட்டது! ஆம்; அவர் ஒரு பெண்ணைக் காதலித்தார். அப்பெண்ணின் தாய் அதற்கு உடன்படவில்லை. காதலர் சந்திப்பையும், உறவையும் பலமாகத் தடுத்தாள். ஆகவே வால்டையர், தன் காதலி ஆண்வேடம் பூண்டு தன்னிடம் வரும்படி ஏற்பாடு செய்தார்! அவருடைய ஏற்பாடு கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. இதற்காகச் சினந்த அவருடைய தந்தை, அவருக்குச் சொத்துரிமையை மறுத்துவிட்டார். அதோடு வால்டையர் சிறை செல்லவேண்டும், இல்லாவிடில் நாடு கடத்தப்படவேண்டும் என்றெல்லாம் பயமுறுத்தினர். அதன் விளைவாகக்

கடைசியில் வால்டையர் ஒரு வழக்கறிஞராகச் சம்மதித்தார்!

புகழ்பெற்ற வழக்கறிஞர் ஒருவரிடம் வேலைக்கமர்ந்தார். ஆனால் நாளடைவில் அதில் அவருக்கு வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது. கடைசியில் அவ்வேலையை உதறித் தள்ளினார். கவிதைகளும், கதைகளும், நாடகங்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதித் தன் வாழ்வை இலக்கியத் துறையில் அமைத்துக்கொண்டார். எழுதுவது அவருக்குப் பிடித்தமான வேலை.

சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான கட்டுரைகள் பல எழுதி வெளியிட ஆரம்பித்தார். மன்னனின் குற்றங்களையும், தெய்வீகத் தவறுகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்த காரணத்துக்காக, டூல் (*TULL*) என்ற இடத்திற்கு அரசினரால் நாடு கடத்தப்பட்டார். சில நாளில் தண்டனையை அனுபவித்து விட்டு, மீண்டும் தன் நாட்டிற்குத் திரும்பினார். அறிவுப் புரட்சியைக் கிளப்பினார். மறுமுறையும் கைது செய்து "பாஸ்டைல்" என்ற சிறைச்சாலையில் ஓராண்டு வைத்திருந்தார்கள். அந்த சிறைச்சாலையில் தான் பிரான் காய்மேரி அருவே என்ற தன் பெயரை **வால்டையர்** என்று மாற்றிக்கொண்டார். சிறைச்சாலையில் இருந்தாலும், மன்னனென்றும் மதியாது அவனின் குற்றங்களையும், பல மாறுபட்ட புரட்சிக் கருத்துக்களையும் வெளியிட்டமையால், வால்டையர் இங்கிலாந்திற்கு நாடு கடத்தப்பட்டார்.

இங்கிலாந்திலே உள்ள **யங்** (*YOUNG*), சுவிஃப்ட் (*SWIFT*), போன்ற அறிஞர் பலரோடும் பழகும் வாய்ப்பு கிட்டிற்று. நூல்கள் பல எழுதினார். சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். ஐரோப்பாவெங்கும் பரவத் தொடங்கிற்று அவரது புகழ்!

அப்பொழுது பிரான்சிலே ஒரே ஏசு கிறிஸ்துவின் இரண்டு மதங்கள் வலுத்திருந்தன. ஒன்று கத்தோலிக்க மதம். மற்றது புராட்டஸ்டண்டு மதம். இரண்டு மதத்தினர்க்கும் அடிக்கடி சச்சரவு நிகழ்வதுண்டு. அந்த சச்சரவு, கொலை வரையில் சென்று நிற்கும்!

டூலாஸ் (*DULAS*) மதப்பித்தர்கள் நிறைந்த நகரம்! அங்கு **ஜீன்கலாஸ்** என்ற புராட்டஸ்டண்டு மதத்தினன் ஒருவன் இருந்தான். அவன் மகன் **மார்க்கு ஆண்டாயின்** என்பவன் சட்டம் பயில நினைத்தான். ஆனால் கத்தோலிக்கர்கள் மட்டுமே சட்டம் பயிலலாம். தொழில் நடத்தலாம்! ஆகவே, தான் புராட்டஸ்டண்டு மதத்தினன் என்பதை மறைத்துத் தொழில் செய்ய அனுமதி (*LICENSE*) வாங்க முயன்றான் ஆண்டாயின், அவனுடைய செய்கை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அவமானமடைந்த ஆண்டாயின் தற்கொலை செய்து கொண்டான் தன் தந்தையின் கடையிலே! ஆனால் டூலாஸ் நகர மக்கள், ஆண்டாயின் கத்தோலிக்க மதத்தைத் தழுவாமலிருக்க, அவனுடைய பெற்றோரே அவனைக் கொலை செய்தனர் என்று குற்றம் சாட்டினர். ஆரவாரித்தனர். உடனே ஜீன்கலாசைக் கைது செய்து விசாரித்தனர் அரசினர். தான் கொல்லவில்லை என்று கண்டிப்பாகக் கூறினான் ஜீன்கலாஸ். ஆனால் அவன் பேச்சு நீதி

பதிகள் காதில் ஏறவில்லை! கடைசியில் மனிதனென்ற இரக்கம் நெஞ்சத்தில் கொஞ்சமும் இன்றி, ஜீன் கலாஸின் கை கால், மூட்டுகளை இரும்பால் அடித்து நொறுக்கியும், சதை பிய்ந்து, இரத்தம் ஒழுகும் வரை சவுக்கால் அடித்தும், எரியும் நெருப்பில் ஆட்டைப்போல வாட்டியும், அணு அணுவாக அவன் உயிரைப் போக்கினார்கள்! மற்றும் ஆபிவில் என்னும் ஊரிலே பாலம் ஒன்றின் மேலிருந்த மரச் சிலுவை ஒன்று கத்தியால் செதுக்கப்பட்டிருந்த காரணத்துக்காக, ஒன்றுமறியாத இரண்டு இளைஞர்கள் அநியாயமாகச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல நடந்துகொண்டிருந்தன அப்பொழுது பிரான்சிலே! இவற்றையெல்லாம் கண்ட வால்டையரின் மனம் கொதித்தது. உயிருள்ளமனிதனைவிட உயிரற்ற—ஒன்றன்குறுக்கே ஒன்று பாய்ந்திருக்கும்—மரச் சட்டங்கள் சிறந்தவை என்று கருதும் மக்கள் நிலையைக் கண்டு வருந்தினார்! ஜீன் கலாசுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு கொடுமையானது, மனிதப் பண்புக்கு மாறுபட்டது என்று மந்திரிகளோடும், வழக்கறிஞரோடும் வாதாடினார். மக்களின் மதவெறியினால் உயிர்துறந்த ஜீன்கலாசின் புதல்வன் ஒருவனைத்தேடி, தன் வீட்டில் வைத்து வளர்த்தார். அவருடைய முயற்சியின் பயனாக, ஜீன்கலாஸ் நிரபராதி என்று கூறப்பட்டு, அவனுக்களித்த தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது! ஜீன்கலாசின் புதல்வர்களுக்கு நிதியும் அளிக்கப்பட்டது!

இவ்வாறு திக்கற்றோருக்கும், ஏழை எளியோருக்கும் உதவினார் வால்டையர்! அவர் அடிமைத் தன்மையை வெறுப்பவர். சுதந்திர வாழ்வே அவருடைய குறிக்கோள். "மனிதர் அனைவரும் பிறப்பில் சமம்" என்பது அவருடைய லட்சிய முழக்கம், அவரது கருத்தும், எழுத்தும் அழியாப் பெருஞ் சுடர்.

வால்டையர், தன் கடைசி காலத்தில்தான் தாய் நாட்டிற்குத் திரும்பினார். பாரிஸ் நகரில் மக்கள் வரவேற்றனர். அவருக்கு, அகடெமி கழகத்தார் வரவேற்பு வழங்கினார்கள். அப்பொழுது அவர் எழுதிய "ஜீன்" என்ற நாடகம் நடித்துக்காட்டப்பட்டது. முன்பு தூற்றினவர்களெல்லாம் இப்பொழுது போற்றினார்கள்!

ஜெர்மனிய நாட்டு அறிஞர் கதே (GCOTHE) சொன்னார்; "நீங்கள் உலகில் காணவேண்டியது உண்மையை நாடும் உணர்வும், சிந்தனையும், பகுத்தறிவும், சிறந்த எண்ணமும், மேலான தத்துவமும், ஆழ்ந்த கருத்தும், விரிந்த அறிவும், அன்பும் தான்! இதற்கு நீங்கள் வால்டையரிடம்தான் செல்லவேண்டும்" என்று. "நாட்டிலே மலிந்துகிடந்த மூட நம்பிக்கைகளைக் களைந்தவர் வால்டையர்" என்று கூறினார் ஸ்காட்லாந்து அறிஞர் கார்லைல்! இப்படி அறிஞர் பலராலும் போற்றப்பட்ட வால்டையர், மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடிய வால்டையர், பகுத்தறிவைப் பரப்பிய வால்டையர் 1778-ம் ஆண்டு, மே மாதம் 30-ம் நாள் இயற்கை எய்தினார். என்றாலும் அவர் பகுத்தறிவு படைத்த உள்ளங்களிலெல்லாம் நிரந்தரமாக உலவிக்கொண்டுதானிருக்கிறார்! அவரது பொன்னான கருத்துக்கள் எங்கும் பரவுகின்றன. வளர்க பகுத்தறிவு! வாழ்க வால்டையரின் புகழ்!

-தில்லை. மறைமுதல்வன்




தொழில் இல்லாத வாழ்வு குற்றம்; கலை இல்லாத் தொழில் மிருகத்தனம்.

— இரஸ்கின்.

மதப் பிடிவாதி ஆஃபிரிக்க எருமை போன்றவன். நேரே தான் பார்ப்பான், பக்கங்களில் திரும்பான்.

—பாஸ்டர்.

ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத்தக்கசெயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.

— திருவள்ளுவர்.

எல்லோரையும் நேசி. சிலரை நம்பு ஒருவருக்கும் கெடுதி செய்யாதே.

— ஷேக்ஸ்பியர்.

உழைப்பின்றி உண்பவர்களைத் திருடர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.

— காந்தியார்.

இன்று உன்னால்முடிந்த மட்டும் நன்றாகச் செய். நாளை அதினின்றும் மிக நன்றாகச் செய்யும் ஆற்றல் பெறுவாய்.

— நியூட்டன்.

உங்களது உடலையும், அறிவையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென ஒதுக்குக.

— விவேகானந்தர்.

# யாகமா? போகமா?

யத்தரிணம் யவமத்தி நபுஷ்டம்
பசுமன்யதே;
சூத்ராயதர்ய, ஜாரா நபோஷாய
தனயதி

(யஜுர் வேதம்)

**பொருள்:—** *பயிரை மேயும் மானைப் பார்த்து, பயிர்ச் சொந்தக்காரன் மான் சுகத்தையடையுமே என்று எண்ணுமல், இம்மான் பயிரைத் தின்றுவிட்டதே என்று வருந்தப்படுவதுபோல், ஆரியரால் புணரப்பட்ட தன் மனைவியைப் பார்த்து சூத்திரன் துன்புறுகிறான்.*

*இது புத்ரகாமேஷ்டி யாக மந்திரங்களில் ஒன்று. யஜுர்வேதத்தின் அங்கங்களில் ஒன்றாகிய வாஜஸனேயி சம்ஹிதையில் இருக்கிறது.* **மகீதராச்சாரியர்** *என்பவர் இதற்குத் தெளிவாக பாஷ்யம் எழுதியிருக்கிறார். ஐயப்படுவோர், யஜுர்வேதம* **அத்தியாயம் 23. பாட்டு 20**-*லிருந்து மகீதரபாஷ்யம் பார்க்கவும்.*

*இம்மாதிரி இனத்துவேஷமும், ஆபாசக் கருத்துக்களும் கொண்ட சுலோகங்களின் உறைவிடமே, புனிதமான* **வேதம்** *என்று போற்றப்படுகிறது! ஒழுக்கவீனத்தையும், பச்சை விபசாரத்தையும் விவரிக்கும் காமக் களஞ்சியங்களை, வேதமந்திரங்களாகக்கொண்டு நடைபெறும் யாகங்களின் யோக்யதையைப் பாருங்கள். இது யாகமா? போகமா?*

*பட்டமகிஷிகளை விட்டுக் குதிரையைப் புணரச் செய்யும், மகத்துவம் பொருந்திய புத்திரகாமேஷ்டி யாகத்திலே நடைபெறும் சடங்குகளில், க்ஷத்தா என்பவன் ஒரு பெண்ணிடம் பேசவேண்டிய சுலோகம் இது. இம்மாதிரி இனவெறியின் சிகரமான, அநாகரிமான, கொடுமையான கருத்துடைய சுலோகங்கள் எத்தனை? சடங்குகள் எத்தனை? யாக வகைகள் எத்தனை? இவற்றை ஒப்புக் கொள்ளும்தமிழன் அறிவுள்ளவனுக, மானமுள்ளவனுக இருக்கமுடியுமா?*




[முன் இதழ் தொடர்ச்சி]

நான் பைபிள் என்ற நூலைப் படிப்பதாகவும், அதனைப் படித்துப் பார்த்த பிறகு, அது மனிதர்களாலேயே எழுதப்பட்டதாகும் என்ற முடிவுக்கு வருவதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மந்திரி, "நீ அந்தப் பைபிளைப் படித்ததுண்டா?" என்று கேட்கிறான். "படித்திருக்கிறேன்" என்று நான் பதிலிறுக்கிறேன். "அது ஆண்டவன் அருள் வாக்காலே எழுதப்பட்டது என்று அதனை நீ நினைக்கிறாயா?" என்று கேட்கிறான். அதற்கு நான் என்ன பதிலைச் சொல்வது? 'மத நூல்கள் அருள் வாக்கலே எழுந்தன என்பதை நான் மறுத்தால், எனக்கு எவ்வித அதிகார அலுவலையும் மக்கள் தரமாட்டார்களே' என்று எனக்குள்ளே நானே நினைத்துக் கொண்டு மாற்றிக்கூற நினைப்பதா? நான் என்ன பதிலைச் சொல்வது? "நான் அதனைப் படித்தேன்; அதனை நான் நம்புவதற்கில்லை" என்று சாதாரணமாகக் கூறுவதுபோல் கூறிவிடவேண்டியது என் கடமையல்லவா? என் உள்ளத்தில் தோன்றியதை, தோன்றியபடியே நான் வெளியிடவேண்டியது முறையா? அல்லது நான் ஏமாற்றுபவனாக மாறி, நான் எப்படி உணர்ந்தேனோ அப்படி உணரவில்லை என்று பாசாங்குசெய்து, எதற்கும் வளைந்து கொடுக்கும் கோழையாகி, என்னை நானே எப்பொழுதும் வெறுத்துக் கொள்ளவேண்டியது முறையா? என்னைப் பொறுத்தவரையில், நான் நேர்மையாகச் சிந்தித்ததைச் சிந்தித்தபடியே வெளியிடும் மனிதனாகவே வாழ விரும்புகிறேன். மனிதத் தன்மையைக் காப்பாற்றும் ஒருவனாகவே நான் எப்பொழுதும் இருக்க விரும்புகிறேன். மனிதத் தன்மையில்லாமல் மத நம்பிக்கையுடைய ஒருவனாக இருப்பதைக் காட்டிலும், மனிதத் தன்மையோடு மத நம்பிக்கையற்ற ஒருவனாக வாழ்வதையே நான் ஆயிரம் மடங்கு சிறந்ததாகக் கருதுகிறேன். தீர்ப்புக் கூறும் இறுதி நாள் என்றொரு நாள் இருந்தால்— எல்லா மக்களும் ஆண்டவன் முன்னிலையில் நிறுத்தப்படும் காலம் என்று ஒன்று வந்தால், அப்பொழுது, நான் நம்பாத ஒன்றை நம்புவதாக வாழ்வு முழுவதும் பாசாங்கு

செய்யும் ஒருவனைக் காட்டிலும் உயர்ந்த நிலையிலேயே இருப்பேன் என்பதிலும், என்னுடைய வழக்கில் எனக்குச் சாதகமாகவே 'ஆண்டவனின் தீர்ப்பு கிடைக்கும் என்பதிலும் எனக்கு முழு நம்பிக்கையுண்டு!

நான் என்னுடைய எண்ணத்தை எண்ணியபடியே வெளியிடுவதென்று முடிவு செய்துள்ளேன். நான் அதை அன்போடு — தெளிவோடு செய்வேன்! நான் அதைத்தான் செய்யவும் போகிறேன்! என்னுடைய கருத்தை மொத்தத்தில் ஒப்புக்கொள்கின்ற மக்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்; ஆனால், அவர்கள் தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டுரைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஏழைகள்-பெரும்பாலோர் வாணிகத் துறையிலிருப்பவர்கள். அவர்களுக்குத் தெரியும் தங்களுடைய உண்மையான—நேர்மையான — நாணயமான கருத்தை வெளியிட்டால், அவர்களை ஆதரிக்கவோ, அவர்களோடு வாணிகம் செய்யவோ, மற்றையோர் மறுத்துவிடுவார்கள் என்பது. அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவுப் பொருள் தேடித்தரவும், தங்களுடைய மனைவிமார்களைக் காப்பாற்றவும், தங்களுக்கேற்ற இல்லங்களை அமைத்துக்கொள்ளவும், வாழ்க்கை வசதிகளைச் சம்பாதித்துக்கொள்ளவும் விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அவன் வாழுகிற சமுதாயத்தின் இழிதன்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குபவனாவான். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய எண்ணத்தை வெளியிடவில்லை என்பதற்காக அவர்களை நான் குற்றங் கூறவில்லை. நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், "நீங்கள் உங்களுடைய கொள்கைகளை உங்களிடத்திலேயே வைத்துக் காப்பாற்றுங்கள்; நீங்கள் விரும்புகிற மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுங்கள்; உங்களுடைய கருத்துக்களை உங்களுக்காக நான் வெளியிடுகிறேன்; எந்தக் கோயிலாலும் என்னைத் தொடமுடியாத—நசுக்கமுடியாது — பட்டினி போடமுடியாது — நடுக்கமுடியாது — நிறுத்திவைக்கமுடியாது; நான் உங்களுடைய கருத்துக்களை வெளியிட்டுப் பரப்புகிறேன்" என்பதாகும்.

மனிதன் முழுக்க முழுக்க சீர்கேடடைந்துவிட்டான் என்று கோயில்களெல்லாம் பறைசாற்றி வருகின்றன. கொடுங்கோன்மைக்கு ஒரு மன்னிப்பு அளிப்பதாகவும், அடிமைத்தனத்திற்கு ஒரு சமாதானங் கூறுவதாகவும் இருக்கட்டும் என்று நினைத்துப்போலும் அவைகள் அப்படிக் கூறி வருகின்றன! மனிதன் சீர்கேடடைந்துவிட்டான் என்பதை விளக்கக் கோவில் ஒன்று தான் ஒரு உறுதியான சான்றாக இருந்துவருகிறது! உண்மை என்னவென்றால், நாமே நல்லவர்களாகவும் இருக்கிறோம்; நாமே தீயவர்களாகவும் இருக்கிறோம். தீயவர்கள் எனப்படுவோர் சில நல்ல செயல்களைச் செய்வதற்கு ஏற்றவர்களாகவும் இருக்கிறார்கள்; நல்லவர்கள் எனப்படுவோர் சில தீய செயல்களைச் செய்வதற்கு ஏற்றவர்களாகவும் இருக்கிறார்கள். கீழே இருப்பவர்கள் உயர்ந்துபோகவும் முடிகிறது; மேலே இருப்பவர்கள் கீழே சாய்ந்துவிடவும் முடிகி

றது. மனித சமுதாயத்தைப் பாமிகள் என்றும், புண்ணியவான்கள் என்றும் இரு கூறுகப் பிரித்துவிடலாம் என்பது முழுக்க முழுக்கப் பொய்யாகும். அடியோடு சீர்கெட்டுப்போனவர்கள் என்று யார் மாதா கோயிலால் புறக்கணிக்கப்பட்டிருக்கிருர்களோ, அவர்கள் தாம், பெரும் பெரும் அழிவு நிகழ்ச்சிகள் ஏற்படும் போதும், ஆடவரும் பெண்டிரும் உயிருக்காக அலறித் துடிக்கும்போதும் விரைந்தோடி, தங்கள் உயிரைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிருர்கள். அத்தகையவர்களால்தான் தன்னலமற்ற தியாக உணர்ச்சியும், அன்பின் வழிப்பிறந்த வீரஉணர்ச்சியும் செறிந்து காணப்படும் சீரிய செயல்களைச் செவ்வனே ஆற்றமுடிகிறது. அத்தகையவர்களைத்தான் கோடிக்கணக்கான மக்கள் நினைந்து, பாராட்டி, மகிழ்கிருர்கள்; அவர்களின் மறைவுக்காகக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகவும் செய்கிருர்கள். மதங்கள் எல்லாவற்றையும்—மதக் கோட்பாடுகள் எல்லாவற்றையும்காட்டிலும், மிக உயர்ந்ததாக விளங்கும் அரிய பொருள்—**பகுத்தறிவாகும்**. கொந்தளிக்கும் கடலின் நடுவிலோ, கொடும்பாறைகளின் இடையிலோ, உருக்குலேந்த துறைமுகங்களின் ஓரத்திலோ, கப்பல்கள் உடைந்து அழிவை அணுகும்போது, சிலர் வீரச்செயல்புரிந்து அவ்வழிவினின்றும் அவைகளைக் காப்பாற்றுகிருர்கள். சீறிக்கொண்டெழும் பெருந்தீ எங்கும்பரவிப் பாழ்படுத்தும்போது, அதனை அடக்கி ஒடுக்க அருஞ் செயல் புரிகிருர்கள் சிலர். அப்படிப்பட்ட துன்பந் துடைப்போர் சிலரின் செயல், வான மண்டலத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் உடுபோல எப்பொழுதும் வரலாற்றில் மின்னிக்கொண்டேயிருக்கிறது. அவர்களுடைய அந்தச் செயல் மூடநம்பிக்கையின் காரணமாக எழுந்த கோட்பாடுகள் அனைத்தையும் பொய்யாக்குகிறது. மதக் கோட்பாடுகள் அனைத்தும், மனித சமுதாயத்துக்கு அச்சமூட்டி, அதனைக்கீழ் நிலைக்குக்கொண்டு போகவும், அடிமைப்படுத்தவுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

மதங்களும், மதக் கோட்பாடுகளும் அவை பற்றிய ஏடுகளும், விதிமுறைகளும், சட்டதிட்டங்களும் மனிதனின் உணர்விலிருந்து விடுதலை வேட்கையையும், பகுத்தறிவையும் எவ்வளவோ அளவுக்கு வேறு பிரித்து எடுத்துவிட்டன.

சிந்திப்பது ஆபத்திற்குரியது என்ற கொள்கை அடியோடு வீழ்ச்சியுறட்டும்! மனிதனை மனிதன் அடிமைப்படுத்தலாம் என்ற மிக மோசமான கோட்பாடு அழியட்டும்! நம்முடைய உள்ளங்களுக்கு விலங்கிடுவதற்கென்று எடுத்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் மனக்கசப்போடு வெறுத்துத் தள்ளுவோமாக! கடவுள் இல்லை என்ருல், நாம் நிச்சயமாகக் கடவுளின் பேரால் எதையும் வணங்கக் கூடாது—எதற்கும் அடிமைப்படக் கூடாது—எதனிடமும் தாள்பணிந்து கிடக்கக்கூடாது. கடவுள் இருக்கிருர் என்ருல், அடிமைகளாக யாரும் இருந்திருக்கக்கூடாது!

[தொடரும்]

# பிச்சையெடுப்போர் ஒழிக!

[சிந்தனையாளன்]

உலகில் வேறு எந்த நாட்டிலுமில்லாத அளவு, இந்திய உபகண்டத்தில் மட்டும் ஏன் இத்தனை ஆயிரம் பிச்சைக்காரர்கள் மலிந்துகிடக்கிறார்கள்? இதற்கு என்ன காரணம் என்பதை, ஆராய்ந்து முடிவு செய்தல் வேண்டும். நம் கண்ணெதிரே, பிச்சையெடுப்போர் எலும்பும் தோலுமாக, திக்கற்றுத் திரிவதை ஒழித்து, அவர்கட்கு வாழ்வளிக்க உடனடியாக என்ன செய்யவேண்டுமென்பதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

",இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்," என்ற குறள் பிறந்த நாட்டிலே, அறிவுக்கொவ்வாத "ஐயமிட்டுண்," "ஏற்பதிகழ்ச்சி," என்ற தென் துருவ, வட துருவம் போன்ற முரண்பட்ட கருத்தைப்புகுத்தி, நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டனர்.

இந்தியா முழுவதுமுள்ள ரயில்வேக்களில் மட்டும், 12 இலட்சம் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கிறார்களென்று 1948—49ம் ஆண்டு, மத்திய சர்க்கார் ரயில்வே போர்டின் அதிகார பூர்வமான அறிக்கை கூறுகிறது. இந்திய ரயில்வேக்களில் மட்டும் 12 இலட்சம்! அருள்சுரக்கும் புண்ணியநாடு என்று வர்ணிக்கப்படுகிற இந்திய உபகண்டம் முழுவதும், 75 லட்சம் பிச்சைக்காரர்கள் இருப்பதாக சர்க்கார் கணக்குக் கூறுகிறது. அரசியலார் கணக்கெடுப்பில் விட்டுப் போனதாக இருக்குமே தவிர, கூட்டிக் கூறமாட்டார்கள்; இது நாடறிந்த உண்மை. இந்தியாவில் 25,000 சாதுக்கள் இருப்பதாக அரசியலார் அதிகார பூர்வமான அறிக்கை கூறுகிறது. இந்த சாதுக்களையும், உற்பத்திசெய்யாத-பிச்சைக்காரர் வரிசையில்தான் சேர்த்திருக்கிறார்கள். ஆக முக்கால் கோடிக்கு இருக்கிறார்கள் சமுதாயத்தின் புல்லுருவிகள்.

யார் இந்த சாதுக்கள்? "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா", என்று பாடிக்கொண்டு, நாட்டை அரித்துவரும் நச்சரவுக் கூட்டம்! அப்பப்ப! போதும் இந்தக் கூட்டத்

தால் நாடு நலிந்தது. இந்தச் சண்டாள சாதுக்கூட்டம் தான், இந்த நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களின் பிறப்பிடம்; பயிர்ச்சிப்பள்ளி. இந்த அழகில்; இந்த ஆண்டிகளுக்கு அனைத்திந்திய சாதுக்கள் சங்கமாம்! ஒரு பொதுச் செயலாளராம்!! இந்திய சர்க்கார் அண்மையில் குடிமதிப்புஎண்ணிக்கை எடுக்கும்போது, இந்த நாதியற்ற சாதுக்கூட்டத்தின் பொதுச் செயலாளர், "உற்பத்தி செய்யாதவர்கள்," என்ற பட்டியலில் எங்களைச் சேர்க்கக்கூடாது, என்று மறுத்து அறிக்கை வெளியிடுகிறார்!

இவர்கள் எதை உற்பத்தி செய்கிறார்கள்? "வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்". என்கிற மடமையை உற்பத்தி செய்கிறார்கள். சோம்பல், குடி, கூத்தி, மோட்ச நரகப் பித்தலாட்டங்களை உற்பத்தி செய்கிறார்கள்! பல்லாயிரம் பாகுபாடும், ஏற்றத்தாழ்வும், பிரிவுகளும் மலிந்த சமுதாயத்தின் காலடியில், எலும்புந்தோலுமாக மிதிபடுபவர் உண்மைப் பிச்சைக்காரர்கள்! மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று, 60 ஆண்டுகள் மேடைகள் தோறும் அலறி, இந்த நாட்டின் அரசைக் கைப்பற்றிக் கொலுவீற்றிருக்கும் தலைவர்களுக்கு, இந்த நாதியற்றக் கூட்டம் அலறித் துடிப்பது தெரியவில்லையா? மக்கள் வறுமைக் குழியில் விழுந்துவிடுகிறார்கள் என்ற காரணத்தால், மதுவிலக்குச் செய்ததுபோல், இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிப்பது அவசரப் பிரச்சினையல்லவா?

"தனி யொருவனுக்கு உணவில்லையெனில், இச்சகத்தினை அழித்திடுவோம்", என்று முழக்கமிட்டுப் பதவிக்குச் சென்ற மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டசபை அங்கத்தினர்களின் கண்ணில் படவில்லையா இந்தப் பஞ்சைகள்? நாடு முழுதுமுள்ள, முக்கிய பெரிய நகரங்களில் பிச்சைக்காரர்கள்விடுதிகள் ஏற்படுத்தி, வேலையும், கூலியும் தந்து இவர்களை வாழவைக்க வேண்டும். விடுதிகள் ஏற்படுத்தப் பணமில்லை என்று கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. பணம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறீர்களா?

கருணையேஉருவான நமது கடவுளர்களிடம் சென்று கேட்போமே! கொடுக்கமாட்டேனென்றுகூறுவார்களா? கூறட்டுமே வாயைத்திறந்து. அவரிடம் வாதிக்கலாமே! நாமென்ன தவறானகாரியத்திற்குக் கேட்கிறோமா? அவரால் படைக்கப்பட்ட பொருளை, அவராலேயே படைக்கப்பட்டு, பசியால் வாடும் பஞ்

சைகளுக்கு உண்ண, உடுக்க, இருக்கப் பயன்படுத்துகிறோம் என்று பகரலாமே! கரவாடும் நெஞ்சத்திற்கன்றோ கலக்கம்!

25 ஆயிரம் முதல், 1 கோடி வரை ஆபரணங்கள் வைத்திருக்கும் கடவுளும், 7 கோடி நிரந்தரச் சொத்தும், ஆண்டுக்கு 38 இலட்சம் வருவாயுமுள்ள "பூர்ஷ்வாக்" கடவுள்கள் உண்டு நம் நாட்டில்! இதுவல்லாமல் நஞ்சை புஞ்சைகளின் வருவாய் வேறு இருக்கிறது. இனும்கள்வேறு இருக்கிறது. வேண்டுமானல், "திருப்பதி வேங்கடாசலபதி பிச்சைக்காரர் விடுதி", "தணிகைமுருகன் பிச்சைக்காரர்விடுதி", "அண்ணுமலையார் பிச்சைக்காரர் விடுதி", "மதுரை மீனுட்சியம்மை பிச்சைக்காரர் விடுதி", "தில்லை நடராசர் பிச்சைக்காரர் விடுதி", என்ற பெயராலேயே விடுதிகள் ஏற்படுத்தலாமே! யார் மறுப்பார்கள்?

இலட்சக் கணக்கில் மக்கள் பசியாலும், பட்டினியாலும், எலும்பும் தோலுமாக, "ஐயா! பிச்சை போடுங்கள், வயிறு பசிக்கிறதே, சாப்பிட்டு மூன்று நாளாச்சே," என்று நாடெல்லாம் அழுது, அலறித்துடித்து, நடைப்பிணங்களாகத் திரிய; ஆண்டவனை அருமையான வேலைப்பாடுகள் அமைந்த பொன், வைர நகைகளால் அலங்கரித்து, பாலும் பழமும், நெய்ப் பொங்கலும், புளியோதரையும், அக்காரவடிசலும்படைத்து, தூபதீப நைவேத்தியம் செய்து கொண்டிருப்பதுதானு அறிவுடைமை? இதை எடுத்துச் சொல்வது குற்றமா? தெய்வத்தை இகழ்வதாகுமா?

சென்னை நகர சபையார், சென்னை நகரை மேலும் அழகுபடுத்த ஓர் கமிட்டியை ஏற்படுத்தினார்கள். ஆங்காங்கே பூம்பொழில்கள் அமைக்கவும், முக்கிய இடங்களில் பால் (Mercury) விளக்குப் போடவும், பாதை யோரங்களில் அழகிய கைப்பிடிச் சுவர்கள் அமைக்கவும்தான் இந்தக் குழு! மக்கள் சுகமாக வாழ இது தேவையாயிருக்கலாம்! ஆனல் இது எந்த நிலையில்? இந்த அழகை யார் பார்ப்பது? உயிருக்கே ஊசலாடும் பஞ்சை பார்ப்பதா? உல்லாசபுரியிலே உலவும் உத்தமர்கள் பார்ப்பதா? யார் அனுபவிப்பது? சென்னை நகரத்திலே, நடைபாதை ஓரத்திலே வாழ்ந்துவரும் மக்கள் எண்ணிக்கை 13 ஆயிரம்! நகரசபையார் தந்த புள்ளி விபரம்தான் இது!! பரம்பரை, பரம்பரையாக வானமே கூரையாகவும், தரையேபாயாகவும்கொண்டு வாழும் மக்கள் எவ்வளவு பேர்? 14 இலட்சம் மக்கள் கொண்ட சென்னை முதல்,

100 மக்கள் கொண்ட பட்டி தொட்டிவரை, எத்தனை லட்சம் மக்கள் பரதவிக்கிறார்கள்? இவர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்த—நிலையை உயர்த்த—ஒரு திட்டம் தீட்டிப் பரிகாரம் தேடுவதல்லவா அவசர வேலை? சுகப்படுபவன் மேலும் சுகப்படுவதும், துன்பப் படுபவன் மேலும் துன்பப் படுவதும் தானா முறை?

எவ்வளவு பெருமையாக நாம் இந்த நாட்டைப்பற்றிப் பேசிக்கொண்டாலும், அதற்கு எதை, எதை, ஆதாரமாகக் காட்டினாலும், பதிகங்களைப் பாடினாலும், வானை முட்டும் கோபுரங்களைக் காட்டினாலும், நமது சமுதாயத்தில் பிச்சைக்காரர்களை உற்பத்தி செய்த குறைபாட்டைமட்டும் மறைக்கமுடியாது! எனவே, இந்தச் சமுதாயத்தின் உயிர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க ஆவன செய்யும்படி அரசியலாரைத் தூண்ட வேண்டும். பிச்சை யெடுப்போரை ஒழிக்கவேண்டும். இரக்கமுள்ள மக்கள் அனைவரும் இதுபற்றிக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும்.

● ● ● ●




தமிழகத்திலே, சுயமரியாதை இயக்கம் அறிவுச்சுடர் பரப்பிய அந்த நாளிலே எழுதப்பட்ட ஆரம்ப

**சீர்திருத்தக் கதைகள்.**

இந்த நாளிலும் சுவை குன்றாத புத்துணர்ச்சி தருவது.

●

**80 பக்கங்கள் விலை 0-10-0**

●

★ **இதுவும் ஒரு தென்றல் வெளியீடு.** ★

# கருத்துரை

## ஊருக்கு உழைத்தவர்கள்.

[ஆசிரியர்: மா. தங்கவேலர். வெளியீட்டோர்: ஆராய்ச்சி நிலையம், சென்னை—5.]

கவிஞன் கிரே, மறுமலர்ச்சி எழுத்தாளர் டால்ஸ்டாய். இன்னிசைக் கவி தாந்தே, கவிஞன் கீட்ஸ் ஆகிய நால்வரின் வரலாறும், உழைப்பின் தகுதியும், பெருமையும் விளக்கும் சிறு நூல். பொதுப் பணியாற்றும் பகுத்தறிவு வாதிகள் அவசியம் படிக்கவேண்டும். அலுப்புத் தட்டாத அழகிய தமிழ் நடை.

**32 பக்கம் விலை 0—5—0**

## உல்லாசிகள் ஒழிக.

[ஆசிரியர்கள்: "மிவாஸ்கி தாசன்," சுந்தர—சிதம்பரம். வெளியீட்டோர்: புதுமைப்பித்தன் நினைவுப் பதிப்பகம், திருப்பூர், கோவை மாவட்டம்]

அரசியல் துறையில், மதத் துறையில், சமூகத் துறையில், சினிமா போன்ற கலைத்துறையில், கொள்கையற்ற உல்லாசிகள் கொட்டமடித்துக் கொழுப்பதை பகிரங்கப்படுத்தும் எழுச்சி யொலியின் புத்தக வடிவு. ஆசிரியர்களின் முயற்சி வரவேற்கத் தக்கது. புள்ளி விவரங்கள் பயன் தருவன. நல்ல தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

**22 பக்கம் விலை 0—5—0**

## மணிமுடி.

[ஆசிரியர்: "தமிழ் நேயன்". கிடைக்குமிடம்: பெ. சுப. நாச்சியப்பன், நாச்சியாபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.]

உலா, தூது போன்ற பழைய பிரபந்தபாணியில் பாடப்பெற்ற சுவைக் கதம்பம். கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் ஏற்ற முறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. தமிழ்த் தாய்க்கு மணிமுடி சூட்டவேண்டும் என்ற "தமிழ் நேய"னின் ஆர்வம், நல்ல தமிழில் மணிமுடியாகப் படைக்கப்பட்டுள்ளது.

**16 பக்கம் விலை 0—2—6**

## பாரதியும் பாரதிதாசனும்.

[ஆசிரியர்: கவிஞர் சாமி-பழனியப்பன். வெளியீட்டோர்: மாணவர் நூற்பதிப்புக் கழகம், கல்லக்கட்டி, காரைக்குடி]

காலஞ் சென்ற கவிஞர் சுப்ரமணிய பாரதியின் கவிப் பெருமையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைப் பயனும் சுவை படக்காட்டும் சிறிய கவிதை நூல், கவிஞர் சாமி-பழனியப்பனின் விரு விருப்பான நடையிலும், அமைப்பிலும் பாரதி, பாரதிதாசன் இருவருமே இருக்கிறார்கள். கவிஞருக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறது.


**12 பக்கம் விலை 0—2—0**

## தமிழோசை.

[ஆசிரியர்: கு. சமத்துவம். தமிழோசை நிலையம், கடைத்தெரு, பவானி, கோவை மாவட்டம்.]

அறிவும் தமிழும் மணக்கும் அரிய திங்கள் வெளியீடு. கவியரங்கம், யாப்பிலக்கண விளக்கம், வேறு எந்த இதழிலும் காணப்பெறாத பயனுள்ள பகுதிகள். தமிழ்மொழியின் தனிச்சுவையை நுகர விரும்பும் தோழர்கள், மொழியறிவு பெற விரும்பும் மாணவர்கள் அவசியம் படித்தல் வேண்டும். சிறு கதைகள், செய்தித் துணுக்கு, ஊரம்பலம், அறிவுத் துணுக்குகள், ஆராய்ச்சிக் கட்டுரை யாவும் கொண்ட "தமிழோசை," மொழிக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே பெருமையளிப்பது. 'தமிழோசையை'த் திக்கெட்டும் பரப்புதல்வேண்டும். ஆதரித்தல் வேண்டும்.

**தனிப்படி 0—4—0**
**ஆண்டுக் கட்டணம் 3—0—0**




எங்கும்
எப்போதும்
எல்லோரும்
விரும்பும் பீடி
சுபான் பீடி!

உங்கள் பேனாக்களையும், எழுத்துக்களையும் சிறப்பிப்பது

## குயில் இங்க்

அரசாங்கத்திற்கும், லோக்கல் போர்டுகளுக்கும் சப்ளை செய்பவர்கள்.

**சேலம் கெமிக்கல் இண்டஸ்டிரியஸ், சேலம்**

இளமையில் இழந்த சக்தியை மீண்டும் பெற

மகா தாதுபுஷ்டி

**ஸ்தம்பன சூரணம்.**

நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, துவண்டுபோன தண்டுக்கு வலு ஊட்டி, நீடித்த நேரம் சுகபோகத்தை அனுபவிக்கச் செய்யும் அற்புத சூரணம் குணமில்லையேல் பணம் வாபஸ்.

உபயோகிக்கும் முறை மருந்துடன்.
48 நாளைக்குரிய 5 பலம் டின் 1-க்கு
விலை ரூ. 5—0—0

S.V.R. கண்டர், R.I.M.P.,
இராஜாளி எண்ணெ டிப்போ,
அரிசிப்பாளையம், :: சேலம்.

"பகுத்தறிவு" விற்பனையாளர்.

யாழ்ப்பாணத்தில்:
ஜி. இராமசாமி,
தமிழ்ப் பண்ணை, யாழ்ப்பாணம்.

பட்டிக்காலாவில்:
பாபு நியூஸ் மார்ட்,
15, பஜார் வீதி,
பட்டிக்காலா. (BATTICALOA)

பம்பாயில்:
ஏ. என். வேலன்,
8, S.M. சால், தாராவி, பம்பாய்.

சிங்கப்பூரில்:
எஸ். முத்துசாமி,
509, ஹாவ்லக் ரோட், சிங்கப்பூர்.

அங்குரான் கெட்டாவில்:
S. ஆறுமுகநாதன்,
52, சாரதன் & CO.,
அங்குரான் கெட்டா.

கொழும்பில்:
நவலட்சுமி புக்ஸ்டால்,
தபாற்பெட்டி 442, கொழும்பு.

## நீங்கள் படித்துவிட்டீர்களா ?



கொடுங்கோலனைப் பழிவாங்கிய தமிழச்சியின்

# வீர நாடகம்!

வானொலி மூலம் பல்லாயிரவரின்
உள்ளம் கவர்ந்தது.

## விலை 0-8-0

விலைத் தொகையனுப்பிப் புத்தகம் பெறலாம்.
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

•

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்,**
**சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்**

Edited, Printed & Published by, P. KANNAN, at Senthamizh Printing Works,
Jalakantapuram Salem. Dt. (S. India)

# பகுத்தறிவு



கர-ஆனி. 15-6-1951. அணா 2

எங்கும்
எப்போதும்
எல்லோரும்
விரும்பும் பீடி
**சுபான் பீடி!**




உங்கள் பேனாக்களையும், எழுத்துக்களையும் சிறப்பிப்பது

## குயில் இங்க்

அரசாங்கத்திற்கும், லோக்கல் போர்டுகளுக்கும்
சப்ளை செய்பவர்கள்.

**சேலம் கெமிக்கல் இண்டஸ்டிரியஸ், சேலம்**

இளமையில் இழந்த சக்தியை
மீண்டும் பெற

**மகா தாதுபுஷ்டி**

## ஸ்தம்பன சூரணம்.

நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, துவண்டுபோன தண்டுக்கு வலு ஊட்டி, நீடித்த நேரம் சுகபோகத்தை அனுபவிக்கச் செய்யும் அற்புத சூரணம். குணமில்லையேல் பணம் வாபஸ்.

உபயோகிக்கும் முறை மருந்துடன்.
48 நாளைக்குரிய 5 பலம் டின் 1-க்கு
விலை ரூ. 5—0—0

S.V.R. கண்டர், R.I.M.P.,
இராஜாளி எண்ணெய் டிப்போ,
அரிசிப்பாளையம், :: சேலம்.

**"பகுத்தறிவு" விற்பனையாளர்.**

யாழ்ப்பாணத்தில்:
கோ. இராமசாமி,
தமிழ்ப் பண்ணை, யாழ்ப்பாணம்.

பட்டிக்காலாவில்:
பாபு நியூஸ் மார்ட்,
15, பஜார் வீதி,
பட்டிக்காலா. (BATTICALOA)

பம்பாயில்:
ஏ. என். வேலன்,
8, S.M. சால், தாராவி, பம்பாய்.

சிங்கப்பூரில்:
எஸ். முத்துசாமி,
509, ஹாவ்லக் ரோட், சிங்கப்பூர்.

அங்குரன் கெட்டாவில்:
S. ஆறுமுகநாதன்,
52, சாரதன் & CO.,
அங்குரன் கெட்ட.

சென்னையில்:
K. வாசுதேவன்,
7, பட்டாபிராமய்யர் தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை 1.

## தென்றல் வெளியீடுகள்.

●

மு. கருணாநிதி எழுதிய

ஒரே முத்தம் 1-4-0

சி. பி. சிற்றரசு எழுதிய

சிந்தனைச் சுடர் 0-5-0

ப. கண்ணன் எழுதிய

கன்னியின் சபதம் 0-8-0

சிந்தனைச் சித்திரம் 0-10-0

மின்னொளி 0-6-0

பாவலர் வேலாயுதசாமி எழுதிய

திருக்குறள் இசைப்பாடல்
அறத்துப்பால் 0-7-0

ப. க, குஞ்சிதம் எழுதிய

வால்முளைத்த
சாமியார் 0-2-0

கெட்டிக்காரன் 0-2-6

பைங்கிளி 0-2-0

●

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 %.

தென்றல் நூற்பதிப்புக்
கழகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.



# பகுத்தறிவு

ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982, திங்கள் 6

மலர் 1 | கர-ஆனி | இதழ் 6


## பொருளடக்கம்.


ஆபாசக் கடவுள்கள் ... 2
*பாவலர். வேலாயுதசாமி*

ஆராய்ச்சியும்—நம்பிக்கையும் ... 3

நடப்பும் கருத்தும் ... 5

தெளிவு காண்பீர் ... 8
*ச. ஆறுமுகநாதன்*

பகுத்தறிவுப் பண்பு ... 9
*ஆசிரியர். புலவரேறு*
*அ. வரதநஞ்சையனார்*

இலக்கிய மறுமலர்ச்சி ... 14
*"ஆட்டனத்தி"*

விதவைச் சீமாட்டி ... 16
*பொக்காசியோ*
மொழி பெயர்ப்பு:
*ர. வரதராசன்*

பொன்மொழிகள் ... 22

சமுதாய விடுதலை (இங்கர்சால்) 23
மொழி பெயர்ப்பு:
*இரா. நெடுஞ்செழியன் M.A,*

மாக்சிம் கார்க்கி ... 27

நாத்திகம் ... 30
*சார்லஸ் பிராட்லா*

கருத்துரை ... 31


★

# ஆபாசக் கடவுள்கள்!

[பாவலர். வேலாயுதசாமி]

★

1 குடிவெறியன் பொய்புரட்டன் கூத்திக் கள்ளன்
கொலைகாரன் குடிகேடன் திருடன் சூதன்
கெடுமதியன் பிறர்மனையைப் புணருந் தீயன்
கேவலமாம் காரியத்தைச் செய்யும் புல்லன்
அடிமடையன் மூடிவைத்துக் கழுத்த றுக்கும்
அநியாயக் காரன்முத லான பேர்கள்
கடவுளராம் நமக்கிதென்ன கோல மப்பா!
கண்மூடிக் காலமிதோ ஒப்புக் கொள்ள?

2 நல்லவழி காட்டிகளாம், இன்ப வாழ்வு
நமக்களிக்கும் தலைவர்களாய்; நாவி னாலே
சொல்லமுடி யாதபெரு வெட்கக் கேடு
தொழத்தகுந்த புனிதர்களாம் உயிரில் லாத
கல்லுருவ மாயமைந்த இவர்க ளுக்குக்
காணிபல நஞ்சைநில மானி யங்கள்,
வல்லமதி லால்வளைந்த கருங்கல் வீடு
மனைவிமக்க ளோடுகுடி யிருப்ப தற்கு.

3 மலைபோலக் கோபுரங்கள் ஆண்டு தோறும்
மணமுடித்தல் தேரிழுத்தல் கொள்ளையான
விலைபோகும் வைரமுத லணிகள் கோடி,
வெள்ளியினால் தங்கத்தால் வாகனங்கள்,
தலைபோகும் ஆபத்தைத் தடுப்ப தைப்போல்
தவறாமல் விழாநடத்தல் மீன்பி டிக்க
வலைபோடும் காரியம்போல் வேடிக் கைகள்
மத்தாப்பு, வெடி,வாணம், மாத ராட்டம்!

4 பித்தர்களோ நாமெல்லாம் இந்தக் கூத்தைப்
பெருமையுடன் கொண்டாடி மகிழ, ஆயும்
புத்தியிலா விலங்குகளோ பொய்ச்ச ரக்கைப்
புனைந்துரையைப் புரட்டுகளை நம்ப? தீய
எத்தர்களின் சுகவாழ்க்கை நலத்திற் காக
எழுதிவைத்தக் கதையில்வரும் கடவுட் டன்மை
அத்தனையும் ஊழல்மயம் அப்பப்பா இவ்
வாபாசக் கடவுளெல்லாம் நமக்கெதற்கு?

## ௬  பயம் - நம்பிக்கையும்.

ஆராய்ச்சி என்பது ஒரு குற்றமாகக் கருதப்படுகிறது மதவாதிகளால்! கடவுள், வேதம், சாஸ்திரம் என்ற பெயர்களால், எதைச் சொல்லினும் அப்படியே நம்பவேண்டும், ஆராய்ந்து பார்ப்பது பாபம், என்ற எண்ணம் அவர்களின் குருதியோடு கலந்துறைந்துபோயுள்ளது. காரணம்; தெய்விகத்தில் உள்ள கண்மூடித்தனமான நம்பிக்கையே!

"இந்த சாஸ்திரம், பார்வதி பரமசிவனுக்குச் சொன்னது. நாரதர் கேட்டு நமக்குச் சொன்னார். இதை ஆராய்ந்து பார்ப்பவர், நம்பாதவர், நரகத்திற்குப் போய்ச் சேருவார்" என்று துவக்கத்திலேயே சிந்தனைக்கு விலங்கு பூட்டிவிட்டுத்தானே புளுகத் தொடங்குகின்றன நமது சாஸ்திரங்களும், புராணங்களும்! எனவே மோட்சத்திற்குப் போகும் ஆசையோடு அவைகப் படிப்பவர், ஆராய்ந்துவிட்டு நரகத்திற்குப் போகத்துணிவார்களா? அப்படியே முழுதும் நம்புகின்றனர். நலிகின்றனர்!

ஆராய்ச்சிக்கு அடிப்படையான தேவை அறிவு; எதனையும் பகுத்துணரும் தன்மையுள்ள பகுத்தறிவு. பக்தர்களுக்கும், நம்பிக்கையாளர்க்கும், அது தேவையில்லையே. ஆகவே ஆராய்ச்சி என்றால் வெறுப்பும், நடுக்கமும் கொள்கின்றனர். ஆராய்வது குற்றம், பாபச்செயல் என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

ஆராய்ச்சியின் பயனாகவே பிறநாட்டார் தன்னம்பிக்கை பெற்றுப் பல துறைகளிலும் முன்னேறியுள்ளனர். நீரை வருணபகவான் என்றும், நிலத்தைப் பூமிதேவி என்றும், காற்றை வாயுதேவன் என்றும் வணங்குகிற தன்மையும், பக்தியும் படிந்த உள்ளத்தில், அவைபற்றி ஆராயும் தைரியம் பிறக்குமா? இந்த பக்தியும், பயமும் இல்லாததனாலேயே, பிறநாட்டார் பஞ்சபூதங்களையும் சோதித்துச் சித்திரவதை செய்துச் செய்து, மின்சாரம், புகைவண்டி, ஆகாயக் கப்பல், வானொலி, முதலாக அணுக்குண்டு வரை அற்புதங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தனர்!

ஆராய்ச்சிக்கு முட்டுக்கட்டை மூடநம்பிக்கை எனவேதான் நாம் நம்பிக்கை ஒழியவேண்டும் என்கிறோம். தெய்விகத்தை நம்பித் தேய்ந்துபோன முதியோர்கள், படிக்காத தற்குறிகளைப்பற்றிக் கவலையில்லை. எதிர் காலத்தில் இந்நாட்டை வளப்படுத்தும் பொறுப்புள்ள மாணவர்

கள், மதவாதிகளின்—பழமை விரும்பிக யில் விழுந்து, பகுத்தறிவும், தன்னம்பிக்கையும் இழந்துவிடுதல் கூடாது. ஆராய்ச்சியைப் புறக்கணித்தல் கூடாது. அறிவுக்குப் பிரதானமளிக்கவேண்டும்.

எவர், எதைக் கூறினும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்றார் வள்ளுவர்.

இலக்கியங்களையும், காவியங்களையும் ஆராய்தல் கூடாது என்பர் சில ரசிகமணிகள் பாடல்களைச் சுவைக்கும் பொழுது, ஆராய்ச்சி புகுந்தால் அதன் ரசிப்புச்சுவை குன்றிவிடுகிறதாம். பகுத்தறிவுத் தராசில் காவியத்தை எடை போடக்கூடாதாம்! காவியச் சுவையின் போதையிலே, அறிவை இழக்கவும் துணிகின்றனர். குடியர்க்கும் இவர்க்கும் என்ன வேறுபாடு? கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் இந்த விழிகண் குருடர்களுக்கு, இலக்கியங்களும், காவியங்களும், குலத்துக்கொரு நீதி கற்பிக்கும் மநு தர்மத்தையும், வேதங்களையும் பாதுகாக்கத் தோன்றியவை என்பது புரிவதில்லை. ஆராய்ச்சி இவர்களுக்கு வேம்பு!

எதற்கும், எப்பொழுதும், எத்துறையிலும் ஆராய்ச்சி தேவை. அதிலும் பள்ளியில் பயிலும் மாணவர்க்கு மிக மிகத்தேவை. அறிவைப் பெருக்குவது கலாசாலைப் படிப்பு. ஆராய்தற்கு ஏற்ற இடமும் அதுதான், பருவமும் அதுதான்! ஆராயும் பண்பை, நம்பிக்கைக்குப் பலியிடக்கூடாது.

நமது கல்வித் திட்டத்தினின்றும், தெய்விகம், மூட நம்பிக்கை, பழமைப் பாதுகாப்பு, வேதபுராணங்களுக்குத் தரும் மதிப்பு, இவைகள் இன்னும் ஒழிந்தபாடில்லை. எனவே மாணவர்கள் எச்சரிக்கையோடு பயிலவேண்டும்.

10—6—1951 ல் பெரோஸ்பூர் என்ற இடத்தில் நடைபெற்ற கல்லூரி மாணவர் கூட்டமொன்றில், காங்கிரஸ் தலைவர் புருஷோத்தமதாஸ் தாண்டன் கூறினார்:

"அச்சில் உள்ளதனைத்தும் வேதவாக்கியம் என்று மாணவர்கள் நம்பிவிடுதல் கூடாது. படித்தவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். வேதங்களையுங்கூட ஆராய்ந்து பார்க்க வேண்டும்" என்று. தோழர், தாண்டனை, ராஜரிஷி என்று பாராட்டிப் புகழ்ந்த கூட்டம் இக்கருத்துக்களைப் புறக்கணித்தாலும், நாம் மனமுவந்து ஏற்றுக்கொள்வோமாக. ● ● ● ●

## நடப்பும் கருத்தும்

### சித்த மருத்துவம்.

ஆயுர்வேதம், சித்தம், யூனானி, ஹோமியோபதிக் போன்ற பல மருத்துவ முறைகளிலே, சித்த மருத்துவமே தமிழ் நாட்டுக்குரியது. நம் நாட்டின் தட்ப வெப்பநிலைக் கேற்றது; நம் நாட்டு மூலிகைகளைக் கொண்டே தயாரிப்பது; குறைந்த செலவில் நல்ல பயன்தருவது எனினும், சித்தமுறை ஓங்கி வளரவில்லை. காரணம்; அரசாங்கத்தின் ஆதரவு இதற்கு இல்லாமையே.

"மூலிகையின் பெயரைச் சொன்னால் பலிக்காது" என்ற மூட நம்பிக்கையும், தொழில் முறை ரகசியமும் வேறு இதன் வளர்ச்சியைக் குலைத்துவிட்டன.

27-5-51 சென்னையில் சித்த வைத்திய சங்க மாநாடு நடைபெற்றது. தலைமை தாங்கிய தோழர். ஆர். ஆர். துளவாய் பேசுகையில்; "சித்த மருத்துவ முறையைப் பிரபலப்படுத்த வேண்டும், அதுபற்றி நூல்கள் பல எழுதவேண்டும், இரகசியப் பொக்கிஷமாயிருத்தல் கூடாது. சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். இக்கருத்துக்களை நாம் வரவேற்கின்றோம். படிப்பு வாசனையற்ற நாட்டுப்புறத்து வைத்தியர்களிடம் முடங்கிக் கிடக்கும் சித்தமுறை, கல்லூரியில் முறைப்படி ஆராய்ந்து, கற்றுத்தேர்ந்தவர் கைக்கு மாறவேண்டும். அப்பொழுதுதான் அது வளர்ச்சியடைந்து நாட்டுக்குப் பயன் விளைக்கும். சித்த மருத்துவத்தின் எளிமையும், பெருமையும் அரசினர் உணர்ந்து, தனிக் கல்லூரியொன்று நிறுவுதல் வேண்டும். முயல்வார்களா?

### பக்தரும், நெருப்பும்!

ஐயம்பேட்டையில் 4—6—51 ல் திரௌபதையம்மனுக்குத் தீமிதிப் பண்டிகை நடைபெற்றதாம். நெருப்பில் இறங்கிய பிரபலமான ஒரு பக்தரின் பாதங்கள் வெந்துபோயினவாம்! பாவம்! அந்தக் கற்பரசி—ஐவருக்குந்தேவி—அழியாத பத்தினி திரௌபதைக்கு அவர் என்ன குற்றமிழைத்தாரோ தெரியவில்லை!

தெய்விகத்தின் பெயரால் நாட்டிலே நடைபெறும் பலவகைப் புரட்டுகளில்—மடமைச் செயல்களில்—தீமிதிப்பதும் ஒன்று. காற்றுக்கு உலவும் பண்பு இயற்கை; அதுபோலவே நெருப்புக்கு சுடும் பண்பு இயற்கை. நெருப்பு சடப்பொருளேயொழிய உயிர்ப் பொருளன்று. எனவே இவர் பக்தியுள்ளவர், இவர் பக்தியற்றவர்; இவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர், என்று பாகுபடுத்தும் தன்மை அதனிடமில்லை.

"சுயமரியாதை பேசுகிறாயே! கடவுள் இல்லையென்கிறாயே! உன்னால் தீக்குண்டத்தில் இறங்கமுடியுமா?" இம்மாதிரி கேள்விகள் பல ஊர்களிலே எழுந்ததுண்டு. "முடியும்" என்று சொல்லித் தன்மான வீரர்கள் பலர், புன்முறுவலோடு தீக்குண்டத்தில் இறங்கிக் காட்டியதுமுண்டு. தீமிதித்தல் ஒரு சாதுரியமான துணிவு. லாகவமாக நடந்தால் சமாளிக்கலாம். அதற்கும், பக்திக்கும் சம்பந்தமேயில்லை. பகுத்தறிவுவாதிகளைச் சுடாமல்விட்டதன் மூலமும், பக்தர்களைச் சுட்டதன் மூலமும்

நெருப்பு; இவ்வுண்மையை எத்தனையோ தடவையில் மெய்ப்பித்துள்ளது. ஐயம்பேட்டையிலும் அதுவே நடந்தது. எனினும் பக்தர்களின் அறிவுக்கண் திறப்பதென்றோ?

## விஞ்ஞானத் தேவை.

பாரிசில் ஐக்கியநாடு பொருளாதார கலாச்சார மகாநாட்டைத் திறந்துவைக்க, இந்திய உபகண்டத்தின் கல்வி யமைச்சர் **தோழர். மௌலானா ஆசாத்** சொல்லுகிறாராம். **டாக்டர் ஏ. இலட்சுமண்சாமி, டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்** உள்ளிட்ட தூதுக்குழுவொன்று, விஞ்ஞானக் கருவிகளையும், விஞ்ஞான ஆராய்ச்சிச் சாதனங்களையும் இந்தியாவுக்குக் கொடுத்துதவும்படி ஷை மாநாட்டில் வற்புறுத்தப் போகிறதாம். அந்த வற்புறுத்தல், எந்தஅளவுக்குப்பயன் தருமோ தெரியவில்லை.

அது எப்படியானாலும், இந்த முயற்சியை நாம் பாராட்டுகிறோம். விஞ்ஞான வளர்ச்சி, நம் நாட்டுக்கு மிக மிகத் தேவையான ஒன்று. நாம் போதுமான விஞ்ஞான அறிவும், சாதனங்களும் பெற்றிருந்தால், புண்ணிய புராணப் பிரசங்கம் செய்து **வனமகோற்சவம்** நடத்தவேண்டியதில்லை. விஞ்ஞானத்தால் மழை பெய்யவைக்கலாமன்றோ? உணவுப் பொருள்களை விளைவிக்கலாம். மற்ற நாட்டார்களைப்போல், வாணிபம், கைத்தொழில், பொருள் உற்பத்தி யாவற்றிலும் தலைநிமிர்ந்து நிற்கலாம்! தண்ணீர் இருக்குமிடம் தெரிய "பாணிவாலா மகாராஜா" வின் பாதம் தாங்கும் முன்ஷிகள், மத வெறிகொண்ட அஞ்ஞானிகள்; ஆட்சிபீடமேறி ஆதிக்கம் வகிக்கும்போதும், விஞ்ஞான புறக்கணிக்க முடியவில்லையென்றால், அதன் அவசியம், தேவை, எத்தகையதென்று எண்ணிப் பாருங்கள்.

---

## முக்கிய அறிவிப்பு.

காகித விலை மேலும்மேலும் ஏறிக்கொண்டே போவதாலும், பெருத்த அளவுக்கு நட்டம் ஏற்படுவதாலும், "பகுத்தறி" வின் விலையை அடுத்த இதழிலிருந்தும் (0-3-0) மூன்றணாவாக்குவது என்றமுடிவுக்குவந்துவிட்டோம். "பகுத்தறிவு" தோன்றிமறைந்த பல பத்திரிகைகளைப் பின்பற்றிவிடாமல், நிலைத்து பணியாற்றவேண்டின், இதைச் செய்துதீரவேண்டியிருக்கிறது.

ஓரணா அதிகமென்றாலும், அதற்கேற்ற மாறுதல்கள் உண்டு. பக்கங்களை அதிகப்படுத்தி, சில புதிய பகுதிகளோடும், கதைகளோடும் வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம். ஆண்டுக் கட்டணம் ரூபா **2—4—0** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கையொப்பதாரர்கள் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகைக்குரிய பிரதிகள் கணக்கிட்டு அனுப்பப்படும். அன்பர்களும், விற்பனையாளர்களும் எமக்குக்காட்டும் ஆதரவில் அணுவளவும் குறையாது என்ற நம்பிக்கை நமக்குண்டு, எனினும் விற்பனையிலும், விற்பனைப் பணம் அனுப்புவதிலும், கருத்தின்றியிருக்கும் சில விற்பனையாளர்களை, "**பகுத்தறிவு**" **வளர்ச்சிக்குப் பாதகம் செய்யவேண்டாம்** என்று கேட்டுக்கொள்கின்றோம்.

—**ஆசிரியர்.**

நாட்டினை [illegible]ருப்பும்
நவரசப் பெட்டகம்.

●

கலைமதிப்பு வாய்ந்த
உயரிய நாடகம்.

விலை 1—4—0




★




கொடுங்கோலனைப்
பழிவாங்கிய
தமிழச்சியின்

**வீர நாடகம்!**

வானொலிமூலம் பல்லாயிர
வரின் உள்ளம்
கவர்ந்தது.

விலை 0—8—0

விலைத்தொகையனுப்பிப்
புத்தகம் பெறலாம்.
வியாபாரிகளுக்கு
ஏற்ற கழிவு உண்டு.

★

# தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.

# தெளிவு காண்டீ

[ ச. ஆறுமுகநாதன். ]

1 பணம்படைத்த இறுமாப்பால்
தடுக்கி வீழும்
பலமிழந்த ஒருகிழவன்
இளமை பூத்து
மணம்வீசும் குமரியினை
விலைக்கு வாங்கி
வாடவிட்டுப் பார்த்திருப்பான்
வீட்டிற் பூட்டி.

2 கொந்தளிக்கும் உணர்ச்சியினை
நினைத்துப் பார்க்கக்
குமையிருளிற் றோய்ந்தமனம்
தெளிவில்லாமல்
நைந்தவுளம் சீர்படுத்த
நகைகள், இன்னும்
நல்லாடை ஈந்திடுவான்
இளிப்பான் பல்லை!

3 விம்மியெழும் துயரினடிப்
படைவி ளங்கான்
வெடவெடத்த சொல்லிலெழும்
பொருளுங் காணன்
தன்னைவிட உணர்ச்சிமிக்காள்
என்றுந் தேரான்
சாகுங்கால் அறுப்பதொன்றே
வாழ்வாய் ஈவான்.

4 உணர்ச்சிதனைக் கடிபணிவாள்
பிறனைப் பார்ப்பாள்
ஒழுக்கமே உயிர்போன்றாள்
உருகிச் சாவாள்
பணத்திற்காய் கிழத்திற்குப்
பெண்ணை விற்கும்
பண்பில்லாப் பெற்றோரே
தெளிவு காண்பீர்.

# பகுத்தறிவுப் பண்பு

[ஆசிரியர், புலவரேறு, அ. வரதநஞ்சையனார்]

உலகில் நாம் காணும் பொருட்கள்யாவும், தத்தமக்கியல்பாகிய பல வகைக் குண வேறுபாடுகளையுடையனவே. பொருளைப் பண்பி, அல்லது குணி, அஃதாவது குணத்தையுடையது என்றும், குணத்தைப் பண்பு என்றும் வழங்குவர். குணம், பண்பு, தன்மை, இயல் என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்களாம். இக்காட்சிப் பொருட்களைப் போலவே, கட் புலப்படாத நுண் பொருட்களும் பற்பல குண வேறுபாடுகளையுடையனவேயாம் என்று நுண்ணூல் வாயிலாக அநுபவமுதிர்ந்த அறிஞர்கள் சாற்றுகின்றனர். இவ்வகைப் பண்புகளும் பலதிறப்பட்டவை. (1) வண்ணப் பண்பு; (2) வடிவப் பண்பு; (3) சுவைப் பண்பு; (4) தொழிற் பண்பு; (5) இயற்கைப் பண்பு; (6) செயற்கைப் பண்பு என்றிவைபோல்வன பலவுமாம். முத்தின் வெண்மை வண்ணப் பண்பு, அதன் உருட்சி வடிவப்பண்பு. கனியின் தித்திப்பு சுவைப்பண்பு. அலையின் ஒலி தொழிற் பண்பு. மலரின் மணம் இயற்கைப் பண்பு. ஆடையின் நீலம் செயற்கைப்பண்பு என்றிவ்வாறு கொள்ளப்பெறும். இவ்வினத்தைச்சேர்ந்ததேதான் அறிவும். அறிவு குணமானால், அதனையுடைய குணிப்பொருள் யாதாகும்? அதுவே உயிர். குணகுணிகள் ஒன்றைவிட்டொன்று பிரியாது நிற்பது துணிபு. ஆகலின் அறிவே உயிர். உயிர் அறிவின்மயமே எனக் காண்கின்றோம். அறிதல் ஒரு தொழிலாதலால், அறிவைத் தொழிற் பண்பென்போம். பற்பலவகை உடற்கூற்றிற்கேற்ப அமைந்திருக்கும் உயிர்களின் அறிவுகளும், நானாவகை வேறுபாடுடையனவாக உள்ளன. உயிர்க் குலங்களின் விளக்கச் சிறுமை பெருமைகளை அறிவின் தாரதம்மியம் விளைப்பதால், அவ்வறிவை அடிப்படையாகக்கொண்டு பண்டைத் தமிழறிஞர்கள் உயிரினங்களை ஆறு வகையாகப் பகுத்துள்ளார்கள். ஆசிரியர் தொல்காப்பியர், ஓரறிவுயிர்முதல், ஆறறிவுயிர் வரையில் உயிரினங்களைப்பகுத்தார். தொட்டு அறியும் மரம், செடி முதலிய வர்க்கங்கள் அவ்வோரறிவுடையன. அதனோடு நாவால் சுவைத்தறியும் நந்து, கிளிஞ்சிற்புழு முதலாயின ஈரறிவுயிர்கள், இவற்றோடு மூக்கால் முகந்தறிவனவாகிய கறையான், எறும்புபோல்வன மூவறிவுயிர்கள், இவைகளுடன் கண்ணால் கண்டறியும், நண்டும், வண்டும்போல்வன நான்கறிவின. இந்நான்கனோடு செவியால் ஓசையுணரும் யானை முதலிய மிருகங்களும், கிளி முதலிய புட்களும் அறிவுநுட்பமற்ற மந்தமதியினராகிய மனிதர்களும், ஐயறிவுயிர்க

ளாம். இவ்வைந்துடன் மனத்தாற்
கருதி, வருங்கால வுணர்ச்சிதரும்
பகுத்தறிவுபெற்ற மனிதர்கள் ஆறறி
வும் வாய்ந்த சீரியர்களாம் என
விளங்க ஓதினர். உயிர்கட்கு அறி
யுந்தன்மை இயல்பேயாயினும், அறி
தற்கு ஏற்ற கருவிகளின் உதவியும்
இன்றியமையாது வேண்டப்படும்.
கண்ணில்லான் ஒன்றைக் காணமுடி
யாது, செவியிலான் கேட்டறிய இய
லாது, இவைபோற்சிறந்த மெய்
வாய் முதலிய ஐந்து புலன்களும்
உதவும்போதே அதன் வழிச்
சென்று பகுத்தறிவு மனஉணர்ச்சி
யில் விளங்குகின்றது. மனமின்றி
அறிவு நிகழாமையின், மனமே அறி
வென்றல் அமையாதோ எனின்,
அமையாது. மனம் வேறு. அது
நினைத்தற்குமட்டும் கருவி. அறிவு
நினைத்ததை ஊன்றி விசாரித்தோர்
ந்து தெளிவிப்பது. இதனுல் மனத்தி
னும் அறிவு சிறந்ததாகின்றது. ஒரு
வனை நோக்கி, எனக்கேதாவது தரத்
தங்கட்கு மனமில்லை என்று ஒருவன்
கேட்டால், அக்கேட்டவன், ஐயா!
பொறும், கவனிக்கிறேன் என்பான்.
அங்ஙனமின்றி, ஐயா! எனக்கருள
உங்கட்கு அறிவில்லை என்பானேல்,
அவன் சீறிவிழுந்து புடைக்கத் துணி
வான். இதனுல் அறிவு மனத்தினும்
சிறந்ததென்பதைத் தெள்ளத்தெளிய
உணரலாம். இவ்வாறு சிறந்த பகுத்
தறிவு, மனிதனுக்கே உரிய பண்பாத
லால்தான் படைப்பின் பல்வேறு
உயிர்கட்குள், மனிதப்பிறவியே
மாண்புடைத்தென மதிக்கப்படுகின்
றது. "உயர்திணை யென்மனர் மக்
கட்சுட்டே" எனத் தொல்காப்பியனு
ரும், மனிதர்களாகிய நன்கு மதிக்
கப்படும் பொருள் என்று விதந்

தோதுவாராயினர். இப்பகுத்தறிவு,
இயல்பாக அமையினும், கல்விகேள்
விகளாலும், தான் வசிக்கும் இடத்
தின் சூழ்நிலைச் சார்புகளாலும், பழ
கும் மனிதர்களுடைய சேர்க்கை
வசத்தாலும், ஒருவரைக் கண்டு
தானும் அவ்வாறு நடக்கவேண்டும்
என்னும் விருப்பத்தின் தூண்டுதலா
லும் உளதாகும் செயற்கை அறி
வோடும் கலந்து, மனிதன் உயர்ந்த
பகுத்தறிவான் மேம்படுகின்றன்.
தான் சேர்ந்த இனம் தீயனவாயின்,
தீய குணங்களும், நல்லனவாயின்
நற் குணங்களும் வளரத் தொடங்
கும். இவ்வுண்மையைவிளக்க ஆசிரி
யர் திருவள்ளுவர், மக்கட்குப்பொது
வுணர்ச்சி மனத்தினின்றும் தோன்
றும்; அவன் உலக அறிவிற்றலைப்
பட்டு விளங்கும்போது, தாம்தாம்
சேர்ந்த இனத்தின் தன்மையால்
மாறுதல் பெறும் என்பார்;
"மனத்தானும் மாந்தர்க்குணர்ச்சி யினத்
தானும் இன்னனெனப்படுஞ் சொல்"
என்றும், அறிவு பொதுவாக நோக்கு
வார்க்கு மனத்தின்கண் அமைந்த
தென்று தோன்றுமாயினும், உண்
மையில் அவ்வறிவு, அவரவர் சேர்
ந்து பழகும் இனங்களினுல் உண்டா
யிருக்கின்றதென்பது தெளிவு
என்றும், "மனத்துளதுபோலக் காட்டி
யொருவர்க்கு இனத்துளதாகும் அறிவு"
என்றும் அதை உவமானத்தால் திட
முறுத்துவாராகி, தனக்கென மண
மும் சுவையுமற்ற நீர், தான் சேரும்
நிலத்தின் இயல்பால்மணமும், சுவை
யும் பெறுவதுபோல, மனிதர்களும்
சேர்க்கைப் பழக்கவழக்கத்தால், தம்
மியல்பு மாறுபடுகின்றனர் என்
பார்; "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்
றாகும் மாந்தர்க் கினத்தியல்பதாகும்